ஓம் மகாகணபதயேநம:

ஸ்ரீ வீரசேகரமென்னும்
ஞானவாசிஷ்ட வசனம்.

இது

ஞானவாசிட்ட மூலவியாக்கியானங்களை யநுசரித்து

ஸ்ரீ வீர சுப்பய்யனான தேசிகேந்திர
சுவாமிகளால்
மொழிபெயர்க்கப்பெற்றது.

இது

ஸ்ரீ சுவாமிகளாலே

சென்னை சூ;

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

1929.

விலை அணா 8.] [Copy Right Registered.

உ

ஓம் மகாகணபதயே நமஃ

ஸ்ரீ வீரசைவாகமம்

என்னும்

ஞானவாசிட்ட வசனம்.

மங்களம்.

திங்களணி வேணியனுர் உமையோடுந் தினைத்தாடித்
திருந்து வேதம்,
பொங்குலகும் போற்றிசெய நாற்றிசையும் புகழ்பெருகப்
பொலித்த சீமான்,
மங்களமெய் மூர்த்தியாய் வணங்கினர்க்கு மாறினையும்
மணமே செய்யும்,
எங்கள்குரு வீரசன் இணையடியை மனமொழியில்
இணைத்து வாழ்வாம்.

சத்தியஞான அனந்த அத்விதீய பரமாத்மாவாகிய பகவான் நாராயணர் கற்பாதியின்கண்ணே தமப்பிரதானமாகிய சேஷத்திரங்களையும் சிற்பிரதானமாகிய ஜீவர்களையும் பாவனை ஞான கருமானுசாரமாகச் சிருஷ்டித்தார்; "தமப்பிரதானமாம் சேஷத்திரங்கட்குமம் சிற்பிரதானமாஞ் சீவர்கட்டமக்குஞ், பரம் காரணமாம் பான்மையைப்பற்றும், பாவனை ஞான கருமங்களினுல்" என ஸ்ரீமதாசிரியரும் கூறியுள்ளார்.

2 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

தம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளின் சொர்க்கமோக்ஷப் பொருட்டு உபாயமாகக கொள்ளதக்கனவாயிருக்கும் கரும ஞானவடிவ வேதார்த்தத்தை மரீசியாதிகட்கும சனகாதி கட்கும் உபதேசிததனர்; அவர்களானே யுபதேசிக்கப்பட் டுப் பிராணிகளானே யனுஷ்டிகக்கப்பட்டுவந்த அந்த வேதார் த்தமானது இராவணாதி துஷ்டர்களானே யனுஷ்டிகக்கப் படாதவாறு இடையூறு செய்யப்பட்டதை யுதேசித்து அதை ரக்ஷிககவேண்டுமென்னு மிச்சையிலாலே மாயை யைத் தன்வயப்படுத்திய சத்திய சங்கற்பமுடைய பகவான் சங்கற்பத்திலாலே இனிது சம்பாதித்துக்கொண்ட அறி யாமையுடையவராகிக் கௌசல்யதசரத குமாரராயவதரித் தார். அவதரித்துப் பின் ஸ்ரீ வசிஷ்டபகவானது சீடன்போ னடித்து நாலுவிதமான கதைமாலைகணிறைந்த அவரது சம் வாதத்தால் ஞானமிருதாசத்தையும் வெளிப்படுத்தினர், கரு மத்தையும் பிரவிருத்திப்பித்தார் அரக்கர் குலத்தை நாசஞ் செய்யும் வாயிலாக அவ்விராண்டையுமே காப்பாற்றியருளி னர். ஆண்டுப் பிரஹ்மத்திற்கே பிரஹ்மவித்யாதிகாரித் தன்மையை அறிவித்தற்பொருட்டு ஸ்ரீ ராமர் சீடனைதாம், "இவையெலா மெழுந்திங் கிலங்குதன் முன்னா, கவையறு பிரமமேகண்ணுட நன்கது, உவமறு தன்னிலே யுணர்ந்தது யானப், பவமறு பிரமமே படிவமா யுள்ளேன்" "ஆகலினது வெலாமாயது கண்டாய்" என மறையுமறைகின்றது. "சர் வதுவைதாகார அஞ்ஞானபரிணமங்களில் தன்னுடைய ஆபாசம் அந்தப் பலகத்தில் இனிதாலுடமாகச சாக்ஷிதவ ஈசுரத்வ காரணத்வ அந்தர்யாமித்வரூபத தன்மையை யாத்மா அடைகின்றது. அதுவும் உலகதிருந்தபோதி னும் உண்மையாயினும் அதனோடு சமபந்தப்படாதாம் அசங்காகமவிரோதம் வருதலின், ஆகலின் ஈசுரத்வாதி கற் பிதம்" என வார்த்திகத்துளதாம். அவ்வசிஷ்டராம சம்

வாதத்தைச திவ்யஞான சம்பத்தைபுடைய ஸ்ரீவான்மீக பகவான் மூப்பததீராயிரம் சுலோக வடிவமாக இயற்றினர். வைராக்கிய முமுக்ஷு விவகார ஜகதுற்பத்தி ஸ்திதி உபசாந்தி நிர்வாணப் பிரதிபாதக அறுபிரகாணப் போலக லோடு கூடியதும், அநேக ஆக்கியான வாதாரங்கங்களோடுற் றதும், விவேக வைராக்கிய உபாதி விஞ்ஞாஞாதி இரத்தினங்கட்கிடமும், ஆகிய அவ்விவ் வாசிஷ்ட சமுத்திரத்தை மாநதமதிகள் கடக்க முடியாதவாறு கண்டு பரமகாருணிக ராய கான்மீரபண்டித ரென்னும் ஸ்ரீ அபிநந்தாசாரியர் ஆறு பிரம் சுலோகங்களை யதினின்றும தொகுத்தனர், அவற் றையே வீரை ஸ்ரீ ஆளவந்தார் முனிவர் கீர்வாணவலியிலா துகிளர் தமிழ் மாக்கண்மேலுள்ள காருண்யச்சிறப்பால்செந் தமிழ்க்கவிதையிற் செய்து வைத்தனர், அவ்விவ் வரியஞான வாசிஷ்டத்தை விரித்து மந்தமதியினர்க் கெளிது புலப்படு மாறு ஸ்ரீ வீரஞானேசதேசிகன்றந்த மதியளவு ஸ்ரீ வீர சேகர மெனப் பெயர்தருதே யுபகாரப் பொருட்டு வியாக் கியானிப்பேன்.

விநாயகர் வணக்கம்.

பெண்ணை பாதியன் பெற்ற களிற்றினை
யண்ணை தாரை மறவகத் தன்னுவாம்
திண்ணை ஞானச் சிறப்புயர் வாசிட்ட
மூண்ணை யாக வொருங்குரை செய்யவே.

(ப - ள்) திண்ணை=ஐயகதிரிபுஇலாமல் அப்பிரதிபந்தக மாய்ப் பிரதியக்ஷமாக வுண்டாகும், ஞானம்=சாக்ஷாத்காரா அனுபவத்தையும அதன் அநதாரங்க பகிரங்க சாதனங்களை யும் கூறுவதில், சிறப்பு=மற்றைய எல்லா அத்தியான்மிக சாஸ்திரங்களிலும் விசேடமாக இருத்தலின், உயர்=சர்வ

4 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

வேதாந்த மூர்த்தன்யமாய் மேம்பட்டிருக்கும், வாசிட்டம்= ஸ்ரீ வசிஷ்ட ஸ்ரீ இராகவர் சம்வாதரூபமாகிய இஞ்ஞான வாசிட்ட நூலை, உண்மையாக=எவ்வாறு கீர்வாண பாஷையில் ஸ்ரீ வான்மீகி பகவான் அருளியிருக்கின்றாரோ அவ்வாறே அருத்தமுங் கருத்தும் மாறுமலும் வேதாந்த சம்பிரதாய விரோத மில்லாமலும், ஒருங்கு=கான்மீர பண்டிதர் சங்கிரகித்து ஆறுயிரங் கிரந்தங்களையும், உரைசெய்ய= செந்தமிழ்ச் செய்யுளால் இனிமையாகப் பாடும்பொருட்டும், இடையூறின்றி யினிது முடியும் பொருட்டும் பெண்மைபாதியன் = பராசக்தியைப் பாதி பாகத்திற் கொண்ட பெருமானுகிய பரமசிவன், பெற்ற=தவம் புரிந்து உலகமுய்ய உதவிய, (இருவரும் தவம் புரிந்தே பரமான் மாவைப் புத்திரராகப் பெற்ற புராணவசன மனுசரித்துத் தான் பெண்மையாதியன் என்றதாம்) களிற்றினை=தாம் எப்போதும் விசுவரூபமென்று எல்லாரும் உணர்ந்துய்யக் கொண்ட சகலாகிருதியையுடைய, கயமுக அசுரனல் வந்த இடர்தீர்ந்து சுரகராதிபுலகு சுகிப்பக்கொண்ட திருமேனியையுடைய பிரஹ்ம விஷ்ணு ருத்திராதி சர்வதிருசியமும் தோற்றறகும் ஒடுங்குதற்கும் வாயிலாக இலங்கும் கஜமுகப் பெருந்தகையை, அண்மை தூரமற=தற்பதபரோக்ஷ துவம் பத அபரோக்ஷமதாய்ச சர்வகதமாயிருத்தலின் சமீபதூரமி லாது தன் வடிவமாகவே பஞ்சகோச பிரபஞ்ச கற்பனைகள் கடந்து, அகத்து=சுத்த சத்துவ அந்தக்கரணத்தில், உன் னுவாம்=அகண்டாகார விருத்தியால் பலவியாதகியிலாமல் விருத்திவ்யாதகியாற் சந்ததம் சிந்திப்பாம் ; என்பதாம்.

உ

ஓம் மகாகணபதயே நமஃ

நூல்.

வைராக்கியப் பிரகரணம்.

இனிது தொடங்க இச்சித்தகிரந்தம் இடையூறிலாது முடிபெய்துவான், பாரம்பரியமாய்ப் படித்துணருவாறுகவும் இஷ்டதேவதையை நமஸ்கரிப்பதாய மங்களாசரணத்தை நேரேகூறிப் பொருளால் நூலால் நுவலப்பட்ட பொருளை ஸ்ரீ பகவா னுசிரியர் காண்பிகின்றார் :—பொன், அல்லது, இனித் தொடங்க அவாவிய பெரியநூல் இடையூறில்லாமல் இனிது முடியவும, எங்கு மினிதுலாவவும் வேண்டி " மங்களத்தை முதலினும் இடையிலும் ஈற்றிலும் உடையசாஸ்திரங்கள் வீரபுருடர்களை யுடையனவாகியும் ஆயுளோடு கூடியவர்களை யுடையனவாகியும விளங்கும" என மகாபாஷியத்திற் கூறியதும், சுருதியிற் செய்யற்பாலதென வுணர்த்தப்பட்டதும், யாவற்றையும் விளக்கும் அறிவுரசம் வாய்ந்த சர்வபிரத்தியக்கபினன பரப்பிரஹ்ம நமஸ்கார இலக்கணம் வாய்ந்ததும் ஆகிய மங்களத்தைச் செய்துகொண்டு பொருளானே சாஸ்திரத்தினது விஷயப் பிரயோஜனங்களைக் காண்பிக்கின்றார் :—பொன்.

பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
மன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த்
துன்னுவ தப்பொருள் தொழுதிறைஞ் சுவாம்.

(பதவுரை.) பொன்னுலகத்தினில்=சுவர்க்கலோகத்திலும், புவியில்=பூலோகத்திலும், அந்தரத்து=பூ சொர்க்கமத்திய அந்தரிக்ஷ லோகத்திலும், என்னுடைய=எனது, உட்புறத்து=உள்ளிலும் வெளியிலும், மன்னு=விபுவாயுறையும், சிற்சோதியே=(எந்த) ஞானவடிவமாகிய ஆன்மா,

6 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

இலங்குகின்றது = விளங்காநிற்குமோ, வடிவம் யாவுமாய்த் துன்னுவது = சர்வான்மகமாகச் செறிகின்றதோ, அப்பொருள = அவ்வான்மாவை, தொழுதிறைஞ்சுவாம் = மீண்டும் மீண்டும் வணங்குவோம். (எ - று.)

விசேஷ உரை.

(ஸ்ரீ-வீ-ம்) எது என்பது பிரசித்தப்பொருளை யியம் புதலான் ஆன்மாப் பிரசித்தமாக விருத்தலின் ஆன்மா விசேடியமாகச் சம்பந்திக்கும், என வுணர்த்தற்பொருட்டு எந்த ஞானசொரூபமெனப்பட்டது ; எவ்வான்மா எனக்குணர்த்தியவா றிலங்குகின்றதோ அதன்பொருட்டு நமஸ்காரமா மென வுணர்க. அதன்வடிவமறிவிப்பான் அறைந்ததாம் சிற் சோதியென்பது. சிற்சோதி = யாவையுமிலக்கும்அறிவுவடிவ மாம. தேகபரிச்சேதம் இன்றென் றுணர்த்தியது மன்னு மென்றது, சகலதேச வியாபியாமென்க. வியாபகத்தைச் சாதிக்கின்றது பொன்னுலகத்தினிற் புவியிலந்தரத்து என் பது. தொகுத்து வகுத்துச்சொல்லிய பொருள் கேட்போர் மதியில் எளிதாக வறுமென வெண்ணி விஸ்தாரமாகப் பிர திபாதித்த பொருளைச் சுருக்கிக் காட்டுகின்றது உட்புறதென் றது. அல்லது லோகத்திரயத்திலும் உள்ளிலுமவெளியிலும் யாதிலங்குகின்றதோ அதன்பொருட்டு நமஸ்காரம ; "உள் ளும் புறம்பும் அவை யாவற்றையும் வியாபித்து நாராயணர் விளங்குவர்" என சுருதியுமறைகின்றது, "பூதங்களிலுள்ளி லும் புறம்பிலும் அசரத்திலும் சரத்திலுமே பரமனுளன்" எனமிருதியுமறைகின்றது. இத்தகைய ஆன்ம சொரூபத்தில் ஞானிகளி னனுபவமே பிரமாணமாமென ஸ்ரீ வான்மீகிபக வான்குறிப்பிக்கின்றார் எனக்கிலங்குகின்றதென்பதாக ; அற் றேல் ஆன்மாவிற்கயலாய்ப் பொருள்களிருத்தலின் பொருள் களிலுலே பரிச்சேதம் வருமேயெனின், வாராதாம், வடிவமி

யாவுமாய்த் துன்னுவதாதலின், கற்பிதமாய சர்வதுவைதப் பிரபஞ்சததிற்கும் வெள்ளிக்கிப்பியேபோல வடிவமாக எநதப் பரமாத்மா விருக்கின்றதோ அதன் பொருட்டு நமஸ்காரம், வஸ்து பரிசசேத நிராகரணஞ் செய்தமாத் திரையானே ஆன்மாவிற்குக் காலபரிச்சேதமும் நிராகரிக்கப் பட்டதேயாமென வுணரற்பாற்றும்; காலத்திற்கு முண்மை யாகத் தன்னிடத்திற் கற்பிதமாந் தன்மையுண்மையின் ஆன்மா இருப்பு விளக்கங்கொடுத்தலின் ஆன்மாவை யது பரிச்சேதப்படுதத முடியாதாம். அல்லது, விளங்காநின்ற லிங்கசரீரத்திலும் பூமிகாரிய தூலசரீரத்திலும் அவ்யா கிருத ஆகாச காரிய காரண சரீரத்திலும் அவற்றின் சாக்ஷி வடிவமாக யாது ஒளிர்கின்றதோ அதற்கு நமஸ்காரம; பிற மூன்போலவேயாம். "அன்னியனிவனே யன்னியன் யானே என்னத் தேவதை யெவனுபாசிப்பனே, அன்னவன் சிறிது மறிந்திலனந்தோ, இன்னவன் றெய்வப் பசுவென வியம்ப லாம்" என்னும சுருதியினானே ஆன்மாவிற் கயலாகத் தேவதையாக காணில் நிநதை காணப்படுதலினாலும் "ஆன்மாவே தேவதை யனைவர்கடமக்கும்" என்னும் மனு மிருதியினாலும், ஆன்மாவையே யிஷ்ட தேவதையாக நமஸ்கரித்தன ரென வறியலாம். அல்லது, பரமான்மா விசேடியமாகச் சம்பந்திக்கின்றதாம், எப்பரமாத்மா வென்ப தாக; அதற்கு ஈசுரத்தன்மையானே பிரசித்தமுண்மையின் அதற்கு ஜீவர்களிடதினின்றும் வேற்றுமை நீக்கப்படுகின் றதுவடிவமியாவுமா யென்பதால், சர்வஜீவர்களின் பரமார்த்த சொரூபமாயிருக்கப்பட்டதன்பொருட்டுநமஸ்காரம், மற்றவை சமானமாம். அல்லது பூமியாகாசமென ஆதியந்தங்களைக் கவர்தலான் மத்தியிலிருக்கும் முப்பூதமும் சந்தம்சநியாயங் கொண்டு கவர்ந்தேதியாம், காரணபூதக்கவர்ச்சியானே காரி யமுமாம், ஆகவே பொருளிதுவாம் :—ஆகாசாதிரூப பூத

8 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

பௌதிகங்களிலும், கூஷ்மத்திரஞ்ஞ வடிவமாக வுள்ளிலும் சம்சாரத்தின் வெளியிலும், தனது மகிமையிலும யாது விளங்குமோ அதற்கு நமஸ்காரம். "இதனது பாதமொன்றே இகபரவுலகங்கள், பதமது மூன்றேறுநற்பர வறிவமுதநதான்" எனச்சுருதியு முளதாம். ஆக விங்ஙனம மூவித பரிச்சேத ரகிதமாய்நித்திய அத்விதீயபரிபூர்ணமாய் சிதான்மகமாயிருக்கும வஸ்துவே சாஸ்திரங்களாற் பிரதிபாதிக்கப்பட்டதாம் எனக் காண்பிக்கப்பட்டதென் றுணர்க. மற்றும், சுவர்க்கத்தில், பூவுலகில், அநதரிகூஷ லோகத்தில் அதிபூதகதில், அத்தியாதமத்தில், அதிதைவதகதில், எவ்விடுவானவர் நாறுவடிவ மாக எனதறியாமையால் எனக்கிலங்குகின்றுசோ, உண்மையாயோ இலங்கும் வடிவதாய் நிர்விகார சினமாதர இயற்கையதாய எல்லாவற்றின் வடிவாய அதன்பொருட்டு நமஸ்காரம். அல்லது, பிருதிவி பூர்வரூபம் துறக்கம் உததாரூபம் என்னுஞ் சுருதியிற்போல, ஈண்டும் பொன்னுலகதில்= பிரஹ்மாண்டத்தினது மேற்கபாலமாகிய சுவர்ணமய வத்துவில், புவியில்=கீழ்க்கபாலமாகிய வெள்ளிமயவத்துவில், அந்தரத்து = அவ்விரண்டன் சநதியாகிய சூகூஷ்ம ஆகாசத்தில், பிரஹ்மாண்டத்தின் வெளியிலும் உளளிலும் யாது விசேடமாக = சூரியசநதிர அக்கினி வாகசு முதலியவற்றினும் அதிசயமாக, சுவப்பிரகாச அபரிசசின்ன இயற்கையானே யாதிலங்காநிற்குமோ! அஃதெஙஙனமெனின், "இவ்விலங்கா நின்ற ஆன்மாவானது சூரியாதிகளையுமை விளக்குவதும் அவற்றின் வடிவமும் ஆகுமாதலின், எதனற் சூரியன்றபிக்கின்றுசே தேபுவொளிர்கின்றதோ, ஆன்மாவே யிதனது ஜோதியாம், ஜோதிகளுக்குமது ஜோதியாகும்" என்பதாதி சுருதிமிருதிகளானே யெனவுணர்க. எல்லா வஸ்துக்களினது பாரமார்த்திக சொரூபபூதத்தின் பொருட்டு நமஸ்காரம். அல்லது, பொன்னுலகத்தினில்= இலக்குவிக்கும் ஏகாசம்வாய்ந்த

பூமானந்த வடிவ துரியவடிவமத்தில், இரண்டவஸ்தைகளி னுற்பத்தி பூமியில், அவ்வியாகிருத ஆகாசத்தில், வெளிப் பிரஞ்ஞைப் போகியமாகிய ஜாகரத்தில், உட்பிரஞ்ஞைப் போக்கியமாகிய சொப்பனத்தில், அவற்றின் சந்திகளாகிய மரண மூர்ச்சை முதலிய அவத்தைகளிலும் யாது நாணுவித மாக இலங்குகின்றதோ, தூலசூக்கும காரண அபிமானியாக வும், அவறறின் போக்தாவாகவும், அவற்றின் சாக்ஷியாகவும், நிஷ்பிரபஞ்ச பூரணனாத சின்மாத்ர இயற்கையதாகவும், விளங்குகின்றதோ என்பதாம். ஆயினென், நாண இரசமே யின்றுவெனக் கடாவிக கூறுகின்றார்:—இலங்கும் வடிவது அறிவு மாத்திர இயற்கையது. திருசியமானது திருகு மாத்திர வடிவமாய்த் திருகினுமை வேறுக இராமையின் அவித்தையோடு கூடியதும் அவிததை யற்றதும் ஆகிய எல்லா வடிவத்தின்பொருட்டு நமஸ்காரம். அல்லது, பொன் னுலகத்தினில் = சர்வஞ்ஞதன்மை முதலியவற்றின் சம் பத்துண்மையின் இலங்காநின்ற காரணவுபாதியின் கண்ணை, புவியில் = கருமபீஜமுண்டாகும் பூமியாகிய காரிய வுபாதி யின் கண்ணை, அநதரத்து = எங்குமிலங்காநின்ற சொரூப மிகப்பிரகாசததில், ஜீவன் முகதி தசையில், வெளியில்=நிரு பாதி சொரூபததில், உள்ளில்=காரியகாரண வுபாதியுள் ளடங்கிய மாயாநதக்காரணவிருத்தி பேதங்களிலும், எவ் விளங்கு மியற்கையுடையது விளங்குமோ சருவ உபாதிசார மாய அவவான்மாவின் பொருட்டு நமஸ்காரம். அல்லது, விளக்கும் வடிவதேதஜசில், பிருதிவியில், விண்ணில், உள் ளடங்கிய நீர் காற்றுகளில், பகிர்ப்பூதமாகிய அவ்வியாகிரு தத்தில், நிருபாதிகத்தன்மையானே சப்தாதிகட்குத் தகுதி யல்லாத பாரமார்த்திக வடிவத்திலும் யாது தொடர்ந்து நின்று சன்மாத்திர வியல்பதா யிலங்குமோ அதுவே இலங் கும்பிரத்தியக்கான்மாவாம். அச்சர்வவடிவமாகியபூர்ணனந்த

10 ஸ்ரீ வீரசேகரம என்னும் ஞானவாசிட்ட வசனம்.

சொரூப என்பொருட்டு நமஸ்காரம். அல்லது, தேவலோகத்தில் வெளியே தடஸ்தமாகப் பூஜ்யதேவதா ஈசுராதிவடிவமாக, புவியில் உள்ளே, உடம்பிலிருப்பதாய்ப் பூஜகவடிவமாக, ஆகாயத்தில்=இரண்டனிடையில் கிரியாபலசாதனாதி வடிவமாக, என்னுடைய வடிவம, விளங்காத காலத்தில் பரிசுத்தமாகி வேறுக விளங்கினும் யாது இப்போது தத்துவதிருஷ்டியுதயததானே வெளிப்படையாய் விளங்கும் வடிவதாய, மூவிதபரிசுத்த சூனியவிடு, வெளிபபடையாய் விளங்கும். அத்தகைய பூர்ணனந்த வடிவின்பொருட்டு நமஸ்காரம். அல்லது, மேல் கீழ் இடையில் கிழக்கு முதலிய திசைகளில், உடம்பினுள் பூர்வோத்திர காலங்களில் எவ்விலங்குமான்மாவாகிய சிதேகாசமானது தத்துவ வித்தாகிய எனக்கு விளங்குமோ, "ஆன்மாவே கீழும ஆன்மாவே மேலும்" என்பதாதி சுருதியினனே யென்க; ஆன்மாவே இவ்வி யாவுமென்னும் சர்வ பிரபஞ்சபாததததால் எஞ்சி நிற்பதாய பரமான்மாவின்பொருட்டு நமஸ்காரம். இவ்வாறு வேறுபொருள்களும் மதிவைபவப்படி ஊகித்துக்கொள்க. ஈண்டுப் பொருளால் அவ்வகையாய அறியப்படாத பிரஹ்மமே சாஸ்திரத்தின் விடயமாம். ஞானத்தால் அவ்வடிவமாய் நிலைபெறுதல் பரம நிர்வாண ரூபமாகிய பிரயோஜனமாம் எனக குறிப்பிக்கபபட்டது. மேலும் மேலும் இதுவே வெளிப்படையாய்க் காட்டப்படும்.

நூற் பெருமை.

திகழுநான் முகன்முதற் றேவர் மூவருஞ்
சகலவே தங்களுஞ் சாத்தி ரங்களும்
புகலுஞா னத்திறற் புராண மானது
நிகரில்வா சிட்டமா நிபுண ஞானநூல்.

(ப - ரை.) திகழுநான்முகன் = ஸ்ரீ வசிஷ்டர் மரீசியாதி சகல முனிவர்கட்கும் ஞானகிரியராய் விளங்கும் நான்கு வேதங்களையும் நான்குமுகத்தா லருள்புரியும பிரஹ்மா, முதல் = முதலிய, தேவர் மூவரும் = பிரஹ்மா, அருச்சுனற்கும பிரஹ்மாதிகட்கும் அருளரும் மகாவிஷ்ணு, சனகாதிகட்கும் பிருங்கி ரிபு முதலியவர்க்கும் அம்பிகை நந்தி முதலியவர்க்குந திருவருள்புரிந்த மாகாதேவர், என்னும் மூத்தேவரும் அருளிய கீதாத்திரயங்களும், சகல வேதங்களும் = கருமம் பக்தி ஞானமென்னுங் காண்டத்திரய வடிவமாய் அநேக மாயிரம் சாகைகள் நிறைந்து விரிந்த தருமத்தையும் பிரஹ்மத்தையும் பிரதிபாதிக்கும் அபௌருஷேயப் பரமப்பிரமாண வாக்கியங்களின் வடிவமான சுருதிகளனைத்தும், சாத்திரங்களும் = அவ்வேதங்களையே யாதாரமாகக்கொண்டு மகரிஷிகளாலே செய்யப்பட்ட அநேகம் ஸ்மிருதி யிதிகாச அத்தியாதம சாஸ்திரங்களும், புகலு ஞானததிறல் = பிரதிபாதிக்கப்பட்ட விஸ்தாரஞான ஞானசாதனங்களால், நிகரில் வாசிட்டமாநிபுண ஞானநூல் = தன்னிடத்திலேயே சகலகிரந்தங்களின் அருத்தங்களுமிருத்தலின் உவமையற்றுப் பிரஹ்மபுத்திர வாக்கியாமிருதமாய்ச் சகலமாண்பாலும் அலங்கரிக்கப்பட்டு மிகவுமாழ்ந்து கம்பீரமாய் மகத்தான தீரபுத்திகட்கே சாதந்தியமாய் விளங்கும் இந்த ஞானவாசிட்டநன்னூலானது, புராணமானது = பூரிக்கப்பெற்றுப் பொலிகின்றது.

தலைமைநான் முகன்மனத் தாமரைக் கினன்
சிலையில்லா கவன்றிருச் செவிக்குத் தெள்ளமு
துலவில்வான் மீகிவாக் குதித்த தத்துவ
நிலைமைவா சிட்டமா நிபுண ஞானநூல்.

(ப - ரை.) தலைமை = பிரஹ்மாண்டம் அவரது நகர்விஜனப்பயனுதலின் இதன்கண்ணியாவருக்குமே பிரதானமா-

யிலங்குகும், நான்முகன்=நாற்றிசையினும் படைக்கச சதுவ தனங்களையுடைத்தாய் பிரஹ்மாவினது, மனத்தாமரைக்கு= திருவுள்ளமாகிய தாமரைமலருக்கு, இனன்=அலறிபோன்ற தாம், மனத் தாமரையை மலர்த்தமைநதன் மதலைமொழி மாண்புடைத்தேயாம், சிலையில்=வில்வித்தைக்கில்லமாயிருப் பவரும், சிரவணிக்குங் காலத்தில் ஆத்தாதி பணிவிடைகளை மேறகொண்டொழுகலின் சிலையில்லாதவரும், சிலையாகிய அக விகையைத் தமது திருவடிப்பரிசத்தான் மீண்டும் கௌதமர் இல்லத்திறகுத் தருமபத்தினியாக்கியவரும், அவர் வைராக் கியப் பிரகாணத்திற்கூறிய சில ஐயங்கள் உண்மையிலில்லாத வராயிருந்தும் இருப்பதுபோ னடிதததவரும், ஜட இயற்கை யின்றிசசந்ததம் சேதன இயற்கையையுடையவரும், சீதா பிராட்டியை யுத்தேதசிததுக் கோதண்டச சிலையைச் சிதைத் தவரும், ஸ்ரீ வசிஷ்ட உபதேசானநதரம் சிலைபோல நிருவி கற்பசமாதியையடைந்து காஷ்டலோஷ்டம்போ லானவரும், அசங்கமா யசலமா யிருக்குந் தம்மிடத்தி லுண்மையில் யாதொரு ஆரோபமுமில்லாதவரும், மேலும் அநந்தவிதமான கல்யாண குணங்க ணிறைந்தவரும், ஆகிய இராகவன்=ஸ்ரீ காமதேனுவின் கன்றுகிய நநதினியின் றிருவருளால் வநது மகாதீரவீரரு யிந்திரனையும் வெற்றிகொண்டு குருதக்ஷிணை கொடுக்கும் நிமித்தம் யாகானந்தரம் அடைந்த குமரன யுத் தேதசித்துக் குபேரன்பேரில் படையேவிய இரகுவினது உத்தமோத்தம குலத்தவதரித்த ஸ்ரீ இராமச் சநதிரது, திருச்செவிக்கு=இலக்குமி தேவியின் அமிருத மொழிகளை யெப்போதுங் கேட்டுக்கொண்டிருக்கும் அழகிய சுரோத்தி ரங்கட்கு, தெள்ளமுது=பாற்கடலிலுதிதமாய அமுதமும் கற்பாந்தபரியந்தமே வாழ்க்கை நல்குமாதலின் அதனினும் மிகத்தெளிவுற்ற இது அழியாத பரமபதத்தையே கரதலா மலகம்போலத் தருதலின் பரமாமிருதமானதாம், உலவில்

வான்மீகி = முன்னேனேககாலம் ராமஜபத்தாற் றவம்புரிந்து கெடாதவித்தையையும் பிரஹ்மவித்தையையு மடைந்திருந்து திருமேனி புற்றுன் மூடப்பட்டு புற்றினுள்ளேயே ஸ்ரீ ராம சரிதங்கூறிய ஆதிகவியாகிய மகாமுனிவரர்தம், வாக்குதித்த தத்துவம் = திருவாக்கியமிருதமாய் வெளிப்பட்டு அநேக தத்துவங்களையும் சாகித்ய நவரசங்களையும் பொழியும் பெருமை வாய்ந்ததாம், இத்தகைய விசேடங்கள் வாய்ந்தது யாது கொலாமாலோவெனின் ? நிலைமை = சொரூபத்தின் யதாஸ்திதியையும் சாதகமாகிய சர்வஞான நிஷ்டைகளையும் நித்திய மோக்ஷத்தையும் அனுக்கிரகம் புரிவதில், மா = மாக்ஷிமைதங்கிய, வாசிட்ட நிபுண ஞானநூல் = ஸ்ரீ வாசிட்ட ராமசம்வாதமாகி அதிவிக்தகன கம்பீரமான இந்த ஞான சாஸ்திரமேயாம். (எ - று.)

பெரிய வாறிவுறு பெருமை சான்றது
விரிவுறு சிறியவர் மேவிவா ணுதது
வரிசையி லுயர்ந்தது வசிஷ்ட சங்கிதை
யரியமெய்ஞ ஞானநூ லனைத்தின் மிக்கதே.

(ப - ரை.) பெரியவாறிவுறு = சாதனங்கள் நான்கும் நிறைந்து சிசுருஷை சிரவணாதி தொடங்கி யெப்போதும் ஆதாரவிருத்தியிலும் சித்தவிசிராந்தியிலும் விருப்பமிகுந்து பரதியாகிச செயற்கரியசெய்யும் மகான்கள்மாத்திரம், அறிவுறுத்த ஆசிரியர் அரிதிலெளிதிலறிந்து கொள்ளுமபடியான, பெருமைசான்றது = அத்தகைய மேன்மையைதான் பிரதிபாதிக்கும் சூக்குமப்பொருளால் உடையதும்; விரிவுறு = விடயங்களிலிந்திரியங்களை இஷ்டப்படி போகுமாறு செலுத்திப்பின்னேகி மொத்துண்டலையும, சிறியவர் = அற்பமதியும அற்ப முயல்வும் அதைரியமும் நம்பிக்கை யின்மையும் தேகான்மமதியும் பிரபஞ்சசத்தியபுத்தியும் உடைத்தாகி

மோகஞ் ஆவலின்றிய அற்பர்கள், மேலிவாணைதது = சிறிதுங் கிட்டிக காத்திலுங்தீண்ட அருகமல்லாததும் ; வரிசையி லுயர்ந்தது = ஞானப்பொருள்களையும் கதைகளும் உபாகியானத்துள் ளுபாக்கியானங்களையும் திருஷ்டாந் தங்களையும ஊகங்களையும் ஆரோப அபவாதக்கிரமங்களையும் ஜகன்மித்தியாத்துவதையும பரமாத்ம சாக்ஷாத்காரத்தா லெய்தும் பரமானந்ததையும் சமாதிகளையும் போகங்களை யும் பிறவறறையும் அடுக்காக அடுக்காக அறைவதும், எல்லா ஞான நூல்களிலும பரமப்பிரமாணமா யெடுத்துக்காட்டாய் நின்று மிகவும் பூசிகததக்கதும் ; ஆகிய, வசிட்ட சங் கிதை = ஸ்ரீ வசிஷ்ட பகவானது இனிமையைத் தருமிதோப தேசம், அரியமெய்ஞ்ஞான நூல் = அதிதுர்லபமாகி யாசசரி யம்போற் கண்டுங் கேட்டும் பேசியு மனுபவித்தும் வரும் மெய்யான சிதானந்த பூரணத்தைப் பிரதிபாதிக்கும வேதா ந்த சாஸ்திரங்கள், அனைத்தின்மிக்கதே = யாவற்றுள்ளும் சர்வார்த்த போதகமாதலின் மிகவும் உயர்ந்ததே. (எ - று.)

தெருளுறு மகர்க்கிதஞ் செய்யு மன்பிலை
லருமைவா சிட்டநூற கன்னை யொப்பளோ
வுரியதாய் பிறவியை யுளள தாககுவள்
பெருமைவா சிட்டமிப் பிறப்பை மாறறுமே.

(ப - ரை.) தெருளுறுமகர்க்கு = ஞானத்தையடைய வேண்டுமென்று மிகவும முயல்வையுடைய முமுக்ஷுக்கட்கு, இதஞ்செய்யு மன்பிலை = பகருவதோக்கி யவரவர்களுத் தக்க படி இதோபதேசம் செய்யாநின்ற கருணையைச சீர்தூக்கிப் பார்க்கின், அருமை = சொல்லாலும் பொருளாலும மிகவும அருமை வாய்ந்த, வாசிட்டநூற்கு = ஸ்ரீ வசிட்ட கீதமாய் மனக்கோட்டம்மாற்றும் இச்சாத்திரத்திற்கு, அன்னையொப் பளோ = பெற்று வளர்த்திடும பெருங்கருணைத தாய்தானும்

சமமாவளோ, ஆகாள்; என்னை, உரியதாய்=சரீரத்தைப் போற்றற்குத் தக்கதாய், பிறவியை யுள்ளதாக்குவள்=ஜனன மரண சமுசாரத்தை மேலும் மேலும் மனவிமக்களாதி வாசனையை யுண்டுபண்ணி விருத்தியே யடையுமாறு செய்து வைப்பள், பெருமைவாசிட்டம்=திருசிய தோடத்தையகற் றிசசனனமரண சமுசாரமகற்றுவதில் மிகுவலியுடையதாய் பெருமை வாய்ந்த ஆசிரியா வசிட்டாதுபதேசம், பிறப்பை மாற்றுமே = ஜனித்தற்குமூலமாய வாசனைக்கிருப்பிடமான அவித்தையையே யில்லாமற் செய்யும்; செய்யவே அன்னை யுவமை யாகாளாம். (எ - று.)

அவையடக்கம்.

எண்ணுறு பெருங்குணத் திராமன் றன்மய
நண்ணுற வசிட்டனே நவின்ற ஞான நூல்
பண்ணுறு தமிழிறற் பாடுகேன் சுதை
மண்ணுறு கலத்தினும் வைக்கு மேழையேன்.

(ப - ரை.) எண்ணுறு=அநந்த நல்ல கல்யாண குணங்களும் தம்மிடத்து முந்தி வரவுத்தேசித்துப் பரஸ்பரம்பொறுமையுற்று நின்றனவெனவெண்ணத் தக்கனவான, பெருங்குணத்து=அருமபெரும் பொறுமையாதி யளவின் மகத்தான குணங்கட்காஸ்பதமாக விலங்கிய, இராமன்=சந்ததம் சொரூபத்தின்கண்ணே யியல்பாகவே இரமித்துத் தம்மையடைந்தவரையும சொரூபாநந்தத்தில் இரமிக்கச் செய்பவராயிருந்தபோதினும் அதிகாரி போனடித்த ஸ்ரீ இரகுகுலதிலகன், தன்மயம் நண்ணுற=இயல்பாகவே சித்தித்திருக்குந் தன்னுடைய சைதன்ய இயல்பை ஞாபகஞ் செய்துகொண்டு அதன்கண்ணே சதாசுகிக்க, வசிட்டனே=சூரியகுல குருவா

யும் திரிகாலஞ்ஞராயும் சர்வசாஸ்திர சுதந்திராயும் எழுந் தருளியிருக்கும் ஸ்ரீ பிரஹ்மாவின் மானசீய புத்திரே நராகத் தமது வாகதியாமிருதத்தால், நவின்றஞான நூல்= ஸ்ரீ இராமசசந்திரரை முன்னிலைப்படுத்தி அனேதராய அதி காரிகடகும அமலஞானமுண்டாகப் பொழிந்தருளிய அரிய பெரிய இநத ஞானசாஸ்திரதனை, சுனை=க்ஷீராப்தியாற் கடைநதெடுதத தேவாமிருதத்தை, மண்ணுலகலத்தினும்= மண்ணுலாய சாமானிய பாததிரத்தினும், வைக்கும்=வைக் கும்படியானஉயர்வுதாழ்வின்பகுப்பிலாத,வளைழயேன்=அற்ப அறிவினனகிய யான், பெரிய மகரிஷியின் றிருவாக்கியாமிரு தத்தை, பண்ணுறு தமிழிறற் பாடுகேன்=அநேகவித சந் தங்களோடுகூடிய செந்தமிழ்ப் பாஷையில், என் புன்கவியாற் கொள்வ தவடிறமையன்றே யென்ற அருமைத் தந்தை வச னம்போல என் அற்பசெய்யுளாகிய மட்கலத்தில் வைக்கின் றேன் குணமே கொள்க. (எ - று.)

அதிகாரியை யறிவித்தல்.

நூலின்முதலில் கேட்பவனுக்குப் பிரயோசநமுண்டாகு மாறு செய்விக்க விடயத்தைக் காண்பித்து அதிகாரியைத் தரிசிப்பித்துக்கொண்டு பிரயோஜன சம்பந்தங்களைக் குறிப் பிக்கின்றார்:—பந்த. மற்றுமை, இனி யிந்நூலின்கண்ணே அதி காரியாவன், அறியாது? அறிவுடையவனு? ஆதியனல்லன், அவனுகருத் தேகாதிகளிடத்தில் ஆன்மமதிதிடமாக விருத் தலினாலும், ஆசையதிகரித திருததலினாலும், மூமுக்ஷுத் தன்மை யில்லாமையின்; விடயங்களிடத்திற்றோட தரிசனத் தாலும், ஜனனமரணாதி துக்க தரிசனத்தாலும் அவனுக்கே வைராக்கிய உதய இசசையால், மூமுக்ஷுத்தன்மையுண்டாகி

அதிகாரமாமென்னற்க ; இராகமுடையவர்கள் மிகவும் விட யங்களை இரக்ஷிப்பதாகக் காணப்படுதலின் விடயங்களிருக் கும்போதே அவற்றிலுள்ள தோடத்தை நீக்கு முபாயத்தை முயல்வதுடன் நல்லநல்ல விடயங்களையும் தேடுதலின் இக லோக சம்பந்தி பரலோக சம்பந்தியுபாய இச்சையோடு முயலுதலின் என்க. அறிஞனுமாகான், அவனுக்குக் கிருத கிருத்தியதன்மை புண்மையினனே கொந்தத்தாற் சாதிக கப்பட்ட பிரயோஜன ஆசையின்மையினனே கொந்தத்திற் பிரவிருத்தி கூடாமையின் என வினவி விசிஷ்ட அதிகாரி யைக் காண்பிக்கின்றார் :—பந்த.

பந்தமுற் றனன்பர பதத்தைச் சேர்கவென்
றநதநிச் சயமுளா னறிவிலா னலான்
சிந்தனைத் துயர்கெடச் சித்தைச் சேர்ந்துளா
னிநதநூற் குரியவ னென்று கொள்கவே.

(ப - ரை.) பந்த முற்றனன் (நான்)=நான் பந்தத்தை யடைநதிருக்கின்றேன், பரபதத்தை = மேலாகிய மோக்ஷ பதத்தை, சேர்கவென்று = இனி யடையவேண்டு மென்று, அநத = அம் மகிமைவாய்ந்த, நிச்சயமுளான்=நிச்சயத்தை நன்றுகவுடைய முமுக்ஷுவே, இநத நூற்கு = இந்த ஞான சாஸ்திரத்திற்கு, உரியவன்=பொருந்திய அதிகாரியாவன், என்றுகொள்க = முத்திவாஞ்சை புண்டா யிருத்தலின் இந திரியங்கள் விடயங்களி னின்றுமு அவசியம் உபாதி யடைந திருக்கும் இருக்கவே இக பரபோக வைராக்கிய மின்றியமை யாது எய்தியிருக்கலாம், ஆகவே நிதியமின்னது அநித் தியமின்னது என்னும் பகுப்பும் ஒருதலையாக வுண்டாகி யுளதாமென்க, எனவே நான்கு சாதனமுடையவனே இந நூற் கதிகாரியானன் என்று மனதிற் கவர்ந்து கொள்க. அறிவிலான்=அஞ்ஞான மிகுந்தவனும, அலான்=அதிகாரி

யலன், சிந்தனைத் துயர்கெட=சங்கற்பதுக்க நீங்க, சித்தைச் சேர்ந்துளான் = சைதன்யான்மகமான தன்னை யுணர்ந்த ஞானியுமம, அலான்=அதிகாரியலன், என்று கொள்க=என் றுணர்தற்பாற்று. (எ - று.)

(ஸ்ரீ - வீ.) பத்தன்யான் விடுபடவேண்டும் என எவ னுக்கு நிச்சயமதியுளதோ அவனிதக நூலில் நூற்கேடகு மதிகாரமுடையவ னென வறிக. அவனுக்குக் கேட்குத லாதியின் சாதகமாக ஆரம்ப விவேகம் வேண்டுமெனக காட்டுகின்றூர் :—அறிவிலானலன் என, சித்தைச் சேர்ந துளான் = அதனை யுணர்ந்தவன் எனப் பொருள்படும் ததஞன் என்பது மூலபதமாம், அலன்=நா, ஒருங்குகூடி நாததஞன் எனவாம், ஆகவே, அது என்பது பிரஹ்ம மெனப்படும், ஓம் தத்சத்தென்னும் நிர்த்தேசம் பிரஹ்மத் தை மூவிதமாய்க் கூறியது என்னு மிருதியினல்; அதனை யுணர்ந்தவன் தத்ஞன் பிரஹ்மவித்தாவன, நாததத்ஞன் என்பதில் ந-உத-ஞ என்றேனும் பதப்பிரிவு செய்யலாம், உம்மைப் பொருளில் உத, வரும், வாவே ஞாபிந=அறிஞ னும அலன், பிரஹ்மத்தைப் பெரிதறிந்தவனும், பெரிதறியா தவனும், கேள்வியாதியில் முயலுதல் கூடாமையின் சிறிது விவேகியே யதிகாரியாவன். பாபதத்தைச சேர்க வென் பதனல் பாதநீக்கம் இநநூலின் கேள்வியாலுறும் பயன மெனக் குறிப்பிக்கப்பட்டது. அறிவிலான் அலன் என்ப தாதியாலும் சாஸ்திர பிரஹ்மங்கட்குப் பிரதிபாத்திய பிரதிபாதகபாவ வடிவ சம்பந்த முளதாமென அறிவிதது மாகும். மற்றும், அத்தியந்தம அஞ்ஞனும், அறிஞனும், இநநூலின்கண்ணே அதிகாரிகளல்லர்; மற்றே, யான் பத் தன்=இச்சம்சாரத்தில் அநாதிகாலந தொடங்கிச் சிறையிற் கட்டுண்டு கிடப்பவனைப் போலப் பரிசுசேத பாவச ஜந்ம ஜரா மரணாதி துக்க மனுபவிததுக்கொண்டு சோகிக்கின்

றேன். முற்றினுஞ சோகத்தைக் கடக்கவேண்டு மாஞலோ ஆன்மஞானமே உபாயமாம். " ஆன்மவித்தானவன் சோகத் தைக் கடக்கின்றான் " என்னுஞ் சுருதியினுனென்க. அவ் வானம ஞானத்தானே யான் முகதனுவேன் என்னும் முதிர்ச்சியாய அறியும வேட்கையோடு கூறிய நிச்சயமானது எவனுக்குளதோ அவன் விநய உபாய முதலியவற்றுனே குருவைச் சரணகதியாக அடைவன் இந்நூற் கதிகாரியுமா வன் சாஸ்திர சிரவணதி பலத்தைச் சேவிப்பவனுவ னென் பதாம் ; எனவே அளவிறந்த புண்ணியங்களானே இராகாதி தோடங்களற்றவனும விவேக உதயத்தானே அறியும் வேட் கையனும் ஆகிய அஞ்ஞனுக்கே அதிகாரம் என்பது கருத் தாம. அற்றேல் இராகாதி தோடமற்றவன் மூவருணத்தி னுயின் சந்யாசவாயிலாக வேதாந்த சிரவணதின்கண்ணே யதிகாரியாவன் ; முற்காண்ட அடுத்த அனுஷ்டானதிற்கு மனத்தூய்மை வாயிலாகப் பிற்காண்ட அதிகாரதனை யடை விக்குந்தன்மை " அவ்விதனே வேதவசனத்தானே " என்ப தாதி சுருதியினுனே துணியப்பட்டிருததலின் மூவருணத் தினனல்லாதவனுக் கீண்டதிகார மில்லையாம் ; " அம்மகத் தாயனை வேதமுணராதவன் மனனியான் " என அதிகார நிடேதங் காணப்படுதலின் ; ஆகையால் அதிகாரி சுலபனல்ல னெனின் ? அற்றன்றும், ஸ்மார்த்த கருமம்போற் கூடலின் மூவர்ணமுடையவனுகு மூன்றக்கினியிற் சாதிக்கத்தக்க கருமத்தின்கண் ணதிகார மிருந்தபோதினும் அக்கினியா தானஞ் செய்யாதவனுகிய சாதாரணன் ஸ்மார்த்தகருமாதிகா ரத்தை யடைவதேபோலும் ; சிரௌத ஞானதிகாரி யிருந்த போதினும் அசக்யாசியாகிய முமுக்ஷு சாதாரணன் இந நூலின்கண் ணதிகாரியாவன் ; அஞ்ஞான மிருக்கும வரை யாம. இந்நூற்கும் மிருதியைப்போலும் வேதவியாக்கியா னத்தன்மை யுண்மையின், அங்ஙனமே கூறவும்பட்டுளது:—

20 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

வேதம் விளம்பாநின்ற பரபுருடன் தசரதர் மதலையாயுண்டாம் போழ்து வேதமும், ஸ்ரீ வான்மீகி பகவானுடைய வாக்கினின்றும் சாகூதாத திராமாயண வடிவமாகியது. ஆண்டுப் பூர்வகாண்டத்திற்கு, ஸ்ரீ இராமசரிதகதை முன்னிலையாக வியாக்கியானமாகிய ஆறுகாண்ட பூவ ராமாயணம் சமானமாம் உத்தர காண்டதிற்கு இவ் வைராக்கியாதியாறு பிரகாணமும் சமானமாம் சில ஸ்மார்த்த கருமங்களில் ஸ்திரீசூத்திரப் பொதுவாக அதிகார முண்டாவதே போல இதனது சிரவணதிலும புராணபடோலுமாம். " மறையவனே முதன்மையாகக்கொண்டு நான்கு வருணங்களையும் கேட்பிக்க " "சூத்திரரும மகதத்துவத்தையடைகுக" என்பதாதி வசன லிங்கங்களாலும். " அப்பெரும்பொருளை வேதமுணராதவன் மனனியான் ; அவ்வுபநிடப் பிரதிபாத்தியபுருடனை வினவுகின்றேன் " என்பதாதி வசனமோ அவேதவித்திற்குச் சிரௌத ஞான அதி காரபரமாமென்பர் சிலர்; அபரோக்ஷஞான முடிவுபரிலதாம் பரமென்பர் மற்றையர் ; வேதவாயிலாந்தன்மைத் துதிபரமாமென்பர் சிலர். எல்லாவாற்றினுமே மற்றையருக்கும் புராண சம்பந்த சாதாரணமாகிய ஞானத்தின்கண்ணே அதிகாரமுளதேயாம " எல்லா வருண ஆசிரமங்களாலுமே அவவான்மா அறியத்தக்கதாம " என்பதாதி வசனங்களாலு மறிக. ஆண்டுச் சிரௌத ஞானத்தில் பூர்வகாண்டத்திற் கூறிய தருமானுஷ்டான ஜன்னியமனத்தூய்மையைப்போல, ஈண்டும், பூர்வ இராமாயணத்திற் காடடப்பட்ட தத்தம் வருணாசிரமத்திற்குத் தகுதியாய நிஷ்காம தருமானுஷ்டான ஜன்னிய மனத்தூய்மை அறியும வேட்கையை யுண்டாக்கும் வாயிலாகக் காரணமெனப் பூர்வோத்தர இராமாயணங்கட்கு வேறு வேறுவுடைமைச சம்பந்தத்தைக் காண்பித்துக்கொண்டு சர்வாகர்தத நிவிருத்திவடிவ வேறு பிரயோஜனத்தைக்கூறுகின்

ரூர் :—தருமதத்துவஞான அனுஷ்டானங்களாகிய, ஞானதி காரங்களை யடைவிக்கும் ஈசுர ஆராதனைகளில் கதையே யுபாயம் இந்நூலின்கண்ணே அந்தப் பூர்வ இராமாயணக் கிரந்தம் கதையுபாயமாம். அநேக காண்டங்களோடு கூடிய அவற்றை ஆதியில் விசாரித்து அதனதனுஷ்டானத்தி லதி காரத்தை யடைந்து எவ்வதிகாரியானவன் இவ்வியம்பும் ஆறுபிரகாணரூப மோக்ஷோபாயங்களை ஆராய்கின்றனனே, பிரஞ்ஞையால் காம கருமவாசனை அஞ்ஞான பீஜங்களை யெரித்த அவன், மறுபடியும் ஜன்மாதி துக்கத்தை யடைவ தில்லை முக்தனே யாகின்றன்.

ஸ்ரீ பரத்துவாசர் விஞ்தல்.

இங்ஙனம் பொன்னுலகத்தினில் என்பதனால் மங்களா சாணத்தையும் விடயசூசனத்தையும் விதித்து, பந்தமுற்றன னென்பதனனே அதிகாரியையும் பிரயோஜனத்தையும் சம்ப ந்தத்தையு முணர்த்திச் சாஸ்திரதனைத் தொடங்குபவராகி இதற்கு முதலில் சம்வாத கதைரூபத்தன்மையை விளக்குவி க்கும் பொருட்டுக் குருசீடமுறையைத் துதிக்கின்றார்:—மற் றும 56000ங் கிரந்தவடிவ இராமாயணத்தில் அநாதிகாலந் தொடங்கிப் பயின்ற இராகாதி தோஷத்தைக் கெடுக்கு மாற் றலுடைமையின் மகாபலம் பொருந்திய இராமகதை வடிவ மாகிய 24000ங் கிரந்த வடிவ 6 காண்டங்களை முதலில் ஸ்ரீ வான்மீகி பகவானியற்றி வணக்கமுடையவனும் மதிமானும் திருவருள்பெற விரும்பியவனும் சீடனும் ஆகிய பரத்வாஜர் பொருட்டுக் கடலானது யாசகனுக்கு இரத்தினத்தைக் கொ டுத்ததேபோலக் கொடுத்தார ஒருகாலத்தில் அறிவின் மி குந்த பரத்வாஜர் மேருகிரியின்பாலுள்ள ஒரு ஆரணியத் தின் கண்ணே வீற்றருளியிருந்த ஸ்ரீ பிரஹ்மாவின் சந்நி தியிற் கீர்த்தித்தபோது சந்தோஷத்தை யடைந்த வுலகபிதாம

காகிய பிரஹ்மதேவர் வரமுன்னிலையால் உலகைக் காக்குஞ் சாதனமாகிய மோக்ஷசாஸ்திரத்தைச செய்விக்கவேண்டு மென்னும் பெருங் கருத்துடையராகி அந்த பரத்வாஜரை நோக்கி ஹே! குழந்தாய்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளென, பரத்வாஜர் ஹேபகவன்! பூதபவ்ய ஈசரே! பூர்வ இராமாயண அர்த்தானுஷ்டான ஜன்னிய சித்த நற்றாய்மையை யடைந்த இப்போது எதனை விமுமுக்ஷுக்கள் சமுசார துக்கத்தினின்றும் விடுபடுவார்களோ அதைத் திருவாய் மலர்ந்தருளுஹீராக என்னும்வரத்தைத்தான் தேவரீரை வேண்டிக்கொள்ள அடியேனுக்கு இசைசியிருக்கின்ற தென்றனர், இதைக் கேட்ட பிரஹ்மதேவர் நீ வினவிய இப் பொருளில் உனதாசிரியராகிய வான்மீகையே மிகமுயல் வுடன் விரைவில் பிரார்த்தித்துக் கொள்ளுவாயாக வென வருள்புரிய அவரது ஆணையைச சிரமேற் கொண்டு வந்து தமதாசிரியரைச் சரணகதியடைதல் சாற்றப்பெறுகின்றது.

பிரஹ்மானந்தத்தை யினிதுபருகும் பொருட்டு ஏகாந் தத்திருந்த சமதரிசன சீலரான ஸ்ரீ வான்மீகி யாசிரியரைப் பரத்வாஜராகிய சீடர் நமஸ்காரஞ்செய்து விநயததுடன் அடங்கிய குரலால் வினவினர். ஸ்ரீ இராமர் ஜீவன்முக்த பதத்தையடைந்து எங்ஙனம் சமுசாரசங்கடத்தில் விவகரித் துக்கொண்டிருந்தனர். ஆனல் இப்பொருளையே பரத வாஜர் வினவினர் என்று எங்ஙனம் அறிய முடியும் எனின், கேட்டி! பெரிய வாசிட்டத்தில் எங்ஙனம் சமசார சங்கடத் தில் ஸ்ரீ இராகவர் விவகரித்தனர் என முன் விளச் செய்து அதன் அடுத்தபின்னரே ஸ்ரீ இராமா முதலியோர் ஜீவன் முததராய் விவகரித்ததுபோலவே நீயும் விவகரிப்பாயாக எனத தங்களாற் கூறப்பட்டதே அந்த ஜீவன் முக்தஸ்திதி யடைவினுபாயததில் ஸ்ரீ இராமருக்குக் கிடைதத முறை தெரிந்தால் யானுமதைப் பின்பற்றலாம், அன்றியும்,

ஸ்ரீ இராகவரை வருணிப்பதற்காக முன்னிலையாய் முக்கிய மாக்கி ஜீவன்முக்தஸ்திதியை முறையாக வேற பிரஹ்மதத்தை புணர்ந்த பெரியவரே! கூறுவீராக, அதைக் கேட்டுப் பின் அடியேன் நித்தியம் சுகியாயுலவுவேன், ஸ்ரீ இராகவருக்கு முறையாக ஜீவன் முகதாவஸ்தையைக் கற்பித்து அடியே னுக்கு முதவினின்றும் மொழிவீராக, அமமுறையானே யான் நித்தியம சுகியாய் வாழ்வேன்; என வினவி யிருத் தலிணுளும், ஜீவன் முக்தபதத்தை யடைந்து மகா மனத்தை புடைய ஸ்ரீ இராகவர் எவ்வாறு விவகரித்தாரோ அவ் வாற்றை யாம கூறக்கேட்பாயாக என விடை தொடங்கலா னும, மேலும இசசமுசார சங்கடத்தில் ஸ்ரீ இராமரும் மகாமனத்தைபுடைய பாதரும் சத்ருக்நரும் இலக்குமண ரும் புகழ்பெற்ற சீதையம்மனும ஸ்ரீ இராமரைப் பின் றொடர்ந்திருந்த மந்திரி மைந்தர்களாகிய மகா மதிமான் களரும் தசரதரும அவர் பரிவாரமும் எங்ஙனம் விவகரித்துக் கொண்டிருந்தனர் அஞ்ஞானிகளாய் மற்றையரைப்போற் சோகித்துக்கொண்டார? அல்லது ஜீவன் முக்தரைப்போ லவா? என்பதை யருளவேண்டும், அவர்கள் துக்கமடையா மற் சுகிகளாயிருந்த விதத்தை அடியேனுகரு என்மதியிற் படுமபடி வெளிப்படையா யருள் செய்யின் அவ்வாறே அடியேனும் தங்களுபதேச சிரவணததானே கிருத்தியத் தன்மையை யடைந்த திருககூட்டங்களுடனே சுகியாயுல விக்திரிவேன் என ஸ்ரீ இராமபரதாதி விடைய விளுவின் பின் னர் மந்திரிமைநதர் நிர்துக்கித்தன்மை வடிவ ஜீவன்முக்தி யடைவுவகையை விளுதலிணுளும அறியப்பெறுகின்றதாம, பெறவே இப்பொருளே பரத்வாஜராற் கேட்கப்படடது.

இவ்வாறு மிகவும் பணிவுடன் வினவிய வித்யா விஷய சம்பன்ன பரத்வாஜரை யாசீர்வதித்துக் கிருபாதிருஷ்டி யுடன் ஸ்ரீ வான்மீகி பகவான் கூறுகின்றார்;

24 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

நின்னுலியாது வினவப்பட்டதே அது சாதுவாம். சிர வணத்தின் பொருட்டு நீ யோக்கியனுக விருக்கின்று யாக வின் உன்பொருட்டுக் கூறுகின்றேன். சிரவணிக்கும் ஸ்ரீ இராகவ் ஜீவன்முக்திலாப வுபாயத்தாற் சம்மோகமென்னும் அஞ்ஞானமலத்தை முற்றிலுமே நீ தூரஞ்செய்யலாம் இனி மேல் வராமலே யத்தியந்தங் கெடுக்கலாம், அல்லது சம் மோக மலமாம் ஹேய்யத்தகைமையால் அதனுனே யுதைத் தூரத்திலெறிதலுசிதமாம். அன்றியும், குழந்தையாகியே ஹ பரத்வாசனே ! கேட்பாயாக ! நீ கேட்டபடி கூறுகின்றேன், அதைச் சிரவணித்த மாத்திரையானே ஆன்ம தத்துவத்தை யறியாத மலமானது அத்தியந்த தூரத்தில் ஓடுமாறு செய் துவிடலாம், யாவற்றினும் பொய்யென்னும் புந்தியானே பற்றின்றிச் சென்தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ இராமபிரான் சுகியாயிருந்து விவகரித்ததுபோலவே, பிராஞ்ஞனுகிய நீயும் விவகரிப்பாயாக. அபரிச்சின்ன வஸ்து மனதிற் புகுத லானே பெருமனத்தை யுடையவராகிய இலக்குமணர், பரதர், சத்ருக்னர் கௌசலை சுமித்திரை கைகை கசரதர் அவர்தம் பரிவாரம் இராமசகாயர்களாகிய கிருதாஸ்தான், அவிரோதனென்போர் யாவரும் எதன்பின்னறியவேண்டிய தயலொன் றெஞ்சாதே அத்தகைய முடிவான மெய்ஞ்ஞா னத்தை யடைந்தனர். ஸ்ரீ வசிஷ்டரும் வாமதேவரும் மந் திரிமா ரெண்மரும் அயலாரும் அவ்வாறே யடைந்தனர். திருஷ்டிஜயந்தன் பாசன் உண்மைபுனைக்கும்விஜயன் விபீஷ ணன் சுஷேணன் அனுமான் சுக்கிரீபனுடையமந்திரியாகிய இந்திரஜித்து என்பரே எட்டு மந்திரிமாரென எண்ணப்படு வர். இவர் யாவரும் உள்ளேசாந்தராகி இராகமற்ற மனத் தராய் வெளியிற் பிராரப்தப்படி கிடைத்த வற்றின் கண் மகிழ்வுடையராய், மகான் மாக்களாய்ச் சீவன் முக்தர்களாய் வாழ்ந்தனர். இவர்கள் ஹோம முதலிய சிரௌதகருமங்களை

யும், தான முதலிய ஸ்மார்த்த கருமங்களையும் கொள்ளல் தள்ளன் முதலிய அவ்வக்காலத்திற்குத்தக்க இலௌகிக கல் விவகாரங்களையும், நினைதலையும் மேற்கூறிய இரண்டன் ஆலோசனையையும், செய்ததேதேபோலச் செய்துகொண்டு நீ வாழ்வையாயின் மைந்த ! இச்சங்கடதினின்றும் முக் தனே ஆவாய் ; கரையற்ற குடும்பக்கடலில் விழுந்தவன் இவ்வுயர்வாகிய உலகத்தை யடைவனையின் மிகுந்த சதுவ குணமுடையவனும், சோகத்தையு மடையான், தன்னியத் தையுமடையான் யாதொரு விதமான தாபமுமில்லாதவனகி நிதிய திருப்தனும் நிலைப்பன்.

சமுசார சங்கடத்தில் ஸ்ரீ இராகவர் எங்ஙனம் விவ கரித்தனர் என்னும் விஷயிற்கு, ஜீவன் முக்தபதத்தை யடைந்த இராகவர் மகாமனததராய் எங்ஙன் விவகரித் தனரோ என்பதாதியாக விடையளித்து ஆகியில்கூறப்படும் ஜீவன்முக்தி சாதனபூத ஆத்ம அபரோகஷ ஞானததினுபா யம், சித்தமானது சின்மாத்திரமாகச சேடித்து நிற்கும் வடிவதியானமும் அதன் முதிர்ச்சியாற் கையுறும் அசம் பிரஞ்ஞாத சமாதியும் ஆமென்பது பிரசித்தமாம். ஸ்ரீ இராகவ விருத்தாந்தத்தைக் கூறும் வாய்லாக விஸ்தாரமா யினி யடிக்கடி பிரதிபாதிச்சுப்படியாக விழைநதுள்ள சோபாயத்தை யுணர்வின் சௌகரியப் பொருட்டுச் சுருக்கிக கூறுகின்றார்:—அல்லது ஜீவன்முக்த பதத்தையடைந்த ஸ்ரீ இராமர் என்பதாதியால் விஷ்வினுததரதனைக கூறி ஆதி யில் முக்தியையும் அதனுபாயவடிவ சாஸ்திரார்ததனதையும் மதியிலெளிதாக ஏறும்பொருட்டுச் சுறுக்கிக் கூறுகின்றார் : ஆகாயத்தின் சியாமளத்தகைமைபோல ஜகத் சம்பந்தியாய மோகத்தை மறப்பதே மேன்மையான பேருபாயமென வெண்ணுகின்றேன் என்பது வருஞ் சமபந்தமாம்.

ஸ்ரீ வான்மீகி பகவான் இலக்கணம் சொரூபம் சாதனம் பலம என்பவற்றுனே ஜீவன் முக்தியினிலைமையை விரிவாகக்கூற இச்சித்தவராய் முதலில் எளிதாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சுருக்கி முத்தியிலக்கண சொரூபங்களைக் காண்பிக்கின்றார்.

கற்பிதமாகிய திருசியம் அதிஷ்டானமான காண்போனுக் கயலாகவில்லை யாகமாதிகளா லுண்டாக்கப்பட்ட போதத்தால், சங்கற்ப வடிவமாய மனமென்னும் அந்தக் காரணதினின்றும் திருசியநீக்கம் உண்டாகுமாலுல் மோக்ஷ சுகமான துண்டாகி விளங்கிநிற்கும். அதுவிடய சுகம போலச் சாதிசமயமன்று. திருசியமிததியாத்வ நிச்சயந் திடமானவழி அவ்வாதனை நீங்கிப் போதலின் ஆண்டு இராகம் அனுதயமாதலின் அதனினின்றும் திரும்பிய சித்தம் பிரஹ்மானந்தத்தை யறிந்தனுபவிக்கும்; அதனலே தடையாவுமுடைந்து அவிருதம் அபரோக்ஷ ஞானத்தால் மோக்ஷமான துண்டாமென்பது கருததாம. அன்றியும, ஆகாயத்தில் நீலம்போல மூற்றினும் அசம்பவமாயதும, கற்பனையாலுண்டாகியதும் ஆகிய உலக சம்பந்தியத்தியாச வடிவ இம்மயலை, இதன் மூலமாகிய அவித்தை வாசனை யழிவானே மீண்டு மெண்ணமை புண்டாகுமாறு மறத்தலே யாவற்றினும் மேலாகிய முக்தியிலக்கணமும் சொரூபமுமாம், எனப்பிரமாண அனுபவங்களானே துணிந்திருக்கின்றேம்; பரோக்ஷ ஞானிகட்கும் துயிலிலும் நிருவிகற்ப சமாதியிலும் திருசியததின் மறப்பிருதபோதிலும் அது மீட்டு மெண்ணமில்லாமை யாகாதாம். அல்லது மீண்டும நினைத்தல் எம்மனத்தால் அது மீட்டு மெண்ணமாம், அது எதன்கண்ணின்றே அது மீட்டு மெண்ணமில்லாமையாம். மறப்பு என்பது நினைப்பின்மையாம், துவைதத் தோற்றமாத்திரமுமில்லா திருத்தலென்பதாம. அல்லது மறந்திருத்தலே

போல மறந்திருத்தலாம், அனுபவிப்பவன்பால் மறந்தவிடய மிருந்தபோதினும் தோற்றுதேபோலச் சைதன்யத்தின் கண்ணே திருசியமிருந்தபோதினும் தோற்றுதிருக்கும. ஆயினென் பரமார்த்த சத்தியமாகிய திருசியத்திற்கே சாங்கியர்கொண்ட முக்தியைபபோலத் தோற்றுமை மாத திரமாயிருத்தலா முக்தி யெனின்? அல்லவாம், அத்தி யஸ்தமாகிய அது தோற்றுமையே முக்தியாமென்க. சமஸ் காரத்தா லஃதுண்டாகாமையின் யாங்ஙனம் அதற்கு மய லாந்தன்மையினின்? பூர்வ பூர்வ ஜகத்து விவகாரத்தாலுண் டாய சமஸ்காரத்தால் நிலைபெறல் கூடுமென்றுணர்க. அற் றேலாயின், தோடத்தாலுண்டாகாமையானும், அதிஷ்டான மின்மையானும் மயற்றன்மை கூடாதெனின், ஆகாயத்தில் வர்ணம்போலுண்டாய தென்க. தூர ஆராய்ச்சி யின்மைத் தோடத்தானே ஆகாசவர்ண மயலுண்டாவதேபோல் அவித் தைத தோடத்தாற் பிரஹ்மத்தின்கண்ணே யவித்தை மயற் கூடுமென்றுணர்க. எனவே முற்றினுந திருசியதத்தை மாற் றுவதாம மொழிந்த இவ்விலகணம், அதனறகுறிப்பிகப் பட்ட சின்மாத்திர நிலைபேறு சொரூபமாம. அவை தமத னுபூதியினுனே துணியப் பெற்றனவெனக் காண்பிக்கப்பட் டன, அவ்வாறுயின் நம்மனோரால் அவையே னனுபவிக்கப் படவில்லை யெனின்? திருசியத்தினது அத்தியந்தாபாவ போதமாகிய பாதமில்லாமல், கூறிய இலக்கணமும் சொரூப மும் எப்போதும் எங்கும் அனுபவிக்க முடியாவாம். ஆயின், திருசியபாதமானது எவ்வேதுவிலாமென் றுசங்கைவரின், சர்வ ஜகத்திற்கும் அதிஷ்டான பிரத்தியகபின்ன ஆன்ம தத்துவ சாகூஷாத்காரத்தானே அஃதாம், என்பதனுனே அச் சாகூஷாத்காரத்தைத் தேடவேண்டும்; உபாயத்தாலதைச் சாதிக்கவேண்டுமென்பதாம். ஆயினதற்கென்ன வுபாயமெ னின், அது இச்சாஸ்திரத்தை யுணரின் அவசியம் சம்பவிக்

கும் அதன் பொருட்டே இம்மதுண்டாயதாம் தத்துவத்துணி புண்டாகும்வரை சாஸ்திரத்தைச் சிரவணஞ் செய்குவாயா யின் தத்துவத்தையடைவாய் வேறுவிதமாய் முடியாதாம். உலகமயலாகிய இதுகாணப்பட்டபோதிலும், இந்நூலிற் காண்பித்தபடியாராய்தலினனே யாதொருதுயரமுமல்லாமல் ஆகாயத்தில் வருணத்தைப்போலும் இல்லவே யில்லையென அனுபவிக்கலாம். அனுபவிக்கலாமென்றால் அனுபவம்ஆன்ம சைதன்யமேயா? அல்லது அயலா? அயலெனபது கூடாது, ஏனெனின், அறிவிற்கு வேறுயது ஜடமாய் விடயமாதலின் அனுபவமென்பதுபொருந்தாதாம். ஆன்மாவேயெனின், அது முன்னமே யிருக்கின்றதாதலின் சாஸ்திரத்தாலாகவேண்டிய தென்னுளது? எனின், உண்மைதான், ஆன்மாவே யனுப வமாயினும் இது திருசியத்தோடு கூடியிருத்தலின் அவவனு பவமாகாதாம்; மற்றோர், விருத்திரூபமாகிய ஆன்ம தத்துவ சாக்ஷாத்கார போதத்தானே அவித்தையினழிவால் அதனு லுண்டாய திருசியநீக்கமானது, திருசியம முக்காலத்திலு மில்லையென்பதாக மனத்திற்குக் கிடைப்பின் நித்தியசித்த ஆன்ம வடிவமாக இருப்பினும் மேலாகிய மோக்ஷானந்தமா னது தத்துவஞானததாலுண்டாயதேதபோல ஆகின்றதாமெ னக் கேவலம் அதன்வாயிலாகச் சொலுப பூதமாயினும் அனுபவம் சாஸ்திரபலமாம்.

வித்தையின்வலுவிலுலே சித்தத்திற்கு விடயத்தினின் றுந் திருமபுதலைச் சம்பாதியாதவர்கள்பாற் சேடங்கூறு கின்றார், அல்லது வேறுசாஸ்திரமதெரிவித்த உபாயங்க ளாலே முக்தியேயுண்டாகமாட்டாதெனின் கூறுகின்றார்.

கூறியமுறையே உண்முகத்தைச்சம்பாதிக்காமல் வெளி முகமாகச் சாஸ்திரங்களாகிய படுகுழிகளில் புரளும் காய கேஷ்டையைச் செய்து கொண்டு அக்கிருத்திரிமத்தை யறி

யாத அதாவது அப்பிரஹ்ம வித்துக்களாய பரத்வாஜாதி யுங்களைப்போன்றவர்கட்குப்பெரும் பெரும்போது சென்ற போதினும மோக்ஷசுக முண்டாகாதாம். அல்லது, அறியாதவர்கட்கு மோக்ஷசுக முண்டாகாதாமென்க. குழியிற் புரளும் புரட்சியானது, சேறுபூசிய காத்திரபங்காதியாலுளவாம் துக்கத்தின் பொருட்டே யாதல்போல, வெளிமுகர் தங்கள் நூலின் கேள்வி துயரப்பொருட்டேயா மல்லாமல் இன்பப்பொருட் டிறையுமாகாதாம் என்பதபிப்பிராயம். அன்றியும், கூறியவுபாயத்தைக் கவராவிடின் பிறப்பில்லாத அநாதியஞ்ஞானத்தை யுடையவரும், வெவ்வேறு வகையாய அநான்ம சாஸ்திரக்குழிகளிற் புரளுபவரும், இசைசையையுடைய குருடுகள் விழுவதற்கேதுவாதலின் குழியெனப்படும் அவ்வச் சாஸ்திரமுணர்த்திய உபாயங்களானே இகபரலோக விடயவிருப்பத்தானே முயல்பவரும், அதனானே, அதனை யனுபவிக்கும்பொருட்டு, மீண்டு மீண்டு இச்சம்சாரத்தில் பிறப்பெடுப்பவரும் ஆகிய கீழ்மகக்கட்கு அளவில்லாத பிரஹ்ம கற்பங்களானும், இளைப்பாறுஞ சுகமானதுண்டாகாதாம். அநாதியஞ்ஞானமானது ஞானத்தினும் வேறுகிய ஆயிரஞ் சாதனத்தானும் நீங்க மாட்டா தென்பது கருத்தாம்.

போதத்தாற் றிருசியநீக்கம் திருசியவாசனை நீக்கவாயிலாகவே யாமாகலின் வாசனைத்தியாகம் திருசியநீக்கமுதலியவற்றின் வாயிலாக மோக்ஷத்திற்கு உத்தம உபயோகமாக இருத்தலின் அனுஷ்டிக்கத்தக்கதாம் எனக் கூறுகின்றார். அற்றேல், உபாசனைமுதலிய வேறு உபாயங்களானே சாதிக்கப்படுவனவாகிய சாலோக்கிய முதலிய அன்னிய மோக்ஷங்களும் பிரசித்தங்களாம் அவற்றுலவர்கட்கு எங்ஙனம் ஆனந்த முண்டாகாமற்போகும் எனின் கூறுகின்றார்.

வாசனைத்தியாகத்திற்கு எங்ஙனம் மோக்ஷத்தன்மை யாதல் கூடுமெனவாசங்கித்து உபசாரத்தாலாமெனக்கருதி விடையளிகின்றார். வாசனைத்தியாகமே நிர்மலவுபாயமாம் மோக்ஷத்திற்கென்பது பொருள். பிறப்பிற்குவிரையாய வாசனைகளின் சேடமின்றிய யாதொரு பரிததியாகமுளதோ, அதாவது, மூலத்தைக்கெடுத்தலானே முற்றிலுங் கெடுத்தல் யாதோ அது முக்கியமோக்ஷமாம்; மோக்ஷசப்தத்திலிருக் கும் முச என்னும் பகுதிக்குப் பந்த நீக்கத்தில் இடுகுறித் தன்மை புண்மையின் வாசனைகளை முக்கிய பந்தமாதலின், சாலோக்கியாதிகளில் அவ்வாசனை நீக்கமில்லாமையின், மோக்ஷசப்தங் கௌணமாம்; அநத முக்கியமே அவித்தை முதலிய மலம்நீங்கியோரா லடையப்படும், மற்றையரான் முடியாதாம், கருமங்களானும் உபாசனைகளானும் சிரவணதி களானும் நாடோறும் மன நற்றாய்மையே சர்வவாசனை களும் அழியும் வரைசாதனமுறையாமெனவுணர்க. வாசனை நீங்கிய போதிலும் அதனேதுவாகிய மனமிருத்தலின் மீண் டும் வாசனை புண்டாம உண்டாகவே பநதமு மாமெனின், ஆகாதாம், சீதசந்ததியானது சென்றழியவே பனிக்கணம பட்டழிவதேபோல, வாசனையானது கழிநதொழியவே வாச னையின் கூட்டமே மனமாதலின் விரைவாகவே மனங்கெடும்; மனம் நஷ்டமாயினும், தூலதேகமே பந்தமாக நிலைபெறுமே யெனின், பெறுதாம், பூதக்கூட்டத்தாலாகிய பிராணிகளா கிய பறவைகட்குக கூண்டுபோன்ற இததேகமும வாசனை பால் மெல்லியதாகி புட்பிரவேசித்த நூலிழைபோல, முத்துக் கூட்டம் நிலைப்பதேபோல நிலைக்கும்; ஆகலின் வாசனையழி யவே அத்தேகமும் நீங்கிவிடும்.

வாசனைத்தியாகம் மோக்ஷவுபாயம் என்னும் பொதுக் கூற்றால் எஞ்சுதலின்றி எல்லாவாதனையின் நீக்கம் எய்துறத் தூயவாதன விடத்தக்க தன்றும் என்று காண்பிக்கும்

பொருட்டு வாசனை யிருவகையாமெனக்கூறுகின்றார், அல்லது இங்ஙனம் உபோற்காதத்தானே பாமுக்தியை வருணித்து பிரகாணத்திற் றுதிக்கப்பட்ட ஜீவன்முக்தியை விளம்பும் வேட்கையராகி அதன்பொருட்டு வாசனையின் இருவகையை வழங்குகின்றார், சுத்தம் மலினம் எனவாசனை யிருவகையாக வழங்கப்படும், மலினமானது பிறப்பிற்கேதுவாம், சுத்தமானது பிறப்பையறுப்பதாம்.

அவற்றுண் மலினவாசனையின் இலக்கணங்கூறுகின்றார்.

அஞ்ஞான மிருந்தாலன்றே வாசனைக்கு நிபிடத்தன்மையாதல், மற்றையபோதாகாதாம், கன அகங்காரசாவினியாமிது அதாவது நிபிடமாயாதல் திடமாயாதல் அகங்காரத்தால் அழகுடைத்தாகும் என்பதாம். இனிச் சுத்தவாசனையினிலக்கணமாவது, இனிது வறுத்த விதைபோலும் மீண்டும் உண்டாக்கத்தகாததா யிருக்குமே. அன்றியும், மலின வாசனையானது அஞ்ஞானதினன்குபெருதத ஆகாரத்தையுடையதாம, கன அகங்கார இயற்கையதாம, மீண்டும் மீண்டுமே பிறப்பினுமே வித்தாம், என்பர் மூதறிதார். வாசனை விளைகள் இனிது முளைப்பதற்கு அஞ்ஞானமே நல்ல நிலமாம், அதன்கண்ணே விடயத்தைச் சந்ததம சிந்திதல் வடிவப்பயிற்சியால் விருததி யடைந்த நல்ல கனகாரதனை யுடைய வாசனை விளையாம். இராகத்துவேடாதிகளானே வளர்தலால் நெருங்கிய அகங்காரம் நீர் தெளிக்கும் நிலமுடையவணும்; அவனுலேயே அது விருத்தியடைவதாகி விரிந்து விளங்குகின்றது. சுத்த வாதனையானது மறுபிறப்பை யுண்டாககு மங்குரத்தை விடித்து வறுத்தவிதைபோ லிருப்பதாம்.

கூறிய பொருளையே விரிதது விளம்புகின்றார் அல்லது பலத்தோடுகூடி வியந்த ஜீவன்முகதியை யாசிரயத்தோடுங் கூறுகின்றார்.

வர்த்தமான தேகஸ்திதியின்பொருட்டுத் தாங்கப்படுவ தும், எதன் நிமித்தத்திலுலே அறியவேண்டிய பிரஹ்மம் அறியப்பட்டதோ அதுவும சுத்த வாசனையாமென்று மறிக. யாவர் தூயவாசனை யுடையவராய் அறிய வேண்டிய தமது யதார்த்த சொரூபத்தை யறிந்து மகாமேதாவிகளா யிருக் கின்றார்களோ அவர்கள் ஜன்மமேயாய அனர்த்தத்தின் பாத் திரமாக மறுபடியாகமாட்டார்கள் ; அவர்களே ஜீவன்முக்தர் களென்றும் சொல்லப்படுகின்றார்கள். சுத்த அசுதத வாச னைகட்கு இவ்வாறு இலக்கணங்களமைந்தவழி முமுக்ஷு வால் தூயவாசனை விடத்தக்கதன்றும், மற்றை, மலினவாச னையே விடத்தக்கதாம், தூயதோ பெருமுயற்சியிலுலே சம் பாதிக்கத் தக்கதாம் என்பது சமுதாயப் பொருளாம். விதை யினுள்ளே சூக்குமமாகிய அங்குரங்களிருந்தே காலஞ்சல முதலியவற்றின் சம்பந்தத்தான் முளைக்கின்றன, அது போல, வாசனையின்கண்ணுள் ளடங்கிய ஜன்மபரம்பரைகளி ருந்தே காமகருமாதி நிமித்த வசத்தால் கிளம்புகின்றன. முற்றினுமில்லாததற்குச் சன்மஞ் சம்பவியாமையின் ஆண் டுத் தத்துவ ஞானத்தானே அவிதைதநிலஞ் சுடப்படுதலின் அதனுள்ளடங்கிய பிறப்பங்குரங் கெடினும் தனது பிறது பிராரப்தத்தானே தடைப்பட்ட, வறுதத விதைபோலும் தேகத்தைத்தாங்குவதின்மாத்திரம் பயனுடையதாயவாசனை எஞ்சும் அதுவே சுத்தமாம். ஜீவன் முக்தர்களாகிய தேகி களிடத்தில் தேகமிருக்கும்வரை மீண்டும் பிறப்பைத தாத தாகிய சுத்த வாசனையாலது, சுழன்ற சக்கரத்தில் சுழற்சி யிருப்பதேபோல விருக்கும். தேகத்தைத் தாங்குங்காரியத் தானே அவர்களிடத்தும வாசனையினிருப்பு அனுமிக்கப்படு மென்பது கருததாம். மிகுதியாகச் சுத்தவாசனை யுடைய வர்களாகி மீண்டும் பிறப்பாகிய அநர்த்தத்தை யடையாதவர் களாகி யிருக்கும் அவர்களே மகாமதியுடையவர்களுந்

ஜீவன் முக்தர்களுநம் அறியவேண்டியதை யறிந்தவர்களுநம் ஆ வர்கள் எனப்படுவர்கள், படவேதத்துவஞானத்தால் தகிக்கப் பட்ட பிறப்பின் மூளையாற்றலையுடைய வாசனை மாத்திரத் தானே தரித்த சரீரத்தன்மை, ஜீவன்முக்த இலக்கணமென் பதுதுணிபாம்.

இதுகாறும இயம்பியவகையே ஜீவன் முக்திசாதன விஞ்ஞானஉபாய பூதசமாதியையும் உபாயசகித முக்தியை யும் அதனுபாய இலக்கண சாஸ்திரார்த்தத்தையும் சுருக்கமா கக் கூறி இப்போது எம்முறையானே ஜீவன்முக்தபதத்தை யடைநது இச்சமுசார சங்கடத்தில் விவகரித்துக்கொண்டி ருநதனர் ஸ்ரீ இராகவர் என்னும் விஞவிற்குத்தாத்தைப் பிர திஞ்ஞைவாயிலாக உத்தாகிரந்த சந்தர்ப்பங்கொண்டு கூறு கின்றார்:— அல்லது ஜீவன்முக்தியின் சாதன நிரூபணத்தைப் பிரதிஞ்ஞை செய்கின்றார்.

ஜீவன்முக்தர்களுடைய ஸ்தானத்தை அதாவது சுவா ராஜ்ய மென்னும் நிர்வாண பரமானநதவடிவ சொரூபத்தை எம்முறையானே ஸ்ரீ இராகவரடைநதிருந்தாரோ அம்மு றையை. அத்தகைய ஜீவன் முததிப்பதத்தை மகாமதியை யுடைய ஸ்ரீ இராகவர எச்சாதனமுறையானே சாதித்தாரோ அதனை நினக்குக்கூறுகின்றேன் கேட்குதி கேடபின் ஜனன மரணமேமுதலாயிருநத அநர்த்தங்களியாவும நீங்குவதாகிய பயன்கிடைக்கும்; மேலும், இச்சுயமாகிய ஸ்ரீ இராமர் முறை யைக்கூறுகின்றேன் இதனை நீ கேட்பதனானேயே எப்போ துமே யாவற்றையுமே புணர்வாய், இதனானே, ஒன்றனுணர் வானே எல்லாவற்றி னுணர்வுமாமென்பதும அதன்பயனுய காம்.

அற்றேல் ஏககாலத்தில் வெகுவித சாஞ்சல்லியமான வாலியமும், அன்றியும் அகிலமான ஆசையென்னுந தொடத்

துக்கடிமை புகுந்தாருண்யமும, அன்றியும் சார்வபௌமசம் பத்தோடுகூடிய மகாகீர்த்தியும் வலியுமுள்ளபிதாவும், முன்னி லையி லனுதினமு மனுபவித்தற்குரிய சுகசாதன சாமக்கிரி யும் இருப்ப ஸ்ரீ இராமருக்கு வைராக்கியாதி யோக்யதை யெங்ஙனமாம், எங்ஙனந்தான் அநதிகாரியாகிய அவருக்கு ஸ்ரீ வசிஷ்டபகவா னுபதேசங்கூடல், உபதேச மில்லாதவ ருக்குச் சீவன்முக்தியினயடைவுதான் எங்ஙனமோ தாணுதல் எனச சங்கித்து, நிரந்தரதடையற வியற்றும் ஞானசாஸ் திர விசாரத்தால் நித்தியாநிதகியவஸ்துவிவேகமும், தீர்த் தாடன மூர்த்தி வழிபாடு முதலியவற்ற லுண்டாகாநின்ற அகண்ணிய புண்ணியதகானே பரிசுத்தமான சித்தத்திற்கு விடயங்களிலுள்ள தோட தரிசனதகால் வைராக்கியமும் ஸ்ரீ வசிஷ்டாதி மகாமுனீசுரர்கட்கு அன்புடன் செய்யும் பணிவிடையாற் சமதமாதி சம்பதமும முததிவிருப்பும் என் னுஞ் சாதனசதுட்டய சம்பததுளள அதிகாரியான ஸ்ரீ இராகவருக்கு ஆசிரியரது அனுக்கிரகத்தாலும, தமதுபோத வலியாலும் ஜீவன்முத்தி சிததிப்பதிற் றடையாதாமெனக் கருதிக் கூறுகின்றார்.

தீர்த்த புண்யாசிரமங்களின் வரிசைகளைக காண்பான் அனுராக முண்டாயதாம. எங்கும் பயமின்றிய சென தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ இராமர் பாடசாலையினின்றுங் கிளம்பி வீடுவந்து சேர்ந்து நாட்களை விளையாட்டாற் கழித்து வந்தனர். பிரஹ்மசரிய ஆசிரமத்திற்குத் தக்க குருகுலவாசதகினின்றுட கிளம்பி யென்றதனனே சர்வ வித்தைகளின் தானங்களையும் கவர்ந்ததன்பின்னென்னலாம். சுரமுதலியவற்றுச சோகமின்றியவராய்ப் பிரஜைகளிருக் கும்படியாகத் தசரதர் பூமியைக காததுக்கொண்டி-ருக்குங் காலத்தில் ஈண்டு இராஜ்யத்தின் இனிமையானே பிரஜை கட்குச் சுரமுதலிய பீடையுமில்லையாயின் அன்னிய பீடைக

ளில்லாமலிருந்தன வென இயம்பவேண்டுவ தில்லையாம். அக்கால் ஸ்ரீ இராமருடைய மனமானது, தீர்த்தங்கள் புண் ணியாசிரமங்கள முதலியவற்றைக் காணவேண்டுமென்னும் போவாவைப் பெரிதுமடைந்தது. அற்றேல், இவ்வத்தி யாத்ம சாஸ்திரத்தில் தீர்த்த யாத்திரையை வருணித்தற் கும், இனிக் கூறப்படும் வேட்டையை வருணித்தற்கும் யாது சம்பந்தம்? ஸ்ரீ இராம சரிதத்திர மாதலினனே எண்டு வருணிகக்பட்ட தென்பது கூடாது, ஏனெனின் ஸ்ரீ இராம ரது அவதாரத்தை வருணிக்க நேர்தலினனும், பூர்வ இரா மாயணம் வீணைகப்போதலினனும் என வினவின்? விடை வருமாறு :—கதையி னுபாயத்தை விசாரித்து என்பதன் கண்ணே தத்தம் வருணதத்திற்குத்தக்க யாகாதிகருமத்தா லுண்டாய மனத்தூய்மையானது பிரஹ்மவித்தையின திகா ரத்திலினிது பொருந்துகின்றது என இயம்பப்பட்டது; வயது வித்தை முதலியவை கிடையாமையின் யாவன் யாகா தியை அனுஷ்டிகசக சாமர்த்திய மில்லாதனவனே அவனுக் குத தீர்தயாத்திரை முதலியவற்றினும் யாகாதிபலமாகிய மனத்தூய்மை யதிகாமம 'பூமிசம்பந்தமாய இருநீர்மய யாகங் கள் தீர்த்த ரூபங்களாக உண்டாக்கப்பட்டன' என்னும வசனத்தானே சித்தமாம் என்பதை குறிப்பிகுமபொருட் டுத் தீர்த்தயாத்திரையை வருணித்ததாம. இதனனே ஸ்ரீ இராமரைக் கிழவயதுடையவராக இனிது கற்பிதது ஆன்ம ஜிஞ்ஞாசையை வருணிக்கவில்லை, கூறியபொருள் குறிப்பிக் கப்படாமற்போதலின். வேட்டையைவருணிப்பதோ, கண்ட உற்சாக தரிசன அவாவும் ஆன்மஜிஞ்ஞாசைககுத் தடை யாதலின் அவ்வுற்சாகத்தை யனுபவியாமல் அவ்விசனை யகலாவிடின் அதையனுபவித்தேனும் அஃதசாரமென்னுந் துணிபானே அவ்வாசையை யகற்றித் தடையில்லாமல் சிரவ ணாதிகளில் நிலைபெற்று நிற்றல்வேண்டுமெ என விசேடமாகத்

தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆமென யாவுமே மண முடைத்தாம்.

ஆண்டு ஒருகால நற்குணங்கட்கிடமாகிய ஸ்ரீ இராகவர் இவ்வாறு கூறியபொருளைச் சிந்தித்துத தநதையினது நக மாகிய தாதுக்கணிறைநத நவீன சரணகமலங்களை அன்னப் பக்ஷியைப்போல அணைநது வணங்கிக கூறுவதாவது, வேற நாதனே, தீர்த்தங்களையும், தேவாலயங்களையும், முனிவர் வாழும் வனங்களையும், அவரது பன்னகசாலைகளையும காணுமபொருட்டு எனது மனம் மிகவும் விரும்பியது. நாதனே யென்றது தமது பாதநதிரத்தைக் குறிப்பிக்கும் பொருடடாம். தநதையின்பால் வாழ்பவனுக்குத் தந்தை யின் சந்நிதியில் தநதையின் ஆணைவாயிலாகவே தரும அதி கார மிருத்தலின் என்பது கருத்தாம்.

உமமால் எந்த யாசகனுவது இப்புவனத்தில் இச்சித்த வற்றை யடைதலாற் சன்மானிக்கப்படாமற் போனென்ப தாக இல்லையாதலின், முதலதாகிய இவ்வெனது பிரார்த்தனை யைப் பலனுடையதாகச் செய்யவேண்டும், என வேண்டிக் கொள்ளப்பட்ட அரசரானவர் ஸ்ரீ வசிஷ்டபகவானேடும் ஆலோசனைசெய்து முதல்முதல் வேண்டிக்கொண்ட ஸ்ரீ இராமரைப் போகுமாறே ஆநுஞை நதநனா. மைநதன் பிரியும் துயரால் அங்கீகரித்திலர் என்பதாக இல்லை.

சுபவாரத்தில் சுபதிதியில் சுபநக்ஷத்திரத்தில் சுபயோ கத்தில் சுபலக்கினத்தில் ஸ்ரீ இராகவர் தம்பிமார்களோடும் சுபசகுனங்களோடும் மங்கள அலங்காரத்தோடுகூடிய திரு மேனியை யுடையவராகி, மறையவர்களா லாசீர்வாதமபண் ணப்பட்ட மார்க்கமுடையவராகி ஸ்ரீ வசிஷ்டபகவானுற் றேர்நதெடுத்தனுப்பப்பட்ட சாஸ்திரமுணர்ந்த பிராஹ்மணா களோடு கூடியவராகி மிகநேயத்தோடுகூடியமேன்மைதங்கிய

இராஜபுத்திரர் சிலரோடுகூடியவராகி, தாய்மார்களால் பன் முறை தழுவித் தழுவிச் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களோடு அலங்கரிப்பட்டவராகித தீர்த்தயாத்திரை செய்யவேண்டு மென்னு முயற்சியுடையவராகித் தமது அரண்மனையினின் றும் வெளிப்போந்தனர். தமது கோசல மண்டலத்தினின் றும் முறையாகத் தொடங்கி ஸ்நான தான தவத்தியான வாயிலாக நதிதீரங்கள், புண்ணிய வனங்கள், புண்ணிய ஆசிரமங்கள், தேவாலயங்கள், காற்று நிறைந்த பாலி வனங் கள், கிராம முடிபுகளிலிருக்கும் கடற்கரைகள், மருத்தலங் கள், மலைத்தோற்றங்கள், இந்துசம மநதாகினி நிலோற்பல சம யமுனை முதலிய விசேட புண்ணிய நதிகள, ஸ்ரீ வாரா ணசி முதலிய விசேட புண்ணிய ஸ்தலங்கள், ஸ்ரீ விசுவேசர் முதலிய புண்ணிய மூர்த்திகள், 64 சிவாலயங்கள், 64 விஷ் ணுவாலயங்கள், நாலுவித ஆச்சரிய விசித்திர நாற்கடற் கரைகள், விந்திய மந்திர ஹிமாசலதலங்கள், இராஜ இருடி கள், பிரஹ்ம இருடிகள், தேவர்கள், பிராஹ்மணர்கள், புனித மங்கள புண்ணியாசிரமங்கள் முதலிய யாவற்றையும் மிகவும் ஆதரவோடும் இனிது நோக்கினர்.

ஆண்டாண்டு சந்தித்த அமரர், கின்னரர், மனுடர் முதலியோராலே பூஜிக்கப்பெற்றவராகி, ஜம்புத்தீவு வடிவ மாய இச்சார்வ பூமியையும் இனிது கண்ணுற்றுத் தமது அயோத்திமாநகரை ஸ்ரீ இரகுநந்தனர் திசைகளில் பரம பக்தாநுக்கிரக விலாசமாகச்சென்ற ஸ்ரீ பார்வதி நாயகர் தமது சிவலோகத்தை யடைந்ததுபோல அடைந்தனர். புரவாசிகளால் லாஜபுஷ்பாஞ்சலிமாரியால் நிறைக்கப்பட்டவ ராகி, ஸ்ரீமான் ஐயந்தனுகிய தேவேந்திரன் மைந்தன் றனது சுவர்க்கத்தை யடைந்ததேபோலத் தமதரண்மனையை யடைந்தனர்.

மேலும் சந்தோஷத்தா லுன்மத்தர்களாகிய ஜனங்க ளால் மிக மேன்மையாகச் செய்யப்பட்ட கமபீரமாகிய கோலாகலத்துடன் ஸ்ரீ இராமரது விஜய மகோற்சவம் பரமானந்தத்துடன் எடு தினங்கள் கொண்டாடிய பின்னர் ஸ்ரீ இராகவர் இங்குமங்குங் கண்ட நானுவகையாய தேசா சாரங்களை யிங்குமங்கும் வருணித்துகொண்டு அரண்மனை யிலேயே அதுமுதற் சுகமாக வசித்து வருதனர். அதிகாலை யில் தினம்தினம் எழுந்து விதிப்படி சந்தியைசசெய்து கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் இந்திரசமமாகிய தமது தந்தையைத் தரிசித்து ஸ்ரீவசிஷ்டர் முதலியவரோடுமிருந்து மிகவும் விசித்திரகதோடு கூடிய அதியாத்மஞானக கதைக ளானே மகிழ்ந்தும் இருந்தனர்.

தினதின் நான்காவது பாகத்தில் தந்தையினது கட் டளைப்படி பெருஞ்சேனையோடு கூடியவராகி வேட்டையின் விருப்பத்தால் காட்டுபபன்றி, காட்டெருமை முதலியவற்ரு னைகலக்கமிருத்தகாட்டையடைந்து வேட்டையாடி வீட்டிற் குத்திரும்பிவந்து முறையாக ஸ்நாநாதிகளைசசெய்து மித்தி ரர் பந்துக்களோடும் அமுதுசெய்து நேயர்களோடுமை நிசியை நீக்குவர். ஸ்ரீ இராகவர் இலக்குமண சதருகநர்களோடும் தீர்த்தயாத்திரையி னின்றும் வந்தது முதற்கொண்டு இவ வாறு பெரும்பாலும் திரசார முடையவராய்த் தந்தையி னது அரண்மனையில் பெருமகிழ்வோடும் வாழ்ந்து வந்தனர். பெரும்பாலும் என்றது வேடடை முதலியவற்றிற்கு குடி கட் குபத்திரவமேற்படடாற் செல்லுதலும், படாவிடடாற் செல்லாமைபற்றியாம். அரசர்கட்குத்தக விவகாரததால் மனைகாமும், நல்லோருடைய உள்ளத்தில் சந்திரிகையைப் போலும் மகிழ்வைத்தருவதும், அதனனையே புகழத்தக்க தும், அமுதாசமபோல ஆற்றலுறறதும், கோமளமும் ஒழுகாநின்ற அமுதாசம்போலும் மாதுர்யமும, ஆகிய

ஒழுக்கத்தானே ஸ்ரீ இராமர் தினங்களை நன்கு கழித்து வந்தனர்.

ஈண்டிது சுருதி புகன்ற நிச்சிரேய சோபாய பரிபாடியாம், பல ஆபிப்பிராயம் பற்றுமை வாயிலாகத் தத்தமது வருண ஆசிரம கரும அனுஷ்டானத்தால் அறம்பிறக்கும் அதனானே மறமழியும், "அறத்தான் மறத்தை யறுதலே யகற்றலாம்" என்னும் சுருதியினலென்க, மறமழிந்தவழி மனததினுககு விவேக வாற்றலாம், பின் சமூசாதத்துவ பரிஞானம் அதனல் வைராக்கியாதி அதன்பின் முமுக்ஷுதை, அதனன்மோக்ஷசாதனநதேடுதல், பின்சருவகருமசந்நியாசம், பின்குருசரணத்திற் சரணடைதல், பின்சிரவணாதியனுஷ்டானம், பின் பிரஹ்மான்ம சாக்ஷாத்காரம், அதனல் அஞ்ஞானவிநஷ்டி, அதன்பின்னரோ சுவராஜ்யத்தின்கண்ணேயே யெழுநதருளி யிருததலாம. "இச்சமபிரசாதம் இவ்வுடம்பினின்று மினிது கிளமபிப் பரஞ்சோதி ரூபத்தைப்பற்றித் தன்வடிவத்தானே தானே யிருக்கும்" எனச் சுருதியு மறைகின்றது. அறை அவ்வித்தொடர்ச்சி ஜகதகுரு ஸ்ரீ இராம சரண கமல பஜனத்தின்கண் மூழ்கிக்கிடக்குஞ் சிற்சில மஹாதீர புருடர்களிடத்தின் மாத்திரமிருப்பதாகும், புருடோதத்தமனகிய உலகர்க்கெல்லாந் திருவருள் செய்யவேண்டு மென்னு மிச்சையினனே பிரஹ்மவித்தையின் அதிகாரித்துரநதரத்தகைமையைத் தரித்திருநததாசரதியின்மாட்டும் கூறியமுறையைக் காண்பிப்பான் விரும்பி, அவரிடத்தில் நிஷ்காம கருமானுஷ்டான மிருப்பதாக அறைநதகிரநத சந்தர்ப்பத்தால் அறைநது இஞ்ஞான்று அதன் பயனைய விவேக வைராக்கிய இலக்கணத்தைக காண்பிக்கின்றார்:- இவ்வாறு ஸ்ரீ இராமருக்கு மனத்தூய்மையினுடாய அனுஷ்டான ஒழுக்கத்தை வருணித்து, அதன் பயனகிய வைராக்கி

40 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

யாதி சாதன சம்பத்தியை விளம்பும் வேட்கையராய்த் தொடங்குகின்றார்.

தீர்த்தயாத்திரையை முடித்துவந்து தமது வீட்டில் வசித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ இராமர் தமக்குப் பதினைந்தே முக்கால் வயது நிகழ்ந்து கொண்டிருக்கும்போது நாடோறும் சாத்காலத்தில் நின்மலமாகிய தடமானது குறைவதேபோல இளைத்துகொண்டே வந்தார்; இளைத்தன் முதலியவை வைராக்கிய சிந்தாதுக்கத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. குமாரருடைய விசால நேத்திரத்தோடுகூடிய வதனமானது, பக்குவமாகி மலர்ந்த விதழோடுகூடிய வதனமானது, பக்குவமாகி மலர்ந்த விதழோடுகூடிய வண்டு மாலைகள் சூழ்ந்த வெண்டாமரையைப்போலும வெளுப்புற்றது. விசாலநேத்திர விசிஷ்ட உவமானப் பொருட்டே வண்டின் மாலைகள் சூழ்ந்த என்றதாம, கபோலத்தைக் காத்காற்றுங்கிப் பத்மாசனத்தில் வீற்றிருந்து சிந்தைடாவசராகி மௌனியாகிச் சேட்டையற்றிருந்தனர்.

இளைத்த யாக்கையராய் சிந்தையோடு கூடியவராய், துக்கிதராய், மிகவுந் துன்பமுறுமுளத்தராய், எவரோடும் எதனையும் இயம்பாதவராய் சித்திரத்திலெழுதிய பதுமை போலும் ஆயினர். தாதர்களான் மீண்டும் மீண்டும் வேண்டிக்கொள்ளப்பட்டபின் அவசியம் செய்யத்தக்க திரைசாரத்தை மிகவும் மலினமுற்ற முககமலத்தையுடைய அவர் கஷ்டத்தோடுஞ் செய்தனர்.

குணகணங்கட்கிடமாகிய ஸ்ரீ இராகவர் துக்கத்தோடு மிளைத்து வருவதை நோக்கிப் பதினிமார்களோடும் தசரத மன்னவர் மிகவுஞ்சிந்தாவசராகி வினவுகின்றார்.

இங்ஙனம் நிஷ்காம கருமபலமாகிய வைராக்கியத்தைச் சுருக்கமாகப் பிரதிபாதித்து இதனையே பிரசன உத்தரங்

களால் விஸ்தாரமாகப் பிரதிபாதிப்பான் விரும்பிப் பிரசனப் பிராப்தியின்பொருட்டுப் பிரசங்கத்தைக் கூறு கின்றார் :— வேற மைந்த ! நினக்குப் பெருஞ் சிறைதயுண் டானதென்னே யென அடிக்கடி மிகவும் அன்போடு கூடிய மொழியினனே கேட்டும் அவர் யாதொன்றுஞ் சொல்லவே யில்லை ; சொல்லியும் பயனில்லையே யென்னும் நிச்சயமிருத் தலின் என்பது கருத்தாம். தந்தையின் மடிமீதிருந்த தாமரை யிதழ்போலும் நேத்திரமுடைய ஸ்ரீ இராமர் ! வேற தந்தையே எனக்கு யாதொரு துயரமுமில்லை யெனக் கூறி மௌனமாகவே யிருந்தனர் ; வந்திருக்கப்பட்ட துயரம் அரசரால் பரிகரிக்க முடியாத தென்பது கருதாதலின் மிதனையாகாதாம். மன்னவர் ஸ்ரீவசிஷ்டபகவானைப் பார்த்து இராமசுவாமி யென்றுயருற்றுளனைக்கேட்ப, முனிநாதர் இதன்கண்ணே காரண மிருக்கின்றது நீர் துயரப்படவேண் டாம் எனச் சாமானியமாக வுரைத்தலும் விசேஷ சந்தேகத் துடன் அரசரிருந்த அவ்வேளையில், தவசிரேஷ்டராகிய ஸ்ரீ ஜகன்மித்திரமகரிஷி ஆண்டெழுந்தருளினர். அம்முனி வரைத் தூரத்திலேயே கண்ட பூபாலர் வணங்கிய ஆகிருதி யுடையவராகி மவுலிமணி கழன்று பூமியை யலங்கரிக்கு மாறு நமஸ்கரித்தனர். மகாமகிமைவாய்ந்தவருமை பால சூரி யனைப்போற் பிரகாசிப்பவரும், செஞ்சுடர்ச் சடாகூடரும் தவ இலக்குமியை யுடையவரும் புருஷோத்தமரும் ஆகிய அம்முனீசுவரரும் அவனி காவலரை யாசீர்வதித்து மதுரகம் பீர உதாரவாணியால் விஸ்தாரமா யனுகரிகதனர். ஸ்ரீ வசிஷ்டபகவானும் ஸ்ரீ ஜகன்மித்திரமகரிஷியும் பரஸ்பரம் அநாமயமுரைத்துகொண்டபின் றங்கத் தங்கப்பீடந்தந்து தவ இலக்குமியா லலங்கரிகப்பட்ட அவரைக் கண்டஞ்சி அந்த உத்தமோத்தமமாகிய மகரிஷிககு மகிழ்ச்சியோடு கூடிய வதனராய் அரசர் தாமே அர்க்கியத்தை நிவேதித்

தனர் ; அதாவது, அர்க்கியத்திற்குவேண்டிய நீரைப் பிற ரைக் கொண்டுவரச் செய்யின் அபராதம் வருமென நினைந்து தாமே கொணர்ந்து அருக்கியங் கொடுத்தனர். மூனிநாதரும் விதிப்படியாய கருமத்தால் அருகையதனைக் கவாநது வலம் வந்து போற்றும அரசரைப் புகழ்ந்தனர். நிராசையுடைய விவா அரசர்பால் வருவானேனெனின், மாயாவிரியபலத் தால் உன்மத்தராகிய அரக்கர்களானே, கருமமே யவசியஞ் செய்யத்தக்க காரியமெனகொண்டு நடத்தும மகாமதியை புடைய அவரது கருமயாகமானது சிதைவுற்றது அதைக் காகுமபொருட்டு அரசரைப் பார்கவேண்டு மென்னு மிசசையான தவருகுண்டாயதால் வருமாறு நேரிட்டதென் றுணர்க.

ஆசனததி லெழுநதருளிய மகாமதியையுடைய ஸ்ரீ விசு வாமித்திர மகா முனிவருக்குப் பாத்தியம் அர்க்கியம் சநத னம் புஷ்பம் வஸ்திரம் தக்ஷிணை பழந தாம்பூலம் கோக்கள் முதலியவற்றை அளவிறநதனவாகச் சமர்ப்பித்து, விதிப்படி அருச்சனைபுரிந்து அம்முனிவரை நோக்கித் தசரதா இரு கரஞ் சிரங்குவித்து அன்போடும் புனிதமாகிய இவ்வாக்கி யத்தைக் கூறத்தொடங்கினர்.

நினையாமலிருப்பக் கிடைத்த தங்களது வரவினாலும், ஒளிவாய்நத தரிசனத்தாலும், ஆசீர்வாதத்தாலுமே ஹே மகா முனிவரே ! கதிரவனைக்கண்ட கமலாகரங்கள் போலு வந் தோம. தங்களுடைய அனுக்கிரகமே எங்களுகனிவரும் பாக்கியமன்றே ; காரணமற்றதும் உண்டாதல் வளர்தல் அயலொன்றாய் மாறல்களற்றதும், குறைவழிகளற்றதும், ஒளபாதிக தனது அங்கிச லேசத்தானே யாவரையும் ஆனந் திக்குமாறு செய்விப்பதும் ஆகிய அந்தப் பிரசித்த பரமபுரு டார்த்தசுகத்தையே தங்களுடையதரிசனத்தால்நாங்களடைந்

தோம். தங்களுடைய வரவுக்குரியாகிய யாங்கள் இன்று தன்னியாகளாகிய கிருதகிருதகியருக்குள் முதன்மைத் தானதனை யடைந்தோம. மேழிச்செல்வனுககு மழையிலா நாளில மழையுற்றதுபோலும, அநதகனுக்கு அழகிய விழி கிடைத்ததேபோலும் ஆம் தங்களுடைய திவ்ய தரிசனம். அபாயவர்சிதம்=நாசமின்மை.

கமலமொத்தேன், மகா புருட தரிசனதிறற் பிரசன்ன சிததர்ககுச சொரூபம் பிரகாசிக்கும அதனல் கமலங்கள்போற் பந்த நீங்கி மனம் பரிபூரணமா மென்பதாம். இவவாறே " கண்களுககுக கதிரவன் கடிப்பச சாதுக்களும், சமசித்தர்களும், அத்தியாதம் தத்சொரூபமாய்ப பிரகாசிப்பவர்களும ஆகிய மகானுபவர்களது தரிசனமட்டும புருடர்க்குப் பாதமுண்டாம் " என ஸ்ரீமத பாகவதத்தும கூறப்பட்டுளது. சொரூபம பிரகாசிககுமெனின் சொரூபசுகமுமுதிக்கலாமே யென்றல், உண்மையே இஃயதோ ரின்பமென்று மியைநதிலேன் ; இதன் கருதது வாம :—அநாதியுந தூலபமும அபாயவிவர்சிதமும ஆகிய விததன்மையான ஆனந்த சுகமிப்போ தடைநதனன் என்பதாயிற்று. அவற்றி லநாதி யென்பது முதலியவற்றுன் விடய சுகத்தினின்றுமம விசேடந்தெரிவித்ததாம். சுழுத்திச சுகமும மநாதி, அதுவுஞ் சொரூபசுக மாதலின், அதனை நீக்குவதற்காகத் தூலபமென்றார் என்பார் என்று மியைந்திலேன் என்றார். இதனுற் சர்வசகத்தையும் ஆனநதாத்மகமாக்குங் கைவல்லிய சுகம் பெற்றே னென்பதாம். இஃதன்றியுந தன்னியனே னென் எனல், மழையிலா என்பதாக.

மேலும் மேலும் உபமானங்களை யுரைத்துத் தன்னியனேனென் என முனிநாதரது வாணவ யாசர் கொண்டாடுகின்றார்.

44 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

ஆகாசக மனத்தா லுண்டாய அரிய மகிழ்ச்சியைப் போலவும் இறந்தவன் மீண்டெழுந்த சந்தோடமபோலவும், மனுடனுக்கு அமுதங் கிடைத்தேபோலவும், ஹே பிரஹ்ம சொரூபமாகிய மகா முனிவரே ! தங்களுடைய வரவால் அடங்கா மகிழ்சியை யடைந்தேன். பிரஹ்மலோகத்தின் வாழ்வானது யாருகருக்தான் பிரீதியை யுண்டாகாது. அதுபோலத் தங்கள் நல்வருகையென் றுண்மையாகவேகூறு கின்றனன். தேவரீருகரு அடியேன் கொடுக்கதகக எப்பொ ருளிலதிகபபிரியம! அடியேன் செய்யத்தக்க சேவை யாது! ஹே பரம தரும மூர்த்தியாகிய விப்பிரசிரேஷ்டரே ! நீர் நற்பாத்திரமாக அடியேனுக்குக கிடைததீர் முன்னர் இராஜ இருடி சப்தத்தானே விளங்கிய ஒளியுடையவரானீர், தவத் தாலே பிரஹ்ம இருடித் தன்மையைப் பின்னெய்தினீர் ! ஹே பகவன் ! அடியேனற் பூஜிக்கத்தக்கவராயுள்ளீர் ! ஆக லின் பூஜாபாத்திரமாயுள்ளீர, ஸ்ரீ கங்காஜல அபிடேகத் தானே எனக்கெவ்வாறு பிரீதியுணடாமோ அவ்வாறு தேவ ரீரது தரிசனத்தானே யுண்டான உட்பிரீதியானது எனது தாபங்களைப் போக்கிச் சுகத்தையே யுண்டாக்கியது. ஹே பிரஹ்ம சொரூபரே ! தங்கடகு நமஸ்காரம.

தேவரீரது வரவு புதுமைகதா யிருத்தலின் அவசியம் தாங்கள் விருமபியதை அடியேன் ரூனரூசெய்தேவிட்டேன் என அரசர் கூறுதல்.

இச்சை = அர்த்தமாத்திர விடயஞ்செய்யும் ஆசையாம், இராகம் = ஸ்திரீ முதலிய விசேட விடயங்களின் ஆசை யாம். சிலர், கிடையாத வதுவானது கிடைகவேண்டு மென்பது மாத்திரமான ஆசை இச்சையென்றும், அடைந் ததிற் பிராரத்தனை இராகமென்றுமு கூறுவர். என்ன பிர யோஜனத்தை யுதேதசித்துத் தேவரீரிங்குற்றதோ அதன்

பொருட்டு யான் என்ன செய்யவேண்டுமோ அது செய்து முடிவுற்றதாகவே எண்ணிக்கொள்ளலாம்; எனென்றால், எங்களாற்றுங்கள் பூசிக்கத் தகுந்தவர்களல்லவா! மயிர்சிலிர்த்துக் குலுங்கல்=மிகுந்த சந்தோஷத்தால் என்றுணர்க. இச்சை பயம் குரோதம் விடய நேய அதிசயத்தால் விடயாகாரமாகச் சிததம் இரமிக்கும் இராகம் நோய் முதலியவையற்றவராக இருந்துங தாங்கள் என்பால் வந்த இவ்வருகை மிகவும் அற்புதமாக விருக்கிறது; இச்சையாதிகள் இருப்பினன்றே பிறன்பாற் செல்லல்வேண்டுமே. வேற முனிபுங்கவரே! எகாரியத்தை யெண்ணி வந்தீரோ அது செய்யப்பட்டதாகவே எண்ணுவீராக, எப்பொருளை வேண்டி வந்தீரோ நிரந்தர மென்றற் பூசிகசப்பட்டவரா யிருத்தலின் அதையடைந்ததாகவே எண்ணுவீராக; என ராஜசிங்கம் முழுக்கிய ஆச்சரிய அருத்தத்தோ டுற்ற அதிவிஸ்தாரமாகிய அவ்வாக்கியத்தை, மகாதேஜசையுடைய ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் கேட்டு மெய்புளகெறிந்து விளம்பலுற்றார்.

ஸ்ரீ விசுவாமித்திரர் கிருதகிருத்தியரேயாயினும் உலகதிருஷ்டியை யனுசரித்துக் கூறுகின்றார். காரியகாரண சங்காதத்திற்கு ஞானநிஷ்டை யோக்யதையடையவே சித்தியாம், கருமத்தாற் சாகூஷாத் முக்திலக்ஷண சித்தி சம்பவியாமையின், அத்தகைய எனது நியமத்திற்கு விக்கினஞ் செய்கின்றார்கள் அரக்கர்கள் என்பதாம் வேற மன்னர் மன்னரே! மகா வம்சத்திற்பிறந்து குலகுருவாகிய ஸ்ரீ வசிஷ்டபகவானது ஆணையைச் சிரமேல் வகித்துவளரும் உமக்கே தகு மிப்பூமண்டலததில், எனது மனத்திற் சொல்லவேண்டுமென் றுள்ள வாக்கியத்தின் காரிய நிண்ணயத்தை; அதாவது, அதன் சம்பந்தியாகச் செய்யத்தக்க பொருணிச்சயத்தை; நீர் முதலிற் செய்வீராக, அஃததருமமாயின் செய்யத் தகாததுதான், ஆனலது தருமமாதலின் அதை யினிது

காக்க வேண்டும். சிதகியை யடையும் பொருட்டு யான் யாகத்தை யாரம்பிததேன் அதற்கிடையூறு செய்யக கோர மாகிய அரக்கர் அங்குவந்து சேர்ந்தனர். யான் யாகத்தாற் றேவர்குழாங்களைப் போற்றும்போதெல்லாம, அமமகத்தை யநிசாசரர் அழிக்கின்றனர். என்னன் மிகவும் அனுஷ்டிக் கப்பட்ட அந்த யாகபூமியைத் தசையாலும் இரத்தத்தாலும் போரக்கர் கெடுக்கின்றனர். இடையூற்றின் மிகுதியாற் கெடுக்கப்பட்ட அத்தகைய அம்மகக்கூட்டத்தில் அளவிறந்த கஷ்டபபட்டு உற்சாகமற்று அங்கிருந்திகுவந்து சேர்ந் தேன். சாபதத்திலேயே இடையூறுகளை நீக்கிகொள்ளலா மெனிலோ, ஆண்டென்மதி கோபதத்தைச்செய்ய முயற்சிக்க வில்லை, அக்கருமம் அத்தகையதாக விருக்கின்றது, அதன் கண்ணே சாபம் புகலாகாது. அம்மகாயாகத்தில் எனது யாகதீக்ஷையானது இத்தகைய கோபசாபமற்றதா யிருக்கின் றது ; அதன்கண் மகாபலத்தைத் தங்களுடைய அருளால் இடையூறில்லாமல் அடையலாமென் றெண்ணுகின்றேன்.

ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் தாம்வந்த காரிய மானது இன்னதானத்தாற் கைகூடுமெனல்.

துக்கிதனுய்த் தஞ்சமென்றடைந்த என்னைக் காத்தல் உமது கடனுகும், வேண்டிகொண்டவர் வேண்டியது பெறு மற் போவது, மேன்மைதங்கியவரின்பால் பெருமிகழ்ச்சி யையே கொடுக்கும். ஆகலின், மதத்த வெம்புலிபோல விக்கிரமத்தையும், மகேந்திரருக்குச் சமானமாகிய வீரியத் தையு முடையவனும், அரசகர்குல காலனுமம, சதியத்தை யும் அமோகபராக்கிரமத்தையு முடையவனும், காகபக்கத தைப்போற் சிகைமுடியனும், சூரனுமம, மூத்தவனும் ஆகிய உமது மைந்தனை ஸ்ரீமான் இராமச்சந்திரமூர்த்தியை எனக்குத் தரவேண்டுமெ. காகபக்கமென்னுங காதடிச்சிகை கூத்திரிய ஆசாரசித்தமாம்.

வில்வித்தையிற் றேர்ச்சியில்லாத டாலகனுகிய ஸ்ரீ ராம சுவாமி கர தூஷணாதி யரகசுரைக் கொன்று எங்ஙனந தங்க ளுடைய யாகசித்தியைச் செய்தல் கூடுமெனின் இங்ஙன மென்கின்றூர்.

தூட்படுத்துவன் = அபகாரிகளாகிய அவர்களின் றலை களைப் பொடிப்பொடியாக்குவதி லாற்றலுடையனென்க. தேவரிற் றேசுமிகுகதனலும = தான் தானே ஸ்ரீமந் நாரா யணரானபடியால் எல்லாத தேவதைகளினும் மிகுந்த திவ்ய தேஜசுடன்கூடி மகா வல்லவனு யிருத்தலாலும், என் பெருஞ சேமநதன்னுலும் என்று பிரித்துபபொருள கொள் ளவே திவ்ய தேஜசால் ஆற்றலுடைமையும், இருடியாற் காக் கப்படுந தன்மையும முரண்படுமாலோ வெனின், படாதாம். அஞ்ஞாலுவதாரத்தில் இருடியும் அஸ்திரதாரணதிகளால் அவரது திவ்யதேஜசை விளக்குதல் பொருத்தமா யிருத்த லின், என்போன்றூர் சந்திக்தமான கிரியையில திடப்பிர விருத்தி புடையவர் ஆகார. மற்றும, என்றற் காகபபட்ட இராகவன் தன்னுடைய திவய தேஜசினுனே யாகத்திற்கும் உலகிற்கும அபகாரஞ செய்யப்பட்ட அரகசுர்களுடைய சரசரசதம் செய்தவன்கண்ணே வல்லமையுடையவன்; அவனுகசு அஸ்திரவேற்றுமையானே பலவேறுவகைப்பட் டதும், எல்லையில்லாத அழிவற்ற மகிமையோடு கூடியதும் ஆகிய அஸ்திரவித்தையை யினிது கொடுத்தல் வடிவமேன் மையைச் செய்வேன் அதனல் மூன்றுலகங்களுமு பூஜிக்கு மாறு ஆய்விடுவன். ஆயினுந தசரதையார் மைந்தரைவிடல எளிதல்லவே யெனின், உணமையே, மைந்தன்மேல் வைத்த என் மைந்த னிவனென்னும் நேயத்தை மிகுதிப்படுத்திக் கொள்ளுதல் நலனன்றும். என்போலிய அறிஞர் ஐயப் படட காரியத்தில் மெய்ம்முயற்சியைச் செய்யார்.

அரக்கர்களை யழிக்கமுடிடிவு மென்று கூறினீர்களே பால கணேசிய இராகவனுக்கு இத்தகைய சாமர்த்தியம் எங்ஙனங் கூடுமெனின், கூறுகின்றார்.

ஸ்ரீ இராகவனை, சங்கற்பமாத்திரையானே உலகமாங் குட்டியாவை புண்டாக்கவும் ஒழிக்கவும் வல்லமைவாய்ந்த பரமாத்மாவென்று யாங்களறிந்திருக்கின்றோம். தன்ம முதலியவை உம்முடைய உள்ளத்திற் றள்ளத்தகாதனவாக வுள்ளனவாயின் உமக்கதிகப்பிரியனை ஜஷ்டனைமநதனைத் தரல் வேண்டும் என்பதாகத் தருமான்மாவாய் மகாதேஜசோடு கூடி விளங்கும் ஸ்ரீ விசுவாமித்திர முனீசுரர் தருமார்த்த சகிதவாக்கியத்தை விளம்பிவிட்டுச சும்மா யிருந்தார். செந் தாமரைக்கண்கள் வாய்ந்து மகா மகிமையோ டிலங்கும் ஸ்ரீ இராமனை ஜீவ உபாதியாற் பரிச்சின்னப்படாத பூரண வடிவ ஈசுரனென்று, யாணும் மகா தேஜசையுடைய ஸ்ரீ வசிஷ்டபகவானும் யோகசித்தியினனே எல்லா விடங்களி லிருக்கும் பொருள்களையும் அறியுந்தன்மைவாய்ந்த மற்றைய இருடிகளு மறிவோம், அறத்தையும் மேன்மையையும் கீர்த் தியையும் காக்கவேண்டுமென்னும் எண்ணம் உமதுள்ளத் திருப்பின் அதிகப்பிரிய மைந்தனை ஸ்ரீ இராமச் சந்திரனை நன்னிச்சயத்துடன் கொடுக்கவேண்டும். எனதுயாக வைரி களாக விக்கினங்களையே செய்யும் அரக்கர்கள் ஸ்ரீ இராம னற் கொல்லப்படுபவர்களாய் நடக்குமெனது யாகம் பத்து நாளிரவும் பகலும் செய்யதக்கதாம். அசகதத்தன்மையை யங்கீகரித்துக் கூறுகின்றா. இவ்வுலகில் மகாதமாக்கட்குக் கொடுக்கத்தகாத பொருளுமொன்றுண்டோ ! " கன்னமே கவசந்தான் கவின்றசை-சிபிசீமுதன் இன்னுயிர்அலர்ககன் கண்ணே யீந்தனன் றதீசிதேக, வென்னென்பு தந்தான் வேண்டில் விழுமிய பெரியோர்க்காக, வென்னதான் கொடுக் கலாகா விரும்பொருளுலகிலம்மா !" என்பது ஸ்மிருதியாம்.

சிபி, திலீபியலர்க்கன் முதலியோர் தமது தேகம் விழி முதலியவற்றையும்கொடுத்தனர் என்பதுமக்குத்தெரியாததல்லவே, இவ்விடயத்தில்அபாயம்வருமெனநினைத்தலும்கூடாது, வெற்றியும் மேன்மையுமே யுண்டாம். அற்புதம் அவ்வரக்கர்களை மடிந்தவர்களாகவே என்றவத்தால் நான் நிச்சயமா யறிகின்றேன் என் வாக்கியத்தால் நீரும் அதை நிசசயமாக வுணருதிர். ஸ்ரீ இராகவனை யனுப்புவதில் ஸ்ரீ வசிஷ்டாதியரும் சம்மதிதருவர். காலத்திற் செய்த நன்றியே ஞாலத்திற் பலபரியந்தம மேன்மையதாம் என்றனர்.

ஸ்ரீ இராகவனுக்குப் பருவமின்மையின் வலியின்றென்றும யாரைவதுவந்து போர்செய்யலாமா வென வெண்ணுகின்றே னென்றும் மன்னவர் கூறுதல்.

ஊனசோடசம் = பதினாறு வருடங்களின் பூர்த்தி சோடசமாகும், அப்பதினாறுவது வருடஞ் சிறிது குறைவாயிருத்தலே ஊனமாகும் என்பதாம். அவ்வரக்கர்கள்பாற் றுஷ்டத்தன்மைக்குக் காரணம் மாம்சபக்ஷணமே யாமென்றறிக. விசுவாமித்திரர் கூறியதைக்கேட்டு அரசர்க்கரசராகிய தசரதர் விடையில்லாமையின் செயலற்று, முன்மொழிந்த ஸ்ரீ இராமரது தசையை எண்ணுதலால் பிரதிஞ்ஞைசெய்த பொருளிற் சாமர்த்தியமின்மையினாலும், முனிவரது வசனத்தைத் தாண்ட முடியாமையானும் தனியத்தோடு கூடிய இவ்வசனத்தைக் கூறுகின்றார். தாமரை விழியையுடைய இவ்விராமனுக்குப் பதினைந்தேமுக்கால் வயதுதானுகின்றது. போர்செய்யத் தகுதியேயில்லாதபோது அரக்கரோடு போர்செய்வானென்று நினைக்கவே முடியாது. ஆனால் கேட்டது வீண்தானே என்பீரேல் வேறு பிரபுவே! பூரணமாகிய அறிவுடைய ஹரிணிக்குக் கருத்தாவாகிய யான் அச்சேனையோடு கூடிச்சென்று தசைதின்னு

மரக்கரோடு போர்புரிவேன், அகெஷ்ளஹிணியின் இலக்கணமிதுவாம் :—ஆனை 1, தேர் 1, குதிரைகள் 3, காலாட்கள் 5, இது பத்தியெனப்படும், இத்தொகை மூன்று மூன்று கொண்டன மூறையே, சேனைமுகம், குல்மம், கணம், வாகினி, பிருதனை, சமூ, அனீகினீ, யெனவாம் ; 10 அனீகினீ சேர்ந்து அகெஷ்ளஹிணி அதாவது, ஆனைகள் 21870, தேர்கள் 21870, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 என்பதாம். இஃதமரசிங்கத்தானே ஸ்ரீமத் மகாபாரதாதியில் வெளியாயிருப்பது தொகுத்துக கூறப்பட்டிருக்கின்றது. இச்சேவகர் சூரர்வெற்றி நிறைதேர் மந்திரதளிநரா வர், வில்விளங்குங் கையனகிய யாதே இவர்களைப் போர் முனையிற்காப்பேன். இவர்களோடுகூடவே சென்று சிங்கமானது மதம்பொழியும் யானைகளோடு போரிடுவதேபோல மகேந்திரனும் வலுமைவாய்ந்த போர்வீரரோடும் போரிடுவேன். பாலகனகிய இராமனேபகையாளிகளின்பலாபலத்தை யறிந்துகொள்ளமாட்டான், நகரத்துள் அம்பு பயிலுமிடத்தில் விளையாட்டின்பொருட்டுக கற்பிக்கப்பட்ட போர்க்களத்திலும் வேறுகிய போர்க்களத்தை யவன் கண்டதே யில்லை. மேலான சஸ்திரமாகிய விடாப்படையோடு கூடினவனுமல்லன், போர்விடயம் முற்றுந் தெரிந்தவனுமல்லன், விடும் படைகளோடு கூடினவனுமல்லன், சூரகோடிகணிறைந்த போர்க்களத்திற் போருணர்வு மவனுகலில்லை, போர் ஞானமுமில்லையாயின் போரின் முற்றுமுணர்ச்சி அதிதூரத்தன்றே. அன்றியும, இப்போது எனது பாக்கியக்குறைவால் பனியிருலே பதுமாகரம்போல மிகமிகவும் வெருந்திளைதது வருகின்றன், அன்னமுண்ணவும ஆற்றலில்லை, வீட்டினுட் சஞ்சரிக்கவு முடியவில்லை, உள்ளே நிரம்பிய துயரோடுகூடிய வடிவினனகிக் கேவலம் சும்மாவே யிருக்கின்றன். அனுப் புதற்கே தகுதியற்ற அவனைப் போர்க்கனுப்புதல் எங்ஙன் ?

அதனினும் அரக்கரோடு போர்க்கென்பது அத்தியந்தம் தகுதியற்ற காரியமன்றே ! வஞ்சகமாகப் போர்செய்வதிற் சமர்த்தும், கொடுந்தொழிலும் உடைய அரக்கர்களோடு கூறிய இதன்மையிலிருக்கும் இராமன் போர்புரிகவெனக் கூறும் தங்கள் யுகதியே மிகவும் சகிக்கமுடியாததாக விருக் கின்றது, என விரிவாயுணர்க.

முன்னவனைத்தந்தால் பெரும் பெரும் ஆபத்துக்கள் வருவதுடன் தங்கட்கும் தருமம் வளர்வதற்கயலாக அதரு மமே யேற்படும் என்று தசரதர் கூறுகின்றார்.

அரக்கர்பொருட்டு என்னருமை முதன்மைச சுதனை வலுவில்கொண்டு செல்வீராயின் உயிர் துறப்பேன். இராக வனைக் கொடுக்கமுடியா தென்பதில் வேறுநிமித்தமும சங் கிக்கப்படுகின்றது. இராமனைப் பிரிந்து ஒரு முகூர்த்தமே னும் வாழ விரும்பிய யான் வாழச்சகியேன், ஆகையால் இராமனை யழைத்துச் செல்லுதல் தகுதியன்றும, இராமனை யழைத்துச செல்வீராயின் அரக்கர் வதமோ உண்டாகப் போவதில்லை, மாறுகவோ மைந்தரோடுகூடிய வெனக்கே யும்மால் அவ்வதமேற்படும், படவே யாகதருமதனைக் குறித்து உமக்கு மகா அதருமமன்றே ஏற்படும். ஒன்ப தி னையிர வருடங்கள் புத்திர இச்சையால் வருந்திக்கழிந்த எனக்கு மிகவும் கஷ்டப்பட்டுச் சாதித்த அசுவமேத புத்திர இஷ்டியாதிகளானே இருநான்குமைந்தர்உண்டாயினர். பூர்வ இராமாயணதில் "ஹே கௌசிகரே! அறுபதினாயிரம் வரு டங்கழிந்த எனக்கு"என்றது, தனக்குக்கடந்த வயதைக்காட் டலின், ஈண்டொன்பதினாயிரவருடம் புத்திர வாஞ்சையாற் கழிந்ததோடு விரோதியாதாம். அந்நால்வருள்ளும் கமல லோசனனாகிய இராமனே முக்கியனவான், தேகத்துட் பிரா ணனேபோலும் முக்கியமாய அவன் அதிகப் பிரீதிக்கு

விடயனுயிருக்கின்றன் ; ஆகவின் ஈண்டு அவனில்லாமல் மற்றைய மூவருடம் உயிர் தரிக்கமாட்டார்கள். எவனை யழைத்துச் செல்வதால் மற்றைய மூவரும் மரணதனை மருவுவரோ, அத்தகைய இராமனே, யமன்வடிவமாய அரக்கர் பொருட்டுத் தங்களாலழைத்துக்கொண்டு போகப்படுவனேல் நான்கு மைந்தர்களையுமிழந்தயான் இறந்ததாகவே நீரறிந்து கொள்ளவேண்டியது. நால்வர் மரணத்தாலென நான் சொல்லவேண்டிய தென்னை, இராமன் ஒருவனை யழைத்துச் செல்லன்மாத்திரையாலும் நானிறப்பேன்; எனினின், இந்நால்வருள்ளும் இவனிடதிலேயே எனக்குப் பரமப் பிரீதியான திருகின்றது. ஆகையால் மூத்த தரும மயமாகிய இராமனை யழைதத்துச் செல்லுதல் தங்கட்குத் தகுதியன்றும். நல்லது இராமனை யழைத்துச் செல்லாமற்போவணையின் எனது காரியசித்தி எப்படியாகுமெனின், வேற மகாமுனிவரே ! நிசாசரர்களுடைய சேனையைக் கொல்லத் தங்கட்கு விருப்பமிருக்குமாயின் என்னுடைகூடச் சதுரங்க சேனையை யழைத்துச் செல்லுங்கள். பகைவர் பலமறியாமல் எதிர்க்கலாகாதன்றே, அவ்வரக்கர் எவ்வளவு வீரிய முடையவர் எவர் மைந்தர் எங்ஙனமிருக்கின்றனர் எவ்வளவு பேரிருக்கின்றனர் அவாகளபெயர்கள் தானென்னெனன்பதை நன்றுய்த் தாங்கள் கூறவேண்டும். அவ்வரக்கரோடு இராமனுற் போர்புரிய எங்ஙன் முடியுமா ? என்னுலேனும் எனது பாலகர்களாலேனும் பெரும்போரில் அத்துஷ்ட பாக்கியமுள்ள வஞ்சகப்போர் ;செய்யும் அவரோடு எவ்வாறு எதிர்த்து நிற்க முடியும் ? இவ்வியாவற்றையும் தாங்களே கூறவேண்டும் ; வீரிய மிகுத்து வலுத்தவன்றே அவ்வரக்கர், நேரே குபேரனுடைய சகோதரனும, விசிரவசுவின் மைந்தனும் ஆகிய மகா வீரியத்தையுடைய இராவண னென்னும் அரக்கன் ஒருவனிருக்கின்றனென்று கேள்விப்பட்டுளேன்

தங்களுடைய யாகத்தில் அந்தத் துன்மதியானவன் ஒரு வேளை யிடர்செய்ய வருவானையின் அந்தத் துராத்மாவோடு போரினெதிர்த்து நிற்க எங்களான் முடியவே மாட்டாது.

இராவணனுக்கு இத்தகைய வீரியமெங்ஙனம் வந்தது, எங்ஙனந்தான், காகுத்தாதி வமிசத்தில் வந்தவர்களாய் இராவணதிகளைப் பார்க்கிலும் அதிக பலத்தோடு கூடிய தங்கட்கு வீரியக்குறைவு ஏற்பட்டது எனக் காரணத்தை விஸ்வத் தசரதர் கூறுகின்றார்.

அன்னியோன்னியம விலக்ஷணங்களான பகுவீர்ய சௌர்ய சம்பத்துகள் அபிவியக்த அநுகூல அவ்வச்சமயத் தில் பிராணிகளிடத்தில் வெளிப்பட்டு விளங்குகின்றன ; பிரளய அநுகூல காலத்திலோ யாவும் உட்பட்டு ஓய்கின் றன. எமபோலிய சற்சனர்கட்குப் பிரதிகூலமாகவுள்ள இக்காலத்தில் இராவணதிகளாகிய சத்துருக்கள் முன்னிலை யில் யாங்கள் எதிர்த்து நிற்கச சமர்த்தராகேம், இவ்விதி ஈசனாலே விதிக்கப்பட்டதாம்.

இப்போழ்து முப்போழ்தைக்குறித்து அத்தியந்தம் அயலாய் விபரீதமாயிருக்கின்றது. விருத்தத்தன்மையும் சர்ச் சரத்தன்மையும் எனக்கு மேலிட்டுவிட்டது, இராகவனே ஊனசோடச வருடத்தோடுகூடினவனையினும் விருத்தஅவஸ் தையிற் போலச் சர்ச்சாமடைந்தவனு யிக்கால் தீனபாவத் தையடைந்து துக்கியாக விருக்கின்றான். கௌசிகர்=குசிக கோத்திரத்தில் வந்தவர்.

ஒவ்வொரு பிராணிகளிடத்தில் ஒவ்வொரு காலத்தில் தனித்தனியாக மிகுந்த வீரியங்களும் விபூதிகளும் உண்டா கின்றன, ஒவ்வொரு காலத்தில் ஒடுங்குகின்றன, ஆகையால் இக்காலத்தில் அதனினு மிப்போது நாங்கள் இராவணதி

சத்துருக்கள் முன்னின்று போர்புரிய ஆற்றலுடையவர்க ளல்லேம், இஃதீசர் நியதியென்பது நிச்சயமாகும். ஆக வின் வேற தருமத்தை யுணர்ந்த மகா முனிவரே ! என் னுடைய மைந்தன்மீது திருவருள்புரியவேண்டும், யாசகரது எண்ணத்தைப் பூர்த்திசெய்யு மாற்றலற்ற அற்ப பாக்கிய முடைய அடியேனுக்குத் தாங்களே மேலாய தெய்வமாக இருக்கின்றீர்கள் ; எனிவ்வளவு அதிசயமெனின், தேவர் தானவருங்கூட இராவணனோடு போர்புரியச் சமர்த்தராகார் ஆயின்மனுடராகிய யாங்கள் அவன்முன் னென்செய்வோம். போரின்கண்ணே இந்திராதிகளையும் துச்சமாகருகினற னன், அத்தகையனோடு பாலகன் என்ன செய்வான். நல்ல மேலோர்களும் பலமற்றவர்களாக வாழும் இஃதொரு விப ரீதகாலமாக இருக்கின்றது ; யானே கிழத்தன்மையானே தளர்ந்திருகின்றேன். இராமனே கிழவனைப்போல எளி மையையுந தளர்வையு மடைந்துளான். ஆகையால் இரா மனைக் கொடுக்கமுடியாது, யான் கொடாமலிருந்துந தாகங்கள் தவமகிமையாற் கொண்டு செல்வீர்களேயாயின், உங்களால் யானே கொல்லப்பட்டவனுவேன் என்பதாக அவ்விரகுகுல திலகராகிய தசரதர் என்னும் மேன்மை மிகந அரசர் மெது வாகக் கூறி மகாமுனிவருக் கிஷ்டமாகிய ஸ்ரீ இராகவரை யனுப்புதலினும் அரககர் வதத்திலும் செய்யதக்கதா ? தகாததா ? அனுப்பலாமா ? வேண்டாமா ? என்ப தாதி வடிவச சம்சயமாகிய பேரலைக்கூட்டத்தில் உயர்ந தெழாநின்ற அலைமிகுத்த கடலில் மூழ்கி மோகமுற்றவனைப் போல மூழ்கினவராகித் தன்னின்பத்தையும் நிசயத்தை யும் அறியாதவரானர். நேயத்தால் வியாகுலமுற்ற விழிக ளோடு கூடிய அவரது அவ்வாக்கியத்தைக் கேட்டுக் கோபத் தோடு கூடிய ஸ்ரீ கௌசிக மகாமுனிவர் மகீபதியை நோக்கிக் கூறுகின்றார் என்பதாம்.

இப்போது ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் வெகுண்டு கூறுதல் கூறப்படுகின்றது.

காகுத்தனெனக் குறிப்பிட்டது எசிக்காண்பித்ததாம் ; ஹே மன்ன ! செய்கின்றேன் என அங்கீகரித்த பிரதிஞ் ஞையைக் கெடுக்க நினைத்தல் தகுங்கொல் ! மகா மகிமை வாய்ந்த நீ சிங்கமாக விருந்து மான்றன்மையை மருவ வாஞ் சித்த லென்னே ! ! இராகவர் குலத்தி லிப்பொய்பேசும் விப ரீதமானது பொருந்தாததே யன்றே ! ஒரு காலத்திலுஞ் சந்திரனிடத்தில் உஷ்ண கிரணங்க ளுண்டாகாவாம். நீர் சாமர்த்தியமுடைய ரல்லாயின் நாம் வந்தவாறே செல்கின் றோம், ஹே காகுத்த ! பிரதிஞ்ஞை யற்றவனுகிப் பந்துக்க ளோடும் சுகமாக வாழ்ந்துகொண் டிருப்பீராக வென்றனர், தவமகாத்மிய சாலியாகிய ஸ்ரீ விசுவாமித்திரர் இவ்வாறு கோபத்தினல் வியாபிககப்பட்டபோது நமது பதியின் அபராதததாலெனும, அபராதியைத் தாங்கிக்கொண்டிருக் கும் அபராததினலெனும என்னையே எங்குசபிக்கப்போகி றரோ வென்னும பயததானே பூமிமுழுதும நடுநடுங்கியது. தவத்தால் வேறுகவே இராவணுதிகளைக் கொல்லு மொரு வனை யெங்கு சிருஷ்டித்து விடுகின்றரோ, அவன் நம்மனை ரையும் எங்கு துன்புறுத்தப் போகின்றரே வெனத் தேவ தைகளும் நடுநடுங்கினர். இததகைய சகரவர்த்திகு ஏதா வது முனிவர் சினத்தாற் றீதுண்டாயின் அவனியானது காப்பறறுத்தவிகுமேமென இவ்வுலகிலுள்ளவர்களும், புண் ணியமூர்த்தியாகிய ஸ்ரீ இரகுநாயகற்கு ஏதாவது தடைவரின் இராவணுதி சங்காரமிலதாகி யாம் பெருந்துயரன்றே முன் னினும் அதிகமாக அனுபவிக்க நேரிடுமென அவ்வுலகிலுள் ளாரும் பயநதனர் எனினும் அமையும்.

உலகிற்கு நேராகிய மகா முனிவர் கோபத்தால் வியா பிக்கப்பட்டதை யுணர்ந்து, தைரிய முடையவராதலின் ஸ்ரீ

விசுவாமித்திரரது கோபத்தை தமதுகோபத்தானே தடுக்கு மல், போதிவாளியும் பரம சாந்த சொரூபரும் நல்ல விரத மும் உடையவராய ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறுகின்றார்:—

இக்ஷ்வாகு குலத்திற் பிறந்தும், சாக்ஷாத் தருமமே வேற்றுருவங்கொண்டு வந்ததேபோல இருந்தும் ஸ்ரீமான் றசரதப்பெயர் பெற்றும் மூவுலகிலுமுள்ள குணவான்களி னுடைய குணங்களை யெல்லாம ஒருங்கே யலங்காரமாக அடைந்தும் தைரியமுடையவனாகி நல்ல விரதமுடையவனா யிருந்தும் தருமத்தைக் கெடுக்க நினைப்பது தகுதியன்றும். இதுகாலம்வரை பிரதிஞ்ஞாபாலனமாகிய விரத அலங்காரம் பெற்றும் இப்போது மாறுதல் தகுதியாமோ, தருமத்தோ டுங் கீர்த்தியோடுங் கூடியுள்ளது மூன்றுலகினுமன்றே விளங்குகின்றது உங்களுடைய குலதருமமாகிய பிரதிஞ்ஞா பாலன தருமத்தைக் காப்பாற்றவேண்டும். தருமத்தைக் கெடுப்பது தகுதியன்றும், மூவுலகிலும் விரும்பியதைச சம் பாதிப்பதில் ஆற்றன்மிக்க மூவுலகேசராகிய முனிவருடைய வாக்கியப்படி செய்வதே தகுதியாம், செய்கின்றேனென அங்கீகரித்துப் பின்னதைச் செய்யாமலிருப்பது உனது இஷ்டபூர்த்தங்களாகிய யாகாதி தடாகாதி தருமத்தை யழிக குமாதலின் இராமனை யவசியம் அனுப்பவேண்டும். எந் நெறியோடு மன்னவர்கள் வாழ்கின்றார்களோ அந்நெறியே குடிகள் என்னும் நியமமிருத்தலின், குடிகள் மரியாதையைக் காக்கும்பொருட்டேனும் பிரதிஞ்ஞாவாக்கியத்தைக் காப் பாற்றுவாயாக இக்ஷ்வாகு குலததிற் பிறந்தும் சுயம்தச திசையினும் தேரைச் செலுத்திப் போர்செய்தலினால், தசரத னெனப் புகழ்பெற்றும், முனிவருக் குரையைக் காப்பாற்ற மல் பொய்யாக்குவையாயின் வேறு யாவர் காப்பாற்றுவர், உன்னால் நியமித்த விவகாரப்படி நீதியாக அஞ்ஞானிகளா

கிய பிராணிகளும் மரியாதையைக் கடவாராயின் நீ கடக் தல் நீர்மை யாமோ என்பதாம்.

ஆனல் சிறு பாலகனுகிய இராமனுக் கேதாவது ஆபத்து வந்தால் யாவரே காபபர், விஸ்வித்தையினும் இவன் பாலகனையிற்றே யெனின் கூறுகின்றூர்.

பயிற்சிசெய்து சாதிக்கப்பட்ட அஸ்திரங்களோடு கூடியவனேனும், அவ்வகைகூடாதவனேனும ஆகுக இராகவன், ஆயினும அவனைத்துயர்படுத்த அரக்கரான் முடியாதாம். இந்திரரது கிருகத்தில் வைத்திருக்கும் அமிருதமானது நாற்புறமும் வளைந்திருக்கும் அக்கினியால் பிரசித்தமாகக் காக்கப்படுவதே போலப் புருடசிங்கமாகிய இம்முனிவராலே இராமன் அஸ்திரவித்தை பயின்றவனையினும் பயிலாதவனையினும் அவனை அரக்கர் தீண்டவும் வல்லரல்லர். இவர் தரும விக்கிரகமாக விளங்குபவர் வீரியவான்களுக்குள் உயர்ந்தவர், இவ்வுலகில் மதியினும் உயர்ந்தவர் தவர் தவத்திற்குமேலாய இடமாகவிருப்பவர், பலவேறு வகைப்பட்ட அஸ்திரங்களையு முணர்ந்தவர் என்பது சராசரமாயுள்ள மூவுலகத்திலும வெட்டவெளியேயாம் என்றறிதி. இத்தகைய இவ்விசுவாமித்திரமுனிவர் வீரியத்தையும் பெருந்தேஜசையும் யோகபலத்தால் உலக முழுவதையும் நேரேகாணு மாற்றலுடையவரும் ஆவர், அதனுனே இராமனது எதிர்காலவிஷயத்தையும் தெரிந்தேதவந்திருக்கின்றூராதலின் இராமனது செல்கையில் மதியைச் சஞ்சலப்படுத்திக்கொள்ளுதல் தகுதியல்லவாம்; என்றிவ்வாறு ஸ்ரீ வசிட்டபகவான்கூற அரசர் மிகமகிழ்வுற்ற மனத்தராய் அருமை மைந்தராகிய ஸ்ரீ இராமரை இலக்குமணரோடும் அழைத்துவருமாறு சேவகனை விளித்து, பெருந் தோளையும் பராக்கிரமத்தையும் உடைய இராமனை

இலக்கு மணைஞ்டும் வரைவில் இடையூறின்றி முனிவரது யாகஞ சித்திக்கும்பொருட்டுமை, உண்மை மொழியைக் காகக்கும்பொருட்டுமை, அதகையமகாடுண்ணியகாரியததில் முன்னுண்டாய பொய்ச சோகம்போலக் காலதாமதத் தால் வேறேதனுமை விக்கினமுண்டாகாம லிருத்தற் பொருட்டுமை, அழைதது வருவாயாகவென்றனர். இவ்வர சரால் ஏவப்பட்ட அவன் சென்று அந்தபபுரத்திலிருக் கும் ஸ்ரீ இராமமந்திரத்தினின்றும் முகூர்த்தமாத்திரத் தில் வந்து அரசரை நோக்கி ஹே தேவரே! ஸ்ரீ இராமா தமதுமநதிரத்தில் இரவிற்றுமரையில் வண்டிருப்பதே போலத் துக்கமனத்தரா யிருக்கின்றனா, ஒருபோது கணைததில் வருகின்றேனென்கின்றார், ஒருபோது தியா னத்திலிருக்கின்றார், கூறுதல் வாக்குமாதத்தானே யிருக்கின்றதேதயன்றி மனபபூர்வகமாகவில்லை முக்கிய மாகத தியானமே செய்கின்றார், (கணங்கடிகையி னறி லோாபாகம்) சமீபத்திலொருவருமிருக்க இசசிக்கினறி ரில்லை மதிவடிவாயுள்ளாரா என்றனன் சேவகன, என்ற போது அரசா அச்சேவகனை ஸ்ரீ இராமரது சமாசாரத் தைத தெரியபபடுதத வந்திருக்கும அவரது சேவகனை யதட்டிக்கேட்பின் அனைதையும சரியாய்ச சொல்லா ரென் றெண்ணி அவர்பால் மிகபபிரீதிகாட்டி முறையாக யாவற்றையும கூறவேண்டுமெனக் கேட்டனா. இராமன் எவ்வாறு ஒழுகுகின்றனன். இளைததல் துயருறல் முதலிய வற்றின் நிலைமை யெங்ஙனிருக்கின்றது என அரசராற் கேட்கபபட்ட ஸ்ரீ இராமரது சேவகர் அரசரை நோக்கித் துக்கிதராயிவ்வாறு கூறத்தொடங்கினர். ஹே தேவரே! தங்களுடைய மைந்தராகிய ஸ்ரீ இராமர் இளைத்த யாக்கை யோடுந துயருற்றிருததலைக்கண்டு மெலிநத இநத யாங் களுந் துக்கிதரா யித்தேககுச்சியைத தாங்கிக் கொண்

டி-ருக்கின்றோம், காணப்பட்ட எங்கட்கும இத்தகைய துக்க இளைப்புகள் உண்டாயிருப்பின் அவருக்கிவைகளைப் பற்றி யாங்கள் கூறவுமாவேண்டும், கமலபத்திர நேத்திர முடைய ஸ்ரீ இராகவர் மறையவரோடுந் தீர்த்தயாத்திரைக் குச்சென்று வந்தநாள் முதலாக மனுவியாகூலத்தோடு கூடியவராகவே யிருக்கின்றனர் என்பதாம். புருடசிங்க மாகிய மகரிஷியால் ஸ்ரீ இராகவர் கருடனுலழுதம் போலக் காப்பாற்றபடுவர் என்றும் பாடமுள தெனக் காண்க.

இப்போது உழையர் ஸ்ரீ இராகவர் அடையுந் துய ரத்தை விளம்புகின்றார்.

பரிவிராட்டுகள் என்று சொல்லப்பட்ட சந்நியாசி களின் றருமமாகிய நிரபேக்ஷை முதலியவற்றையே நமது ஸ்ரீ இராகவர் கைக்கொண்டனர். எங்களுடைய முயற்சியி னுலும் பிரார்த்தனையினுலும தினந்தினஞ் செய்யும் தமது போஜனாதி வியாபாரத்தை வாடிய முகமுடையவராய்ச செய்தாலுஞ் செய்வர், செய்யாமலு மிருபபர், அதில் விருபபமே கிடையாது, ஸ்நானம், தேவார்ச்சனை, தானம, ஆதனம், போஜனம், முதலியவற்றில் மனமேயிலலை; வேண்டிகொண்ட போதிலும திருப்தியுண்டாம் வண் ணம உண்ணுவதே கிடையாது. போஜனம, சயனம், வாகனம, விலாசம், ஸ்நானம், ஆசனம், என்னு மிவ்வாசற் றவைகளிலும உன்மத்தன் விவகரிப்பதேபோல மகிழ் வதே கிடையாது; சம்பத்தாலென்னே! விபத்தாலென் னே! மனையாலென்னே! மநோரதங்களா லென்னே! யாவுமே சாரமற்றனவாம், என்பதாக வியமபி மவுன மாகத்தனியே யிருப்பர். பரிகாசங்களில் மகிழ்வதில்லை, போகங்களில் மூழ்குவதில்லை, தொடங்குங் காரியங்களில்

அவாவுமில்லை, மவுனியாகவே யிருக்கின்றார். ஏகாந்தங்களிலும், திகாந்தங்களிலும், தீரங்களிலும், ஆரண்யங்களிலுமே அவர் மகிழ்கின்றனர்; உடுத்தல் குடித்தல் உண்ணல் நல்லால்களில் வெளிப்படையாக உபேக்ஷையாயிருத்தலின் தவமுடைய எதையுமே யேலாத யதிகள் போலவே யொழுகுகின்றனர். ஜனசூனியமாகிய தேயத்தில ஒருவராகவே யிருந்துகொண்டு முக்கியமாகிய மதியினே நகைத்தல் பாடுதல் அழுதல் முதலன வொன்றுமே செய்வதில்லை, மற்றோ பதுமாதனத்திருந்து இடதுகையாற் கபோல தலந்தாங்கிக் கேவலம் பரமார்த்தப் பற்றுதலானே தியானத்திலேயே யிருக்கின்றார். அபிமானத்தையடைவதே கிடையாது, மன்னவரந்தன்மையாயும் வாஞ்சிபபதே கிடையாது. இஷ்ட அநிஷ்ட வஸ்துக்கள் கிடைக்குமபோ துண்டாம் சுகதுக்கங்களில் மகிழ்சசி வாட்டங்களையும் அடைவதேதகாணும். இவர் செல்கின்றதென்? செய்வதென்? விழைகின்றதென்? தியானிக்கின்றதென்? வருகின்றதென்? எங்ஙனமென் னனுசரிக்கின்றார் என்பதை யாங்கள் அறிய முடியவில்லை. தினந்தினம் இளைத்தே வருகின்றனர், வெளுத்தே வருகின்றனர், சரற்கால முடிவிலுள்ள காயுந்தருவைப போலத் தினந்தினம் வைராக்கியத்தையே யடைக்கின்றனர் என்பதாம.

ஆயின் என்னதான் சொல்கின்றான், என்னதான் செய்கின்றான், அவன் கருத்துத்தானென், அவனைத் திருத்தத்தான் முடியாதேதாவெனிற் கூறுகின்றார்.

ஹேயாசகனே! ஆபத்திற்கு முக்கிய வாசஸ்தானமாக இருகுகும் தனத்தை யாதின் பொருட்டு வாஞ்சிக்கின்றாய் என் றனுசாசனஞ செய்துகொண்டே சர்வ ஜீவரியங்களையும் உச்சம் நீசம் நாடாமல கேடடவர்கட்

கெல்லாம இவ்வாபதது நமமைவிட்டு த தொலைநதாற் போதுமென்னும மதியால ஈவதே வேலையாக இருக்கின்றி ரென்பதாம. அத்தகைய சித்தமுடைய இவாக்கு யாங் கள் என்னசெய்வ தென்பதாகத் தீர்க்கமாக ஆராய்ந்தும தெரியவில்லை. பிராகிருத விவகாரதின் கண்ணை இவ் விராமச சந்திரை பிரவேசிக்கும்படிசெய்ய யாவா சமாத தரோ, அததகைய பேராற்றலை யுடையவா இம்மகீதலத திற் சுற்றினும் யாவாதாங் கிடைக்கபபோகின்றார் என்ப தாம். இந்திரியங்களா லனுபவிக்க ஆரம்பிக்குமபோது மாத்திரம் மனைரமமியமாகிப் பின்பு விடமபோலாம போகங்களில் மனத்தை யழுததாதீகள் எனச சமீபத்தி விருக்கும் இனியநேயர்களாகிய விவேகிகளை நோகசிச சிகூஷிப்பர். ஆயாசமிலலாம லடையத்தக மோகூபதத்தை யடையாமற்போம புருடரானே பாகியப பிரவிருத்திக ளால் ஆயுள் வீணை கழிக்கபபட்டதென்றும, அநாயாச மாக அடையதகபதததை யடையாமற் போமபடியான தொழிலகளால் எனறல ஆயுள்வீணை கழிக்கபபட்ட தென்றும், மாதுரியமும வெளிபபடாததும ஆகிய வாக்கி னேயடிக்கடி பாடாநிற்பா, ஆபத்துக்கடகு முக்கிய வாசஸ்தானமாகிய தனததையா விரும்புகின்றீர்கள் எனக் கூறி எல்லாதனத்ஸதையும் யாசகா பொருட்டு வாரிவாரித் தருகின்றார். இஃதாபத் திதுசமபத்தென்னும கற்பனைப பெருககான மோகம மனகதினின்றும உண்டாயதென் னும கவிகளைப் பாடுகின்றா தஙகளுக கிட்டமானவை நழுவிவிடின், யான் ஹதனுசெய்யப பெற்றேன், யான் நாத னற்றவனுயினேன், எனப பெருந்துய ரடைந்தபோதி னும், அதாவது உடன்பா டெதிராமறைகளானே இராக முதலியவை துயரமெனக் கண்டபோதிலும் இவ்வுயிர்கள் வைராக்கியம அடைவதேகிடையாது. அகோ! ஆச்சரியம்

எனக் கூறுகின்றார். ஸ்ரீ இராமா நிரந்தரம் இவ்வாறிருத் தலினாலே யாங்கள் துயரத்தை யடைந்துள்ளோம. இத் தகைய மனத்தையுடைய இவருக்கு என்ன செய்வதென எங்களுக்குத் தெரியவில்லை இவ்விடயத்தில் நீர்தான் எங் கட்குக் கதி. மேற்கூறிய இயற்கையோடு கூடியிருக்கும ஸ்ரீ இராமருக்குச் சம்பூர்ண ஐசுவர்யத்தோடுகூடி வளரக வேடம புனைந்த இச்சம்சார ஜாலமானது பிரதிகூலமாகிய விடமபோ லிருக்கின்றது. இத்தகைய இவரை உலகவிவ காரத்தில் புகுத்திவைக்கும ஆற்றலுடைய மகாஜபாவர் இவ்வுலகில் எங்கே யிருக்கப்போகின்றார், இரார், இரா, உங்களையன்றி வேறுயாரிருக்கின்றார. உங்களைப் போன்று வது யாவரேனு மிருப்பின் இது முடியக்கூடியதேயாகும; எங்ஙன மிருளையகற்றும் சூரியர் பூமியின் கண்ணை தனது ஒளியைப் பயனுடையதாகச் செய்கின்றனரோ, அங்ஙனம விவேகத்தைத் தடுக்கும், துயரமாகிய இருளையுண்டாக்கும் சகல மோகத்தையும் ஸ்ரீ இராமருடைய மனத்தினின்று மகற்றி இவர் விடயத்தில், தமது சாதுத்தன்மையை யுப தேசிக்கு மாற்றலைப் பயனுடைய தாக்குகின்ற மேன்மை வாய்ந்த மனத்தின ரெங்குளார்?

ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியானவர் ஸ்ரீ இராமர்தம் வசமாம் வகையை நினைந்து மிகுந்த குதூகலத்துடன் ஸ்ரீ இராகவரைச் சபைக்கழைத்து வருமபடியாகப் பிருத்தி யருக்குக் கட்டளையிடுகின்றார்.

விளம்பியவண்ணம துயரத்தையும மோகத்தையும் அடைந்திருப்பின், அவ்விடயத்திற் சோதிக்கும் ஆற்ற லுடைய டோரறிவாளர்களாகிய நீங்கள் இரகுநந்தனனைத் தலைமானைப பின்றொடருமான்கள்போல இங்குவிரைவிற் கொண்டுவாருங்கள, இம்மோகம் அவனுக்கு ஆசையா

லேனுமை ஆபத்தாலேனுமை வந்ததன்றும், விவேக வைராக்கியவானுககுப போதமே மகாதயமாட ஆபத்துக்களாலேனும் இராகங்களாலேனும், உண்டாமை ஜடத்தன்மையே மோகமாம். இதோவிவேக முதலியவை யுடைய வனுக்குப் போதபல மூண்மையின் போதமாகிய பெருஞ் செல்வமேயாம். இராமனிங்கு விரைவில் வருவானுயின் வந்த இந்த இடத்திலேயே யாங்கள் சீக்கிரத்தில் அவன் மோகத்தை மலையின் மருவுமை மங்குலை மாருதம் மாற்று தலே போல மாற்றி விடுகின்றேம். மோகமகன்றபோதி னுமை அவருச்குக் கிடைபபது யாதெனின் கூறுகின்றுர்:— தளர்வறுமென. இமமோகமானது ஊகததா லகற்றப படவே இரகுநாதனன் எமமனேரைடபோல, முன்னின்ற "அது விஷ்ணுவினது பரமமாம பதமாம்" என்னுஞ் சுருதிப்பிரசித்த உத்தமபதமாகிய தன்னன்மாவின்கண் இலைபபாறுவன், அபரிசசின்ன ஞானரூபத் தன்மையையுமை, ஆனநதமை வெளிபபடட போதுண்டாம் பிரஞ்னையையுமை, கெடாத வஸ்துத்தன்மையையுமை, பரமானநத ரூபத்தகைமையையும், இலைப்பாறுதலையுமை, தாபமின்மையையுமை, தேகத்தின் பருமையையும், பேரழகையுமை, அழுதபானரு செய்தவன் மறையறநத அறபபயனைக் கண்கூடாய்க் காண்டலின் மெய்மையையுமை சுவாக்சுகித்தகைமையையும், தெய்வரான அடைவையுமை உறுவதேபோலடைவன்.

விவகாரமை அவித்தையாலுண்டாயதெனை பிரசித்த மாதலின் குடை நீங்கவே நிழல்நீங்கிறற்போல அதனீக்கமுமாம், அதோ பிரணஜகட் கிட்டமன்று, இராஜ்ஜியத்தைத் தனக்குப் பின்னுருவதற்கு எவ்வளவோ பிரயாசபபட்டு விருத்தாபபியத்திற் பெற்றமைநதன் விவகரியாமற் போவது மன்னவற்கு மிட்டமன்று எனின் கூறுகின்றுர்.

தனது வழுணுசிரமத்திற்குத தகுதியாய்த தொடங்
கிய விவகார பரமபரையையே யிடையீடிலாது நிறைந்த
மனத்தனுகி மானியனுய்ச் செய்வன். அவாவிய அனைத்
தையு மடைந்தவனுயினுமை வாழுமவன் சர்வவிவகாரத்தை
யும் விடமுடியாமையின் இன்றியமையாது கொள்ளத்தக்க
தாய தொடங்கிய விவகாரத்தை விடுத்து வேறென்றைக்
கொள்ளக் காரண மின்மையினுலும், தனது நடையைக்
கண்டு நடக்கும் பிரஜைகட் கனுக்கிரகித்தற் பொருட்டும்
தனது விவகார பரம்பரையைத் தடையிலாது செய்வன்.
அவற்றைச செய்து அவற்றிற் பற்றுறின் அதனல் முன்
போலச் சுகதுக்க தசையுடையவராகவுமை ஆவரேயெனின்
மனுதியாலாகிய ஞான திடவலிமை யென்னுமை மகா
சத்துவத்தை யுடையவனுகியுமை உலகிற் காரணதத்துவம்
காரியதத்துவம், பிராணிகளின் பரமபுருடார்த்த ரூபம்
சமூசாரத்துற்ற சுழல்கை வடிவமென்னும் பராவரங்களை
விவேகத்தா லுணர்ந்தவனுகியும், உலகவழுவமாகிய விராட்
டையும், அவ்யாகிருததையும் ஹிரண்ய கருபபரையும்
உண்மையாகப் பிரஹ்மமே பல்லவென அறிந்தவன்; இத
னுனேபற்றறவே சுகதுக்க தசையற்றவனுகியுமை, ஒடு கல்
பொன்களின் சமமதியுடையவனுகியுமை ஆவன்; என்றிவ்
வாறு முனிநாதர் கூறவே அரசாநிறைந்த மனத்தராகி ஸ்ரீ
இராமரையழைத்துவரும் பொருட்டுத் தூதபரம்பரையை
மீண்டு மீண்டும் அனுபபினர. தூதர் வந்ததும் ஸ்ரீ இராக
வர் தமதரண்மனை யுள்ளாசனத்தினின்றும் தந்தைபால்
வந்து சேவிப்பான் அசலத்தினின்றும அருக்கன்போல
எழுந்து தேவேந்திரரது சொர்க்கம் போலிருக்கும் ஸ்ரீ
வசிஷ்ட விசுவாமித்திரரது திருவடிபடலாற் புண்ணிய மய
மாகிய தமது பிதாவினுடைய அக்கொலுமண்டபத்தை
நோக்கிப் பலதாசர்களும் சகோதரர்களும், சூழத்தந்தை

யின்.ாதவந்தனஞ செய்யும் பொருட்டு வந்தனர். முதலிற் றந்தையையும், பின்பூஜிக்கப் பெறுபவராலும் பூஜிக்கப் பெறும் ஸ்ரீ வசிஷ்டவிசுவாமித்திர மகரிஷிகளையும, பின் மறையவரையும, பின்பந்துக்களையும், பின்குருமார்களை யும அழகிய இருதயத்தையுடைய ஸ்ரீ இராமர் வணங் கினர். பின்பார்வையிலும் தக்கவர்களிடத்தில் விநயத் தைக் காட்டிம சிறிது வணங்கிய சிரமசைத்தலினாலும் வாக்கினாலும் அரசக்கூட்டங்களாற் செய்யப்பட்ட நமஸ் கார பரட்பரையை யேற்றுக்கொண்டனர்.

மகிபதியானவர் புததிரரைத தழுவி யுச்சிமோந்து அன்புகாட்டி மடிமீதிருதத முயன்றும் இராமற் பூமியி லிருத்தல்

மகிபதியானவர மடியில் வந்திருத்தி மைந்தவெனக் கூறவும, பூமியில் வேலியாட்களால் விரிக்கப்பட்ட வத் திரத்தி லுட்கார்ந்தனர; விவேகியாகிய நீ மங்கலங்களை யெல்லாம மருவவேண்டியவனாக இருந்தும அவிவேகி யைப்போலச் சிதிலமாகிய மதியினனை உயிரைத் துயரப் படுத்த வேண்டாம.

ஸ்ரீ இராகவருக்குத் தசரதமன்னர் கவலையற்றிருக் கும்படியான விவேகத்தைப் போதிக்கின்றார்.

மோகததை யடையாதவர்களாகிய நின்னைப் போன் றவர்கள் பிதாமுதலிய பெரியோர் மறையோர் ஆசிரியர் அருளிய பிரஜைகளைக் காக்குந தருமசாதனமாதலிற் புண்ணியமாகிய இராஜஸ்தான சுவர்க்காதி பதத்தைய டைந்து வாழுகின்றார்க ளல்லவா. மோகத்திற்குவிரிய இடங்கொடாயேலாபின் ஆபத்துக்களானவை தூரத்தி லேயே மிகக் கோமளங்களாக விருக்கும், சம்பந்தியாதன வோ தூரத்திலேயே நிற்கும் தொடரா, சம்பந்தித்தன

வோ முற்றினும் மிருதுவாகி யிருக்கும் நமது காரியத்தைக் காட்டமாட்டா. மோகம் விரியிலே மொழிந்தவை மாறுகி வந்துவிடும் என்றரசர் கூறினர்.

ஸ்ரீ வசிஷ்டபகவான் ஸ்ரீ இராகவரது வைராக்கியத்தை மெச்சி மோகக்கடலின் மூழ்குதல் எற்றினுக்கு யாமிருப்பவெனல்.

சங்கேபமாகப் பூர்வம் பிரதிபாதித்த வைராக்கியத்தை விஸ்தாரமாகப் பிரதிபாதிக்கும் உத்தரகிரந்த சந்தர்ப்பம் கிளம்புவதற்கு மேறது பூதகமாக ஸ்ரீ விசுவாமித்திரர் விளக்களை யுதிப்பிக்கின்றார். மூவஸ்திகங்கள் கிருகத்தைக் கிலப்படுத்துவதேபோல மனப்பீடையிலக்கண ஆதிகள் நினது மனத்தை விசேஷமாகத் துன்புறுத்துகின்றன. அவை எவ்விடயங்களில் நிரந்தரம் நிற்கின்றன, எவ்வழிவு முடையன, எக்காரணத்தாலுண்டாயின, எவ்வளவுள்ளன என்பதாம். வினவிய விளக்கட்கு விடை யளிப்பது பிரயோஜனமற்றதாமாலோவெனக் கடாவக் கெடுக்கின்றார். மேற அரக! எதனை யடைந்த மாத்திரையானே காதலித்ததுகிடைத்த அதனல் எல்லா ஆதிகளுமே நின்னைப் பேதிக்கமாட்டாவோ அத்தகையவாய அறிவுபிரேத பதாத்தத்தைக் கூறுதி, காதலித்தவை வெகுவாயினும் அவ்வியாவுமே நீ யடைந்து கொண்டதாகவே யெண்ணலாம். பெரும் புயங்கள் வாய்ந்த அரசகுமர! உன்னல் கெடுக்க முடியாதனவும், துக்கத்தைத் தொடங்குவனவும், ஆக இவ்விடய சத்துருக்க ளிருந்தபோதினும் வெற்றிகொள்ளப் பட்டனவாதலின் நீ சூரனே யாவாய், என்னை, பிரசித்தமாய் சத்துருக்கள் கெடுக்க முடியாதவர்களே யாயினும் அவர்கள் தன்னல் துக்கத்தோடும் சம்பாதிக்கப்பட்டவர்களல்லர் விடயப்பகைகளோ, தன்னுடலேயே சம்பாதிக்கப்பட்டவைகள், வேறுதுக்க

பரம்பரையை யுண்டாக்குபவைகள், கெடுக்கமுடியாதவைகளன்றே ; இங்ஙனமிருந்தும் நீ விசேஷங்களாகிய பேரலகணிறைந்ததும் ஆவரணத்தான் மூடப்பெற்றதும் அஞ்ஞானிகட்கு யோக்கியமும ஆகிய அருமோகப் பெருங்கடலில் ஆன்மாவை யறியாதவர்கள்போல ஏன் மிக மூழ்குகின்றனை, என ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறினர். துக்கமடைந்ததாலாக்கப்பட்ட அசையாநின்ற கருங்குவளைக் கூட்டத்தோடொத்த விழிகளின் சாஞ்சல்யத்தை விடுத்து எவ்வேதுவினனே நீ மோகித்து மயங்கியிருக்கின்றாயோ அதனைக் கூறுதி ! நினக்கு மயக்கினுக்குக் காரணமியாது, வீட்டை மூஷிகங்கள் குடைவதேபோல எம்மனோ வியாதிகள் நின் மனத்தைத் துன்புறுத்துகின்றனவோ அவை எதன்கண் முடிவுபெறுபவை, விரும்பிய எதனை யடைந்தாலவைதீரும், எவற்றைப் பற்றியவை, எவ்வழிவழுடையன, எக்காரணத்தால் வந்தன, எததனை வகையின, மனோவியாதியின் காரண முதலியவை உலகிற் பிரசித்தங்களே யாமாதலின் அவற்றையென் கேட்க வேண்டும்? எனின், பிரசித்த மென்பதுண்மையாயினும் தகாதனவாகிய மனோவியாதிகட்கு நீ யுத்தமபதமாகமாட்டாய்; ஆபத்துடையவனேனும் தரித்திரனேனு மிடமாவன், என்றெண்ணுகின்றோம், தந்தையின் மகிமையினனே உனக்குயாதொரு ஆபத்துங் கிடையாதாதலின் நீ யகற்ற வேண்டிய ஆபத்தேதயில்லை. மேலும் சர்வ சௌபாக்கியமுனக்கு நிறையக்கிடைத்திருத்தலின் சுயமாகவே ஆபத்துக்கள் நீங்கியிருக்கின்றன. மனோ வியாதிகளும் நீங்கியேயுள்ளன. ஹே பாவமற்ற குழந்தாய் நீ விரும்பியதுயாதோ அதனை மறையாமல் அறைவாயாக ! பாவமுனக்கில்லாமையானுமே விரும்பியயாவற்றையுமே யடைவாய்.

ஸ்ரீராகவர் முனிநாயகர் கூறியதைக் கேட்டானந்த

மூற்று அவர் ஆக்ஞையின்படியே தமது குறையைத் தெரிவிக்கத் தொடங்கல்.

இராகவர் = இரகுவம்சகேதுவாவர், தேர்க்குக் கேதுவானது அலங்காரமாக இருத்தலேபோல இரகுவமசத்திற்கு அலங்காரபூதமானவ ரென்க, ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியருளிய வாக்கியமானது உசிதமான அர்த்தங்களின் விஸ்தாரத்தைக் கர்ப்பத்தி லடைத்தாகியிருந்தது. மயூரமானது எங்ஙனம தான்விரும்பிய பிரயோஜனத்தை யனுமித்துத் துயரத்தைத் துடைக்குமோ அங்ஙனமே ஸ்ரீ இராகவரு மென்றறிக. நீ விரும்பியவண்ண மடைந்திடின் மீண்டுமுன்னை மறுவியாதிகள் பிளக்கமாட்டா. இரகுவம்சகேது வாகிய ஸ்ரீ இராமர் இவ்வாறு மகாமதியையுடைய ஸ்ரீ விசுவாமித்திரர் கூறிய, தாம் விரும்பியவைபோன்ற பொருள்களின் பிரகாசத்தைத் தாற்பரியத்தில் வைத்திருக்கும் வாக்கியதனை இருசெவிகுளிரக்கேட்டு விரும்பியபொருள் கைகூடிவிட்டதாகக் கருதி மேககர்ஜனையைக்கேட்ட மயூரம்போல அத்துயரத்தை யடியோடு விட்டனர். முனிநாதரா லிவ்வாறுகூறக்கேட்ட ஸ்ரீ இராகவர் நன்கு சமாதானத்தை யடைந்து பரிபூரண அர்த்த கவுரவத்தானே மந்த நடையை யடைந்து அதனினே யழகு பெற்ற வாக்கியத்தைக் கூறத் தொடங்கினர். ஹே பகவன்! தங்களால் கேட்கப்பட்டது முழுவதையும உள்ளபடி யிப்போது தங்களுடைய ஆணையைக் காக்கும் பொருட்டு அஞ்ஞையினும் யான் கூறுகின்றேன்; என் ரட்டியத்தைக் காண்பிக்கும்பொருட்டல்ல. பெரியோர் வாக்கியத்தை யாவரே கடப்பர்.

மேற்கூறியவண்ணம் விநயமாகக்கூறி முனிவரை வயஞ்செய்து தமது விருத்தாந்தத்தை யனுவாதஞ் செய்

யும் வாயிலாகத் தருமானுஷ்டானத்தா லுண்டாய மனத் தூய்மையானே யுளதாய விவேக வைராக்கியங்களால் தமக்கு விசாரமுதித்ததைக் காட்டுகின்றூர் ஸ்ரீ இராகவர்.

இங்ஙான் இந்ததநதையி னரண்மனையிற் பிறந்து மூறையாக விருத்தியடைந்து வித்தையையு மடைந் திருந்தேன். பின்னர், வேற முனிநாயகரே! நல்லொழுக்க முடையவனுகி ஆர்கலியை மேகலையாடுத்த பூமியைத் தீர்த்தயாத்திரையின் பொருட்டுச சுற்றிவந்தேன். இவ் வாறிருக்குங் காலத்தில இக்சமூசாரவாசை அடியோட ழிந்து என்மனதில இனிக்கூறும் வகையாய விசாரமுண் டாயது விவேகம பிறந்தயான் இன்று சுயமாகவே போகங்களிலிச்சையின்றிய புநதியானே இதனை விசாரித் தேன்:—அநதோ! இவ்விஸ்தாரமாகிய சமசாரத்தில் யாது சுகமிருக்கின்றது ஒன்றையுங்காணேமே! பிராணி கள் இன்பின்மைக் கேதுவாகப் பிறகின்றன இறப பதற்கு: இறப்பதுவோ பிறப்பதற்கேயாம். மரிப்பதற்கு விரையாயாம்பிறந்திடுதல், பிறததற்கு விரையாயாம்மரித் திடுதல், என்னும வசனமுமுளதன்ரே!

அற்றேல் அவ்வாறுகுக, ஆயினும் இடையில் வைபவ பூமிகளில் சுகமனுபவிகபபடுகின்றதே யெனின் கூறு கின்றூர்.

பாவங்கள் என்னும் புத்திரபாரியாதி லகூனை பதார்த் தங்கள் கேவலம் தன் மனகற்பனையால் என்மைந்தனிவன் என்மனைவியிவள் என்பதியிது என்பதாதி வடிவமாய்ச் சம்பந்திக்கின்றன. சரீரம், இந்திரியம், மனம், புத்தி, அகங் காரம, சித்தம், அஞ்ஞானம், சித்பிரதிபிம்பம், பிம்பம், கேவலம் என்பவற்றின் மத்தியில் யான் யார? வாரா நின்ற அபிவியக்தமாயது இவ்வுலகம்; அசத்தியமா?

அல்லது சத்தியமா ? என்று நன்கு விசாரிக்குங்கால் இவ் வுலகமானது பொய்யேயாயிருக்கின்றது. பொய்யா யிருக்கப்பட்ட இது ஒரு காலத்திலும் மெய்யாக மாட் டாது. சரங்கட்குப பிரவிருத்தி நிவிருத்தி அதீனமான சாதனத்தானே சாதிக்கப்பட்டவை யெனவும் அசரங் கட்கோ தெய்வத்தாற் கிடைதத சாதனாதீனமானவை எனவும் இருவகையன்றே போகப்பிரவிருத்தி அவ் வுடவ சேஷ்டையோடு கூடிய வைபவ சமயத்தில் மாத்தி ரம் இருப்பனவாய மாலை சந்தன அன்னபானாதி விட யங்கள் யாவுமே இன்ப மீவனவாகாவாம, திரமற்றவை யாகலின்; இலாபமற்ற போதும் கைவிட்டபோதும் துக் கத்தைக் கொடுப்பனவாம. நினக்குமை அனுபவிக்குங் காலத்தில் அவற்றுற் சுகந்தானே யெனின் ராகாதி தோஷத்தைப் பயத்தலானே பரம ஆபத்தை அடைவித் தலின் ஆபத்துக்குச் சுவாமிகளாகி மேன்மை மிக் கனவாம். இவைகள் சாஸ்திர நிஷித்தங்க ளல்லாத வைகள். இனி நிடேதிக்கப் படுவனவே பாவத்தைப் பயத்தலின் பாவங்களாம், ஆகவே விடங்கலந்த அன் னமபோலாதலின் அதன் யோகத்திற் சுகமிறன் என்பதாகச சம்சாரத்திலும் சுகமின்றுமெனத் துணி வேன். அவைசுகங கொடுப்பன வல்லவாயின் சுகம் செய்விபபனவாய் ஒன்றறகொன்று யாங்ஙனம பற்றி நிற் கின்றன வெனின் எல்லாவிடயங்களுமை தாம் இருப்புச் சலாகைகளாகிய உளசிகள் முதலியவை போல ஒன்றற் கொன்று சம்பந்த மற்றனவேயாம். ஆனல் இம்முறை யாக எனக்கிது போகசாதனம் இதனல் இவ்வகை இத னைச செய்வேன் என்பதாதியாய்த் தன் மனக் கற்பனை யானே கேவலம கிரியை காரகாதித் தன்மையானே இவை சம்பந்திக்கின்றன; இவ்வாறே அவ்வயமும் வியதிரேக

ரும் காணப்படுதலின். யான் யார்? இத்திருசியக்கூட்டத்திற்கு வடிவம்யாதாம்? யாதின்பொருட்டு வந்தது, எனக்கு இவ்விராஜ்யத்தாலென்னை, போகங்களாற்றானென்னை, அவற்றுள் யாதுமித்தையேயாமோ அதுவே மித்தையாகுக: மாறுகவாகா தொழிக.

யாவும் பொய்யேயாதலின் எப்பொருளிலும் ஆசையானது இன்றென்கின்றார்.

பொய்யாகிய அதனல் யாருக்குத்தான் என்ன தான் வந்தது. பொய்பபொருளானை அபகாரமாதல் உபகாரமாதல் எவருக்கும் உண்டாவதில்லை மரீசிகையின் உதகத்தால் பூமிக்குப பூஷணமேனும் அபூஷணமேனு முண்டாவதின்றும். அதிஷ்டானபூத ஆத்மாவிற்குக் கற்பிதப் பிரபஞ்சததால் ஒரு சிறிதும் உண்டாவதில்லை யென்பது கருத்தாம. இவ்வண்ணம சம்சாரத்தின் உண்மைவடிவை விசாரஞ் செய்வதாற் சித்திதத பலம யாதுகொலாமாலே வெனின் கூறுகின்றார்; எண்ணி யெண்ணிப பார்ப்பதால் இரமிதல் ஒய்ந்தது. இச்சம்சாரதுக்கம எவ்வுபாயத்தானே நீங்கியொழியும என்னுஞ சிந்தையால் தாபமுற்றுத் துக்கிதனை யிருக்கின்றேன். எக்காரணத்தால் ஆதிகள் துன்புறுததுகின்றன என்னும விஞவிற்கும் சம்சார சாந்தியுபாயத்தை நன்கறியாத காரணத்தானே எனவினை, பொருளால் ஈண்டியியம்பப் பெற்றதனை இனிதுணரற் பாற்றும். அது மித்தையாயின் யாவர்க்கு, என்னவந்தது, யாதொருகோதும் வாராதாம். இவையாவும் பொய்யா? அல்லது சிறிது மெய்யுமாமோ? அவற்றிலுள்ளும் திருஷ்டியுண்மையா? அல்லது திருசியமுண்மையா? ஹே பிரஹமசொரூபரே! மேற்கூறிய வகையானே ஆராயுமெனக்கதனல் எல்லாவிடபங் களிலுமே

வழிப்போக்கனுக்கு நீரின்றிய பூமியிற் பிரீதியில்லாததே போலப் பிரீதியில்லை. இவ்வாறெனக் காராய்ச்சி யுண்டா யிருத்தலினாலும் ஆராயுங்கால் அசாரத்தன்மை யிருத்தலி னாலும் தங்களை வினவவேண்டிய அங்கிசம் மிகவுமுள தென்பதாம். எவ்வேதுவினாலே மோகிக்கின்றா யெனின்? பெருந்தருவானது தனது பொந்திலிருக்கும் உக்கிரமான அக்கினியினாலே வேதலேபோல இத்துயரமானது எங்க னம் நீங்குமென்னுஞ் சிந்தையாமே வெகின்றேன். சமு சாரதுக்கத்தால் கற்போல இடைவெளியில்லாமல் நெருக்கி நிரம்பப்பெற்ற இருதயத்தை யுடையவனை யிருக்கின்றேன்.

எவ்விதத்தாலேனும் இத்துயரை நீக்கிக்கொள்ள லாமேயெனின்? கூறுகின்றார்.

சர்வபோக்கியங்களோடுகூடி விளங்காநின்ற நீ தரித் திரனைப்போல துக்கத்தையே வர்ணிபது எவ்வாறு ஓவ் வுமெனச் சங்கிப்ப, யாவும் அனர்த்தத்தைச் செய்யும் துஷ்டங்களே, எனக்காண்பித்து ஆதியில் அநேக அனர்த்த ஹேதுவான தனத்தை நிந்திக்கின்றார்: சிந்தைகளின் சமூகங்களே சக்கரங்களென்னும் ஆயுதவிசேடங்களாய்ச் சுழற்றுமிடமாம். தனங்களால் உண்டாக்கப பட்டவை களேயாய சிந்தைக்கூட்டங்கள் நேமிபோலப் புருஷனைப் பிளந்தெறியும். நன்றுகவிசேஷமாய்ப பிரசவித்திரா நின்ற தாரங்கள் இல்லங்களி லிருப்ப மிகவும் விருத்தியான உக்கிர ஆபத்துக்களாற் பீடிக்கப்பட்ட குடும்பிகட்குச் சக்கரதுல்லிய சிந்தைச சமூதாயங்களை உண்டாக்கும் அநேகங் குழந்தைகள் சூழ்ந்த மனைவிகளும் மனை களும் சுகத்தின் பொருட்டாகாவாம்: மற்றை துக்கத் தின் பொருட்டேயாம்: அதுபோலத் தனங்களும் ஆம். தன நிந்தையின் பின்னர் தனஹேதுவான ஸ்ரீயை நிந்திக்

கின்றார். இச் சம்சாரத்தின் கண்ணே அச்செல்வம் உதார மென்னும் மகத்தாயிருபபதாம்; எங்கும் திரமற்றதாம், அச்செல்வமும் சுகத்தைக் கொடுப்ப தாகாதாம். நிச்சய மாய் மாறுகப பரிமோகத்தின் பொருட்டு ஆம். குண முடையவர்களேயே ஆசிரயிக்கின்றது இலக்குமி என்ப தாக நியமமின்மை'பின் அதற்கு ஆசிரயத்தன்மையில் துஷ்டத்தன்மை'புளது மூடமையாக்குவதாம் துன்பத்தை யீவதாம, பெறுதற்கரியதாம் இவனிடத்திற் குணமிருக் கின்றது, இவனிடத்திற் தோஷமிருக்கின்றது, என்னும் ஆராய்ச்சியில்லாமலே பக்கத்துறபவனைப் பற்றுதிற்கு மென்பது உலகவதந்தியாம். எங்ஙனமென்னின் அரசரி யற்கையைப் போலுமென்க. அரசரியற்கை துர்ச்சன மேனுமை சற்சனமேனும் பக்கத்திலிருந்தால் பகுப்பின்றி யே பற்றுதலாம். துராரூடமுமாம், அல்லது அரசரியற்கை ஆமாத்தியாதியரைப் பற்றுமென்க. எனது பந்துக்களும் என் பொருட்டாக அழுவார்களே யென்னும் பயத்தானே கண்ணீர்பெருக அழுவில்லை. தரித்திரம், சத்துரு, நோய், முதலிய நிவிரமான ஆயிரம் ஆபத்துக்களாற் பீடிக்கப் பட்டவாகட்குப் பிரசவித்த அநேக மனவியரோடு கூடிய கிருகங்கள்போலத் தனிகரைச் சிந்தைகளாகிய மூனைகளால் எள்ளெள்ளாகத் துண்டித்துக் குவிக்கும் பொருட்டு முயன்ற சக்கரங்களாகிய தனங்கள் அடியே னுக்கானந்தத்தின் பொருட்டாகவில்லை. இவ்வாறு விட யங்கள் அசாரங்கள் அநர்த்தங்கள் விடப சம்பாதன காரணமாகிய தனமும் அவ்வாறுகும், இச்சம்சாரத்தில் நீங்காதவளாகி மிகமிகச் சுகவேதுவாகலின் மேலானவள் என இவ்விலக்குமி மூடர்களா லினிது கற்பிக்கப்படுகின் றாள். உண்மையாயோ, அவளும் கொலைபந்தம் நரகமுத லிய நிந்தைக் கிடமானவற்றையே கொடுத்தலானே அணு

வளவின்பழுங் கொடாமையாலே, பெருமோகப் பொருட்டேயாவள். பெருமோகப்பொருட் டனை.வுறி னும் அடையாமற் சென்றிடினும், இகழுந்தனத்தைக் கொடுத்து விவேகத்தைக் கொடாமையினை னும் நிந்தைக் கிடமே யாவள், இலக்குமி = செல்வம். அநேக மூர்க்க அரசர் தருமமும் குணமு முடையவரோடு நேயஞ்செய்வ திலலை; மற்றோ, எவன்முற்பட்டாரே னை அவரோடு நேயஞ் செய்தலேபோலத் துயருற்றுச் சம்பாதித்தபோதினும் கருமமுடையவரே யனுபவிக்கின்றரென்பதாக இல்லாமல் குண அகுண ஆராய்ச்சியின்றியே முற்பட்ட எவனே யெனும் பற்றுவள்.

இலக்குமியால் தோஷங்கூறி அபிவிருத்தியின் கண் ணும் எல்லா மூடர்கட்கும் பிரியந்தந்து சுத்தம் போகா னர்த்தங்களை எந்து வெகுவித தோஷங்களோடு கூடி யிருக்கு மெனக் கூறுகின்றார.

அவ்வச் சாதுவான கருமத்தாலேனும் அசாதுவான கருமத்தாலேனும் அபிவிருத்தியை யடையாநிற்கும, அபி விருத்தி யடைந்தபோதினும் அஃதனர்த்தத்தின் பொருட் டேயாம். இலக்குமிரூபக்ஷீரம தோடங்களாந் தர்ப்பாதி விடபபாம்புகளின் விடவேகத்தினுடைய விசர்ப்பணம் போல ஆசரிக்கின்றது. எங்ஙனம் பால் உரகத்தின் விட வேகத்தை வளர்ப்பதாமோ அங்ஙனம தோஷ சர்ப்பங் களின் பிரபாவரூப விடவேகத்தை வளர்ப்பதாய இலக் குமி ரூபப்பாலுமாம்.

எககருமதத்தின் பலம், தன இராஜ்ஜிய இலாபாதியின் உலோபத்தாலுண்டாம இம்சை பொய்முதலிய தோஷ சர்ப்பவிஷ வேகத்தின் பொருட்டாமோ; போர், சூது, வாணிச்சியம முதலிய அவ்வக்கருமத்தானே இவ்விலக்

குமி விஸ்காரதனை யடைவளையன்றி யாகதாரதியானே படையாள்; மாறுக, அவை அழிவின் காரணங்களேயாம். வாயுக்கூட்டத்தாற் பனியேபோல எதுவரை யிலக்குமி யானே பெருங்கஷ்டபடுத்தப படவில்லையோ அது வரையுயிர்கள் தம்மவரிடததும் பிறரவரிடத்தும் தயை, தாக்ஷிண்யம், நேயம முதலியவற்றோடு கூடியிருப்பர். மேலும் செய்ந்நன்றியறிவோர், விவேகியர், சூரர், குசலர், இனியவர், முதலிய யாவருமே, இலக்குமியிலலே, பெரும் புழுதியாற் பதிந்த அருமணிபோல மலினதனை யடைவர்.

ஸ்ரீமான்களுளரெனும் அநேகர் தருமமுடையவராயும் கீர்த்தியுடையவராயும காணப்படுகின்றனரென்? உரைக்கின்றார்.

நாகஞ்சூழ் குழிக்கொடியானது, சர்ப்பபதிகள் புரளும் தேகத்தோடு கூடியிருப்பதேபோலச சடர்களின் பத்தியால் காத்திரங்களிற் புரளுமபடியான தேகதனை யுடையவளாவள். இலக்குமியை இகழ்ந்ததின் பின்னர் இலக்குமியின் போக நிமித்தமான ஆயுளை நிந்திக்கின்றார். இலையின் நற்றுக்கூற்றின் நுனியில் தொங்கும் உதகலே சமபோல பங்கசீலம வாய்ந்த ஆயுளானது அசமயத்தில் சரீரத்தை விட்டோடிவிடும். இதன்கண்ணே திருஷ்டாந்தம் இயம்புகின்றார். அநுன்மத்தன் உன்மத்தனை விடுதல் போலவாம், அல்லது உன்மத்தனைப்போல விருக்கும் சரீரத்தை யென்றேனுங் கொள்க. உலகாலிகழப்படாத ஸ்ரீமானும் மொழிதவறுத சூரனும் சமதிருஷ்டியை யுடைய பிரபுவும் ஆகிய மூவருமே கிடைக்கக் கூடாதவரே யாவர். மனதுக் கினிமையானவனும், மனைவிருத்தியைக் கவர்பவனும் அதோகதி மரண முதலியவற்றை யுண்டாக்குங் காரியங்களானே தேடத்தக்கவனும், ஒரு கணத்தி

லழிபவனும், பாம்பின் மாலைகளை யாகத்தி லலங்கரித்துக் கொண்டிருக்கும் பாழுங்கிணற்றிலும் படுகுழியிலும் எழுந் தமலர்க்கொடி போன்றவனுமாவ ளிந்தஇலக்குமிதேவி. இலக்குமியைப் போலவே ஆயுளும் சுகத்தின் பொருட் டாகாதாம், ஆயுளானது மூங்கிலிலை நுனிமேற் றூங்கும் பனிநீர்போலக் கணத்தில் நீங்குவதாகும். உன்மத்தனைப் போன்ற ஆயுள் உன்மதத்தமாய உடலினின்றும் அகா லததி லோடிவிடும்.

சிலபால் தீர்க்கமான ஆயுளும் காணப்படுகின்றதே யெனின், உண்மையே, அதுவும் ஆத்மஞான உபயோக மற்றதா யிருப்பின் வியாதி, ரோகம், ஜரை, மூதலியவற் றோடுகூடி காமாதிகளாற் கலக்கமுற்று, அனர்த்தத்தின் பொருட்டேயாம என்கின்றார்.

விடயப்பாம்பு தீண்டலானே எங்குஞ் சிதறுண்ட சித்தத்தையுடையவரும், அதிதிடமாகிய ஆன்மஞான மில்லாதவரும் ஆகியோர்க்கு ஆயுளானது ஆயாச காரண மாம். பிரஹ்ம வித்துக்கட்கு மிவ்வாறெனகானின்? யாவர் நன்கறிய வேண்டியதை யறிந்துளாரோ, அபரி சின்ன வஸ்துவின் கண்ணே இளைப்பாறி யுளாரோ இலாப அலாபங்களிற் சித்தசமாதான மடைந்துளாரோ அவர் தம்மாயுள் சுகத்தைக் கொடுபடதாம். நாங்கள் தேகாதி களிடதில் இவ்வளவுதா ணன்மரூபமெனத்துணிந்து சம்சாரமேக மின்னற் கூட்டமாகிய ஆயுளிற் சுகிகளாகி லேம். எளிதாக ஆகாயத்தைப் பிளக்கலாம, வாயுவைக் கட்டலாம், அலைகளைக் கோர்க்கலாம், ஆனல் ஆயுளின் கண்ணே நம்பிக்கை வைக்கமுடியாதாம்.

மேலும் அற்பவாணுளின் பயனை நாடில் நிற்பது ஆடக்தே என்கிறார்.

சரற்காலத்திருக்கும் அற்பமேகம்போலவும, தைல மில்லாதவிளக்கே போலவுங் அலையாநின்ற அலைபோலவும் சென்றதாகவே கருதவேண்டும. முற்றினும் ஆசை நீக்க மாகிய இளைபபாறுதலே யடையாத மகாமூடன், சுகப் பொருட்டல்லாத விஸ்தாரமாய ஆயுளைத்துக்கத்தின் பொருட்டே, ஆண்குதிரைக்கும் பெண்கழுதைக்கும் பிறந்த அசுவதரியானது தனது கருப்பம் தன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதாயிருந்தபோதினும கருப்பந் தரிக்க இச்சிப்பதேபோல இச்சிபபன்.

ஞானத்திற்குச் சாதகமாகாத ஆயுளை விசேஷமாய் நிநதித்து அதற்குச் சாதகமாகும் ஆயுளைக் கொள்ளத் தக்கதாக ஸ்துதிக்கின்றார்.

இச்சமசாரத்தின் கண்ணே வாழுமவாழ்க்கையா னது எனக்குப் பிரியமாகத் தோற்றவில்லை. அவசியம் அடையவேண்டியதாகிய பரம புருடாததத்தை அடை நது எபபோதும் துயரமே சிறிதும அடையாமல் மேலி னும் மேலாய ஜீவன் முத்திச சுகத்தானத்தையுற்று வாழும் வ்வாழ்க்கைதான் வாழ்க்கை யெனப்படும். மரங் களுநதான் வாழுகின்றன, பசுபறவைகளுங்கூட வாழு கின்றன ; அதுபோல் மனனத்தின் மனஞ் செலுத்தாமல் வாழும் வாழ்க்கையும் வாழ்க்கையாமோ? மனனத்தின் பயனாகிய தத்துவஞானமெனும் வாசனைகூடியமெனும் அடையாமல் வாழும் வாழ்வு துச்சமேயன்றே? மீண்டு மீண்டும்பிறவாத பெரியவரே புகழும் வாழ்க்கையை உல கிலுடையவராவர். மற்றையர் நெடுநாள வாழ்பவரா யினும் அசுத்தமாகிய தேகாத்மபுத்தி யுடைததாயிருத தலின் கிழக்கழுதையொப்பக் கீழான இகழும் வாழ்க்கை யுடையவரே யாவர். அந்தமொன்றில்லா ஆநந்தம பரமா னந்தமாம்.

அஞ்ஞஜீவிதத்திற்கு விருக்ஷாதி ஜீவிதமபோலத் துர்ஜீவிதத்தன்மையைத் நிரிசிப்பித்து அசரீராதிகட் கும் துஷ்டதத்தன்மை அர்த்தத்தாற் றிரிபரிக்கப்பட் டது, அதனைத் தெளிவிக்கின்றார்.

பாரம் எங்ஙனம் நிக்கமுடியாததாய்ச் சுவாதீன மாகாதோ அங்ஙனம் அவிவேகியாதிகட்குச் சாஸ்திராதி கள் சுவாதீனமாகாவாம என்றுணர்க. ஈண்டு அவிவேகி என்றது விவேக சாமர்த்திய மில்லாத மந்தபுத்தியென விளம்ப விழைந்ததாம். அற்றேல் ஆத்மவித்துக்கும் தேகம் பாரமே, ஆக ஆண்டு அனாத்மவித்துக்கு உடமபு சுமையென உரைத்ததென்னே யெனின்? இங்ஙனமன் றும், ஆத்மவித்துக்குச் சரீரமே இன்றுதலின் உண்டெனி னும் பிராதிபாசிகமாய அதன் கண்ணை முன்போல் அபினிவேச மின்மையின் அதன் சம்பந்தமாய் வார நின்ற லாபசேதங்களில் உதாசீனமுண்மையின் என்க. திரசேட்டைகள் என்பதில் சேஷ்டைக்குத் திரத்தன்மை திரகாரிய விஷயத்தன்மையாலாம். திதசேஷ்டையெனி னும் இதைபொருளாம். அவிவேகிகட்குச் சாஸ்திரம், பாரம்போல வீணன சிரமகாரணமாம், ஆசையுடைய வருக்கு ஞானம் பாரமாகும், சர்வ சிரமங்களையும் நீக்கு வதிற் பிரசித்தமாகிய ஞானமும் பாரமாயின் மற்றவற் றைப் பற்றிப் பேசுவதெங்ஙன். சாந்தியற்றவனுக்கு மனது பாரமாம்; ஆன்மாவை யறியாதவனுக்குத தேகம் பாரமாம்; சிறந்தரூபம், வாணுள், மனது, மதி, அகங் காரம், தொழில்கள் முதலியயாவுமே கெட்டபுத்தியுடைய வருக்குச் சுமைசுமப்பவர்க்குச சுமையேபோலத் துக்கப் பொருட்டேயாகும் என்பதாம்.

யெளவன அவத்தைகளின் ரூபாதிகள் சுகத்தின்

பொருட்டாமே யெனின் அகற்கஸ்திரத்தன்மை புண்மை யின் இங்ஙனமின்று மென்கின்றார்.

புருடார்த்தத்தில் உபயோகிக்கவில்லை எனவுணர்ந்து ஆதரவு செய்யாத யவ்வனத்தால், துஷ்டனென்று தெரி யாதவரையுமே சாதுவால் துஷ்டன் ஆதரிக்கப்பட்டுத் தெரிந்ததின் கைவிடப் படுவதேபோலச் சில தினங்களி லேயே கைவிடப்படும். ஜீவன் முத்திச் சுகத்தினுமும் நிலைபேற்றினுமை எப்போதும் விடுபட்டதும் மிகவும துச்சமாயதும் குணமற்றதும் மரணத்தைச் சேவிப் பதும் இவ்வாயுள் எவ்வாறுமோ அவ்வாறு இவ்வுலகில் ஒரு பொருளுங் கிடையவே கிடையாது. மேற்கூறிய வகையே எல்லா அனர்த்தங்களும் தொடங்குதற்குக் காரணமாகிய தம்பமும் மமதையாகிய கொடிக்குக் காரணமும் ஆகிய அகங்காரமும் சுகவேதுவாகாதாம; மாறுகச் சர்வ தோஷங்கட்கும் அபிமான மூலமாயிருத் தலின் அனர்த்தமே செய்கின்றது. அதன் விஸ்தார மெங்ஙன மெனின் அநாதனமாகிய நிமித்தத்தானே வீணைகவே அகங்காரமானது எழுகின்றது, வீணைகவே நாற்புரமும் வளருகின்றது, அதனற் புருடார்த்த மின் றும். அதனது காரணமும் மோகமேயாகும். பொய் மயமாயும் நோய்மயமாயு மிருக்கும் கெட்ட அகங்கார மாகிய சத்துருவினுலே மிகவும் அஞ்சுகின்றேன்.

அகங்காரம் துர்வைரி என்பதையே சாதிக்கின்றார்; அல்லது அகங்கார வயத்தினுலேயே கொடியவை யாவை யும் எய்தலின் அதன் பலத்ததையே ஒருவாறு காண்பித்து விஸ்தரிக்கின்றார்.

அகங்காரவயத்தானே ஆபத்தாகிய சரீரதுக்கமாம. அகங்காரவயத்தானே கொடிய மானச துக்கங்களாம;

அகங்காரவயத்தானே இச்சையும் கெட்டதொழிலுமாம்; அகங்காரமே எனக்கு நோயுமாம்; மேலாயதும் நெடுநாள் வைரியுமாய அவ்வகங்காரத்தைப்பற்றி அன்னமுண்ணேனன் தண்ணீருமருந்தேன் எனின் இனியருமபோகங்களைபபற்றிப் போகிக்குமவிடயத்தில் அறையவேண்டியதென்னே! அகங்கார வயத்தினனே என்னுள்ளாவை புசிக்கப்பட்டனவோ, ஆகுதி செய்யபபட்டனவோ, விவகரிக்கப் பட்டனவோ, அவை யாவுமே துச்சங்கங்களும் அசாரங்களும் ஆகிய பொய்களேயாம்; அகங்கார மில்லாமையே மெய்யாம். நானென்னும் தோற்ற முண்டாயின் ஆபத்தில் துயரடைகின்றேன் இலதாயினே இன்பமடைகின்றேன். ஆதலின் அகங்காரமின்றி யிருத்தலே மேலானதாம.

அகங்காரவசத்தாலென்று கூறியதையே விஸ்தரிக்கின்றார்; அல்லது அகங்காரம தீரும்வரை எல்லாக் கிளர்ச்சிகளுமே மேலும் மேலும் விளைந்துகொண்டே யிருக்கும் என்கின்றார்.

அகங்காரத்தியாகத்தால், அதன் சாக்ஷியாகச் சேடித்த அநிதமம்சமாயிருக்குமாறு நன் குபதேசித்தருளுவீராக. ஈண்டுத்தொனித்த பொருள் கூறபடும்;— அகங்கிருதிபதம், அகமெனச் சப்தித்தலால் அகங்கிருத்தோவாம அதன்கண் நிகழும் பதம்; அல்லது அகம்சப்தவிஷயாகிருதிப் பிரயத்தனம் எக்கோவிற்கோ அது அகங்கிருதியாம் அதனது பதம், பாதமாம். ஆகவே சஞ்சலமாய், குக்ஷிப்பிரதேசத்திருபபதாய், உத்தமமான ரஜ்ஜுவினுல் விடுபட்டதாய், எப்புறத்தும் அடிமுதலியவற்றினே அதிசயமாய துக்கத்தைக் கொடுக்கும், கோவின்பதத்தை விவேகி பற்றுதற்போல அவ்வகங்

காரபதத்தை யான் பற்றுதிருக்குமாறு உபதேசித்தருளு. விராக. விவேக ஜோதிக்கூட்டத்தை மறைக்கும அகங்காரமாகிய மேகமா நாற்புறத்துமை சரீரங்களை விரிக்கின்றகாலமவரையுமே ஆசை மல்லிகைப்பூங்கொத்தானது மலர்ந்துகொண்டிருக்கும். அகங்காரமாகிய மேகம் சாந்தமானபோது ஆசை யென்னும் நவமின்னற்கொடியானது அணையுந் தீபச்சிகை யொடுங்குவதேபோல மிக விரைவில் எங்கேயோ ஓடிவிடுகின்றது. மூர்க்கத்தன்மையிலே சோகத்தாற் றுக்கிகரும் நிரகங்கார விருத்தியோடு கூடிய எனக்கு யாதுபதேசிக்கத தக்கதாமோ அதனை ணண்டு தேவரீர் உபதேசித்தருள வேண்டுகின்றேன். இவ்வாறு அகங்காரத்தையும அஂதுண்டாக்கிய அனர்த்தத்தையும் அதைக்கெடுக்கி னுண்டாம் பயனையும் இனிது வருணித்துத் தமக்கு அதன்றியாகத்தாலுண்டாம் சிரவண அதிகார அடைவைக்கூறி ஸ்ரீ இராகவர் உபதேசிக்கும் பொருட்டுப் பிராாத்திப்பார. எல்லா ஆபத்துக்கட்கும் இடமும், நிலையில்லாததும், உள்ளே யிருப்பதும், சாந்தியாதி உத்தம குணங்களானே விடப்பட்டதும், நாற்புறமும் மிகத்துயரை உண்டு செய்வதும், ஆகிய அகங்கார வடிவ அடையாளத்தை விவேகத்திறத்தானே பற்றுமல் ஒழித்துவிடும் வகையையும், மற்றுமின்னும் என்ன சம்பாதிக்க வேண்டுமென்பதையும், ஆன்மதத்துவத்தையும், தேவரீர் உபதேசிக்க வேண்டுமென்பதாம்.

அகங்கார நிர்த்தையின் பின்னர் அகங்காரத்தின் காரியமான மனத்தை நிந்திக்கின்றார்; அல்லது அநேக உலகங்களாலும் திருஷ்டாந்தங்களாலும் விஸ்தாரமாக மனத்தோடங்களைக் கூறத்தொடங்குகின்றார்.

அகங்காரத்தைப் போலச் சித்தமனங்களும் சுகமே

துக்க ளாகாவாம் ; மற்றே, துக்கமேதுக்களே யாகும்; "மகத்துக்கள் சேவையை முத்திக் கேதுவாய் மலர்வர்" என்னும் வாக்கியத்தானே நல்ல முமுக்ஷுக்களால் இன் றியமையாது செய்யதக்கதாய ஆரியசேவையைவிடுத்துக் காமாதிகளானே சிதிலத் தன்மையாகிய புருடார்த்த சாதன ஆற்றலின்மையைச் சித்த மடையும்; வாயுப் பி ரவாகத்திடையிலகப்பட்ட மயிற்றுகை நுனியின் சஞ் சலம்போலச் சஞ்சல சுபாவமுடையதாதலிற் சலிக்கும் மன தும் பிராணவாயுவின் அதீனமாய்ச் சலனமாகவேயிருக் கும். எவ்வாறெனின்? பொருத்தமா, பொருத்தமின்று என விசாரியாமல் மிகுந்த வியாகூலத்துடனே மேலும் மேலும் வீணுகவே, எவ்விடத்தும் தனக்கு நிறையுங்காரணங் கிடையாமையின் தினமான நகர் நாயானது மிகுதூரத்தி னும் தூரமாகச் சுற்றித் திரிதல்போலச் சுற்றிதிரியும். எவ்விடத்தும் ஒரு சிறிதும் அடைவதேயில்லை. பெருந் தனங்களை அடைந்தபோதினும் மூங்கிற்பிரம்புப் பெட்டி கள் தண்ணீரால் நிறையாததேபோல உள்ளே நிறைவை யடைவதே கிடையாது. குரூரம் = நிஷ்டூரம்.

மேலும் அச்சித்தம்செய்யும் பிரனர்த்தத்தையே விரிவாகக் கூறுகின்றார்.

சந்ததம் உதரம் நிறையாத மனவியாகிய பெண்ணை யைப் பின்றொடரும் கோரமான நாயால் பெருமபாரம் வாய்ந்தபிணம் தின்னப்படுவதேபோல ஆசையாகிய மனவியைப் பின்றொடரும் சித்தத்தால் யான் தின்னப் பட்டேன். ஆற்றங்கரைத் தருவானது, அலைமிகுத்துச் சஞ்சலித்துக் கரைக்கும் நீர் வெள்ளத்தால் வீழ்க்கப் பட்டிழுக்கப்படுவதேபோல, அலைபோற் எறித்துக் கிடை யாத விடயத்தின் மொத்துண்டுழலும் விருத்திகளோ

டுற்ற சடவடிவமாய சித்தத்தால் இழுக்கபபட்டேன். சூறைக்காற்றினுலே துரும்பானது இடையில் வீழ்த்தற் பொருட்டும், சூனியத்திற் சுழற்றும் பொருட்டும் இழுக் கப் படுவதேபோல யான், தருமப் பிரவிருத்தியானே சுவர்க்கத்திற் செல்லில் அகாலத்தில் வீழ்தற் பொருட்டும், அஃதில்லையாயின் சுகலேசமுங் கிடையாத இவ்விடத்தி லேயே புழுபறவை முதலிய பிறப்புக்களானே சுழலும பொருட்டும், மனத்தால் நெடுந்தூரம் இழுக்கப்பட்டவ னியிருக்கின்றேன். அவ்வாறே:—"இந்நெறி தன்னினே யிறங்குவர் மீண்டே" எனவும "பின்னிவ்விரு நெறியு ளொன்றேறனும் பெற்றில, அன்னவினை துச்சமாம பிரா ணியா யதேகமுறை, பின்னும் பிறக்கும பிறத்தியிறத்தி, யென்னு மிது மூன்றுவது தானமாம்" எனவும் சுருதி களும் டுகல்கின்றனவன்றே.

துஷ்ட சித்தமானது என்னைக் கீழும்மேலுமாய்க் கிருகிருக்கின்றது என. "பிராணனற்றது, மனமற்றது, சுப்பிரம், அக்ஷரத்தினும் பரத்தினும் பரம்" என்னும் ஆத்மதத்துவப் பிரதிபாதக சுருதி இருத்தலின் உனக்குச் சித்தமே இன்று. இலதாகவே எங்ஙன், அதனுல் ஏவப் படுந் தன்மையென ஆசங்கித்துக் கூறுகின்றீர்.

பாலகன் தன்மேனிச்சாயை முதலியவற்றில் வேதா ளத்தை ஆரோபித்து அதனற் பீடிக்கப் பெற்றவனுவன். பொய்யாகவே செறிதலும் அதன் விசாரத்தால் மாறு தலும் சித்தத்திற்கும் வேதாள சம்பந்திக்கும் சமான மாம், உருவேயானது கயிற்றினுற் சுற்றப்படுவதே போலத் துஷ்டசித்தத்தாற் பாதாளத்தினின்றும் பிருதுவியிற் செல்பவனுகியும் பிருதுவியினின்றும் பாதாளத்திற் செல் பவனுகியும் சுற்றப்படுகின்றேன். பாலன் பயப்படக் கற்

பிக்கப்பட்ட வேதாளம், பாலபுத்தியினனே இருப்ப தாய்த் தோற்றி அவனுக்கே பாலியம் நீங்கினவுடனே விசாரத்தால் அசத்தாவதேபோல அஞ்ஞான மதியி னனே வெற்றிகொள்ள முடியாததாகியும், பொய்யாகவே தோற்றுவதாகியும் விசாரத்தால் விவேகமுதித்த அளவில் வடிவமே யில்லாததாகும் துஷ்டசித்தத்தானே பீடிக்கப் பட்டுளேன்.

ஹே ராகவ! நீ கூறியவாறு சித்தமானது துஷ்ட சேஷ்டையைச் செய்யும்பக்ஷதில் நிக்கிரகித்துவிடலாமே .எனின் முடியாதகாரியமா யிருக்கின்றதென்கின்றார்,

ஆகாசாதி பதார்த்தங்கட்குச் சித்தம் உபாதான காரணமாம். அங்ஙனமே சங்கேஷபசாரீரகத்தின்கண் ணும் கூறப்பட்டுளது:—"முத்தொராெ டமுத்தர்தின்னி னையலறி வாளர்மூடர், மத்தக மாதிமண்ணீ ருகியமகி தா னெல்லாம், அத்தம தவித்தைபெற்ற வகப்பொறி யாக்குமத்தை, மைத்ததை யறிகமாறுய் மனனுணர் வடைந்திடாதே" (இ—ள்) அற்றேல், நித்திராதி தோஷ ஜன்னியமாய சொப்பனம் அவித்தை அத்தியாசத்தானே அதைக் காண்பவனிலும் அயலாக அசத்தென்பது கூடும், அதனனே யாங்ஙனம் ஜாக்ரத் பிரபஞ்சத்தின் சாமிய மாதல், அதனனே வைதர்மியத்தாலும் சொப்பனதி போலாகாதாம் எனச் சொப்பனவைஷம்மியம் சூத்திரக் காரர் கூறினர் எனக்கடாவ, பிரமாதா விருப்பப் பாத மாவது கொண்டும் பாதமாகாதது கொண்டும் சொப்பன ஜாக்கிரங்கட்கு வைதர்மிய மிருந்தபோதிலும் அத்தியஸ் தத் தன்மையானே, முக்காலத்தினு மில்லாமற்போதலில் யாதொரு விசேடமுமின்று மென்னுங்கருத்தோடும் விடை யிறுத்த வுத்தேசித்துக் கூறுகின்றார்:—முத்தொன

சுகாதி முக்தர் சைத்திராதிய முக்தர் இங்ஙனம் குரு முதலிய அறிஞர் தேவதத்தாதி அறிவிலர், மண்பிருதிவி, என்பதை யந்தமாகவுடைய விசுவமா மிதுமுழுதும் தன்னவித்தையி னுண்டாய அந்தக்கரணகத வாசனை நிமித்தத்தானே அதனது சேஷ்டை மாததிரமேயாம்; அவித்தையின் காரிய அந்தக்கரண பரிணமமென்றேனும் அறியத்தக்கதாம், மாறுய் = சொப்பன விலக்ஷணமாகச் சத்தியமாய் நீயறியவேண்டாம், அல்லது இங்ஙனம் தள் ளத்தக்க சமுசாரப் பிரபஞ்சத்தை யவித்தையாலாயது என்பதை நிரூபித்து முன்னர் விவர்த்தநிருஷ்டியினேன ஏக அநேகஜீவவிடயமாக இருவகைமை யியமபபபட்டது, ஆண்டுச் சுகர்முகதர், நம்மமேரைல்லவாம என்பதாய், வைதிக இலௌகிக விவகாரத்தை யனுசரித்து ஜீவநாநாத் தகைமையே பொருந்துமென வினவித் திருஷ்டிமாத் திரம் அங்ஙனமே சொப்பனம் போலும், உண்மையாக வேனும், வியாவகாரிக மாகவேனுமு ஜீவபேத மில்லை யாம். அங்ஙனமன்றே:—அவித்தையின் கண்ணைபிரதி பிம்பிதமான சைதன்யமே ஜீவனும, அவித்தையும் எனி திற்கோடல் என்னும் யுக்தியா லனுக்கிரகிக்கப்பட்ட அஜை ஏக" எனபதாதி சுருதியால், அதனனுபவத் தால், அதனது பேதத்திற் பிரமாண மின்மையினனும் ஏகமாகவே சித்தமாகின்ற படியால் ஜீவனும் ஒருவனே யாவன். அவனுட், அவித்தியாகாரிய அநேக அந்தக்கரண வரைவினனே அநேகரூபப பிரமாதா கருத்தா போக்காத் தன்மையை யடைவன், என இலௌகிக வைதிக விவ காரம் யாவுமே எவ்வாறு வேண்டப்படுமோ அவ்வாறு ஒரு ஜீவனே யுடன்படினும் ஒத்தே யிருக்கின்றதாம், ஆகவே அநந்த ஜீவகற்பனைசெய்தல் அடாதாம்; வேறு

86 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

ராற்ரூற் பெறப்படாத அளவை யின்மையினுஃ, அரி திற்கோடலானுமை என்க. அந்தக்கரண நாணுத்தன்மையும் ஏகஜீவவாதத்திலும் பிரசித்தமாய் விவஸ்தையோடுகூடி விளங்குமை விவகாரத்தை யனுசரித்துக் கற்பிக்கப் பெற்ற தாய் லோகசுகந்தித் தன்மையையும் கவர்வதின்ரூமென் னுங் கருத்துடன் கூறுகின்ரூர். மூத்தரோ டமூத்தரென என்பதாம. அக் காரணசித்தமூலதாயவழி அதன் காரிய மாகிய மூப்புவனம் நிகழாநிற்கும், அக்காரணம் நஷ்ட மாகியவழியோ அதன்காரிய பூதஜகத்தும் கூணமேமயாய் விடும். ஆகலின், அச்சித்தமே புருடார்த்த மடைவான் பிர யத்தனத்தாற் கூறப்போதலின் சிகிச்சை செய்து வயப் படுத்தற்குரியதா மென்றுணர்க. துயரமடைந்துமை கவரத் தகாது மனமாகிய பேயானது எபோதுந் தகித்தற்கேது வாதலின் தீயினுமிக்க வெப்பமுடையதாம்; மலைகளைத் தாண்டுவதினும் இதனை வயப்படுத்தல் மிகவுங் கஷ்ட மாம்; இதுவயிரத்தினும் வலியதாகும், இடியினுங் கொடூ ரமுடையதாம. பெருங்கடலைக் குடிபபதினுமை மேருகிரி யைப பெயர்த்தெடுப்பதினுமை அக்கினியை விழுங்கு வதினும் சித்தத்தை யடக்கல் மிகவும் கஷ்டமாம். பொருள் கட்கெல்லாம் சித்தமே காரணமாம். அஃதிருந்தால் மூன் ரூலகமுமுளது, அஃதடங்கின் அகிலமுமடங்கும், எம் முயல்வானும் அது நோய்போல அவசியம் அகற்றத்தக்கு தாம்.

கூறியதையே திருஷ்டாந்த முகத்தால் நன்குகூ றுகின்ரூர,

சித்தமானது மெலியமெலியச் சுகதுக்காதிகளும் அத்தியந்தமை தோற்ரூமல் நசித்துவிடும் என்றெண்ணு கின்றேன். மனத்திற்குத் திருஷ்டாவாயிலாக அநர்த்த

மேஹ துத்தன்மை யுண்மையின் மனநிந்தையின பின்னர் நீக்குமம பொருட்டுத் திருஷ்ணையை நிநதிக்கின்றூர். மோகவிருள் = ஹார்தாந்தகாரம, இருதயத்திருக்கும் அந்தகாரத்தோடு கூடிய சந்திரிகையில்லாத இரவு திருஷ்ணையாகிய ஆசையாம். ஆசையாலே தொழில்கள அதிகமாகத் துயரமாய் முடியும். அறிவேயாய ஆகாயத்தில் குரோதிகளேயாய கௌசிகங்களின் பந்திகள் உலவும், பிரசித்த அநுகார இரவு பிரசித்த ஆகாச உலாக பந்திகட்குப் புரணவேது வென்பது பிரசித்தமேயாம். பெரும் பர்வதங்களினின்றும் பெருங்காடுகள் உண்டாவதே போலச சித்ததினின்றும் நூற்றுக்கணக்கான இச்சுகதுக்கங்களியாவும் திரமாயுண்டாகின்றன ; விவேகமிகுதியினே அம்மனம் இலயமடையுமாயின் அவைகள் அடியோடு தொலைந்து விடுமென எண்ணுகின்றேன். எல்லாப் பாவங்களேயும் உண்டாக்குவதும், தீனலோப மரணங்களே யீவதும் உலகமுழுவதும் உலாவுவதும் ஆகிய ஆசையையிகழ்தல் செய்கின்றூர். பரமப்பிரீதிக் கிடமான ஆன்மதத்துவததையும், இருதயத்திலுதித்த விவேகாதிகளேயும், மறைக்கும் கெடுக்க முடியாத இருளினுலே, இச்சேதனுகாசமாகிய ஜீவன்பால், இராகாதிதோடக் கூகைகளின் கூட்டம் குலாவித்திரியும்.

திருஷ்ணையானது கேவலம் தோஷத்தையே யுண்டாக்குகின்றது என்பதாகமாத்திர மின்றும், மற்றேரு குணங்களேயும் நாசஞ்செய்கின்ற தென்கின்றூர்.

சுகதகளானும் தாகஉபசமனம் ஆகாதென் றெண்ணும்வண்ணம் தகிக்கப்பட்டேன். விவேக வைராக்கியாதி குணங்களுக்குள் எவ்வெதன்பால் யான் அதிக ஆவற்படுகின்றேனே அவ்வகை யெனதாசை, வீணையின்

நரம்பைத் தஷ்ட எலி கடிப்பதேபோலக் கெடுக்கின்றது. சுழலாநின்ற பிரவாகத்திற்பட்ட இலைபோலவும், சண்ட மாருதத்தின்கண்ணேபட்ட தரும்பேபோலவும், ஆகாயத்தின்கண்ணே சரற்கால வெண்மேகம்போலவும், சிந்தையாகிய சக்கரத்திற் சுழலுகின்றேன் யான். எங்களுடைய பாரமார்த்திக வடிவத்தை யடையமுடியாத மதியையுடைய யாங்கள் வலையிற் பறவைகள்போலச் சிந்தையாகிய வலையிலகப்பட்டுக்கொண்டு பெருமயக்கத்தை யடைகின்றோம். ஆசையெனப் பெயரிய அழலினேன் யழற்றப்பட்டயான், அழுதத்தானுந் தாகசாந்தியை யடையமாட்டேனென வெண்ணுகின்றேன்.

அற்றேல் தீரனுய்ப் விசாரவானுய் திருஷ்ணைக் கனுகூல வியாபார ரகிதனுயிருக்கும் நின்னை யெங்ஙனம திருஷ்ணை தாகப்படுத்துவதாகும் எனக் கூறுகின்றூர்.

ஆசையானது, அறிவுமிகுந்து தைரியத்தோடு கூடியிருக்கு மென்னையும் பயமுறுத்துகின்றது, விவேக நேத்திரங்களோடும் வெளி விழிகளோடுங் கூடியிருந்தபோதினும் குருடாக்குகின்றது, அபரபக்ஷத்திரவேபோல ஆனந்தத்தோடுகூடி யிருந்தபோதினும் பெருந்துயரப்படுத்துகின்றது. ஒருவனது மனத்தையும வயப்படுத்த முடியாமலிருந்தபோதினும் யாவர் பின்னும் தொடர்ந்து யாதொரு யோகலாபப் பயனையுமை சிறிதும் அடையாமல் விருத்த விலமாதைப்போன்ற விருபபம் துயரையே யடையும். விரிந்தபுவன நடனசாலையின்கண்ணே சோகமோக கருணை நகைப்பு முதலிய பலவித ரசங்களோடு கூடிய சமூசாரப் பெருங்கூட்டத்தில் ஆசையாகிய கிழத்தாசி யாடுவள்.

வேறு வகையானே திருஷ்ணையை நிந்திக்கின்றூர்.

ஆசையோ சுகமொன்று மின்றிய கஷ்டத்துடன் சேட்டிக்கும். அசாத்திய விடயத்திலும் உண்டாந்தன்மை, துன்புற்றும் நிறைவின்மை, திரமின்மை வடிவ வேறு தோடங்க ளிருக்கின்றன வென்பார், எதிர்கிடைத்தற் கென்றூர். நடக்கவுஞ் சாதிக்கவும் முடியாதவளா யிருந் தாலும், நடனகதியை முயல்பவளான, ஆசையாகிய கிழக் கூத்தியானவள் வலுவின்மையினுனே மனமகிழ்விலாம லானந்தமின்றிக் கூத்தாடா நிற்பள். ஆசையாகிய அதி சஞ்சலவானரம் அடையத் தாண்டமுடியாததன்கண்ணும் எண்ணமாகிய பாதத்தை வைக்கின்றது ; திருப்தியடைந் திருந்தபோதினும் இலாபமென்னுங் காய்கனியை விரும பிக்கொண்டேயிருக்கும். ஓரிடத்தில் நீள்காலம் நிலைத் திருப்பதே கிடையாது. பிராணிகளின் கருமானு சார மாக விருக்கும் பிரஹ்மாவின் சேஷ்டையைப்போல ஆசையானது சுபமா யுசிதமானதைத் தொடங்கி அதனை முடிக்காமலே அசுபமா யனுசிதமாய்த் தொடங்கியதற்கு மாறுய எல்லாக் காரியங்களையுமே அதிவிரைவி லனு சரிக்குமாயினும் இளைப்பாறுவதே கிடையாது மற்றூர், எப்போதுமே சுப அசுபப் பலப்பொருட்டு முயன்று கொண்டே யிருக்கும்.

ஓரிடத்தில் நிலையாமையையே காண்பிக்கின்றூர், எப் போதுமே சுப அசுபப்பலப்பொருட்டு முயன்று கொண்டே யிருக்குமென்பதை விரிக்கின்றூர்.

. விரித்துக் கூறுவதாலென்னே! தொகுத்துக் கூறக் கேளுங்கள் திருஷ்ணையின் றுஷ்டத்தனத்தையெனக் கரு திக்கூருகின்றூர். சருவசமுசார தோடங்களின் மத்தியில் ஆசையொன்றே பொல்லாததாம். ஆயின் என்னதான் றிருஷ்ணையைத் தியாகிக்கு முபாயமெனின், கூறுகின்றூர்.

உலகத்துள்ள இசசனம் பாபவடிவமா யிராநின்ற சிந்தை யைத் தியாகஞ்செய்த மாத்திரையானே அகில துக்கங் களையும் விட்டொழிக்கின்றது என்பதவிவாதமேயாம். ஆண்டுச் சிந்தையின்றியாகம் துக்ககாரணபூத திருஷ்ணை யின் றியாகசம்பாதன வாயிலாகவே அகிலதுக்கத்தின் றியாகவேது வென்பது பொருத்த மூடைத்தாம்; ஆகவின் அறைகின்றார். விடயசிநதையின் றியாகமே திருஷ்ணை விடுசிகையின் மந்திரமெனப் பிரசித்தமாகக் கூறபபடும். திருஷ்ணையே விடுசிகையெனப் பெயரிய ரோகவிசேஷ மாம்; அதையகற்றும் மந்திரம் திருஷ்ணை விடுசிகை மந்திர மெனப்படும். விடயங்களில் இரமணீயத்தன்மைடச் சிந்தை யிலனே ஆண்டுத திருஷ்ணையுண்டாகின்றது, ஆண்டுச் சிந்தைப பரித்தியாகத்தால் இராகமெனு மயற்பெயர் வாய்ந்த திருஷ்ணை யுண்டாகாதாம், ஆகலின் சிந்தையின் றியாகம திருஷ்ணை விடுசிகைமந்திரம் என்பதாகப் பொருத்தமாகவே புகலப்பெற்றதாம். இருதயதாமரையி லிருக்கும் வண்டாகிய ஆசையானது கணப்போதிற் பாதாளஞ் செல்லும், க்ஷணத்தில் மேலுலகங்கட்குப் போம. கணதத்திற்றிக்குக் குஞசங்களிற் சுழலாநிற்கும். அந்தப்புரத்தி லிருப்பவனையும அதிக சங்கடத்திற் சேரு மாறு செய்யாநின்ற ஆசையொன்றே சமூசாரத்துள்ள சர்வதுக்கங்களுக்குள்ளும் நீண்ட தூண்டிற்கயிறு கொவ் பவனது அருகாமையிற் கொண்டிழுத்துக் கொல்லன் மூதலியவற்றைச் செய்வதேபோலப் பெருந்துயர்களை நெடுங்காலீயும விடவிசேடத்தா லுண்டாய விடுசிகை ரோகம்போல மரணேஹதுவாகிய ஆசையை எதுவரை யிலும் அனுசரிக்கின்றார்களோ, இனிது தரிக்கின்றார் களோ, விடுகின்றார்களில்லையோ, அதுவரையும் அத்தி யாத்ம சாஸ்திரக்கதையே கேளாத பிராணிகள் வியாகூல

சித்த முடையவர்களாகி மோகிக்கின்றார்கள். ஆயினதன் றியாகத்தில் யாதுதானுபாய மெனின், விடயத்தைச் சிந்தித்தலே விடுதலானே உலகர் எல்லாத்துயரங்களையும் விடுப்பர். காதலாகிய விடூசிகைக்கு மகாமந்திரம், சிந்தை செய்தலே விடுதலே யாமென்பர். "விடயந தனைமனினைக் கின்றவன் விரகொன்று வனைவயில்" எனக்கீதையுமருள் கின்றது.

சர்வதோஷங்களின் மத்தியில் திருஷ்ணை தீர்க்கதுக் கதனைத் தருவதென் றியம்பப்பட்டது திரப்பெறும் பொருட்டு மீண்டும் திருஷ்ணையை நிந்திக்கின்றார்.

ரோகபீடையும், மோக மங்கையும், சோக ஆசையும், கம்பீரதீரவீரரையும், சூரியகிரணங்கள் தாமரையை மலர்த்துவதேபோல விரைவில் அதீரத்தன்மை மென் மலர்ச்சி யடையுமாறு செய்யும். கெடுக்கவே முடியாத தான இவ்வாசையையும் மகாமதிமான்கள் விவேகமாகிய ஒளிபொருந்திய வாளினாலே கெடுத்துவிடுகிறார்களே! அற்புதம் அற்புதம் இஃதொரு பெரிய சித்திரமாயன்றே இருக்கின்றது. கூர்மையாய வாளின் முனையும், வச்சிர வொளியும், வெந்த இருப்புப் பொறியினொளியும், இருதயத்தின்கண்ணே யிராநின்ற இவ்வாசையைப்போலக் கூர்மையுடைய தல்ல; ஏனெனின், வாளின்முன முதலியவை வெளியிலிருத்தலினாலே ஒவ்வொருகாலே யநர்த்தத்தைச் செய்யும; ஆசையோ, இருதயத்தின்கண்ணேயிருத்தலின் எப்போதுமே துயர்தரும்; ஆகையால் அவற்றினின்றும் ஆசையை யதிகமென்றே சொல்லவேண்டும். கவுரவத்தானே மேருகிரிக் கொப்பானவரையும், மிகுந்த அறிவுடையவரையும், சூரரையும், வேண்டாமை யென்னும் விரதத்தானே நிலைபெற்றவரையும், புருடோத்த

மையும், இவ்வொரே யாசையானது ஒரு நொடிப் போதில் தருரும்புபோல உபேக்ஷிக்கத்தக்கவராகவும், சஞ் சலமுடையவராகவும் யாரகதனிய அடைவினனே இருக்குமாறு செய்துவிடும். "தருரும்பினுந் தூல மெனி தினு மெலிதாம், விருரும்புறு மிரபோ னதனினு மெலி யோன், தரம்பெறு வாயுத் தானடித்திலுயென், இரும் பெரு மெனினு மிரப்பானனவே" என்றுரான்றே கூறு கின்றார்.

இவ்வண்ணம் வாளாவந்தெங்கும் என்பதாதியாய மேருவொத்தோர் சுந்தர ஞானியர் என்பதந்தமாய்க் கொண்டு தருமத்தோடுகூடிய லிங்கசரீரத்தை விசேடமாக நிந்தித்துத் தூலசரீரத்தை நிந்திக்கின்றார், அல்லது உள் நோய் வெளிநோய்களாகிய, அநேகவிதக் கிலேசங்கட் கிடமாகியும், ஜரைமரணாதியானே யழிவுறுவதாயும், அபி மானம் ஆசைமுதலியவற்றிற்குக் காரணமாகியும், இரா ரின்ற தேகத்தை நிந்திக்கின்றார்; நல்லது ஆசை துக்க மேஹதுவாமெனில், ஆகுக, ஆயினுமம, "வாழ்நாதுவளனை வயங்கவே காணும்" என்னும் நியாயத்தால் ஆகத்திற்கே சுகபோகங்களை யனுபவித்தற் கிடனாகி யிருக்குந்தன்மை வெளிப்படையாதலினாலும், யாவருக்குமே தேகத்தி லதி கப்பிரீதி காணப்படுதலினாலும், சுகமேது வாகலாமே யெனின், அதுவுந்துக்கமேதுவே யாகுமென்கின்றார்.

சரமாய மலமூத்திராதிகள் நிறைந்த குடல்களோடு கூடியதும், நரம்பினால் நிறைவுற்றதும், அநேக விகார மூற்றதும், எங்கும் விழுதல் கழிதல் அழிதல் முதலியவற் றோடு கூடியதும், ஆகிய தேக மிச்சம்சாரத்தி லிலங்கு கின்றது. அதுவும் கேவலந் துக்கத்தின் பொருட்டே யாம். அற்ப அன்னபானாதிகளானும் சீத உஷ்ணாதிக

ளானும், ஆனந்தத்தை யடைகின்றது, துயரத்தையு மடை கின்றது தேகத்திற்குச் சமானமாகச் சோகிக்கத்தக் கதும், அசுசியானதுமை, குணமில்லாததும் உலகிற் கிடை யவே கிடையாது.

அகங்காரமாகிய இல்வாழ்வானுக்கு இல்லமாக நிகழும் இக்காயத்தாலென்னே யெனல்.

அசங்கணகி யிருக்குமெனக்கு இக்களேவரத்தா லாவ தென்னே, யாதொன்றுமேயாவது கிடையாதாம். அக் கிருகத்தில் இருவகையிந்திரிய பஞ்சகங்களும் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் பசுக்களாம். அக்கிரு கத்தில் வேலைமிகுதியா லிங்குமங்கும் திரிபவளாவள் திருஷ்ணேயேயாய இல்லறக்கிழத்தி. சித்தமேயாய சேவ கன் வேண்டிய காரியங்களைச சாதித்துச் சுகத்தைச் செய்துகொண்டிருப்பதற் கிடமாயதா மக்கிருகம். உல கத்தில் அடங்காத அநேகபசுக்கள் நிரைநிரையாய்க் கட் டப்பட்டு இடத்தை யடைத்துக்கொண்டிருப்பதும், மற் றையகிருகங்களிற் சென்று சுற்றுவதே வேலையாகவுடைய மனவியோடு கூடியதும், வேலைக்காரனுக்கே சுகித்தற்கி டமாயிருப்பதுமை ஆகியகிருகமானது விவேகிகட் கிட்டமாக மாட்டாது, அவ்வாறே யெனக்கும் தேக மிட்டமாகமாட் டாது. நாவேயாய பெண் கோத்தியாடிக் கொண்டிருக் கும் வக்திரவாயில் பார்ப்பதற்குப பயங்கரமாக விருக் கும். காணப்பெற்ற பல்லெலும்புத் துண்டங்களே கோர்த் துக் கட்டப்பட்டிருக்கும் மாலையே தோரணமாம். அகங் காரமாகிய இல்வாழ்வோனுக் கித்தேகம் பெரியவீடாம், இதுபூமியில் விழுந்துருண்டபோதினும், நிலைத்தபோதி னும் இதனல் மேறமுனிவரே! அடியேனுக் காகவேண்டிய தென்னே! வரிசை வரிசையாகக் கட்டியிராநின்ற இந்திரி

யங்களாகிய பசுக்களையுடையதும், மீண்டு மீண்டுலவா
நின்ற ஆசையாகிய இல்வாழ்க்கைத் துணைவியையுடை
யதும், அதனேன காமமாங் காவிக்கன் முதலியவற்றனே
அலங்கரிக்கப்பட்ட முழுமேனியையுடையதுமு ஆகிய இத்
தேகவீடானது எனக்கிஷ்டமாகத் தோற்றவில்லை. சித்த
மாகிய வேலைக்காரனுற் செய்யப்பட்ட அநந்தஞ் சேஷ்டை
யினலே விழாமற்றடுக்கு முயற்சியுண்டாக இருபனையுடை
யதும், பொய்யும் அஞ்ஞானமுமாகிய இருபெருமாதாரத்
தூண்கள் தாங்கியதுமாகிய இத்தேக வீட்டை யான்விரும
பேன். நாவாகிய குரங்கைக் கட்டிவைத்திருக்கும் கபா
டத்தையாய காட்டம்போட்ட பயங்கரமாகிய தலைவா
யிலையுடையதும், பிரத்தியக்ஷப பல்லென்டுத் துண்டு
களின் றோரணங்களையுடையதுட், ஆகிய இத்தேகத்தை
யான்விரும்பேன்.

அநித்தியமாய் அத்தியந்தம் அசுத்தமாய் அறிவற்ற
தாய் அற்பமாயிருக்கும் ஆகத்தில் அபிமானமடைவது
யாங்ஙனமென்கின்றீர். தனத்தாற்றனென் ? இராசசியத்தாற்றனென் ?
தேகத்தாற்றனென் ? சேஷ்டைகள் மநோரதங்களாற்ற
னென் ? சிலதினங்களிலேயே காலன் யாவற்றையுமே
யழிப்பன். அழிவையே யியற்கையான தருமமாகவுடைத்
தாகிய உதிர மாமிசமயமான இத்தேகத்தை யுள்ளும்
புறம்பும், ஆராய்ந்து நோக்கின் என்ன இரம்மியமிருக்
கின்றது கூறுங்கள். மரண சமயத்தில் எக்காயங்கள்
ஜீவனை யனுசரிக்கவில்லையோ, காத்துக் கொழுக்கவைத்த
உபகாரத்திற்கு மறுஉபகாரஞ் செய்யாமையாயின் செய்ந
ன்றி கொன்றனவாய அவ்வகளிடதில் மதிமான்கட்கு
எவ்வாறுபற்றுதலுண்டாகும். ஜரைவரும் போழ்தில்

ஜரையேவரும், மரணகாலத்தில் மரணமேவரும் ஆதலின் போகிதரித்திரர்களின் விசேடத்தை யறியாததாய்ச் சம மாகவே இக்காயமிருக்கும் என்பதாம்.

அத்தியந்தம் அநித்தியமாய பொருள்களில் நித்திய புத்தியைச் செய்யும் அறியாதவனே இக்காயத்தை நிலை யென மருள்வனென்கிறார்:—

பொய்யாயிரா நின்ற அஞ்ஞானத்தின் விகாரமாயும், கனவிற்காணும் நகர்க்கொப்பாயும், "தன்றேகத்தி லிவ் டப்படி யுலவுகின்றனன்" என்னும் மறைப்படி கனமயல் கட்காதாரமாயும் வெட்ட வெளியா யழிவை யடைவ தாயும் இருத்தலின் இக்காயம் அத்தியந்தம் அசத்திய மாம், இத்தகையதி லிச்சையுற லெங்ஙனமேலும். மின் னலின் கண்ணும், சரற்கால மேகத்தினிடத்திலும், கந் தர்வ நகரத்தின் கண்ணும், நன்னிலைமையை நாடுபவ னெவனே அவனே இக்காயத்தின் கண்ணும் நம்பிக்கை வைக்குக. விரைவிற் கெடுவதிற் றன்றிறமையைக் கான் பிக்கும் பொருட்டு வலுவின்முயன்ற பதார்த்தங்களுக் குள் எபபோது மழியுங்காரியக் கூட்டத்தை வெற்றி கொள்வதாய எவ்வெமமின்னல் சரற்காலமேகம முதலி யனவுளவோ அவற்றினும் வெற்றிபெற்று மேன்மையை யண்டந்ததும், நாச ஹேதுவாய தோஷசாமக்கிரி மிகுத் திருத்தலின் பிரபலதோஷத்தோடு கூடியதுமாகிய இக் களேபரத்தைத் துரும்பிற் கொப்பாகத் துச்சபுத்தியி னனே நீக்கி யான் சுகமாக விருக்கின்றேன் என்பதாம். அறியாமை பசிதாகம் நோய் சுசியிலாமை சஞ்சலம் என் பவற்றோடு கூடித் தூடிக்கப்பெறுவதும், விலங்கு பறவை கட்கு ஒப்பாயிருப்பதும் ஆகியபாலியம் நிந்திக்கத்தக்க தாம். அற்றேல், தேகத்திற்குண்டாம் பாலிய அவஸ்தை

யானது யாவராலும் விரும்பும்படி யான மிக இரம்மியமா பிருத்தலின் உடம்பின் எல்லா அவத்தைகளுமே துக்க ரூபங்களெனக் கூறுதல் முடியாது ; மேலும் " பேரிறைய வனும் பெருமறையவனும, சீரிளங்குமரனும் சிறந்தபே ரின்பையுற், ரூதரவுறங்க லெவ்வாரூமோ " என்னுஞ் சுருதியினாலும் பாலியமானது மிகுந்த ஆனந்தத்தோடு கூடியதெனப் பிரதிபாதிக்கப்பட் டிருத்தலினாலே மிகத் துக்கமெனல் எங்ஙனங் கூடுமென்ன ? விஸ்தாரமா யது செய்யும அனர்த்தமிகுதியைக் கூறுகின்றார், பலவிதமாய்ச் செய்யவேண்டு மென்னும் அபிமானத்தால் அலைந்து கொண்டிருப்பதும், நான்குவித சரீரங்களோடு கூடித் திர மற்ற ஆகாரத்துடன் சஞ்சல இயற்கையுடையதும, ஆகிய சமூசாரசாகரத்தில் மனுடஜன்மங் கிடைத்தபோதினும் " அரியமானுடம் பெறலரிதரி தரிதே " எனமறை கூற லின் மனுடப்பிறவி கிடைப்பதற் கருமையினும் அரு மையா யிருந்தபோதினும் பாலியம் கேவலந்துக்கத்தின் பொருட்டேயாகும. மாலைப்போது வானின்மேகம் பல திறப்பட்டுப் பொலிதலும், மரணகாலத்தில் நகரம்பொலி தலும் கந்தர்வநகரமா மென்பர்.

பதிஞ்ஞை செய்ததையே விரித்துப் பகர்கின்றார்.

சக்தியில்லாமை, ஆபத்து, பகூஷணாதி விடயங்களில் விருப்பு, பேசமுடியாமை, மூடமதியுடைமை, விளை யாடல் குதூகலமாய்த் திரித்லாதியிலாசை, கிடையா விடிற் றீனத்தன்மை, அதிசஞ்சல மூடைமை, என்னு மிவையாவும் பாலியத்தில் நிகழ்கின்றன, கோபம் அழுகை, கொடூரம், தைனியம், இளைபபுமுதலிய தசை களையும் வேறு அநந்த துர்த்தசைகளையும், பாலியமானது யானைகட்குக் கட்டுந் தம்பமிருப்பது போலக் கட்டுமிட

மாயிருக்கும். மனதின் சஞ்சல மிகுதியானே துக்கம் மிகுத்துவருதல் வெட்டவெளியேயாம், மனமியல்பாகவே சஞ்சலமான தாட்ட, பாலியமோ அதிசஞ்சலமுடையதாகும், ஆகவே யவ்விரண்டுஞ் சேர்ந்ததனுலுண்டாம், அனர்த்தத்தில் தன்னைக்காப்பாற்றிக் கொள்பவன் யாவன்முனிருக்கின்றன். சைசவத்தோடுகூடிய சித்தத்தினின்றும் சஞ்சலதனத மங்கையா கண்களுமம, மின்னற் கூட்டங்களும், சுவாலமாலைகளுமம, அலைகளும், கற்றுக்கொளளுகின்றன. சைசவமுமம மனதும் எப்போதும் சஞ்சலசுபாவங்களுடையனவாப்ச சகல வியாபாரங்களிலுமே சகோதரர்கள் போலவே குறிபரிகசப படுகின்றன. அற்பத்திலுலேயே பாலகன் வயமாகி விடுகினறன், அற்பத்திலேயே விகாரத்தைபு மடைகின்றன், மலத்திலேயே இரமிக்கின்றனுதலின் இபபாலன் நாய்போலவன்றே திரிகின்றன்.

மேலுமம பாலியதனது சாபல்யத்தையே விரித்துக் கூறுகின்றா.

ஆகாயதினின்றும், உப்பு, பசசைசமிளகாய், பசசைசக் கொத்துமல்லி, இஞ்சி, பெருங்காயம், பிஞ்சுமாங்காய், கட்டிதயிர் கலந்து கடுகுமுதலியவற்றுல் தாளிக்கபபெற்று மணம்வீசும் தத்தியோதன கவளமென்னும் எண்ணததால் இநதுவை வரவழைக்க முயலும்படியான வாஞ்சையானது எம்மூர்க்கத்தன்மையா லுண்டாகின்றதோ அம்மூர்க்கததன்மை வாய்ந்த மௌட்டியாதி அபரபரியாய பால்யம் சுகத்தின் பொருட்டு எங்ஙனமாம்? ஒருபோது மாகாதென்பதாம்.

சகலதோஷதனசைகளால் உபத்திரவம் பண்ணப்பட்ட அநதக்கரணம அபபாலியத்திலிருக்கும் அவிவேக விலாசிக்கு சுகமாகவாழும் மனுவேயாயினும் பாலியம் இச்சம்

சாரத்தில் எப்புருடனுக்கும் மிகவும் மகிழ்ச்சியின் பொருட்டு ஆகாதாம். மாறுக அத்தியந்தம துக்கத்தின் பொருட்டே ஆம. ஒருகால் போஜன இச்சையானை அழும் பாலகனைநோக்கிப புவனத்தை யுனக்குப் போஜன மாகத் தருகின்றேன் என்னும் வஞ்சகவாக்கியத்தாற் சந் துஷ்டனுகிப் பின்னைதபே புசிக்க ஆசைப்பட்டழுவதும், மூர்க்கத்தன்மையினுலே ஆகாயததிலிருந்தும் நிலவைப் பிடித்துவர விழைவதும், ஆகியபாலியமான து இன்பப் பொருட் டெங்ஙனமாகும. மனத்திற் குளிர் வெப்ப முதலியவற்றை நீக்கிக்கொள்ள வேண்டுமென்னு மெண்ணமிருந்தும முடியாமையின் இபபாலனுக்கும மரததிற்கும பாதுபேதமிருக்கின்றது. பறைவைக்குஞசேபோலப பால கன் இறகுகளாகிய புயங்களால் எழும்புவதற் கிசைகின்றனன், பசியோடு கூடியவனுயுளன் நிதியம பயாகார பரனுகியேயிருக்கின்றன். தந்தை தாய் ஆசிரியர் மூத்தோர் மற்றையா முதலியோரால் சைசவத்திற் பயம இருந்து கொண்டே யிருக்குமாதலிற் சைசவம பயததிற்காலய மாம். சகல தோஷதனசகளானை தூஷிக்கபபட்ட மனத் தையுடையதும், அவிவேகவடிவ தடையிலாமற் சஞ்சரிக் குஞ சீவனுகுவீடும், ஆகிய பாலியமான து ஈண்டு எவர்க் குமே இன்பதனைதத் தரத் தகுதியுடையதாகாதாம.

அநேகதோஷ ஆஸ்பதமான பால்யம் துக்கத்தின் பொருட்டாம என்றுலாகுக. யவ்வனமோ ஆற்ற லுடனை படுவாகுபபான்மை, முதலிய குணங்களால லங்காிகபபட்டிருத்தலின் சுகத்தின் பொருட்டாம் எனச் சங்கிபப அதனை நிந்திக்கின்றார் : உலோபம், துவேடம், மதம, அசூயை, அபிமானம், மாச்சரியம் முதலிய வற் றுனை தூடிகபபெற்றதும காமம்முதலிய அனர்த்தங் களின் இல்லமும ஆகிய யவ்வனத்தை நிந்திக்கின்றார்

பாலியமானது மிகமூர்க்கத்தன்மையோடும் ஆசையோடுமே பரதந்திரத்தோடுங் கூடினமையின் மிகுதியாக கேதுவென்பதாக, ஆனபோதிலும் யவ்வனமானது அவ்வாறு காமையினுஞ் பலவிதமாய்ப்போகரசாஸ்திதத்தன்மையினுமே சுகமேவதுவேயாகலாமென இச்சிக்கத்தக்கதேயாகுமெனின் யவ்வனமபோல வனர்த்தத்தைக் கொடுப்பது யாதுளதா மென்கின்றார்.

பாலிய அனாத்தத்தை விடுத்துப்போக உற்சாகமயகத்தானுமே மேற்கூறப்படும் காமப்பேய் முதலியவற்றினுமே கெடுக்கப்பட்ட மனத்தையுடையவனாகிய புருடன் இடர்ப்படும் பொருட்டு யவ்வனத்தி லேறுகின்றான். பதினன்குவருடமென மாண்டவ்யமகரிஷியால் பால்யமெல்லையிடப்பட்டிருத்தலின் அத்தகையபாலியம் இடர்ப்பொருட்டாகாதாம். யவ்வனமோ இடர்ப்பொருட்டேயாம யவ்வனத்தில் மூர்க்கனனவன் அனந்த விலாசத்தோடு (சேட்டையோடு) கூடிச சஞ்சலமாயிராநின்றதனது மனதின் இராகத்துவேஷாதி பரிணமங்களை யனுபவித்து ஒரு தாயரினின்றும் மற்றொருதாயரை யடைந்து கொண்டே யிருக்கின்றான். தனது மனதாகிய தூளியுட்டபுகுந்து நாலுவித சம்பிரமங்களைச் செய்துகொண்டிருக்கும் காமபபேயினாலே பலாத்காரமாய்த் தன்வயமற்றவனாகி விவேகத்தைதவிட்டு அதன் வயப்படுகின்றான். இதனினை சுதந்தரமின்றிய மனமானது தருணிகளைப்போலுஞ் சஞ்சலவியற்கைவாய்ந்த சிறுகைகட்குநிதிமுதலியவற்றைக் காணுமபொருட்டுக் குழந்தைகளின் கையிற் கொடுத்த சித்தாஞ்சன மானது சஞ்சல வியற்கைவாய்ந்த அவர்கள் விழியொளிகட்குத தடையிடாமல் பூமிசிலை முதலிய மறைபடையகற்றி இஷ்டப்படி நிதியைக்காணும்படி ஆற்றலைச் செய்விபபதே போலத் தடையிலாம லிட்

டபபடி. சுழலவழிதரும். யவ்வனத்தில் உள்ளமானது தோடகனைக் கொடுதலானே நிர்மலமா யிருந்தபோதி னுடம உதாரத்தன்மைடையானே விஸ்தீரணமா யிருந்தபோதி னுடம குணததத தருதலானே புனிதமா யிருந்தபோதி னும் இன்னுமம கண்மை இனிமை முதலியவற்றோடு கூடி யிருந்தபோதினுமம மார்கலத்தில் தெளிந்த நதியானது கலகத்தை யடைவதேபோலக் கலக்கத்தையடையும்.

யவ்வனத்தி லுண்டாமம அனாத்தங்களையே வருணிக் கின்றார.

யவ்வனமான து எவ்வளவுகாலம் எதுதுணை உயர்ந்து விரிந்து பொரிகாருமோ, அவ்வளவுக் கவ்வளவு மேன் மேலாகக காமஜன்னிய ஜ்வரமும், காமங்களுமம, காமி களும், அபிவிருதது யடைந்து கொண்டே போவார்கள். காயமாகிய மருபபூமியில் காமவெயிலா னுண்டாகித தோற்றுகின்ற யவ்வனமாகிய கடிய கானனீரைக கண் டோடி மனமாகிய மானது விஷயப் படுகுழியில் வீழும்; எக்காலெக்கால் யவ்வனமானது உயர்ந்த நிலையை அடை கின்றதோ அககாலக்கால் சந்தாபததோடுகூடிய காமங் களா கேவலம நாசப்பொருட்டே விருததியடைகின்றன.

இவ்வண்ணம யவ்வன தோஷங்களைச் செவ்வை யாய்ப பகார்து அதனுலுண்டாய காமாதியால் இகபரங் களில் துக்கபீஜம சமபாதித்து அதனினின்றுமம கடந்து சென்றோரை, அதனைக்கடப்பதில் பெருமுயற்சி செய் வேண்டுமம முமுகூஷுவால் என்று காண்பிக்குமம பொருட் டுத் தோதகதரிக்கின்றார.

யாவர் கொல்லாமை, மெய்ம்மை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை முதலியவற்றை விடாமற் சுகமாக யவ்வன சங்கடதினின்றும் ஏறவல்லரோ இவ்வுலகில் அவ்வர

தொழற்குரியோர்; அவரே புருடர் அவரே சான்றோ ராவார். பெரும் பெரும முதலிகட்கு வாசஸ்தானமாம பெருங்கடல் தாண்டுதற்கெளியதாகுப. ஆனல் இராக முதலிய அலைகளின் வலுவான உல்லாசத்தோ டிற்றதும இகழத்தக்கதும், தோடத்தோடு கூடியதும ஆகிய யவ் வனக் கடலைத் தாண்டல் அரிதினும் அரிதாம. இவ்வா ரு யின் பாலியமும விருத்தாவஸ்தையும் மூர்க்கத னத்தி னலும முடியாமையாலும புருடார்த்த சாதன மாகாமை யின் யவ்வனமும அநேகந்தோடதோடு கூடியிருத்தலின் ஒருகாலத்திலும புருடனுக்குச் சாதன அடைவினே புரு டார்த்தத்தின் பொருட டானசெய்யமுடியவே மாட்டா தன்றோ வென்றுசங்கிபபின் எல்லாயவ்வனதையும யானி கழவில்லை, மற்றோ, கெட்டயவ்வனத்தையே யாகும: நல்ல யவ்வனமோ புருடாரதையே கொடுக்கும, விஷயத் தினே லலங்கரிக்கபபட்டதும, புகழத்தக்க முனிவர்பா லிருபபதும், சாதுக்களின் வாசஸ்தானமபோல இனைப பாறுதலைத் தருவதும, கருணையானே கவின்வாய்ந திலங்குதும, சாந்தி தாந்தியாதி குணங்களானே பிர காசிபபதும ஆகிய நல்லயவ்வனம் இவ்விலக்கணத்துடன் இவ்வுலகிற் கிடைபபது அரிதன்றோ, எனெனின், பறவை களாற் சூழபபெற்ற கற்பகதருகள் நிறைநதலங்கரிக்கப் பட்டதும தேவதைதகட் கிடமாயும் அதனேன தையையிறற் பிரகாசிப்பதும, பலம, புஷ்பம், ஐசுவர்யம், முதலியவற் றினும, கற்பகக்கொடி முதலிய குணங்களாலும சூழப் பெற்றதும ஆகிய ஆகாய நந்தவனமானது இவவுலகின் கண்ணே மிகவுந் துரலபமன்றோ? இநநதன வனத்தைதப போல இம்மனுடஜன்மத்திலும கூறிய யவ்வனங் கிடைபப தரிதாயின் பிறவிடத்தி லின்றெனக கூறவும் வேண்டுமோ.

யவ்வனனுக்கு ஸ்திரீவாயிலாகப் பெரும்பான்மையும்

அனர்த்தகம வந்து சோதலின் அதனை நிந்தித்தபின்னர் அதன் அனாத்த காரணத்துவாரமாய ஸ்திரீயை நிந்திக் கின்றார். பிரத்தியக்ஷ நரகக்கூட்டங்களா லுண்டாக்கப பட்ட சாவ அங்கங்களை யுடையவர்களுமை புருடர்கட்கு நரகத்தையுமை ஜன்மத்தையுமை எபோபாதும் கொடுததுக் கொண்டே யிருப்பவாகளுமை ஆகிய மங்கையர்கள் நிந்திக் கத் தகவாகளை யாவாகள் என்கின்றார. எந்தஸ்திரீ பிண்டத்தில் காளையர்களுக்கு ரமணீயத்தன்மை புதி யுண்டாகின்றதோதா அதன் சொரூபதனைப் பிரித்துக் தெரி விக்கின்றார.

வஸ்திராதி நிர்மித பதுமைபோலும், மாமிசாதி நிர மித இப்பதுமை நரம்புகளாற் கட்டபபட்டு நடிக்குமை. நரமபுகளாலும் என்புகளாலுமை மாமிசக் கிரந்திகளா லும் சோபிக்குமை, தோகையின் ஜல எந்திராதிபோலச் சஞ்சலமான அங்கநீடதில் அழகென்கொ லென்பதாம். அற்றேல் மங்கையாதம் விழிகள் சஞ்சலத்துடன் கருங் குவளையொதது அதிரமணீயங்களாகி யிருக்கின்றன, ஸ்தன்னியங்களா புரளாநின்ற வெள்ளிய முத்து ஹாரங்களோடு கூடிக் கனகசலசங்கள்போலத் திரண்டு விளங்கி மனதையிழுக்கின்றன, இவ்வாறிருக்க அம மங்கையாதம அங்கபனசரதத்தில் இனிமை யென்னே யென எங்ஙனமாசேகூடிதல் கூடுமெனச சங்கிபபப் பரி கரிக்கின்றார —கந்த மென்னென. சுகந்தமை ஆங்காங்கு அவயவங்களிற் சேர்க்கப பெறுதலிறலே இயல்பா யங்க முழுவதும் துர்கந்தமயமா மெனபது விளங்கும். பாஷ் பம = விழியிலொழுகுமை சுவிரீராம. தோன்மாங்கிசாதி சலூகவடிவமேயன்றே லோசனம, அது உணர்விலி திருஷ் டியால் இராமியமாகுமாயின், தோன்முதலிய வற்றைத் தனித்துப் பிரிதது அவ்வறிவான் நன்காலோசனை செய்து

பார்க்கட்டுமை அப்போது லோசனமை சோபனமாகின்றதா பார்ப்போமை வாளா மோகிக்கின்றனன். நரம்பு எலும்பு, பருத்த முடிச்சுகளோடு விளங்கும் மாம்சமயப் பாவை போன்ற மங்கையரின் யந்திரங்களாகிய சக்கிரமுதலிய வற்றைபோலச் சந்ததஞ்சுழலும் சரீரக்கூண்டில், இரமணீயமதியைச் செய்கின்றனரே இஃதென்னை, யாதான்றையுங் காணேமை. இதன் விஸ்தாரத்தைப் பின் பார்ப்போமை; முதலில காளைகட்கு எதன்கண்ணே நேத்திரமயக்கமாமோ அதை யாராயின் அமங்கலமாகத் தானண்மேறு வாது; தோல் மாம்சம புண்ணீர கண்ணீர் என்பவற்றைட பிரிதது நோக்கின், நோக்கமானது இனிதாகத் தோற்றுமை பக்ஷிததில் மோகிப்பாமை, அல்லாக்கால் என் வீணைய் மோகிகமேவண்டுமை. இதுமயிர் இது இரக்தம என்னும் இவைதாமே பிரியகாதலியின் நாரசசரீரம்; இகழத்தக்க இதனனே விவேக விஸ்தீர்ணமதியுடைய வர்க் காகவேண்டுவதென்னை.

அடிக்கடி கஸ்தூரி புனுகு சவ்வாது சந்தனம முதலியவற்றைப பூசி வாசனைகளானை மினுமினுக்கும குயக்குன்றங்களைக் கழுகு குள்ளநரி முதலியவை கொத்தியிழுத்துப் புரட்டுகின்றன வென்கின்றார்.

எத்தனத்தின்கண் முத்துமாலையின் உல்லாசசாலித்தன்மையானது, மேருசிருங்க தடவுல்லாசி ஸ்ரீ கங்கையின் பிரவாகம்போன்றதாகக் கண்டதாமோ அந்தலலனை யின்றனமே திக்கந்தங்களிலும் ஸ்மசானங்களிலும் அன்னத்தில் லகுபிண்டமை போலக். காலத்தில் ஞாளிகளாலே தின்னப்படுமை. மேருகிரி முடியிடத்தில் மினிர்கின்ற தன்மைபற்றி மேருசிருங்க தடவுல்லாசி யென்றதாம். அல்லது மேருகிரியினது சிருங்கத்திடத்தில் குதித்துக்கொண்

தனித்து விளையாடிக் கொண்டுவரும ஸ்ரீகங்கையினது தீரத்தத்தின் வேகத்தோடுவமையுற்ற உல்லாசமாய் முலை மேற் குதித்துருண்டு சோபிக்கும் பான்மையெனினுமை அமையுமை. பொன்மலையின் கொடுமுடியினின்றுமை பெருகி யுல்லாசமாய் வரும விரிதிரைக் கங்கைப பிரவாகம்போல முத்துமாலையானது கிடந்து புரளு முல்லாசத்தோடுகூடிய மங்கையரின் மலைமுலைகள் யாவை காணப்பட்டனவோ அவையே மயானங்கடோறுமை திசைதிசைகளில் அதிவிரை வில நாய்களானே சோற்றுச சிறுபிண்டமேபால மிகவு முருசியாகப பட்சிக்கப்படும்.

நாரியர்கள் மகத்தான பாபருபங்களென்கின்றார்.

இதனமானது உலகத்தில் ரசமுற்றதாகவேனும் ரசமற்றதாகவேனுமை உண்டாமை. உபயவடிவமாப் உண் டாவதின்றும். ஸ்திரீகளோ சரசராயினும் நீரசராயிருத் தலின் சாரு இத்தனமாவா. தூரத்திலிருந்தபோதினும் நரகலக்ஷண அக்கினியை மிகச் சொலிக்கச் செய்தலாலுமை சாருவிந்தனமும் தாருணவிந்தனமுமாவாகள். கூந்த லாகிய மையைத்தரித்தவரும் தீண்டத்தகாதவரும், கண் ணிற்குமாத்திரம் அழகாயிருபபவரும் ஆகிய தீவினைச் சுடர் சுவாலையா மங்கையர் மனுடனைக்காய்ந்த தருமபிற் கொப்பாகக் கொளுத்துகின்றனா. அதிதூரத்திலிருக்குமை நமனுர்புரியிற் கொடூரமாயெரியுமை நரகாக்கினிகுமை மங் கையரிங்குள்ளவராயினும் காய்ந்த கட்டையா யிருக்கின் றனரென்னுமை காரியகாரணததால் இரசததோடு கூடியவ ராயினும் இரசமற்றவரே யாவா; துஷ்டவாசனையோடு கூடியிருததலின் பார்வைகு ரசத்தோடு கூடியவராயினும் உண்மையில் இரசமற்றவரேயாவா, பார்வைக்கழகா யிருப் பவராயினும், பயங்காற் பாவமயமேயாவர்.

மாதர் வலைக்கும் தூண்டிலிரைக்கு மொப்பா ரென் கின்றார்:—

மூடமனத்தையுடைய நரர்களாகிய பறவைகளி னங் கத்தைக் கடடக் காமவேடனுற் பரப்பபபட்ட பெருவலைக் கொப்பாவர் இக்கருங்கண் மடநதையா. குமரிப் பெண் ணெகிய பெரியபகட்டுத்தறியில் இரதியென்னுங் கொடிய சங்கிலியால் மனமென்னுமை உன்மத்த மதயானையான து கட்டுப்பட்டு ஒன்றுந தோன்றுமல் ஏமாந்து நிற்கின்றது. சித்தமாகிய சேறுநிறைநத சென்மமென்னுஞ் சிறு குழி யில் மீன்களைபபோன்றுழலும் மூர்க்கர்கட்குத் தூவாச னமே தூண்டிற்கயிறும், பெண்களை தூண்டின் முள்ளில் வைதகமாவு மாவரென்பதாம்.

இங்ஙனம் பெண்டோடங்களைக் காட்டி அவற்றை யறிநதுகொள்வதால் வருமபயனை யறிவிக்கின்றார்:

எல்லாத்தோட ரத்தினங்கட்கும் சிமிழாயும, எப் போதுந் துயரைத்தரும் பெருஞ்சங்கிலியாயும், இராவின்ற மங்கையராற் பெற்றபயன் போதும், எனக்குபபோதும, மாம்சமாத்திர முக்கியசாரமாய்ப பொய்யாயிருக்குந தனங்களாலும, கண்களாலும் அல்குலாலும புருவங்க ளாலும எனககாக வேண்டுவதென்னே ! எனககாகவேண் டுவ தென்னே !! இதுமாமிசம், இது இரக்தம், இவை யெலுமபுகள் என ஆராயிற் சில தினங்களிலேயே பெண் களிணைசை இருந்த இடந தெரியாமல் மறநதுபோம.

அற்றேல், போகேச்சையான திருபப எனக்குப பெண் வேடனைக யலவெனக் கூறியது எங்ஙனங் கூடுமெனிற் கூறுகின்றார.

எவனுக்குப் பெண்பேய் பிடித்ததோ அவனுக்கே போக இச்சையாம, பெண்ணற்றவனுககுப போகமெவ்வா

றுண்டாம்; பெண்ணுசையை விடவொழித்தாற் பெரிதான வுலகம்போகும், பெரிதான வுலகம போறற் பெரின்பந தானே யுண்டாம்.

பிரகரணப் பொருளை யுபசங்கரிக்கின்றார்.

கிடைததபோது மாதகிரம இரமணீயமாயிருபபதும, வண்டின் சிறகுபோல மிகச சஞ்சலமுற்றதும, விழுந்து விட்டாற் றுண்டமுடி-யாததும, ஆகிய பொய்ப்போகங் களில் பிறப்பிறப்புச சரைமுதலிய பீதியினுல் யான் இர மிக்கவே மாட்டேன், தங்கள் ஆசீர்வாதத்தாற் பெரு முயற்சி செய்து வேற மகா முனிவரே! சாந்தியையடை வேன், பரமபதத்தையு மடைவேன்.

யவ்வனத்திற் பெருமபான்மையும் அநர்த்தகாரணத் துவாரமாகிய ஸ்திரீயை நிநதிதது, பாலியாதிகட்குப பாத தியபாதக பாவந தரிசிப்பித்துக்கொண்டு, யவனதின் பின் வரத்தக்க ஜரையை உதாரகிரந்த சநதர்பபத்தால் நிநதிக்கும்பொருட்டு நனகு துதிகின்றார:—சோகம, மோகம், பிரிவு, பீடை, வாட்டம், நோய் முதலியவற்றோடு கூடியதும, பெருஞ்சிந்தைகுல அவமானத்திற்கும, இருபபிடமும, ஆகிய வயோதிகதன்மையானது நிந்திக் கத்தகதே யாமென்கின்றார்: மேற்கூறிய வாறேலாயின், காமாதிதோஷப பிரபலதன்மையினுனே யவ்வனத்திற் சுகமில்லாதிருக்குக, வயோதிகப்பருவததிலோ காமாதி கள் குறைநதுபோனதாலும அடகமுதலிய சற்குணசம் பன்ன புத்திர பௌத்திராதிகளால் வீட்டிற் சேவிக்கப் பட்ட வயோதிகனுககு அதிக சுகமானது உண்டாகக் கூடுமல்லவாவெனின்? அநத அவஸ்தையானது அநேக துக்கங்கட்கு இடமா யிருந்தபோதினும அவயவாவற்றை யும பின்னராய்வாம், முன்னர், "தன்னினந்தின்னும பாம்

பினங்கட்கு, இன்னினமயலிற் றுயை யெங்ஙனமாம்'' என் னும் நியாயததாற் பெருங் கொடூரமுடைய தென்பதைக் கூறுவாமென்கின்றார்.

ஜரையானது அநாயாசமாகவே கிலேசநதருவதாம். விளையாடல் மகிழ்நது திரிதல் முதலியவற்றிலாசை நிறை வடைதற்கு முன்னரே, பலாதகாரமாய்ப பாலியத்தை யவ்வனமானது விழுங்குகின்றது; பின்பு பெண்முதலிய போகஆசை நிறைவுறுதற்கு முன்பே பலாத்காரமாய்த் தாருண்யத்தை ஜரை விழுங்குகின்றது தாங்களே பாருங் கள், பரஸ்பரம் பெருங் கொடூரதன்மையை. ஆயாச மிலலாமலே தீனததன்மையைத் தரும் ஜரையாற் கவரப் பெற்றவரானபோது சக்களத்தியால் மூததவள் தளளப் படுவதே போலப பேரறிவானது அவரைவிட்டோடியே விடும். பானஞ்செய்தல் என்றது உட்கொள்ளுமவேகம் பற்றியாம.

ஆசசரயில வரும நாளுவிதமான துயரையே விரித் துரைகின்றார.

அநேக குற்றங்களுடன், பெருஞ்சோகமும் தளர்ச்சி யுமதைதன்யமும்; கண்டவற்றிலெல்லாம் ஆசையும் லோப முமம், அநேகவிதமான துயரங்களும், இயல்பாகவே டாசோடுகூடிய ஒருசிறு தொழிற் செய்வதன் கண்ணுமம, சாமர்த்தியமில்லாமையும, மறைநதிருநத கொடியகுன்ம சூலியாதி வியாதிகள் ஆக்கமுற்றெழுதலும், நாடிய பொரு ளைச செய்ய முடியாமையும், விருமபிய பொருளை யுண்ண முடியாமையும, அளவிட்ட திரவியத்தைதகூடச் சம பாதிக்கமுடியாமையும, புதிரன் முதலியவருங்கூடச செய்ந்நன்றி மறந்து நிநதை செய்தலும், ஆகிய அநேக வகையான துக்கங்களை, தோற்சுருங்கி வெண்மயிர் வெய்ந்-

தவயோதிகமம, தான் வரும்போது கொடாநிற்கும்.
ஆசை = விசேட விடயங்களிலிசை.

வயோதிகப்பவருத்தால் நடுங்காநின்ற கிழவனைப் பைத்தியகாரனைப்போலப பார்த்துநத் தாசர்கள் மைநதர்கள் பெண்கள் பநதுக்கள், நேயர்கள், முதலியோர்கள் நகைக்கின்றாகள். பார்க்கச சகிக்கக்கூடாதவனய், இருக்குங் கிழவனைப் பேராசையானது, மிகநீண்டதும் பலத தோடுகூடிய சாகை தூர் முதலியவை நிறைநது விரிந்ததும வேறு பக்ஷிகள வநது வசியாததுமாகிய மிக நீண்ட விருக்ஷத்திற் கழுகு வநதடைவதே போல வநதடையும

பேராசை வளர்தலும் பெறமுடியாமையும சீரது மில்லாமற் சிறுமையே யுறுதலும பார லௌகிகமே பறறிற் பயமிகவுறுதலும ஆமென்கின்றார.

தீனதன்மையாகியதோஷமிருந்ததும், இருதயத்தின் கண் ணைபோதுந தாபத்தைக் கொடுத்துக் கொண்டே யிருபபதும், மிகவும் நீண்டதும, சாவ ஆபதத்துக்கட்கும் முகியமாகிய தோழியும, ஆகிய ஆசையான்து, வயோதிகத்தில் வநது வளாநதுகொண்டே யிருக்கும, பரலோகத்திற்காக என்னல் என்னசெய்யத தகாகது, ஆ! கஷ்டம், எனமிகக் கொரமா யெவவிதததிலும நீகமுடியாத பெரும்பயத்தின் விருத்தியானது வயோதிகததில் மிகவு முண்டாகின்றது. வயோதிகத்தில் வரும் தினதன்மையானது யாரே மிகமுடியாதவன் என்னதான் எவ்வாறு தான் செய்வேன், மௌனமாகவே யிருகின்றேன், என இவ்வாறு பலவகையாம.

அவ்வயோதிகத்தில் அருநதலாதி யாசை யதிகரிக்க வனுபவிக்க முடியாமையும், முடிவின் மடிதலும, துயரத்தையே தருமென்கின்றார்;—

வதைப பார்க்கினுமை வீழ்தலே நலமாம் ஜனரயவமானப் படுதத மரணமெதிர்பாக்க வாழ்தலி லென்னபயனும் மநதமதியையுடைய தத்துவமறியாதவெனக் கென்கின் றூர்.

அஞ்ஞானத்தினாலே மூடர் மயலுடையவராகி, இஃ தென்னுடைய போக்கியம், யானிதன் போக்தா, இவை யதன் சாதனங்கள், இதனாலிதைச சம்பாதித்து நெடு நாளைக்கனுபவிப்பேன், இஃதின் றென்றலெயதலையது, "இஃதினி யெண்ணுமாறெய்துவலினிதே" என்பன முத லிய அளவில்லாத மதிவிகற்ப கற்பனைகளானே மிகமிக வும் விவகாரவசனங்களை வசனிப்பவரும் அற்பதேகத்தி லான்ம மதியைச் செய்பவரும் அற்ப சுகலேசங்களிற் பரமபுருடார்த்த மதியைச் செய்பவரும் ஆவர். ஆகை மூர்க்கமூடர்களால் சத்துருமித்துரு உதாசீனர் முதலிய பேதங்களானும், தள்ளத்தக்கது கொள்ளத்தக்கது உபே க்ஷிக்கத்தக்கது என்பது முதலிய பேதத்தானும், அவற் றுண்டாகிய இராகத துவேடாதி பேதத்தானும, சம் சாரத்தைதப பெருக்கும் பிரமாண்டப் பொந்தில் ஒன்றை மற்றொன்றுகக் கவரும் பெருமயக்கமானது ஒருவரானுங் கெடுக்கமுடியாத விதமாக அடைவிக்கபபட்டுளதாம இத்தகைய அஞ்ஞானமயமாகத் தோற்றுய அவஸ்து வான சமூசாரத்தில், குழந்தைகள் கண்ணுடிக்கனியை யுண்ணக் கருதுவதேபோல மூடரே இரமிபாபரன்றி விவே கியர் இரமியார், இத்தகைய மிதியா சமூசாரத்தின் கண் ணிய தம மூடர்கட்குத் துச்சமாகிய சுகவாசனையும ஆசையுமுண்டாகின்றதோ அம்மூடர்களையும எலியானது கெல்லும் வலைக்கருகிருக்கும் அறுகமடல் றுணியை மாத் திரமபற்றி வாழுவேண்டு மென்றெண்ணி நால்நூற்று அந நால் நுனியிற்றொங்கும் நூற்புழுவினது நிலை அடியோ

டும் அறுப்பதேபோலக் காலன் அடியோடு கெடுத்துவிடுவன். நால் ஆகுபெயராற் பட்டாடையைத் தொட்டு நின்றது.

சுகஜனக விடயசமூதாயத்திற்கு நித்தியத்தன்மையிருக்குமாயின் சுகத்திற்கும் பிரவாகரூபத்தால் நித்தியத்தன்மை சம்பவிக்கும எனக்கடாவ விடைதருகின்றூர்.

பூரண . நிலவெழுந்தவுடனே பொங்கிபபெருகும் பெருங்கடலே வடவாமுகவனற் குடிப்பதேபோலச் சகலமும விழுங்குங்காலன் விவகாரபூமியானஜகத்திடை விழுங்காததுமுளதோ!இல்லவேயிலலே உண்டாயபாவற்றையுமே விழுங்கிவிடுவன். இச்சருவதிருசியசத்தைகளையும ஒரே கவளமாய் விழுங்கமுயன்றகாலனே, சர்வ பதார்த்தசாதாரணமாக அதிபயங்கர சங்கார உருத்திரனுவன், வல்லமை பேரறிவுமகிமைமுதலியவற்றுனே மிகபபெரியோராயிருப்பினுமை ஒரு கணபபொழுதாயினுமை தாழான், உடனே கொண்டுபோய்விடுவன். அந்த விசுவத்தையும் தானே கவளீகரித்து விசுவவடிவமாய்க்காலனே விளஙகாநிற்பன்.

இரமணீயத்தன்மை, சற்கருமததன்மை, குணகரத்தன்மை முதலியபவைபுமை கால நிவாரகங்களேயாவதில்லையென்கின்றூர்.

மிக அழகாயிருபபவர்களும், நல்லொழுக்கத்தவாகளும், மேருகிரிக்குச் சமானமாய் வல்லமையுள்ளவர்களும், சர்ப்பங்கள் கருடனுல் விழுங்கபபடுவதேபோலக் காலனுல் விழுங்கப்படுவாகள. கையேயின்றியவனும், கற்போலக் கடினமானவனுமை, புலி முதலியவற்றைபபோலக் குரூரமானவனுமை, இரமபாதிபோலக கூனமையானவனும் உலோபியுமை அதமனும், கன்வயிற்றை கிரபபுவதிலேயே கருத்தையுடையவனும், ஆகியகாலன் புழுதி,

இலை, தருமபு, பொன்மலை, மகேந்திரம், அலைகடல், முதலியபாவற்றையும தன் வயமாக்கி விழுங்கும பொருட்டு முயலுகின்றனன். இவன் இதுவரை விழுங் காதவஸ்துவே கிடையாதென்பதாம.

யாவற்றையும் தன்மயமாக்க முயல்கின்றனன் என் பதனானே காலன் சர்வ சங்கார கர்த்தாவெனக் கூறப்பட் டது, அதனையே விரிக்கின்றார். பெருங்கற்பந்தனில் விளங்கா நிற்கும் என்பதந்தமாய கிரந்த சந்தாப்பத்தால், ஆண்டுப பிரதமம் பிராகிருதப பிரளயத்தில பிரஹ மாண்ட சங்காரத் தன்மையைக கூறுகின்றார்.

பிராணிகளாகிய கொதுகுகள குபகும என இரை யும் பிரஹ்மாண்டங்களாகிய அத்திகணிறைந்த பெரிய மரமாயிக்காலனிருப்பன். தினமாகிய இலைமதிறத் தலானே சூரியனகிய கண்ணற பழுத்தனைத பார்த்து ஜகத்தாகிய பழைய வனத்திலிக்காலனவன் பக்குவமா யிருக்கும லோகபாலர்களாகிய பழங்களைப புசித்துக் கொண்டே யிருபபன் இது பாலக சங்காரத தன்மையாம். வித்தைவிநய முதலிய நூற்களானே கோக்கப்பட்ட சற் புருடர்களாகிய இரததினமாலையை நிரந்தரம அலங்காரப் பொருட்டுத் தனதவயவங்களாகிய கிருத திரேதாயுக முத லியவற்றில் அணிந்தணிந்தடிக்கடி அறுத்தெறிவன், யாவ ரையுமே யறுத்தெறிவதாயினும் குணவான்களுடைய விநாசமே லோகபபிரசித்த மாகுமன்றே! = இது பாலிய சங்காரத தன்மையாம்.

பாலக சங்காரத் தன்மையைப பகாந்து பாலிக்கத் தக்கவற்றின் சங்காரத் தன்மையையே இன்னும் பகர் கின்றார்.

ஜகத்தாகிய பழையகுடிசையிற் சிதறுண்டிருக்கும்

குணத்தோடு கூடிய உலகமணிகளையுக்கிரமாகிய பொந் தினையுடைய யமனுகியசிமிளில் முறையாக அடைத்துக் கொண்டே யிருபபன் சண்டிகாதேவி யென்னும பிராண நாயகியோடும கூடிய அக்காலனே வேட்டைகுதூகலத் தோடு விளங்கும அரசகுமாரனுக வருணிக்கப படுகின் றூர். அக்காலனே வேட்டைமகிழ்வால் விளையாடும மகா மன்னவன் மைமந்தனுக விளங்குவன்; இச்சமசாரத்தில் அடங்கா மேன்மையான லீலையை யுடையவனும், சர்வ ஆபத்துகளும, மிகுதூரத்திலேயே நீங்கப் பெற்றவனும் எண்ணவொண்ணுத பராக்கிரமத்தை யுடையவனும, பிர சித்தமாகிய சூரிய சந்திராதிகளையும பிரகாசிபபித் தொளி ரும் அரசனுகிய பரபபிரஹமத்திணுடைய அநாதிமாயை யென்னும் பட்டமகிஷியின் சமபந்தத்தாற் கிடைத்த வடி வத்தாணும யுவராஜ்ஜிய பட்டாபிஷேகம பெற்றுச சமபத் துகள வியாவற்றையும அனுபவித்தலினுணும மைமந்தனு மாகிய காலனுடைய சரித்திரமானது வருணிகத்தக்கதே யாம. மிகவும பழைமையா யிராநின்ற ஜகத்தாகிய பெருங் காட்டில கூடடத்தில, தீனர்களும அறிவில்லார்களும் ஆகிய பிராணிகளென்னு மிருகக கூட்டங்களோடு வேட்டை விநோதத்தைச செய்யும, இவனுக்கே அக்காட் டின் ஏகதேசத்தில விரிந்து விளங்கும் அழகிய வடவா முகாகினியாகிய தாமரையா லலங்கரிக்கப் பெற்ற கற்ப காலப பெருங்கடலானது மநோரம்மியமான விளையாடுங் தடாகமாகச செய்யப்பட்டுளது.

வேட்டையாடியதா லுண்டாய சிரம அபநோதப பொருட்டுப் புஷ்கரணியைக் காண்பித்துக் காலராஜகுமார னுக்கு வேட்டை நிர்க்கமனத்தின்முன் போஜனங் காண் பிக்கின்றூர்.

கைப்பாகவும், காரமாகவும், புளிப்பாகவும, இரா

நின்ற அப் பூதங்களோடுமை, தயிர்பான் முதலிய கடல்க ளோடும் தனித்தனி ஏகவடிவமாகி நெடுநாளா யிராநின்ற இந்த ஜகத்தானது அவனுக்குக் காலைப்போஜனமாம். கைப்புக் கார்ப்புத தயிர் முதலியவற்றோடு பழைய அன் னத்தைக் காலையிலுண்ணல் திராவிடர்பாற் பிரசித்தமே யாம்.

வேட்டம் ஆட்டமாகவுற்ற காலனுக்குச் சனியின் ரூனத்துற்ற பெண்டுலியைக் காட்டுகின்றார்: சனி = பெண் ணைய். அவனுக்கு அனுரூபமான பிரியையைக் கூறு கின்றார்.

பிராசீனமான உலகத்தில், பிரதிதியாகப்பட்ட, ஸ்தா வரஜங்கம ரூபமான சகலவஸ்துக்களையும், சங்காரித்து வேறுபடுத்தி, யாவராலும் ஜயஞ்செய்தற்கு முடியாத, சண்டிகா தேவியானவள், ஆதிகோர பயங்கரமான, சதுர சஞ்சார மூடையவளாகி, சர்வமாத்ரு கணங்களும் பின் ரொடரப பெற்றவளாய், பற்றுதற்கரிய துயர்மய லைக மயல், இந்திரியங்கள் உலாவித்திரியும மாவனதில, பெண் டுலியைப்போல வாழ்ந்து கொண்டிருக்கும்.

சர்வதாய்க் கூட்டங்களோடு கூடியவளும், டுலியைப் போலப பிராணிக் கூட்டங்களைக் கொலபவளும, சமுசார வனத்தில் விளையாடுமபொருட்டு ஏவபபட்டவளும, மகா சாமர்த்தியத்தோடு சஞ்சரிப்பவளும, ஆகிய சண்டியென் னும் மகாகாளராத்திரியம்மையே யவனுக்கு மனைவியாம்.

மத்தியபானப் பொருட்டு அக்காலனது கரதலத்தில் வைத்துக்கொண்டிருக்கும பான பாத்திரத்தைக காண் பிக்கின்றார்.

இரசத்தோடு கூடியதும, மதுவானது சுகந்தமாயும் அழகாயு மிருக்கும் பொருட் டுலகவழக்கமபோ லலங்கரிக்

கப்பட்ட செந்தாமரை கருங்குவளை செங்குவளைகளோடும் கூட்டமா மாலைக ணிறைந்ததும், ஆகிய பூமியென்னும் பெரிய அகன்ற மதுக்குடத்தைக் கரதலத்தில் வைதிருப் பன். மகாகர்ச்சனத்தோடு கூடியதும், சகிக்கமுடியாத தோள்தட்டு மோசையை யுடையதும் கேசரங்களானே பார்க்கமுடியாதபடி நிறைந்து;பெருத்த கழுத்தோடு கூடி யதும் ஆகிய நரசிங்கத்தைத் தோளிற் றொங்கவிட் டிருக்குங் கூண்டில் அசுரரைக் கொல்லுட பொருட்டு விளை யாட்டுப் பறவையாக வைத்திருபபன்.

நரசிங்கமபோல உருத்திர அனுசரபூத மகாகால னெனப பெயரியதேவனும் காலனுக்குக் கிரீடோப கரண மாமென்கின்றார.

சிலக்கதையில் மேற் கூறப்படும் சங்கார பயிரவ னென்னுட மகாகாலனே விளையாட்டின் பொருட்டுக் குயிற் குஞசாகக் கொண்டிருபபன், அக்குஞசானது பிரஹ் மாண்டங்களையே மாலைகளாகத் தரித்துக்கொண் டிருந் தலின் அநேகஞ சுரைக்குடுக்கைக ளடங்கிய வீணையைப போல வடிவத்தானும் ஓசையானுட இனிமையா யிருக் கும், அதன் சொரூபமுந் தொனியும் பிறருக்குப் பயத்தை யுண்டுசெய்வதேயாயினும் அதனினும் உக்கிரமிகுந்தவ ரது திருஷ்டியில் அதுமதுரமாகவேதா னிருக்கும, சரற் காலத்திருக்கும் ஆகாயம்போல நிர்மல நீலமேனி யுடை யதுமாம். எப்போதுட டங்காரத்தொனி தொனித்துக் கொண்டே யிருப்பதும், துயரந்தரம் அம்புமாலைகளை யள விள்ளாமற் கக்குவதும், ஆகிய சங்காரமென்னும் கோதண் டமானது எப்புறத்தும்-விளங்கிக்கொண் டிருக்கும் சாவ சங்கார சாமர்த்தியமுள்ள தமபபிரதான சக்திகாளராத் திரி யெனப்படுமெ.

கிரியை அதன்பல வடிவனும் கரையற்ற மற்றவனும், நியதியின் மனைவனும ஆகிய காலனுடைய சிதிரதடனங் காண்பித்து, அவனுடைய சந்நிதியில் நித்திய காமினியாய நியதியென்னு மம்மையானவள் இடைவிடாமல முயல்பவ ளாய்ச சர்வப பிராணிகட்குமப போக அனுகூலகாரியங் தொடங்குபவளாய் மிகமிகவுங்கூதாடுவள்; தடையற்ற கிரியாசகதி வடிவ அவ்வம்மைக்கு நிருத்திய வுபகரணங் களைக் காண்பிக்கின்றார்.

தேவதகித சர்வபுவனமாலைகளும் அங்கங்களிலணி யும் பூஷணங்களாம், பாதாள பரியந்தமிருக்குமப ஆகாச மானது நீண்டு கறுத்துப் பெருத்த குழன் மண்டல மாகுப, அழுங்கைக் கோலாகலத்தால் ஓங்கி யெரியாநின்ற நரக அக்கினிகளாதேன யொளிராநின்ற நரகமாலையானவை அவ்வமனைமயின் பாதாளமாகிய சரணத்திலிருக்கும் பாவ நூலாற் கோர்க்கப்பட்ட பாதகிங்கிணிமாலைகளாம், இங் ஙனம நியதியமனைமகுச் சாமக்கிரியோடுமப நடனமாயின், அவருடைய பர்த்தாவிற்குமப அதுவும் பூஷணங்களுமப வேண்டுமேமெனின்? முற்கூறிய நாடகசாலையிலுளளே, கூறபடுமப குண்டல வடிவமாய சந்திரமண்டலத்தாலே அழகு பொருந்தியவனுமப, நக்ஷத்திரங்களானுமப சந்திரிகை யானுமப தாரகைசந்திரப் பிரதிபிமபங்களானுமப மணிகர மாய விண்ணையாய மயிற்றோகையால் அலங்கரிக்கப் பட்ட கேசத்தையுடையவனுமப, நடனஞ் செய்பவனுமப, ஆகிய கிருதாநதனுடைய இடது செவியில் என்பு மய மான முத்திரை வடிவக்குண்டலம் கபாலிகரைப் போல லங்கரிக்கப்பட்டுளது, வலதுசெவியில் மகாமேருவாகிய காந்தியையுடைய காஞ்சன கர்ணபூஷணமணியப்பட்டு ளது; இவ்விருசெவிகளினின்றுமப கன்னத்தலத்தில் சூரிய சந்திரர் குண்டலங்களா யனைசந்துகொண்டிருக்கின்றனர்,

உலோகாலோக பர்வத வரிசைகள் எப்புறத்தும் கடி மேகலாபரணமாய்க் கவின் செய்யும ; வரிசைகள் என் றது, அநேகஞ் சிகரங்கள் கூடிய தன்மையாதலினும், கற் பப் பிரஹ்மாண்ட பேதத்தாலேனும என்றுணர்க.

காலஞகிய பதியினுடைய முகவிலாசங் கடைக்கண் பார்வை முதலியவற்று லுணர்த்தப்பட்ட திருக்கருத்தை யினிதுணர்ந்து அத்தேவியானவள் கற்பாநதங்களில், மிக ஆகுலத்தோடு கூடியவளாய் மீணடுமபாவதங்களெல்லாம் உரத்த சபதத்தோடு வெடிக்கும படியாகப பெருங்கூத் தாடுமவள், அத்தகைய அவளுடைய ரூபம் லோகததைப் பயப்படுத்துவது என்பதன் கண்ணை யியம்பவேண்டுவ தென்னுளது கூத்துத்தான் எத்தகைய தென்பது எனக் கருதிக் கூறுகின்றார்.

பின்பக்கத்திற் பொருந்தித் தாழ்ந்து அலைந்து கொண்டு விளங்காநின்ற சுபபிரமண்யருடைய வாகன மாகிய மயில்களின் இறகுகளை யணிநதுமம; ஏன்று விழிக ளாகிய பெருந்துளைகளினின்றுண்டாகும் பெருத்த பயங் கரமான உரதத தொனியோடுமம, நீண்டலையும மதிச்சடை கள் விரிந்த அரன் சிரங்களை யலங்காரித்துமம, மேற்கிளம பும் அழகொழுகும், மந்தாரமலர் நிறைந்த கொளரியின் கேசசாமரைகள் கொண்டும், பெருநதாண்டவம் புரியும் பைரவருடைய மலைபோன்ற வயிறுகிய சுரைக்குடுக்கை களைத் தாங்கியும், (சுரைக்குடுக்கையாற் காபாலிகரதுவிவ காரம் பிரசித்தமாம்) சப்தித்துக்கொண்டு ஆயிரத்தேழு துளைகளோடு கூடியிலங்கும் இந்திரர் தேகங்களாகிய பிகூஷா கபாலமேந்தியும், கூத்தாடுவள்.

மேலும் அவ்வம்மையின் அலங்காரத்தையே வருணித்து அவள் நடனத்துடன் விளங்கலை முடிக்கின்றார்.

மிகவுங்காய்ந்த சரீரசமபந்தமாய கட்வாங்கமென் னும முதுகென்புப் பாரங்களானே விண்ணைநிறைத்தும், பிறரைசுமபொருட்டுத தன்னானே தன்னைப் பயப்படுத் திக்கொண்டும் சர்வத்தையுஞ் சங்காரஞ் செய்துகொண் டும் பலவகை ரூபங்களோடு கூடிய சிரக்கூட்டங்களாகிய அழகிய காமரைமாலையால் அலங்கரிக்கபபெற்று நாண வகையாய்ச சுழன்றுகொண்டும் மகாகற்பங்களிலுண்டாம் சாண்டவங்களில் அவ்வம்மை விளங்கா நிற்பள்.

இங்ஙனம் இயமபிய காலாதிகளின் விருத்தாந்தத்தை யறிவதித்துக்கொண்டு அத்தோடத்தை நன்குணர்ந்த பயனைத் தெளிவிக்கின்றார்: காலாதிகளின் பரதந்திரமா யிருத்தலினானே தோடங்களே மிகமிகவும நிறைந்த இச சம்சார துர்த்தசையையே வைராக்கியம் உண்டாம் பொருட்டு வருணிக்கத்தொடங்கிக் காலனிவ்வாறு செய் தலினானே காலாதி சர்வவஸ்துக்களிடத்திலும எனக்கு விஸ்தாரமாய்த் தோடந் தோற்றலின் அதன்பயனாகிய வைராக்கிய ரூபப் பற்றின்மையினை டைவண்டாகின்றதாத லின் இசசமசாரமெனப் பெயரிய இக்கால முதலியவற்றின் சரிதத்தில் எமபோலியாக் கெவ்வாறு பற்றுண்டாதல் கூடும என்கின்றார்.

இந்திரியங்களே பகைவர்களாக இருக்கின்றார்கள், பரமார்த்தமாக ஆன்மாவெனத தேகாதிகள் கவரப் பட் டிருந்தன. விவேகிக்குங்கால் அபரமார்த்த ஆன்மத்தன் மையை யடைந்து விட்டன; சத்தியஞானாதி யிலக்கணம் வாய்ந்த வஸ்துவோ அசத்தியத்தை யடைகின்றது. பந்த வேறது வாதலினானே மனத்தையே பகையாகக் கொண்ட ஆன்மாமயிமானத்தால் மயிலூதமாந் தன்னை மயில ரூபமான தன்னிலே துக்கப்படுத்துகின்றது. விடயங்களோ விரும்பத் தகாதனவா யிருக்கின்றன, அலௌகிக வஸ்து

வானது காரியகாரண சங்காதத்தவடிவதாகவே காணப் படுகின்றது, சித்தமோ அகங்காரத்திற்குத் தத்தஞ் செய் யப்பட்டு அபிநிவேசத்தை யடைந்துள்ளது. பொருள் களோ அழிவை யலங்கரித்துக்கொண் டிருக்கின்றன, எல்லாப் பொருள்களின் முடிவிற்கிடமாய ஆன்மாவோ அறியப பெறவில்லை. மதியானதுள்ளே யாகுலபட்டுக் கேவலம் தபித்துக்கொண்டே யிருக்கின்றது, இராக ரோகமானது எப்போதும் விலாசத்தை யடைந் துகொண்டே யிருக்கின்றது உலகில் வைராக்கியத்தை யடை பவரைக் காணும் மிகவும் துலபமாய் விட்டது, பர மார்த்த திருஷ்டியானது இரஜோகுணத்திலே யதஞ் செய்யப்பட்டது, தமசோ மேலுமம மேலும் விருத்தியாகிக் கொண்டே வருகின்றது சத்துவகுணமடைவதே கிடை யாது, கெட்ட முயற்சியிலேயே யவ்வனங் கழிகின்றது. உபலக்ஷணமாக:—அகங்காரமானது அபிமானித்துக் களங்கமுண்டாக்கிச் சொரூபதூஷணஞ செய்கின்றது, நிச் சயகாரணமான புததிவிருத்திகள் வெளிமுகமாகவே திரி தலின் மிகவும் மிருதுவாகிச் சொரூபத்தின்கண்ணே நிலைக் குந் திடத்தன்மை யற்றனவா யிருக்கின்றன. தேகமோ கெடுதலைச் செய்கின்றது, மானசவிலாசங்களோ மங்கை யர் மயலைமருவா நின்றன, மெய்பபொருளை யுணர்தலோ மிகுதூரமாய்விட்டது, வாழ்வோ மாயமாகின்றது, மர ணமோ எதிர்பார்க்கின்றது.

ஆயின் இப்போதே தத்துவவித்துக்களைச் சேவிக்க லாமே சாதுசங்கமே சகலசன்மார்க்க வேதுவாதலின், யெனின் கூறுகின்றார்.

சாதுக்கள் சங்கமோ அதிதூரத்தி லிருக்கின்றது, கதியோயாதொன்றைபு மெங்குங்காணும், நல்லது தான்

மிகுயிருக்கப்பட்ட உனக்குக்கதி யெங்ஙனமில்லாமற் போம் எனின், எங்கும் எபபொருளும் சதந்தியமாகக் காணப்படமேவியில்லை சுவர்க்க முதலிய கதிகளுமம அநித்தியங்களாகலின் கருவின்பமமேபாற் கழிவனவ யிருக்கின்றன. உள்ளேயுள்ளமானது அதிமோகத்தை யடைந்துள்ளது, பிறரின்பத்தைதக்கண்டு மகிழ்தலாகிய முதிதையெய்டாமற் றாரத்தேதகிவிட்டது, கருணையான துதிக்தெளிர்வதே கிடையாது, அதிக தூரத்தினின்றும் நீசத்தன்மையின் காரணங்களாய அசூயை முதலியவைகள் வந்தடைகின்றன, தீரத்தன்மையானது அதீரத்தன்மையை யடைகின்றது, பிராணிகளோ பிறப்பிறப்புகளிலும் கீழ்மேற் செல்வதிலும் தற்பரராகத்திரிகின்றார்கள். துஷ்டசங்கமோ சுலபமாய் மலிந்துகிடக்கின்றது, சற்சனசங்கமோ துர்லபமாய்விட்டது.

சமுசாரம் யாவுமே துர்த்தசையை யடைந்து மடியுமென்கின்றார்.

பொருள்களெல்லாம் போக்கு வரவுடையனவாயிருக்கின்றன சென்றழிந்த போதிலும் அவற்றின் வாசனை அகல்வதே யில்லை மேலும் பந்தகாரணமாகவே வளர்கின்றது, பிராணிகளின் கூட்டங்களானவை கேவலம் எப்பொழுதும் காலனுல் எங்கோ கொண்டு செலலபடுகின்றன. காலனுற் பயமற்றவையாய் திசைகளுங் காணவே காணேம், சத்விவகார உபதேசமும் வேறுய அபதேசமாய் முடிகின்றது, பிராணிகட் கவகாசங் கொடுக்கும் தேசமும் அதற்கு மாறுயதைத் தனக்கே யிடங்கிடையாமையிற் செய்யத் தொடங்குகின்றது. மலைகளும் பொடிகளாகின்றன; ஆயின் எம்போலியர்பா லென்ன விசுவாசம். சன்மாத்திர இயற்கைவாய்ந்த ஈசுராளை ஆகாயமும புவனங்

களுமை விழுங்கப் பெறுகின்றன, தரையும் தூளாகுமாயின் எமபோலியா பாலென்னே விசுவாசம்.

இத்துணை மாதிரமல்ல மகாமகத்துக்களும் இலயத்தை யடைந்து விடுவர் என்கின்றார்.

ஞானமின்றி யோகமந்திராசனதிகளாலே சித்தியுற்ற சித்தருளு சிலதவா, நக்ஷத்திரங்களும் நாசமாகும், அலை கடலுமை வறண்டுபோகுமாயின் எம்போலியாபா லென்னே விசுவாசம். தானவருமை தத்தளித்தொழிவர், துருவனும் நிலையற்றவாழ்க்கையை யடைவன், அமரரும் அழிந்து போவராயின் எமபோலியர்பா லென்னே விசுவாசம். இந்திரனும் இனிதுட்கொள்ளப்படுகின்றனன், இயமனும் நியமமா யுபரதியுறுவன், வாயுவுமோயுமாயின் எமபோலி யாபா லாஸதையென்னே. சோமனுஞ் சூனிய மெய்துவன், சூரியனுமை காரியமாகான், அக்கினியும் மக்கினதாதை யடையுமாயின் எம்போலியாபாற் பற்றுகலென்னே பரமேஷ்டியும் முடிபாய பரமிஷ்டையை யடைவர், கரியாத அரியும் கரியிலிரிவர், பவனுமறிவில் அபாவத்தை யடைவராயின் எமபோலியர்மாட் டென்னே நமபுதல். முன் மொழிந்த மூவகைக்காலமுங் கோலமின்றியதாம, நியதியும் வயதாய் முடியும, அந்தமற்ற வெளிபாவரண ஆகாயமு மொளியுமாயின் எம்போலியர் மாட்டென்னே விசுவாசம. செவிக்கும் வாக்கிற்கும் செவ்விய விழிக்குமெட்டாத தத்துவமாகிய எவமேனைவொரு மயக்கதைதத்தரும் அறியப்படாத மூதத்தியாந் தூலவடிவனுற் றன்பாலே மாயையினுற் றத்துவ மறைக்கப்பட்டுக் கற்பிதங்களே காண்பிக்கப் பெறுகின்றன. அபிமான அங்கிசத்தை யடைவுற்றுலவும் பிராணிகளுக்குட் சர்வாந்தரியாமியா யெங்குமிருக்கும் பொருளாற் பாதிக்கப்படாததொன்று இம்மூ

வுலகத்திலும் கிடையவேகிடையாதாம், அதற்குச் சர்வத்தையும பாதிக்குந் தன்மையுண்டு, அதற்கேதுவாய தடையில்லாச் சுதந்திரமுளதாம்.

அதிஷ்டானபூத பரமாத்மாவிலுலே கொடுக்கப்பட்ட மயக்கத்தையே பற்றிச் சுழற்றிவைக்கும அவனையறியாது உலகமானது நசிக்கின்றது என வருத்தபடுகின்றார்: ஆகாயத்தில் மரமிருக்குமாயின் அதிலிருக்கும் கொடியாற் கழுததிற் சுற்றப்பெற்றுத் தொங்கிக்கொண்டு இருப்பதற் கொப்பாகச் சாரமற்றதும், பற்றுக்கோடின்றிய துக்கமும் வீழ்ச்சி முடிவிநிலையை யுடையதும் ஆகிய சுவர்க்க நரகாதிகளைப்பயனுகவுடைய, முற்கூரிய தோடங்கணிறைந்த கெட்டகாமிய நிஷித்த ஒழுக்கங்களானே இவ்வுலகின் கண்ணே ஜன்மபரம்பரைகளில் இவ்வுயிர்களின் ஆயுளானவை மிகவுமக கழிகின்றன; அத னிவிருத்தி யுபாயமோ அதிதூரத்தி னிற்கின்றது அச்சிந்தையு முதிபபதே கிடையாது விசாரவான்களாகிய யாங்களும் அறியவில்லை யென்கின்றார்.

இன்று மகோற்சவம், இது நல்ல இருது, இது இனியயாததிரை, இவர்களுறவினர், இஃதின்பம், சிறபபாயபோகமிது, என்பதாக வீணுகவே மடமையிலுலே ஆகங்கோடி விகற்பங்களைக் கற்பித்துக்கொண்டு மகாசஞ்சலத்தையும அதிமிருதுவையும் அடைந்த மூடரும் அவர்மதியும் இவ்வுலகிற் கெடுமாதலிலுலே கெடும் சாமக்கிரிமாத்திரம் கணந்தோறும் அதிசுலபமாம். இயம்பியும் இயமபாமலும் இராநின்ற மோகஷவிரோதியாய பொருள்களில் மீண்டும் வைராக்கியப் பொருட்டு விஸ்தாரமாகத் தோடங்களை மேலுங் கூறத்தொடங்குபவரா யாதியில் சர்வதோஷ நிவர்தகரான பெரியாரைப் பேணுவிடிற் கண்

கண்ட சுகமே காணுதென்கின்றார். இங்குமங்குமாக தூரம் சுற்றித்திரிந்து பொழுது போமபோது வீட்டிற் புகுந்து பகலில் விவேகினது அனுசரணத்தால் நல்ல கரும ஒழுக்கமே யில்லாமலொழியின் மூடனைத்தவிர இரவில யாவன் நித்திரைசெய்வன்.

சர்வஜனங்களுமம புத்திரதாராதிகளை அமிருத சமானமாக நினைந்து அவர்கட்காகவேண்டி யதன்கண்ணே முயலுகின்றனரே யன்றிச் சிரவணதியின் கண்ணே முயலுவதில்லை, அதுபோலவே னினது பிரவிருத்தியும ஏன் ஆகக் கூடாதெனின்? அதற்குக் கூறுகிறார்: தூராசையினாலே கெடுக்கப்பட்ட சிததவிருத்தியை யுடையவுலகர் எக்கருமத்தைபபற்றி இளைப்பாறுதலை யடைவரோ அத்தகைய தெக்கருமமும் எங்கும் எக்காலத்தும் கிலேசமும் நாசமும் அற்றதாய்ச் சமுசாரமுடிவு வடிவான மோகூடி பலத்தை யுடைத்தானமையான அழகியதாய்க் காணப் படுவதேயில்லை, "எவ்வாறிங்கே யெழிற்றொழிலானே, செவ்வாறுக்கிய பயன்றின்று தீரும, அவ்வாறங்கே யறத் தாற்றரித்த, செவ்வாறுய பயனயின்றேகும" என்பதாதி சுருதியை யனுசரித்துத் செயற்கையானுண்டான பயனைசமாமென்பது நியமமாம் இட்டங்கெட் டொழியினே துக்கமே முடிவிலுண்டாகின்ற தென்பதும வெட்ட வெளியாம என்கின்றார்.

புத்திரர்களும், மனைவியரும், தனங்களும் மயலினாலே அமிர்தத்திற்குச் சமானமாகக் கற்பிக்கப் படுகின்றனர், மரணகாலத்திலோ அவர்யாவரும் உதவுவதேயில்லை, அப்போது போகவிடயங்கள் மிக மனோரமமியமானவை யெனினும் விஷமூர்ச்சையைப் போற் றுக்கப்பொருட்டே யாகின்றன.

சிலபோலோ துக்கத்தோடு கூடியதாயினும் அவ்விடய சுகம் அனுபவியாமலும், அதனைச் சம்பாதிக்கும் பிரயாச மாத்திரத்தை யனுபவித்தும் இருக்கும்போதே விடய பரன் மிருத்தியுவினிடத்தி லகப்பட்டுக் கொள்ளுகின்றான், என்கின்றார்.

சாதாரண சங்கேதத்தாற் கட்டுப்பட்ட கருத்துடைய போகாதி விடயங்கள் விவகார மாயையில் ஆம், பொருளிதுவாம்:—பங்குனிமாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசியில் ஸ்ரீவிசுவேச யாத்திரை செய்யத் தக்கது என்னுஞ சங்கேதத்தாற் சர்வசாதாரணமாகவே நரர்கள் கட்டுற்ற கருத்துடையராய் கூணிகயாததிரைச சமாசங்கழுறுவா, அவ்வாறே விவாகாதி காலசம்பந்தமுற்ற சாதாரண சங்கேதத்தாற் கட்டுற்ற கருத்துடையராய் களத்திராதி விவகார மயல்கள கணிகங்களாக வுண்டாம். எல்லாபடகவரையுமினிது வெற்றிகொண்டு அஷ்டலகூஷ்மிகளும் நாற்புறமும் சூழ்ந்து வருமாறு சுகங்களைப் புருடனுபவிக்கும போது எவ்விடத்திலிருந்தோ மிருத்தியுவானது வந்தழித்து விடுகின்றது. எவ்விதத்தினும் இன்னதென நிண்ணயிகழுடியாத காரணத்தினாலே விருத்தியாகாின்ற துச்சவடிவமுடையனவும், கண்டகணத்திலழிந்து போவனவுமை, ஆகிய இவ்விடயங்களானே மயங்கித்திரிபவராகிய ஜனங்கள் இவ்வுலகின்கண்ணே எங்கிருந்துதா னுற்பத்தியாகின்றார்களோ, எங்குபோய்த்தான் மடிகின்றாகளோ அறியமுடியவில்லை யென்பதாம் இம்மனுட வுலகத்தினின்றும், சுவர்க்க நரகாதிகளினின்றும் வந்து வீணுகவேயிங்கு நாமெல்லோருமை ஒன்றுசேர்ந்து நெடுநாள் வாழ்வோம் எனப்பரஸ்பரம் அபிப்பிராயங்கொண்டு சங்கேதஞ்செய்து அதற்குததக்க வடிவோடுகூடி மித்திர களத்திர விவகாரரூப மாயையானது தேவோற்சவ முதலிய

யாத்திரைகளில் நரர்கள் ஒன்றுசேர்ந்து சுழல்வதேபோற் சுழலுகின்றது.

நமமனோராதி போக்தாக்கட்குப் போகதவ்ய போக அவசரத்திற்ருனே மிருத்தியு சம்பவிக்கும், சமபவித்த போதிலும அநேக ஆயிரயுக ஜீவித பிரஹமாதிகட்கு அங்ஙனஞ சமபவியாதேயெனின், கூறுகின்ரூ: ஸ்ரீ இரகுநந்தனர் ப்மரார திருஷ்டிகளுகளுள் தோஷமிலலாத திருஷ்டிகளெவை, துக்கதாகமில்லாத திசைகளதாமெவை, கணத்தில் நாசத்தையடையாத பிரஜைகள்தாமியாவர், வஞசனையில்லாத இலௌகிகக் கிரியைதாமெவை, ஒன்றுமில்லேவையில்லையென்று சொல்ல, அன்னியர்களுடைய பிரஜைகட்கு அழிவிருப்பினும பிரஹமாவினுலகத்தையடைந்த பிரஜைகட்குக் கற்பகால மிருக்குந்தன்மை யுண்மையின் கணத்தில் அழிதலெவ்வாறு பொருந்துமெனின்? கூறுகின்ரூர்

சென்றனவும வருவனவும ஆகிய அநந்தகற்பங்களின் எண்ணிக்கையை யறியாதபோது அநந்தமென்பது சமமாயிருத்தலினலே கற்பங்களும விஷ்ணுருத்திராதி திருஷ்டியானே கணங்களே யாமெனவாதலின் பிரஹமாக்களும் கற்பமென்னுங் கணவாழ்க்கையை யுற்றவர்களே யாவர்கள், ஆகலே அவயவத்தோடுகூடிய காலசமூதாயத்தில் குறுகல் நீட்சிமதிகளும், அற்ப அதிகவாழ்கைமதிகளும், காண்போன் கற்பனையி னதீனமாயிருத்தலின் அசத்தியங்களேயாகும; இதே நியாயத்தால் பிரஹ்மாண்டங்களும் அநந்தங்கோடி பிரஹ்மாண்டங் கண்டவர்களின் றிருட்டியால் அணுக்களேயாமென அணுமகத்தென்னும் மதிகளும் அசத்தியங்களேயாம். இவ்வாறே பிரகிருதி திருஷ்டியில் விகாரங்களியாவுமே அசத்தியங்களே யாமென தோற்றும்; சென்தழல்கொண்ட சிவப்புவர்ணம், அந்த

நற்றேறஜ்சி லண்மியதாகும், தந்திடும் வெண்மைமேயா தண்ணீரதாகுமை, மந்தமாங்கருப்மேபா மண்ணினதாகும், இந்தவாறனற்கண் ணெரியாந்தகைமை, வந்தவாறுநேதா வழிகொண்டேகும், தொந்தவாக்காற் றொடங்கிய விகாரம் மந்திர நாமமாத்திரமாகுமை, முந்திய மூன்றுமொழி தருரூபமே, அந்தமற்றுண்மையா யமர்ந்திடுமன்றே' என்னும் மறையும் இதனையே யறைகின்றது. கூறிய பொருளையே யனுவதித்து முடிப்பார் அதனிமித்தமாகத் தமதுகிளர்ச்சியைக் காட்டுகின்றார், காமபபற்றுடையவர்களோ பல வகைகாயான குடிலத்தன்மைச் சாதுரியங்களானே விவகரிப்பதிற் றற்பரர்களாக இருக்கின்றார்கள் என்பதாம.

இப்போது விவேகிகள் துர்லபமென்றும் ஒரு செயலுஞ் செய்யமுடியவில்லை யென்றுமை யாவுமனிக்கிய மென்றுங் கூறுகின்றார.

இவ்வுலகின்கண்ணே கனவிலும் விவேகிகளிப்போது எளிதாகக்கிடைப்பது அரிதாக இருக்கின்றது, தொழில்கள் யாவையுமோ அதயந்தந் துக்கரகித சாதனங்களோடுமை பலன்களோடும், சேராதனவா யவசியமை துக்கதனதையே கொடுப்பனவாகவே யிருக்கின்றன, ஆகலின் இவ்வாழ்க்கை மயமாயிருக்கும் தசையை யெங்ஙனந்தான் கழிப்பதோ தெரியவில்லை. சர்வபோக்கிய வஸ்துக்களிலும் வைராக்கியமுண்டாகும் பொருட்டு எலலாப்பொருள்கட்கும் மாறுபாடான இயற்கை யியமபுவா, நல்ல உற்சவ வைபவத்தோடு கூடிய அத்தினங்களுமை அப்பொழியோகளும், அச்சம்பததுக்களும், அத்தொழில்களும், பிறயாவுமை, நினைவுமாத்திர நெறியை மருவினின்றன, இனியாருங் கணத்திலந்தவழியேதான் செல்லப்போகின்றோம். தினந்தினம் அழிந்துகொண்டே யிருக்கின்றது,

தினம் தினம் மீண்டு முண்டாகிக்கொண்டே யிருக்கின் றது. கெட்டுபோன இந்த வெந்த சமசாரத்திற் கின்றள வும அநதத்தையே காணும். புருடர்கள் மிருகங்களா கின்றாகள் மிருகங்கள புருடர்களாகின்றன, தேவதைக ளும் அதேவணதகளா கின்றர்கள் ஆகலின் எண்டெதைத் தான் நிலையெனக் கூறமுடியும்.

வடவாமுக அக்கினியினனே நீரானது வற்றுவதே போலப் பிரஹமா விஷ்ணு ருத்திரன் பிறபிராணிகள் யாவும், லயத்தையே யடைகின்றனர், சுவர்க்கம பூமிவாயு ஆகாசம் மலையாறு திசையென்னு மிவையாவுமே லயமுறு கின்றன வென்றால் எவைதாங் கணத்திற் போகாதன வில்லை யென்கின்றார்.

எதுதான் கணத்தில் நசிக்கவில்லை மற்றை எல்லாமே கணத்தில் நசிக்குமென்பதாம், வரவுபோக்கினையே யுடைத் தாகி யிருபபதும் கணமிருப்பையும் நாசத்தையும உறு வதும் ஆகிய இதனல் இசசமுசாரததில் எத்தான்றன் அநுசவில்லை; கணம ஆபத்துக்கள் வந்டைகின்றன, கணம் சம்பத்துக்கள் வநது சார்கின்றன, கணம பிறப்புறுகின் றது, கணமிறப்புறுகின்றது, கணமாயினும என்னதான் மாறும விருக்கின்றது. முன்னா வேறுகவே யிருந்த வொருவன் சிலதினங்களில் வேறுகவே யாய்விடுகின்றன் ஆகலினிவ்வுலகில் எபபோதும ஏகரூபமாயும நன்னிலை யுற்றதாயும ஒரு பொருளும இல்லவேயில்லை சூரனல்லாத வனுலே சூரன் கொல்லப்படுகின்றன், ஒருவனலும நூறு பேர் கொல்லப்படுகின்றனா. அற்ப அறிவிலர்களும பிர புத்தன்மையை யடைநது விடுகின்றனர் ஆகலின் எல்லா வுலகும் மாறிக்கொண்டே யிருக்கின்றது.

இங்ஙனம் வெகுவிதமாகச் சம்சாரதோஷங்களை நிரூ

பித்து அதன்பயனுகிய நிரதிசய வைராக்கியத்தைக் கூறு கின்றார்:—சர்வ பதார்த்தங்களிலுந் தோடங்களைக கண்ட மையின் தமக்கு வைராக்கிய முண்டாகி யிருத்தலையும் தமது சித்தத்திற் றோடத்தைக் கண்டமையையும் வரு ணித்து, அவைசாரதியாம் பொருட்டும் தத்துவத்தையறி யும் பொருட்டுங் உபதேசிப்பான் பிரார்த்திக்கத் தொடங்குகின்றார்.

கூறியவகையாகஉண்டாய தோடதிருட்டியான காட் டுத்தீயாலும், என் விவேகமதியில் நிறைந்த தோடங்களா கிய காடடுத்தீபாலும் ஆசை விரைகலைலாம அடியோடு தகிக்கபபட்டும், விவேக விஸ்தாரத்தோடு கூடியும் இரா நின்ற என்மதியில் மலாத் தடாகத்திற் கானனீர தோற் றுதேபோலா போக ஆசையானது தோற்றுவதில்லை; அவிவேக ரூப்பூமியிலன்றே போக ஆசைக்கானனீர் தோற்றும். எனக்குத்யானவனமும் ஆனந்தத்தின் பொ ருட்டாகவில்லை, மங்கையரும் சுகப்பொருட்டாகார், தன வடைவும மகிழ்சிசெய்பாது மனஞ்சாந்தியடைவதல மாகின்றது, சாந்தியன்றி வேறுசுகமேவதுவைக்காணேம. உலகமோ அநித்தியம ஆனந்தமல்ல, ஆசையோ தாண்ட முடியாமற் பெருகுகின்றது, சித்தமோ அதிசஞசலத்தாற் கெடுக்கப்படுகிறது ஆகலின் எங்ஙன் சுகமுண்டாம். இறப் பதினுமம இசைசையில்லை, வாழ்வதினும் வாஞசையில்லை, எவ்வாறிருக்கின்றேனே அவ்வாறே தாபமற்றவனு யிருக் கின்றேன்.

விடயத்தில் வீழ்ந்து சுழலும் சித்தத்தின் சிகிச்சை விருத்த அவஸ்தையிற் செய்வதே தகுதியாம் தாருண்யத் தில் யாதின்பொருட்டுக் கட்டப்பட்டு அதைச் செய்ய வேண்டும் எனின் கூறுகின்றார்.

இந்தப பாலியவயதில் தெளிவான மதியினனே மன தானது சிக்ஷிக்கப் படாவிடின், மறுபடி சித்ததைத் திருத்துவதற்கு அவகாசம் எவ்வாறு கிடைகுகும், "தருத் தனைச் சிறுத்துறத்தரித்திட லெளிதே த, பருத்திடின் மரத் தினைபபறித்திடலெவரே" என்னும் நியாயமுளதாம். விடம் விடமெனக் கூறப்பட மாட்டாது, மிகக்கோணலால் விட யமே பெரியவிடமாம், விடமானது புசித்த தேகத்தை மாததிரம் நசிபபிக்கும், விடயமோ ஜன்மாந்தரங்களிலும் கெடுகுமே.

ஞானவைராக்கிய ஔடதங்களால் சிகிச்சை செய்யப் பட்ட சித்தத்தால் என்னபயன் அடையப்படும், எதனல் நின்னல் சித்த சிகிச்சை செய்யப்படுகின்றதோ வெனின், கூறுகின்றார். சத்துவஞானிகளும் விடயங்களில ப புசிபபவ ராய்ச் சுகாதிகளை யுடையவராய்க் காணப்படுகின்றனரே அவர்களிடதில் யாது விசேடமெனின் கூறுகின்றார்.

சுகங்களுமே துக்கங்களும் மித்திரர்களும் பந்துக்களும் வாழ்வும் சாவும் ஆன்மஞானியின் மனதைதப் பந்தப படுத்த மாட்டாவாம். சாவதுக்கங்களு மில்லாமல் மூலத் தோடுங் கெடுத்தலின் ஞானமுடைமையே மகாபுருடார்த் தமா மாதலின் அதன்பொருட் டுபதேசம வேண்டிய தவ சியமாக விருக்கின்றது, உபதேசங் கிடைக்கின் யான் ஞானியா யிருந்துகொண்டு சோகபய ஆயாசமுதலிய வற் றைக் கடந்து விரைவிற் சுகமடைவேன் சந்திரனலே நீங் காத இரவிருட்டில்லாததேதேபால, உத்தமமனத்தையுற்ற மகான்களினுடைய சங்கத்தாலும், சங்கபலமாகிய வுப தேசத்தாலும, அழியாதனவாய கெட்ட மனுஷியாதிகள் உலகத்திற் கிடையவே கிடையாவென, சாந்தியாதி தாட் டியமில்லாத பாலகனுகிய உனக்குபதேசித்த போதிலும்

யாங்ஙனம் பலப்படுத்துவா யெனின், சாந்தியாதி தாட்டயம் தங்கள் கிருபையால் மிகவுமுளது, அரசனைவன காரம் பார்க்கும் ஆவலுடையவர்கள் அநேகர்கள் இருந்தபோதிலும் எவர்களிடத்தில் லோபம் அச்சம் முதலிய தோடங்களால் தேசத்தில் பீடை பகைவர படையெடுப்பு முதலியவையாமென்னுந் தோற்றமுளதோ அவர்களை விடுத்து, எவனேனுமொரு வல்லவனுகிய குணவானுக்கே முக்கிய அதிகார முத்திரையைக் கொடுப்பதே போல என்றலின்று இந்த வயதிலும், ஆயுள்போகம் யவ்வனம் முதலியவற்றின்கண்ணே, ஆசை சநசலம் முதலிய தோடங்களானே சித்தத்திற்றுக்கம் நாசமுதலிய அநர்த்தத்தை யெண்ணி அவைகளை விடுத்து எல்லாத் தோடங்களு மற்றதும், வல்லமையுற்றதும், ஆகிய சாந்தியின் பொருட்டுச் சித்தவிடயத்தில் திட அசஞ்சலமாய அதிகாரமுத்திரை கொடுக்கப்பட் டிருக்கின்றது; கூறியவற்றுள் ஆயுளோ வாயுவினு லலைக்கப்பட்ட மேகக்கூட்டங்களிற்றிரங்கும் நீர்த்துளிபோற் பொன்றுவதாம, போகங்களோ மேற்கட்டியைப் போல விரிக்கப்பட்டிருக்கும் மேகங்களுக்குள் மின்னுகின்ற மின்னற் கொடிபோற் சநசல மானவையாம்.

பரம சாந்தர்களாகிய தாங்கள் பேராநந்தம் பிரியாதிருப்பத் தேவரீரை யடைந்த அடியேன் பரதந்திரமாய்த் துயருறல் நீதியன்றென்கின்றார்.

யவ்வன சம்பந்திகளாய மனுஷிநாதங்கள் நீரின் வேகம்போல மிகவேகமு மலவு முடையனவாம் என இவற்றை யெல்லாம் விசாரவிலெண்ணித் தான் மனத்தின் நிச்சாந்தியின் பொருட்டு உரைத்ததுபோல முத்திரையானது கொடுக்கப்பட்டுளது. தமது சித்தத்தின் கிளர்ச்சி

யையும உத்வேகத்தையுமே அநேகம வேறுதுக்களானே விஸ்தாரமாகப பிரகாசபபடுத்தி அதனீக்கப் பொருட்டுமே இவ்விபபாறுதற் பொருட்டும்வேறுவா யிராநின்ற தத்துவ ஞான வுபதேசத்தையே விஸ்தாரமாய்ப் பிராத்திபபார், ஜீவநாயகனை யடைந்த காந்தையான சிந்தையானவள் நாயகனது வீட்டில் அவனதீனமா யிவ்விபபாறுதலை யடை பாமல் வாஞ்சித்த தேயத்தையும் விடயத்தையும் அடை யாம லிருக்கின்றனள் எனபதாம்.

சிந்தையுடையவராய்ஸ்திதிஸ்தானத்தை அதிவாதப் பொருட்டு வினவுகின்றார்: சுயமாகவே சஞ்சலமும் நானே போகவாசனையால் விஸ்தீர்ணமும் ஆகியசித்தம புவனத்து வெங்குந் திரிதலானே திடமாகபபயின்ற சஞ்சலத்தோடு கூடி யிருத்தலின் பலாதகாரமாக நிறுத்தியபோதினும் தத்துவஞானப பற்றின்மையினானே சஞ்சலத்தை விடுவ தில்லையாதலின் விடுமாறடையும் நிலைமையாதென வினவு கின்றார்.

இது கட்டையாகள்வரை என்னும் உண்மையின்மைப பக்கமிரண்டாற் சலிச்சப்பட்டும் சலிகசப்படாமலும் இருக்கின்ற சமுசயவேறுதுவினாலே புத்தியானது துன்புறு வதே போல இது தத்துவமா அல்லது இது அதத்துவமா என்னும் ஐயத்தாற் றுன்புறுகின்றது தோஷதர்சன ஜன் னிய வைராக்கிய திடத்தால் இராகாதிக ளெல்லாமகன் றும் ஐயம நீங்காமையின் மூலாஞ்ஞானங் கெடாமை யானே வாசனையைக் கிளப்பும் வேறுதுவிருத்தலினாலே வெட்டுப்பட்ட விருகூடம் மூலங்கொடாமையின் மீண்டு மூளைக்கும் வாயிலாய்த் துன்புறுத்த வீரிவதேதபோல விரிந்துகொண்டே யிருக்கின்றது; சுயமாகவே சஞ்சலமும் நானேபோக வாசனையால் விஸ்தீர்ணமும் ஆகிய சித்தம்

புவனத்து ளெங்குந்திரிதலானே திடமாகப்பயின்ற சஞ்ச லத்தோடு கூடியிருத்தலின் பலாத்காரமாக நிறுத்திய போதினும் தத்துவஞானப் பற்றின்மையினானே சஞ்ச லதனை விடுவதேகிடையாது; ஆதலின் பரமார்த்த சத்தி யமும ஜன்மமரனை ஆயாசமற்றதும், தேகாதி யுபாதி சூனியமும் மயக்கமேறது நீங்கி யிருத்தலின் மயக்கமில்லா ததும், இளைப்பாறுமிடமும், அடைந்தவாக் கெனறுமே சோகத்தை யுண்டாக்காததும் ஆகிய அத்தகைய பதமி மியாது? சர்வகாரியங்களையும் நன்கு தொடங்கினவர் களாகி எம்மேனைப்போலவே சர்வதிருஷ்ட அதிருஷ்ட பலங்களைத் தருமாறுமுடித்து அவற்றிற் கனுகூலமாய இலௌகிக வைதிக விவகார தற்பரர்களாயே நின்றும் நல் லோர்களாகிய ஜனகாதியர் எவ்வாறு உத்தமோத்தமத் தன்மையை யடைந்தன ரென்பதாம. மழைகாலத்தில் பெருங்காட்டில் ஜீவிப்பதற்கொபபான துர்ஜீவன சமு சாரத்தில் எதனல் செளக்கியத்தை யடையலாம். மூலிகை ரசத்தோடுகூடிய இரசமானது அக்கினியிற்றகிக்கப் படா ததேபோல அக்கினியைப்போற் றகிக்குஞ் சம்சாரத்தில் விழுந்து கிடந்தபோதினும் எந்த ஞானமுத ரசமேய்த லால் எங்ஙன்றகிக்கப்படாம விருக்கமுடியும்?

சமுசாரத்தில் நிர்வியாபாரமாக அவஸ்தானமே தாக உபாயமென்கின்றார்: விவகாரந் துக்கமாயின் விட்டுவிட லாமே யெனின் கூறுகின்றார்.

கடலிலுண்டாகிய மீன் முதலியவற்றிற்கு நீரில்லாமல் நிலமேறில்லாததேபோல, இவ்வுலகத்தி லிருப்பவர்க்கும் விவகாரத்தொழிற் செய்யாமலிருக்க முடியாது; கெட்ட விவகாரத்திற்றானே துயரம் உண்டாகின்றது நற்றொழிற் செய்யிலேனு அவ்வாறில்லை யல்லவாவெனின்? தாகமற்றிருக்

கும் அக்கினிச் சுவாலையானது இல்லாததேபோல ஈண்டு இராகத்வேஷமற்றதும் சுகதுக்கநீங்கியதும் ஆகிய நற்றெ ழிற்கிடையாது. பாகியத்தில் நல்லவிவகார மிருந்தாலிருக் குக; மனதினுடைய சஞ்சலமானது மகாதுக்கமா யிருத்த லால், அதனுடைய சிகிசசையை யருளவேண்டும் விவகா ரத்தோடு கூடியிருந்த போதினும் கூடாமலிருந்தபோதி னும் எந்தயுக்தியினல் எனக்குத்துயரம் வரமாட்டாதோ அந்த உத்தமமான யுக்தியைக்கூறியருள வேண்டும். மேன் மையும் பவித்திரமுமாய மனமானது எதனல்இளைப்பாறு தலையடையுமோ, அந்த யுக்தியால் மோகநீக்கமானது எவ் வுத்தமசித்தமுடையவனல் முன்னெவ்வகையாற் செய்யப் பட்டது அதனலெதனை யடைந்தான் இவ்வுண்மையைத் தாங்களறிந்தபிரகார முபதேசித்தருளவேண்டும்; எதனற் சாதுக்கள் துக்கமே சிறிதுமில்லாம லுலவுகின்றார்களோ அதனைத்திருவருள் செய்யவேண்டும்.

அத்தகைய யுத்தியானவை கிடையாவிடின், எனது தேகத்தியாக பரியந்தம் பிராயோபவேசனத்தையே அதா வது பிராணனீங்கும்வரை யுண்ணுமற் றர்ப்பாசனத்திற் சயனித்தலையே, செய்வேனன்றி ஜீவனவிவகாராதிகளைச் செய்யமாட்டேன் என்கின்றார்.

மேற்கூறிய யுக்தியாதொன்று மிராவிடின், அத்த கைய திருந்தபோதினும் வெளிபபடையாக எனக்குப தேசியா திருப்பின், அவ்வுத்தமோத்தமமாகிய விசிராந்தி பதத்தை யானே விசாரித்தேதனும அடையாமற் போவே னையின், பின்யான் சருவ இச்சை களையும அகங்காரத்தையு மொழித்து உண்ணேன்; நீருங்குடியேன், வத்திரமுந்தரி யேன், ஸ்நானதான அசனமுதலிய எந்தத்தொழிலையுஞ் செய்யேன், எக்காரியங்களிலுமிரேன், சம்பத்து ஆபத்

துத் தசைகளி லுமிரேன், தேகம்விடுவதை யொன்றை யன்றி யொன்றையும் வாஞ்சிக்கவே மாட்டேன். கேவலம், யாதொரு ஆசங்கையுமற்றவனு மமதைமற்சராதிகளற்ற வனுய்ச் சித்திரக் கிரியைகளாற் பித்தியிலர்ப்பிக்கப்பெற்ற ஓவியம்போல வாக்குமுதலிய சர்வவிவகாரங்களையும விட்டிருப்பேன் பின்முறையே மூச்சுவிடுதல் வாங்குதல் சத்தாதி ஞானகளை விடுத்து, அவயவச் சேர்க்கை வடிமாயிராநின்ற இவ்வுருத்தமாகிய தேகத்தைவிட்டொழிபபேன், யானிதனுடையவனு மல்லேன் என்னுடையதுமிஃதல்ல, அன்னியருமு எனக்கில்லை யாதலின், தைலந்தீர்ந்த தீபமேபோலச சாந்தியையடைவேன், யாவற்றையுமே பரித்தியாகித்து இக்களேவரத்தை விட்டொழிபபேன்.

ஸ்ரீ வான்மீகி கூறல்.

ஹேபரத்வாஜ! இவ்வண்ணம் மகத்தினுமு மகத்தாகிய விசாரத்தானே மலர்ந்த மனத்தை யுடையவரும் அமல சீதள அழுதகிரண மதிபோன் றழகு வாழ்ந்தவரு மாகிய ஸ்ரீஇரகுநந்தனா இயம்பிகேகாரவத்தைச் செய்து கொண்டிருந்த மயூரமானது மேகங்களின் முன்பாகச சிரமவயத்தால் மவுனமடைந்திருந்ததேபோலத் தேசிகோத்தமாகளாகிய ஸ்ரீவசிஷ்டமுனிவர் முதலிய பெரியோர்கள் சநிதியில் மவுனமாக இருந்தனர்.

சென்ற கிரந்த சநதாப்பத்தால் நித்தியா நித்திய வஷ்து விவேகத்தினின்றும் வைராக்கியம் பிரதிபாதிக்கப்பட்டது, அது வித்வதஜன்மமேனுகர மென்பதும், ஆகாச வாசிகட்கும் துர்லப மென்பதும், ஸ்ரீராமரது துதியின் பொருட்டுக் கூறப்படுகின்றது:—ஸ்ரீ இராமரது திருமொழிகளை யிருசெவி குளிரக்கேட்ட மானவர் வானவர்களுடையவுளவுகடந்த ஆசசரியம் அறையப் பெறுகின்றது.

தமது விவேக நல்விசார மூலமா யிராதின்றஃஇந்த ஸ்ரீஇரா மரது வாக்கியா மிருதங்கள் தாமாக விசாரஞ்செய்யும் ஆற்றலில்லாத முமுக்ஷுக்கட்கு உபதேசரூபமா யிருத் தலின், ஆதர வப்யாசங்களால் உயர்வாகக்·கவரத்தக்க தெனக் குறிபபிக்கும பொருட்டுப் புகழ்பவராய் அவர் மேலினுமை வாதராயண ரமைதலின், அதாவது, மனுடன் கட்குமை மேலாய தேவதைகட்குமை பிரஹ்மவித்தையின் கண்ணே அதிகார முளதென வாதராயண ஆசாரியர் அங்கீகரித்தலின், என்னும் நியாய சித்தமாய தேவதை கட்குடை கூறட்படும் பிரஹ்ம வித்தை யதிகாரத்தைத் தரி சிபடிக்கும் பொருட்டு அவர்கள் மகிழ்ச்சியை ஸ்ரீவான்மீகி பகவான் கூறத்தொடங்கல்.

தேதகருகங்கள் எழுந்து நின்றதோற்றம் சிரவணிக்க வந்ததுபோ லிருந்தது. இவ்வாறு மனோமோகத்தை நீக் கத்தக்கதாய திருமொழிகளைத் தாமரையிதழ்போலும் விழிகளையுடைய இராஜகுமாரராகிய ஸ்ரீ இராமர் கூறிய போது, அச்சபையின் கண்ணிருந்த யாவரும், விஸ்மயத் தால் விரிந்த விழிகளையுடைய வராகவும், ஸ்ரீ இராமபிரா னது வாகியாமிருதத்தைக் கேட்கவேண்டு மென்று ஜாட்டி யத்தைக் கடததியெழுந்து வத்திரத்தைத் துளைத்து வெளியேயெட்டிப்பார்க்குமை மயிர்க்கூச செறிதலையுடையவ ராகலின், பீறல் ஆடையை யுடையவராகவுமை, வைராக்கிய வாசனையிலுலே சமஸ்த சமுசாரகாரணங்களாய இராகத் வேஷாதி வாசனைகளையும் நீக்கினவர்களாகவும், ஒரு முகூர்த்த பரியந்தமை அமிருதசாகர அலையால் அலவிக்கப் பட்டவாகள்போலவுமை ஆனர்கள்; சித்திரத் தமைத்த பதுமையேபோலக் கேட்குஞ் சமர்த்துடையோர், ஆனந் தத்தைக் குறிப்பிடுவதாகப் பூரித்து ஸ்ரீ இராமபத்திரு டைய திருமொழியை யினிமையாகக் கேட்டனர்.

யாவராணுமை ஸ்ரீ இராமருடைய விசித்திரப் பொரு ணிறைந்த மகா உதாரமான திருவாக்கானது கேட்கப பட்ட பின்னர். ஆகாயத்தி லிருந்து புட்பமாரியுண்டாயிற் றென்றுமை, ஸ்ரீ இராகவர் திருவாக்கியங்களை புகழப் பட்டன வென்றுங கூறுகின்றார்.

இரகுகுலமாகிய ஆகாயத்திற்குப் பூரணசந்திரரும், பூரணச்சந்திரர்போல மிகச சுந்திரரும், காமனையிதழ் போன்ற நேத்திரத்தை யுடையவரும் ஆகிய ஸ்ரீ இராமர் மவுனமாயிருந்தபோது, நன்றுநன்று என்னுஞ் சொல் லோடு முழுமுக்ஷுக்களாகிய சித்தாகி தேவகணங்களியாவ ரும் இறைத்த மலாமாரியானது விண்ணினினை றும் மேற் கட்டிபோல விழுந்துகொண்டே யிருந்தது. அம்மலர்மாரி வண்டினங்கள் ரீங்காரம் பாடபபெற்றுமை மாதாயம் மணம் அழகு முதலனவற்றுமை யாவரையுமை பரவசப்படுத்தியுமை நக்ஷத்திர கணங்க ளுதிரும் அலங்காரத்தைதச் செய்து கொண்டும் மற்றும் பலவிதமாயுமிருந்தது அக்குசும விருஷ்டி என்றுங் கண்டறியப் பெற்றதாய் யாவருகுகும் ஆசசரியத்தை விளைவிப்பதாய் அற்புதமாக அரைநாழிகை வரை பெய்தது, அது அச்சபையையுமை அதன்கண்ணிருந் தவரையும் மந்தாரமலாகளால் நிறைத்துசசாந்தியானபின் அச்சபையிலிருந்த யாவருமை இச் சிதகணைங்களின் இவ் வாக்கியங்களைக் கேட்டனர்:— சித்தசேனகளுள்ளை சுவர்க்கத்திலுடைய எல்லா இடங்களிலும் கற்பமுடியுமை வரை சுற்றிக்கொண்டுதிரியும் நமமனோரால் அபூர்வமாகிய இச்செவிக்கமுதான வேதசாரம் கேட்க்கப்பட்டது. இரகு குலதிலவாகிய இநத ஸ்ரீ இராமரால் யாதுதாரமாக வை ராக்கியத்தோடுங் கூறப்பட்டதோ அது பிருகற்பதிக்குமை விளங்காத பொருளுடையதேயாம். மதிமான்கட்குமை மகத் தாகிய மகிழ்வை மலர்விப்பதுமை ஸ்ரீ இராமரது முகாம்;ஜ

த்தினின்றும எழுந்ததும் ஆகிய இத் திருமொழியை யின்று கேட்டோம ஆச்சரியம! ஆசசரியம!! நாம் என்ன மகத்தாய புண்ணியஞ் செய்தோமோ தெரியவில்லை அந்தோ! இத்தகைய வாக்கியத்தைக் கேளாத சென்மம் என்ன சென்மம் வீணை.

வீதராகஉக்தி சாராரத்த விடயம் சுரோதாக்களிடத் தில் உடனே பயன்படும் என்னும் அபிப்பிராயத்தாலு ரைக்கின்றார்.

ஸ்ரீ இராகவா வாக்கியம, பரம புருடாததத்தை யடைவித்துப் பரமவுபசாந்தி யமிருதத்தைப் பயப்பதாம. ஞானர்த்திகளான் நன்கு நண்ணத்தக்கதும், சத்துக்களா வினிது சார்ந்து கவரத்தக்கதுமா தலாற் சர்வ அனுகூல மாயிருதகலின் ஆண்டிருககத்தக்கதெனப் பிரதிபாதிக்கப் பட்ட பொருளாம். ஸ்ரீ இராகவர், தேரின் கொடிபோல இரகுவம்சதுதின் அலங்காரத்தால் இரகுகேதுவெனபபடு வர். ஜாதிகுல ஆசாரதரும ஞானமுதலிய வற்றினே யடைந்திருக்கும மிகமேன்மைக்குப் பெரும்பயனை நலகிக் காககுமிலக்கணம் வாயந்ததும, மிகயோககிய மானதும், உபசாந்தியமிருதம பொழியுமழகு வாய்ந்ததும் ஆகிய ஸ்ரீ இராமர் ஆதரவோடுகூடி யுரைத்த இத்திருவாக்கால் விரை வில் யாஙகள் சுவர்க்காதி சுகங்கள் யாவும் சாரமற்றனவென அறிந்தோம். சித்தாகளானே செய்யப்பட்ட ஸ்ரீஇராம வாக்கியாதியின் புகழழயே மகிமைப் படுத்திக்கொண்டு விளவியதற்கு நிர்ணயமாகும் உத்தரத்தைக் கேட்டும் அவாவுடையராய அவர்களது சபைப்பிரவேச முதலிய வற்றை வருணிப்பார், பெருந்தகையென்றார். இரகுவம் சத்தைப் பிரகாசிப்பிக்கும் கேதுவாகிய ஸ்ரீ இராமரால் கூறப்பட்ட அதிபவித்திரமாகிய இவ்வாக்கின துத்தரமாக

மகரிஷிகளாற் கூறப்படும் தக்க நிர்ணயம் கேட்கத்தக்க தாதலின் நாரதர் வியாசர் புளகர் முதலிய முனிபுங்கவர் களே சர்வமகரிஷிகளே! விரைவில் விக்கினமின்றிக் கேட் பான் வாருங்கள் "சிறந்தவை தடைகள் சொறிந்தன மிகவே" என்பதால் காலதாமத மாக்காதீர்கள்; என அச சித்தர்கள் கூறக்கேட்ட விண்ணை வாசஸ்தானமாகவுடைய அவ்விமானங்களிலிருக்கும் திவ்யமுனிக் கூட்டமியாவுமே விஸதீர்ணமாய் அச்சபையின்கண்ணே ஸ்ரீ இராமர் முதலி யோரிருந்த இடத்திலிறங்கினர். அசசித்தர்சேனையானது நாரதர் வியாசர் பிருகு அங்கிரா புலஸ்தியா சியவனர் உததாலகர் உசீரர் சரலோடர் முதலிய முனிநாயகாக ளானே யலங்கரிக்கபபட்டு ஆகாயத்தினின்றும் பூமியி லிறங்கும்போது மகாமுனிவாகணிறைந்த தசரதருடைய பெருஞசபையானது எழுந்தது, விண்ணவரும் மண்ணவ ரும் கலநதவராய்ப பரஸ்பரம் கலந்த தேதகாந்திகளானே பத்துத்திசையும் ஒளிர்வித்து விளங்கினர்.

விண்ணினின்றும் வநதுபுகுந்த விண்ணவர்க்கு மண் ணவா எம்முறையில் மரியாதை செய்தனரென்னும் அவா நிகழுக கூறுகின்றார்.

ஸ்ரீ வசிஷ்ட விஸ்வாமித்திர மகரிஷிகள் வந்திறங்கிய எல்லா விண்ணவர் கூட்டத்தையும் முறையே அருக்கியங் களானும் பாத்தியங்களானும் நன்மொழிகளானும் பூசித் தனர்; அந்த விண்ணவர் மகாகணங்களும் ஸ்ரீவசிஷ்ட விசு வாமித்திரை யாதரவோடும் அருக்கியங்களானும் பாத் தியங்களானும் இன்மொழிகளானும் பூசித்தனர்; எலலா ஆதரவோடுஞ் சித்தர் கூட்டங்களைப் பூபதியானவர் பூசை செய்தனர், சித்தர் கூட்டமும் பூபதியைக் குசலம்விஞவும் இன்மொழிகளாலும் அக்காலத்துக் கேற்ற கதைகளாலும் மகிழ்வித்தனர்.

வானவரும் டானவரும் பிரீதிக்குசிதமான தான மானதி முயற்சிகளானே பரஸ்பரம் பூசித்துக்கொண்டு ஆசனங்களிலுட்கார்ந்ததன்பின்னர் நடந்ததைக் கூறுகின்றார.

முன்பாக நமஸ்கரித்து நின்று கொண்டிருக்கும் ஸ்ரீ இராமபிரானே, நாற்புறங்களிலும், தக்க கதாலாபமாகிய இன்மொழிகளாலும், புட்பமாரியினாலும், புகழ்தலினாலும், அவர்யாவருமே பூசித்தனர். பின்னுனை பெற்று ஆண்டிருந்தருளி யிருந்த இருடிகள் மத்தியில் இராஜயிலக்ஷ்மி வீற்றிருக்கும் ஸ்ரீ இராகவா வீற்றிருந்தனர். விநயத்தால் வணக்க வதனதோடுற்ற ஸ்ரீ இராமச்சந்திரரைப் பார்த்து ஆசிரியரிடத்தில் விதிப்படி அங்கசகித வேதாத்தியயனஞ செய்த அந்நாரதாதி யிருடியார் இவ்வசனத்தை யியம்புவாராயினர்:—அகோ ஆச்சரியம்! இக்குமரனுல், பதினாறு கல்யாண குணங்களோடு கூடியிலங்கும், பரம உதாரமாகியழகுவாய்ந்து வைராகக்கியரசத்தை வயிற்றிற்றரித்த வாக்கியமானது வழங்கபபட்டது; விசாரித்து இவ்வாறேயென விவத்தை செய்யபபட்டுக் கூறத தக்கபொருளோடு கூடியதும், கற்பனைமாத்திரையானே விவதனை செய்யப்பட்ட பொருளோடு கூடாமல் பதாத்தவபோதத்தோடு கூடியதுமம அதனுனே வித்வதசபைக்குத் தக்கதும் வியக்தமாய வர்ணங்களோடு கூடியதும், மேன்மைதங்கிய அநேகங்கருத்துக் கடங்கியதும், இருதயதத்திற் கானந்தத்தைச் செய்வதும், பூச்சியர்கட்குரித்தானதும சித்தசுஞ்சலத்தா லுண்டாய தோடமற்றதும், பொருளால் வெளியானதும், இலக்கணத்தாற் பரிசோதிக்கப்பட்ட பதங்களோடுகூடிப் பிரகாசிப்பதும, இதரதும், வர்ணலோப முதலிய குற்றங்களற்றது யழிதலாலுண்டாய மகிழ்ச்சியோடு கூடியதும்

ஸ்ரீ இராகவராற் கூறபபட்ட இமமொழியானது யாருக் குத்தான் விஸமயத்தை யுண்டாக்கமாட்டாது?

தீயசமுசாரத்திற் சுகம வருவது அதி துர்லப மாம என்பதை ஸ்ரீ இராமரேயல்லது யாவரே யுணாந்தா ரெனல்.

இச சமுசாரமானது அதி விஸ்தாரமா யோங்கிக் கெடுக்கமுடியாததாய்த தடையாதொன்று மின்றி தது ர்வடிவமாய் விருத்தியாகி, தைவநிாமாண நிர்மிதமாய் அதாவது அநிர்வாச சியமாகி, விளங்குகின்றது இதன் கண்ணின்பம எளிதினிற் கிடையா. யாதொரு தடையுமற் றுக் கெட்ட வடிவையுடைய தெய்வமென்னும் முற்கரு மத்தை பனுசரித்த விதாதாவின் சிருஷ்டியா லுண்டாகிய இச்சாம்பற் சமுசாரத்திற் சாரமாகிய விவேகததா லுண் டாம ஆன்மலாபமானது ஹே துவிஜோதிரர்களே! அத்தி யந்த துர்லபமாக விருக்கின்றது. எக்காத்தி நிதிகள் எப் போதுந் தத்துவசிநதன பராகளாகி ஆன்மலாப ரூபமாய சாரத்தை யடைவதில் முயலுகின்றார்களோ அவர்களே தன்னியாகள, புருஷோடாததமர்கள், சாதுக்களுள முதலில் எணணப் படுபவர்களாவாகள், விவேக முடையவரும் உதார கமபீரவடிவும் மனமு முடையவரு மாகிய ஸ்ரீ இரா மருக் கொப்பாக ஒருவருமே யிவ்வுலகிற் கிடையாது; இப் போதுங் காணேம், முற்போதுங் கண்டதில்லை, பிற்போ தும் வரபோவதே கிடையாது, என்பது எமது துணி பாம். ஸ்ரீ இராமரது மனோரத சமபததியை அவசியஞ் செய்விக்க வேண்டு மென்பதை அவரைப்புகழும் வாயி லாகவும், உத்தம அதிகார அடைவு அவர்க்குண்டாயிருப் பதை வெளிப்படுத்தும் வாயிலாகவும் கூறி அவரை யுபேக்ஷிக்கிற் றோடமா மென்பார், சாலததேசுறுவென.

சர்வஜனங்கட்கும அதிசய குணசீல விநயாதிகளாலும் உசிதமாக வினவத்தக இரகசியத்தை வெளிப்படுத்தலாலு ஆனந்ததைச் செய்வித்த ஸ்ரீ இராகவர் மனத்தில் விரும்பிய தத்துவத்தை யறியும் வேட்கை வடிவமேறதம, நமமமேறராகிய அறிவாளிகளின் உபதேசத்தாற் பலிக்காமற் போகுமாயின் முனிவர்களாகிய யாமேவெட்ட வெளியாய்க் கெட்டமதி யுடையவர்களாவோம், நமதறிவுண்மையும், பயனற்றதேயாகும; ஆதலின் அவசியமுபதேசிக்க வேண்டும். செல்வனுக் குணரற்பாற்றேல = ஸ்ரீ இராகவருக்கு உணரவேண்டிய பரமபொருளை யுணர்த்தாமலு பேசுஷிப்பமேயாலல்.

பெரியவாசிட்டத்தில் இனி முமுகூஷ-விவகாரப் பிரகரணம்

அஜமொடுஞ் சரையற் றநாதியா யொன்
ரு யகிலவின் பங்களுந தமது
நிஜசுக லேச மெனநிகழ்ந் திதய நிகித
மா யாத்தும சார
யஜ-ர்முதல் வேத முடிபெழு மமுத
வெழிலிர சாயன வடிவாந
கஜமுக வீர மாதவன் கமலக் கழன்மலர்
கருத்தில்வாழ்த் துதுமே.

ஸ்ரீ இராமாதிவசன வாயிலாய்ச் சாதன சம்பத்தானது வருணிக்கப் பட்டபோதினும், முமுகூஷ-க்களால் எமமுறையால் விவகரிப்பவர்களாய்ச் சமபாதிக்கத்தக்கன, அதனல் தத்துவ விசராந்தி இலாபநதா னெங்ன முண்டாம எனத் தனித்தனியாகப் பிரித்து அவற்றை யுபதேசிக்கும் பொருட்டு இரண்டாவது பிரகரணத்தை ஸ்ரீ வான்மீகிபகவான் ரொடங்குகின்ரூர்.

ஆண்டாதியில் மந்த வைராக்கியாதி சாதன முடையவர்கள், எல்லாம் வந்ததுபோலவே விரைவில் அதிகார

அடைவின் மயக்கத்தாற் கேளவி முதலியவற்றே முயலு தல் கூடாதெனச் சுகர் கதையினனே அந்தப்பரிபாக இலக்கணங்களைக் காண்பித்து, "குருவருளாலே குண மதாயறிந்த பெருமொரு வித்தையே பெரும்பயனுடைத் தாம" என்னுஞ் சுருதியினனே குலகுருவாகிய ஸ்ரீ வசிஷ் டபகவானே ஸ்ரீ இராமருக்குபதேசிபபான் பூர்வவிருத் தாந்த நினைவினாலும், ததத்துவவுபதேச வுபக்கிரமத்தாலும் மிகவுமுற்சாகப் படுத்துபவராய்த் தமது பிரயோஜன சித் தியின் பொருட்டே சிரவணஞசெய்யும பொருட்டும் விரைந்து ஸ்ரீ விசுவாமித்திர முனிவரே முதலிற் கூறத் தொடங்கினரென ஸ்ரீவான்மீகி பகவான்கூறல்.

சபைக்கு விஜயஞ்செய்த முனிவாகளானே இவ்வண் ணம் உரத்த குரலோடும் வாக்கியங்கள் வழங்கப்பட்ட பின்னர் முன்னரும் அதிகார எல்லையிலும உட்கார்ந்திருக் கும், முக்கிய அதிகாரிகள் கிடைபபது அருமையாதலின் ஸ்ரீ இராமரிடத்திலும் பிரஹ்மரசத்தை யறிந்தவாகளுக் குள ளுத்தமரானவ ராதலின் நிகழப்போகின்ற பிரஹமவி சாரத்திலும், பிரீதியுடையவராய் ஸ்ரீ விசுவாமித்திரா ஸ்ரீ இராமரை நோக்கிக் கூறுவதாவது:—ஹே இராகவ! ஹே ஞானவான்களுக்குள்ளே மேன்மை மிக்கோய்! அவசிய மறியத்தக்கது உனக்கு அயலொன்று மில்லை; சுயமாகவே அதிசூக்குமமான சாராசாரத்தைப் பகுக்கு மாற்றலுற்ற மதியினனே தள்ளதத்தக்க கொளளத்தக்க இரகசிய முழு வதையும் பரமாதத சாரபூத அகண்ட அத்வய சின்மாத் திர ரூபமாகிய ஆன்ம தத்துவத்தையும், நீயறிந்தே யிருக் கின்றாய்; ஆயினேன் இளைப்பாறுதல் உண்டாக வில்லை யெனின்? எபபோது மியற்கையாகவே நிர்மலமா யிரா நின்ற நினது மதிக்கண்ணுடியிற் கேவலம் அவநம்பிகை யாலாய ஐய அழுக்கை யகற்றன்மாத்திரம் ஒரு சிறிதே

பொருந்த வேண்டியதா யிருக்கின்றது, தனது மதியால் நிந்த போதிலும் பிரமாண ஆசிரியர் முதலிய சம்வாதமில் லாமல் விசுவாசம் வரமாட்டாதன்றே ! "வலுவதாய்ச் சிக்ஷித்து வழங்கிய போக்கும், நலமதாயான்மனி னன் னிலே யுளமெனறு" எனவுமன்றே கூறுகின்றனர். ஸ்ரீவியா சபகவானுடைய மைந்தனுகிய சுகனுடைய மனம்போன்ற தாம் நின்னுடைய மனதும், அறியவேண்டுவது யாவற் றையும் அறிந்தபோதிலும் உள்ளே விசிராந்தி மாத்திரத் தையே யுபேக்ஷிக்கின்றது. ஈண்டு ஸ்ரீ வியாசர் சுகர் என் பவர், ஒவ்வொரு துவாபரமுடிவிலும் ஸ்ரீ வியாசாவதார பேதம பிரசித்த மாதலின் முன்னுள்ளது துவாபரமுடிவி லுண்டானவர் கவரப்படுவர்.

இங்ஙனம் கூறிய முனிநாயகரை நோக்கிச சுகர்சரி தத்தை வினவுகின்றார்.

சர்வக்கிலேசங்களு மற்றதாய் அளவைகள் விவகரிக் கும் முன்னரே தானே பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரமானந்த ரூபமாய்ச் சொரூபம் அறியப்பெற்ற தாகியும் மதியில் இளைப்பாறுதல் என் உண்டாகவில்லை ? இவ்வா றியம்பக்கேட்ட ஸ்ரீ இராமர், ஹேபகவன் ! ஸ்ரீ வியாசபக வான் மைந்தராகிய சுகருக்கு ஆதியில் தமது விசாரத் தானே தததுவம் அறியக்கூடியதா யிருந்தும் எவ்வா று விசிராந்தி வரவில்லை ? பின்னர், குரு உபதேசித்த பலத் தோடுகூடிய மதியினனே எவவாறு விசிராந்தி கிடைத் தது எனவினவினர்.

தனது மதியினனே விசாரித்தினிதுணர்ந்தும் தந்தை யாலுபதேசிக் கப்பெற்றும நமபிக்கை யற்றவராகி ஜனக ரது உபதேசத்தாற் சுகர் தத்துவத்தில் இளைப்பாறின ரென்று கூறத்தொடங்குகின்றார்.

மேற்கூறிய பிரகாரம் ஸ்ரீராகவர் வினவியபோது ஸ்ரீ விசுவாமித்திரர் கூறுகின்றார், ஹே இராமச்சந்திர! உன் னுடைய விருத்தாந்தத்திற்குச் சமமும, மோக்ஷகாரண மும ஆகிய ஸ்ரீ வியாசமைந்தன் விருத்தாந்தனைதக் கூறக் கேட்பாயாக, உனதுதநனைதக்குச் சமீபத்தில் பிரசித்த நீலகிரிக்குச் சமானமாய்ப் பொன்னசனத்திற் சூரியனைப் போற் பிரகாசித் துக்கொண்டு இதோ உட்காந்திருக்கும ஸ்ரீ வியாசபகவானுக்கு, சர்வசாஸ்திரங்களையு முணர்ந்த வனும், சந்திரவதனனுமை சரீரத்தோடு யாகம எழுந்தருளி யதுபோன்றவனும் பேரறிவாளனும் ஆகிய சுகனென்னும் ஒரு மைந்தனுண்டானன்; இந்தச்சமசார சங்கடங்களை யெல்லாமை இருதயத்தின் கண்ணை நன்றுக ஆராய்ந்த அவ னுக்குமை, உனக்குதித்தது போலவே இததகைய விசாரமா னது உதித்தது அதனல் மகாமனத்தையுடைய அவன் சுயமாகவேதனது விவேகத்திணல் நெடுங்காலம்ஆராய்ந்து மிகவும் அழகாக, எப்பரமார்த்த சத்தியமாய ஆன்மதத் துவம் அத்விதீய சின்மாத்திர ரூபமாயிருக் கின்றதோ தா அதையறிந் தடைந்தனன். ஞானமேயன்றே ஆன்மலா பம், தானையடைந்த பரவஸ்துவின் கண்ணை இதுதான் வத்துவென விசுவாசமை தனக்குப் பிறவாமையாேன இளைப் பாறுதலடையாத மனத்தனையிருந்தான்.

அச்சுகர்விருத் தாந்தத்தையே தொடர்ந்து கூறு கின்றார்.

பூமியின்கண் ணிருக்கும் நீரருந்துவதிற் றிரும்புவ தாய பக்ஷி விசேஷமாம் சாதகம் மகிழ்ந்தபின் மழைத் தாரைகளி னின்றும் உபராமத்தை யடைதல்போலப் போகங்களினின்றும் உபராமத்தை யடைந்தான் என்ப தாம். அவனுடைய சித்தமானது சஞ்சலத் தன்மைகளை

யெல்லாம் விட்டுக் கேவலம் அகால மழைததாரைகளி னின்றும் சாதகப் பக்ஷியானது விலகுவதே போலப் பல வகை விநாச துக்க ஹேதுக்களாய போகங்களினின்றும் வைராக்கியத்தையடைந்தது;ஒருகால் நின்மலப் பிரஞ்ஞை யையுடைய அவன் மேருவின் கண்ணே ஏகாந்தமாயிருந்து தந்தையாகிய ஸ்ரீ கிருஷ்ணத்வைபாயனரென்னும ஸ்ரீ வியாசமகாமுனிவரை நமஸ்கரித்துப் பக்தியோடும், ஹே தந்தையாகிய ஆசிரியரே! பரவஞ்சனையின் பொருட்டு வஞ்சமாக ஆட்டிவிடப்பட்ட இந்தச சமுசார ஆடம்பரம் எம்முறையாக உண்டாயது? எக்காலித்து அத்தியந்தம் எவ்வாறு அழியும? எவ்வளவு பெரியது? எத்துணைக்கால மிருப்பது? இது யாருடையது? தேகத்தினுடையதா? இந்திரியத்தினுடையதா? மனத்தினுடைய்தா? பிராணனுடை யதா? சங்காதத்தினுடையதா? அதனினும அயலாய விகாரியினுடையதா? நிர்விகார சின்மாத்திரத்தினுடை யதா? என விணவினன்.

இங்ஙன் வினவிய மைந்தனை விளித்துத் தந்தையருளி யது இம்மெனன்கின்றார்.

சுகப்பிரஹமத்தால் விணவப்பட்ட யாவு முணர்ந்த ஸ்ரீ வியாசபகவானுல் அம்மைந்தன் பொருட்டுப் புகலவேண் டிய தனைத்தும உள்ளபடியே தெளிவாகப் புகலபபட்டது. உபதேசித்த அதைச் செவியுற்ற சுகர் அம்ம! இதை முன் னரே யானறிந்துளேன் எனத் தனது தந்தையினது வாக் கியததை அபூர்வ அர்த்தமொன்றுங் காணுமெனச சுய புத்தியினை பகுமானிக்க வில்லை. ஸ்ரீ வியாசபகவானும் மைந்தனது கருத்து இத்தகையதென வுணர்ந்து அவன் மதியையே யனுசரித்துப் புத்திரனை நோக்கி மீண்டுங் கூறுவதாவது:—ஹேமைந்த! கூறியதினும் அயலாக உண்

மையா யொன்றையும் யான் நன்குகவுணரேன்; பூமியின் கண்ணே ஜனகனென்னும் அரசனிருக்கின்றன், அவனுண் மையாக உணரவேண்டிய யாவற்றையயுமுணர்வான் அவ னிடத்தி னின்றும் நீ யாவற்றையும் அறிவாய் ; என்ப தாகத் தந்தையாற்கூறக்கேட்ட சுகர் மேருகிரியினின்றும பூமியிற் சென்று ஜனகனைற் காப்பாற்றப் படும் விதேக தேசத்திலுள்ள மிதிலையென்னும் நகரத்தை யடைந்தனர். ஹே மன்னவர் மன்ன ! வாயிலின் கண்ணே ஸ்ரீ வியாச பகவானுடைய அருமை மைந்தராகிய சுகப்பிரஹ்ம ஈருஷியானவர் வந்து நிற்கின்றார் என்று மகாத்மாவாகிய ஜனகரிடத்தில் துவாரபாலகர்களாற் தெரிவிக்கப் பட்ட போதினும் ஜனகரும் சுகர் விருத்தாந்தம் தெரிந்தவராய் விரைவி லுபதேசிக்கின் ஸ்ரீ வியாசவசனமபோல அவ மதிப்பால் அவனுக்குக் கிருதார்த்தத் தன்மையை யுண் டாக்க மாட்டாது, அவ்வா றென்மொழியும் போகலாகா தென வெண்ணிச் சுகருடைய வைராக்கியாதி சாதனங் களின் விசுவாச திடத்தன்மைகளை அறியும்வேட்கையுற்று உபேக்ஷையாக அவர் ஆங்கே யிருக்குகவெனக் கூறி ஏழுதினம்வரை ஒன்றுங் கூறாமலிருந்து விட்டார்.

பின்னர் என்னுற்ற தென்னும் ஆகாங்ஷை யுண்டா கக் கூறுகின்றார்.

ஜனகதரிசன உற்கண்டையோடு மிருந்தாரே யல்லா மல் வேறொன்றையும் எண்ணவேயில்லை. அதன்பின்பு அரண்மனை உண்முற்றத்தில் விடும்படியாகச் செய்தனர், அவ்விடத்திலும் ஏழுதினங்கள் அவ்வாறே தத்துவத்தை யுணரவேண்டுமென்னும் இச்சையின் மிகுதியினல் அநாத ரவு யாவற்றையுமறந்து இருந்தனர். பின்னர் அந்தப்புரத் தில் விடும்படியாகச் செய்தனர். எதுவரையுணவு முதலிய

வற்றுனே நீர் பூஜிக்கப் பெறவில்லையோ அதுவரை யரசர் தெரியார் என்னும் வாக்கின் வஞ்சனையானே ஏழுதினங் கள் வரை அந்தப்புரத்திலேயே யவனத்தால் மதத்துல வும் அழகிய மங்கையராற் போஜனதிகளானும் போகக் கூட்டங்களானும் பூர்ணசந்திரனுக்குச சமானமான சுகரை யுபசரிக்குமாறு செய்வித்தனர்.

ஆயின் மேனடந்த மானவமானங்கள் மனத்தைத கனத்த மகிழ்விற் றுயரில் ஆழ்த்தி யிருக்குமே யெனின், திருஷ்டாந்த பூர்வகமின்றென்கின்றூர்.

ஜனகர்தந்த அப்போகங்களும் அத்துயரங்களும் ஸ்ரீ வியாசமைந்தராகிய அச்சுகரைத் திடமூலதேதாடு கூடிய பெருங்கிரியைத் தென்றற் காற்றனது அசைவியாததே போல அசைக்கவில்லை. கேவலம போகங்களிலும் அநாத ரவுகளிலும நல்ல சமமுடையவராகவும் அதனனே சுவல் தராகவும அதறகு ஹேதுவாக வாக்கு முதலிய இந்திரியங் களை யடக்கிக்கொண்டும் சதேதாஷத்தோடு கூடிய மன த்தை யுடையவராகப் பூர்ண சந்திரன்போல அங்கேயே சுகரிருந்தார்.

இவ்வண்ணம் அரசர் பெருமான் பரீக்ஷை செய்தபின் சத்காரத்துடன் அழைத்து நமஸ்கரித்து வந்தகாரியம் வினவினரென்கின்றூர்.

இவ்வாறு பரீக்ஷித்தலினனே சுகரது தத்துவதரிசனம் வரை நிலையாயிருக்கக் கூடிய விசாரவைராக்கியாதி பரிபாக இயற்கையை யறிந்து அச்சுகரை அவ்வரசர் வரவழைத்து மகிழ்ச்சி பொங்கி யிருக்கப்பட்ட அவரைப்பார்த்து ஆச் சரியப்பட்டு நமஸ்கரித்தனர்; எஞ்சுதலில்லாம லுலகின் கண்ணே அவசியஞ் செய்யத்தக்கனவாய பிரசித்த காரி யங்களாகிய பரமபுருடார்த்த சாதனங்கள் முழுவதை

யும் செய்து கிருதகிருத்தியத்தன்மையை யடைந்தவரே! எல்லா ஆனந்த லேசங்களும் ஆன்மசுகத்திலடங்குதலின் அதனைடைவிலேனே எல்லாமடைந்தவரே! நீர் விரும்பியது யாதென விரைவிற் சுகமாக விருக்கின் றீராவென வினவிய அச்சுகரை நோக்கிக்கூறினர்; அரசா கூறியதைக் கேட்ட ஸ்ரீ வியாசமைந்தர், ஹே குருவே! இசசம்சார ஆடமபரமானது எவ்வாறுண்டாயது? எவ் வாறுபசாந்தியையடையும்! என்பதையுள்ளபடி யடியே னுக்கு விறைவிற் கூறுவீராகவென்றனர்.

ஸ்ரீ சுகா வினவியதற்கு மன்னவர் விடை கூறுதலும் சுகர் அங்கீகரித்தலும் கூறபபெருகின்றது.

மேலுரைத்த வண்ணம வினவபபட்ட ஜனகரால் அச் சுகருக்கு மகான்மாவாகிய அவர் தந்தையாற் பூர்வங் கூறப்பட்ட அதுவே கூறப்பட்டது. அதைக் கேட்டசுகர் கூறுவதாவது:—சுயமாகவே என்னல் விவேகத்தாலிது பூரவமுணரப்பெற்றது, இதனையே வினவபபட்ட எனது பிதாவுமெனக்கு நன்முக அநேக உதாகரண ளுகங்க ளானே விரித்துரைததார்; உபதேசிப்பவரு ளெல்லாம மேன்மை மிக்கவரே! தங்களாலும் இதேபொருள் கூறப் பட்டது, இதுவே சாவ உபநிடதத்துள்ள மகாவாக்கி யார்த்தமெனச சாஸ்திரங்களாகிய வாக்கியார்த்த தாற்பரி யத்தை நிர்ணயிக்கும் நியாயங்களைக் காட்டுவதிற் றற்பர மாஞ் சூத்திரபாடியாதிகளிலுங் காணப்படுகின்றது.

சுகர் தாநதுணிந்து தந்தையருளிய பொருளைக் கூறிததுணிபு விளைதல்.

அவிநாசி கூடஸ்த நித்திய சிதாத்மாவானது சுயம் அத்விதீயமாயினும் சதவிதீயமாகத் தன் சங்கற்பவயத் தாற் பந்தமாம். அங்ஙனமே ஸ்ரீசுரேசுர ஆசிரியரானும

அருளப்பட்டுளதாம்:—"இக்கிரியாகாரக பலான்மக ஆபாசம் அற்பமும் பரமாத்தவுத்துவைத் தீண்டவே மாட்டாதாம், அதற்கு மோக மாத்திர வுபாதானத் தன்மை யுண்மையின், நாமமில் லபிமான நயத்திரனேம மெய்மூதவினையே மாற்றுமிங்கிது, தாமமில் லருமைப் பொருடம்மினும், சோமசன்மனின் றந்தையைச் சொல்ல லாம" (இதன் பொருள்) மூரணுறு தருமங்கள் ஆன்மா விற் சம்பவிக்குமாயின் அதற்கு அசங்கத்தன்மை வியாகாத மாம் எனக்கடாவ விடையளிக்கப்படுகின்றதுஃ இக்கிரியை யென மூரணுறு தருமங்கள் சுகதுக்காதியாம. அநிர்வச நீய அஞ்ஞான பரிகற்பித துவைதப்பிரபஞ்ச சம்பந்தத் தானே ஆன்மாவினது அசங்கத்தன்மை அழிக்கப்படா தாம், உண்மையாக அதனைத் தீண்டாமையின்; அவித்தை யால் பரிகற்பித நீலப்பண்பாற் ககனம் கருப்பாவதில்லை யாம், அதனலும் அசங்கத்தன்மையழிவு பெறுதாம் என் பதாயிற்று நாமமில்=அசத்தியமாய துவைதப் பிரபஞ் சத்தின் கண்ணும் பொய் யபிநிவேசத்தானே யானின்பி துன்பியெனத் தன்னைத்தானே இவ்வுலகம வஞ்சிக்கின்ற தென்பதாம். அதன் கட்டிருட்டாந்தம் சோம என்பது. ஒரு அதிதரித்திர பேராசைப் பிச்சைக்காரப் பிரமசாரி ஒரு பஞ்சகாலத்தில் சத்துமுட்டியைக்கட்டி யனுதாபத் தோடும் ஒரு மலையிலுள்ள இலந்நிறைதருவின் சாயையிற் சயனித்துக்கொண்டு இவ்வண்ணம் மனோராச்சியஞ் செய் வானையினன்:—சத்து முட்டிக் கட்டைவிட்டு அதனல் அநேக ஆக்கள் வாங்கிவளர்ப்பேன், அவையும் ஐந்தாறு வருடங்களில் அநேகங் கன்றுகளை யீனும், அதனல் யதேஷ்டமாய்ச் சேகரிப்பேன், அதனல் தனதானியாதி சகலமும் உண்டாம், அதனல் தாசிதாசாதிய கூட்டமு நிருகம் சம்பாதிப்பேன், இத்தகைய பெருஞ் சம்பத்தை

நோக்கி மிகமிகவும் யோக்கியனுகிய எவனேனும் ஒரு பிரபு தனது கன்னியை என்பொருட்டுக் கன்னிகாதானஞ் செய்துவைப்பன், பின்னர் விதிமுறையே இல்லறவாழ்க்கையை யினிதனுபவிப்பேன், அதனுல் வங்கிசம் விளக்குமிங்கித புத்திரனையீன்று சோமசன்மனென நாமகரணம் புரிந்து பின்னர், குடும்ப சௌக்கிய அனுபவசமயத்தில் அழுதுகொண்டு அன்னையைப் பின்றொடரும் சோமசன்மனைத் தன்காரியபரவசத்தை யடைந்து அவனையநாதரவு செய்து செல்லும் என்பாரியைப் பார்த்துப் புத்திரமித்தகோபத்தால் அடிபடேன்னனத் தன்பாரியையடித்தான், அதனற் பயிக்கபாத்திரம் கரகத்தா லிருபிளவாயது, சத்துக்களும் வாயுவேகத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டன; பின்னர் அந்தோ ! வெந்துயரம் நொந்துகெட்டேன் மந்தபாக்கியன் யான் சத்துமாக்களும் எனக்கு வாய்க்கெட்டாமற் போய்விட்டனவே யினியென்ன செய்வேன் என விழித்துக்கொண்டு தந்தை புலம்பினன்; இதுதான் றிருட்டாந்தமாகக் கூறியதின் கதையென்றுணர்க.

இது தன்னிடத்திலிருக்கும் அஞ்ஞானத்தினை லுபகிதமாயதன்பால் நாலுவகையைக் கற்பிக்கும் விகற்பமாகிய அநந்தகாம கருமவாசனைகளாகிய விரைகளானே விருத்தியடைந்து பிரளயசுழுப்திகளிற் சமஷ்டி வியஷ்டி சமஸ்காரபரிசேடமாக அவ்வியாகிருதத்தில் லீனமாகியமனுதி ஜீவபாவவுபாதி வடிவமாம் அந்தக்கரணத்தினின்றும் பிரளயமுறைக்குமாறிய முறையாக முதலில் அபஞ்சீகிருத ஆகாசாதி உற்பத்திக் கிரமமாகச் சமஷ்டி ஹிரணிய கருப்ப வடிவமாகவும் அதன்பின் பஞ்சீகரண விராட்டு வடிவமாகவும், அதன் பின் அன்னுதிக் கிரமமாக வியஷ்டி தூலதேக வடிவமாகவும், அதனுள்ளே துன்புறுத்தும் வியஷ்டிலிங்க சரீரவடிவமாகவும ஆவிர்ப்பவித்து மகா

அநர்த்தரூபமாக விளங்கும், அதுவும் கரும உபாசனைச் சமுச்சயமாத்திர அனுஷ்டானத்தால் அத்தியாத்மிக வியஷ்டிபாவ பரிச்சேதவாசனை மாத்திரம் ஒழியவே சமஷ்டிஹிரண்யகருப்பபாவமா யெஞ்சாநிற்கும், சிரவணாதி பரிபாகத்தாலுண்டாயதத்துவ சாக்ஷாத்காரத்தானே வாசனையோடு கூடிய காரியகாரண அவித்தை நாசமாங்காலோ மூலங்கெடலால் அத்தியந்தம் அந்தக்கரணங்கெடலால் அடியோடும் கெடுகின்றது; ஆகையாலிகழத்தக்க சம்சாரம் சாரமற்றதென்பதென்றுணிபாம். சுவப்பிரகாச ஆன்மாவின் கண்ணை நிலைபடாமையினுமும் பொய்யானமையானுமு முன்னரே தகிக்கப்பட்ட தன்மையையுடையது தான், ஆதலினுனே சாரமற்றதாம், அத்தகையது மறுபடியும் சாக்ஷாத்காரப் பிரளயாக்கினி யெங்கும் வியாபிக்கும்போது எவ்வாறிருக்கும்; மேலே தகிக்கப்பட்ட திருணமானது உளளே சாரமானது சேடித்தலின் மீண்டுமீண்டும் முளைப்பதற்கு முடியும் இச்சம்சாரமோ சாரமில்லாமலே தகிக்கப் படுவதாகத்தத்துவவித்துக்களின் அனுபவ மிருத்தலின் எங்ஙனுண்டாகும் ? இதுவென்னுன் முன்னரே சுயமாகவே விசாரத்தால் அறியப்பெற்றது, இதுவேயுண்மையாவென் ? ஆயினதைச் சந்தேகமில்லாம லிருதயத்தி லுறைக்குமாறு ஹே மகாபாகுவே ! எனக்குக் கூறுவீராக ; நாளுவிடையங்களை இதுவாதத்துவம் அல்லது வேறுவென அவிசுவாசத்தால் உழலாநின்ற வுளத்தால் உழலாநின்றயான் உமது வசன விசுவாசத்தினுலே ஆண்டேநிலைபெற் றிளைப்பாறுவேன், எனக் கூறியதைக் கேட்ட ஜனகர் கூறுவதாவது:—ஹே மகாமுனிவரே ! நீருணர்ந்ததைப் பார்க்கினும் அதி மேன்மையானது யாதொன்றும் வேறு நிச்சயிக்கத் தக்கதாயில்லை; சுயமாகவே நீருணர்ந்தீர் குருவினுலும் மீண்டுங்கேட்டுக்

கொண்டீர் அதுவே திடமெனத் துணிவீராக. அளவு கடந்த அறிவுவடிவ ஒரு புருடனே யிங்குள்ளான் ; அய லொன்றுமில்லை.

மேலும் ஜனக மன்னவரே இதோபதேசமாகத் தொடர்ந்து கூறுகின்றார்.

தற்சங்கற்பத்தாலே தளையுறும், நிர்ச்சங்கற்பத்தாலே நீங்கும். என்பதாம். தனது சங்கற்பத்தினாலே கட்டுறுகின்றான் விட்டானேல் சங்கற்பத்தை விடுபடுகின்றான்; அதனால் வெட்டவெளியாக உம்மால் அறியவேண்டியது அறியப்பட்டது, மகான்மாவாகிய உமக்கு முன்னர் எல்லாப் போகங்களினின்றும், இப்போது எல்லாத் திருகியங்களினின்றும் அதிவிரக்தியான தண்டாகி யிருக்கின்றது வேறு பாலகராயினும் விடயத்தியாக சூரராதலின் மகாவீரரே ! உமதுமதியானது நீண்ட ரோகங்களாகிய போகங்களினின்றும் விரக்தியையடைந்துளது, நீர்வேறென்ன கேட்கவேண்டு மென்றிச்சிக்கின்றீர் ? உமக்குப் பூர்ணத்தன்மை யுண்டானதே போலச் சர்வஞானங்களின் மகாநிதியாகியும் எப்போதும் அபாரமான தவத்ததையே செய்துகொண்டிருக்கும உம்முடைய பிதாவிற்கும் பூர்ணத் தன்மையானது உண்டாகவில்லை. (இதுவும் இது போன்றனவும் சுகருக்குத் திடப்பொருட்டுக் கூறியவாம்) யான் வியாசரினும் அதிகனே யாவேன், அவருடைய சீடராயும் மைந்தராயும் இருக்கும் நீர் போகேசனைகள் யாவற்றையும் அடியோடு விட்டிருத்தலின் என்னினும் அதிகமேயாவீர்; பூர்ண சித்தத்தை யுடைய உம்மால் அடையத்தக்க யாவுமே யடையப் பெற்றனவாம், திருகியதரிசனமே சமூசாரத்திற் றள்ளுவதாதலின், பாகிய திருகிய விடயத்தில் விழவேண்டாம், வேறிரவ்மசொரூ

பரே ! முக்தராய்விட்டீர், மயக்கத்தை விட்டுத் தொலைத்து விடும். "அற்பமதேனும் வேற்றுமை யாற்றிடின், அற்பனக் காலேயச்சமதடைவன் " என்னுஞ்சுருதியினை அறியத் தக்க தயலொன் றுளதென்னும் மயக்கத்தையும், திருசிய தரிசன மயக்கத்தையும் விட்டொழித்து விடும்.

இவ்வாறு மகாராஜாவாலுபதேசிக்கப்பட்டபின் அச்சுக முனிவர் என்ன செய்தாரென்பதை யறியும் அவா நிகழ அறைகின்றூர்.

மகாராஜா வுபதேசித்தபின் ஞான அடைவினனே பிரதிபிம்பமெனப்பட்ட தன்பால் அதிஷ்டானத்தன்மை யைக்கண்டு சொஸ்தமாய்ச் சுகமாயினரென்பதாம். ஜனக ராகிய மகாத்மாவால் அம் முற்கூறிய அளவுகடந்த சிதாத்ம ஏகதேசீர் என்பதாக உபதேசிக்கப்பட்ட அச்சு கர் திருசியமலினமற்ற நிரமலமான பரமவஸ்துவின் கண்ணை சும்மா விருந்தனர். சோகம்பயம் ஆயாசங்கண் முழுவதுமற்றுச் சேட்டையற்றுச சம்சயமற்றுச் சாத்விக தேவதைகள் வாசஞ்செய்தலான் விசேஷபம் யாதொன்று மின்றி யிருத்தலின் அநிந்திதமாய்ச் சமாதிக்கநுகூலமான மேருவின் சிகரத்தைதேநோக்கி நிருவிகற்ப சமாதியின் பொருட்டுச் சென்று, ஆண்டு நிறுவிகற்பசமாதியிற் பதி னையிரவருடமிருந்து தைலந்தீர்ந்த தீபமேபோல ஆன்மா வின்கண்ணை விதேகமுத்தியையடைந்தார்.

சுகரடைந்த விதேகமுத்தியை வருணித்துக்கொண்டு ஸ்ரீ இராகவரைச் சுகர்க்கொப்பாக்கி ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷி கூறுகின்றூர்.

திருசிய வுன்முகத்தன்மையும், அதற்கு மூலமாகிய அஞ்ஞானமும் அகன்றமையின் சுத்தனாகி, அதனனே சஞ்சித ஆகாமியங்கள் காணப் பெருமையானும், புண்

ணியபாவங்கள பற்குமலும் அற்றும் போய்விட்டமையா னும் அமலான்மாவும், ப்ராரப்தகருமந் தேய்ந்துவிட்ட மையின், அசுத்ததேதகாதி நீங்கிவிட்டமையின், புனிதபத மும் சுயமாகவே நிருமலமும் ஆகிய பரமான்ம வஸ்துவின் கண்ணே நீலமேக சம்பந்தம் விட்டுபிரிந்து கடலில் விழுந்து ஒன்குகும் நீர்த்துளியேபோல மகாத்மாவாகிய சுகர் சர்வவாசனையும் ஒழிந்தவராகிப் பேதஞ்செய்யு முபா தியற்றமையின் உண்மையாயஅகண்டஜக்கியத்தையடைந் தனர்; பேதத்தையுண்டாக்கும் அஞ்ஞானமானது அடி யோடும் அழிந்துபோனபின்பு ஆன்மாவிற்கும பிரஹ்மத் திற்குமில்லாத பேதத்தைச் செய்விப்பவன் யாவனென விஷ்ணுபுராணமுங் கூறுகின்றது. சுகர்கதையைப் பிர கிருதத்திற்பொருத்திக் கொண்டு ஸ்ரீ இராமருக்குபதேசிக் கும் பொருட்டு ஸ்ரீ வசிஷ்டரை முயல்விகுமாறு தொடங் கிய ஸ்ரீ விசுவாமித்திரர் கூறுகின்றார், அந்தநெறியென. அந்த வியாசமைந்தனுக்கு மலமாத்திர நீகும் எவ்வளவு வகையாய யூகத்தோடு கூடிய வுபதேசம் பொருந்தியதோ அவ்வளவே யுனக்கும் வேண்டியதாக இருக்கின்றது. ஹே முனீசுரர்களே! இந்த நல்லமதிமானுகிய இராமனுக்குப் போகங்களியாவும் ரோகங்களைப்போல ருசிக்கவில்லை யாத லின் இவனுல் அறியவேண்டியது முழுவதும் அறியப் பட்டதே யாய்விட்டது. போகக்கூட்டங்கள் யாவும் சுவைக்காமற் கைத்ததே அறியவேண்டியதை யெல்லா மறிந்த மனத்திற்குத் திடமான இலக்கணமாகும்.

வாசனையே பந்தகாரண மெனவும் அது தீர்தலே மோக்ஷகாரணமெனவும் அஃதின்றியவரே ஜீவன் முக்த ரெனவும் கூறுகின்றார்

போகவாசனையினுலே பொய்ப் பொருள்களாலாய பந்தம் மிகத்திட மாகின்றது; அவ்வாசனை தேயத்தேயப்

பந்தமும் உலகின்கண்ணே மிகவுந்தேய்ந்து விடுகின்றது. ஹே இரகுவீர! வாசனைகூடியமே மோகூடமென மகான்க ளாற் கூறப்படும், பதார்த்த வாசனைகளின் றிடத்தன் மையே பந்தமெனப் பகரப்படும். எத்துணை விடயவா சனையழிகின்றதோ அத்துணை விடுபடுகின்றான், எல்லாவாற் றலும் அழியிலே எல்லாவற்றினின்றும் முக்தியை யடை கின்றான். அற்பசிரவணாதி யாயாசத்தினாலும் அபோராக் திருக்கு சொரூபம்திருசியவிவேகமாத்திரத்தினாலும் நன்கு பரிசயித்தல் கூடுமாதலினாலும், தனதாத்ம தத்துவத்தின் தொடக்க ஞானமுண்டாதல்கூடும், விடயவைராக்கியமோ மிகக்கிலேசமுற்றே யுண்டாகின்றது. ஆனலந்த ஞானமே போதுமே வைராக்கியத்தினல் யாதுபயனெனின்? இரா காதிகளின் றடையில்லாமல் யாவன் காண்கின்றனலே அவனே தத்துவஞான ஜன்னிய அவித்தையழிவின் பலத்தை யுடையவனுங் அறியவேண்டியதை யறிந்தவனும பண்டிதனும் ஆவன்: தொடக்கஞானியோ மோக்கத்தன் மையை யகற்றுமையின் அத்தகையனுகான். அறைந்த பண்டிதனுகிய மகாத்மாவின் பொருட்டோ போகங்கள் பலாத்காரத்தானும ருசியையுண்டாக்க முடிவனவாகா; கீர்த்தி பூஜை இலாபம் முதலிய யாதொருபல உத்தேசமு மில்லாமலே, கேவலம யாவனுக்குப் புவியிலுள்ள போகங் களெல்லாம் அருசியாகத் தோன்றுகின்றனவோ அவனே ஜீவன்முக்த னெனப்படுவன், இடாம்பீகபோகத் தியாகத் தினலே இஷ்டசித்தி யெங்ஙனுண்டாம்? வைராக்கிய ஞானவுபரதிகள் மிக விருத்தியாயின் பரஸ்பர சகாயத் தன்மையினு னுண்டாம் ஞானபரிபாக அதிசயத்தானே மூலமானது கெடுதலின் அத்தியந்த ஆசை நாச முண்டா கும். எத்துணை எத்துணை அறிவு அறியப்பட வில்லையோ அத்துணை யத்துணை ஜந்துக்கட்கு விடயங்களில் வைராக்கி

யம் மருத்தலத்திற் கொடிபோல உண்டாவ தில்லை. "இரதமு மிவற்கிங் கிறைகண்டேடகும்" எனக்கீதையு மிதையே கூறுகின்றது.

இந்த ரம்மியமான போகவிடயங்க ளியாவும் எதனல் இரகுநந்தனனை இரஞ்சிக்கச் செய்யவில்லையோ அதனனே பாவனையறிய வேண்டியது முழுவது மறிந்தவனகவே தெரியவேண்டும் என ஸ்ரீ இராமர் தத்துவ முணர்ந்தவர் ஆயின் உபதேசிக்க முயலல் யாதுகாரணம் பற்றியோ வெனின் கூறுகின்றார்.

ஹே முனிநாயகர்களே ! இராமச்சந்திரன் யாதை யுள்ளே யறிந்துள்ளானே அதுவே வஸ்துவென்பதாகச் சத்புருடர்கள் வாயிலாய், முன்னர் விசுவாச திடமில்லா மையினலே அடையாததுபோலிருந்தது, இபோதுகேட்டு விசுவசித்து அதன் கண்ணை சிச்தவிசிராந்தியை யடை வன். அதன் மூலமாய் அன்னிய அதிகாரிகளுங் கேட்டுத் தத்துவத்தை யடையலாம். ஆகவே யுபதேசம் சர்வபு காரமாகும். சரத்காலமாகிய இலகூஷ்மி மேகமற்ற நிர்மல ஆகாச மாத்திரமாக எஞ்சியிருப்பதை வாஞ்சிப்பதே போல இரகுநந்தனனுடைய மதியும் துவைதமியாவற் றையும் நீக்கி அத்விதீய சின்மாத்திரமாய்ப் பரிசேடித்து நிற்றலாகிய விசிராந்தியைக் கேவலம் விசுவாசத்தால் வாஞ்சிக்கின்றது. ஈண்டு இம்மகாத்மாவாகிய இராகவ னுக்கு இளைப்பாறுதலுள்ளத்தி லுண்டாவதற்காக இப் பகவனகிய ஸ்ரீமான் வசிஷ்டரே யுக்தியை யுபதேசிக்க வேண்டும் நீரே யேன் உபதேசிக்கக் கூடாதெனின் ? இகூஷ்வாகுகுல முழுவதிற்கும் எப்போதும் குலகுரு வாகவும் நியந்தாவாகவும் இருப்பவரிவரே; இந்தியந்தா வைக் கடந்தன்றே, திரிசங்கு முதலியோர் பெருந்

துயரை யடைந்தனர், சர்வசாஸ்திரங்களையு மிவர் அறிந்தவர, உண்மையாகச் சர்வசாக்ஷியா யிருப்பதோடும், யோகபலத்தாலும் பிரிவுபிரிவாகவும் இவர் யாவற்றையும் அறிந்துகொண்டே யிருப்பவர், அதற்கேதுவாக மூன்று காலங்களிலும் நிருமலமாகிய மோகங்கடந்த தரிசனசாதனமாய மனத்தையுடையவரு மிவரேயாவர்.

ஸ்ரீ வசிஷ்டபகவானேநோக்கி ஸ்ரீ விசுவாமித்திரர் ஸ்ரீ ஹராகவர் உத்தமோத்தம அதிகாரியாக இருக்கின்றபடியிலேலே இனிதுபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தல்.

ஹே வசிஷ்டபகவன்! முன்னம் நம்மிருவருடைய வைரமுஞ் சாந்தியாகும் பொருட்டும் மகாமதிமான்களாகிய முனிவர்களின் சிரேயசின் பொருட்டும் நிடதமலையிலுடைய சோலையடர்ந்த விசாலமான இடத்தில் பகவானுகிய ஸ்ரீ பிரஹ்மாவால் விரிவாகவுபதேசிக்கப்பட்ட மேன்மையாய யுக்திநிறைந்த ஞானமானது தங்களுக்கு ஞாபகத்திலிருக்கின்றதா? எந்த யுக்திப்பிரவாகம் நிறைந்த ஞானத்திலே இந்தச்சம்சார சம்பந்தமாய வாசனையானது சூரியனுலிருளானது முற்றினுமொழிவதேபோல முற்றினுஞ் சாந்தமாகுமோ, அதேஞானத்தைப் பரமசிடனுகிய இராமமூர்த்திக்கு விரவில் விசிராந்தியான துண்டாதற் பொருட்டு நீருபதேசிக்கவேண்டும். இவ்வுபதேசமானது அற்பல அதிகப் பிரயாசமுடையதாகாது; ஏனெனின்; இராகவன் கல்மஷம் நீங்கினவனுக இருக்கின்றன். நிர்மலமான கண்ணுடியில் முயல்வில்லாமலே முகமானது பிரதிபிம்பிக்குமல்லவா? இவ்வுபதேசம் பயனின்மையையுண்டாக்கமாட்டாது; மாறுக. உம்முடைய ஞானத்தன்மை தயை முதலியவற்றிக்குப் பயனுடைமை கிடைத்தலானே மேன்மையே யுண்டாகும், விரக்தனுகிய நல்ல

சீடனுக்கு யாதுபதேசிக்கப் படுமோ அஃதே ஞானமுஞ் சாஸ்திராத்தமும் ஆகும் அஃதே புகழத்தக்கதும் பாண்டித்தியத்தை விளக்குவது மாகும். சுபாத்திரத்தி லீயா விடின் வீணைகப்போதலின் இகழ்வே யன்றோவாம்.

அதிகாரிக் குபதேசித்தல் அடாத காரியமெனவுமஸ்ரீ இராமருக் கவசியம் உபதேசிக்க வேண்டுமெனவுமஸ்ரீ விசுவாமித்திர முனிவர்கூற ஸ்ரீ நாரதாதியர் அவசியம் செய்யத்தக்க தென்கின்றார்.

சீடனும் விரக்தனும் அல்லாதவனுக்கு ஏதேனுஞ் சிறிதை யுபதேசஞ் செய்யிலே அது கருநாய்த்தோலிற் கவிழ்த்த காராம்பசுவின் பாலைப்போற் களங்கத்தையே யடையும். இராகாதிகளின் காரணம அவித்தையாக விருத தலின் அவ்வவித்தை நீங்கலானே இராகம் பயம் குரோதம் முதலியவை நீங்கினவருமம, அபிமான மற்றவருமம, பாவமற்றவரும் அகிய உமமைப் போன்றவர் எவர்க்குபதேசஞ் செய்கின்றீரோ அப்போதே அவ்விடத்திலேயே அபரோக்ஷ ஆன்மாவின்கண்ணே கேட்ட மதியானது இளைப்பாறுதலை யடையும். காதிமைந்தராகிய ஸ்ரீ விசுவாமித்திரரானே இவ்வாறியம் பப்பெறவே ஸ்ரீ வியாசநாரதர் முதலிய முனீசுரர்களெல்லாம் அப்பொருளையே நல்லது நல்லதெனப்புகழ்ந்து கொண்டாடிப் பேசினர்கள். அதன் பின் சக்கரவர்த்தியின் சமீபத்தில் வீற்றிருப்பவரும் மகாதேஜசை யுடையவரும், பிரஹ்மாவின் மைந்தரும் பிரஹ்மாவிற்குச் சமான மானவரும், மகாமுனிவரும் ஆகிய ஸ்ரீ வசிஷ்ட பகவான் பிரஹ்மாவின் மைந்தராய்ப் பிரஹ்மாவைப்போலவே மகாதேஜசு முதலிய குணங்களோடு கூடி விளங்குதலின் திவ்யதேஜசோடு கூடிய மகரிஷிகளினது முன்னிலையிற் பிரஹ்மாவைப் போலவே புகலத் தொடங்கினர்.

தத்துவ ஞானிகட்டு இலக்கணபூதமாய அபிமான மின்மை முதலிய நற்குணங்களைத் தமதொழுக்கத்தானே கிகூழிப்பித்துக் கொண்டு விநயமான மொழிகளானே பூரீ விசுவாமித்திரராற் பிரார்த்திக்கப் பட்டதைச் செய்கின் றேன் எனப் பிரதிஞ்ஞை செய்தல்

ஹே மகாமுனிவரே! நீர் ஆணையிட்டபடியே யாதொரு தடையுமில்லாமற் செய்வேன், சமர்த்தராயினும் கற்று ணர்ந்த பெரியோர் சொற்கடக்குஞ் சமர்த்தர்யாருளார்? யானிப்போதே அதிவிரைவில் அரச குமாரர்களாகிய இரா மாதிகளினது மனத்திலிருக்கப்பட்ட அநு ஞானத்தை ஞானத்திலுலே, தீபத்திலுலே இரவினிருளை அகற்றுவதே போல அகற்றுவிபபேன்; அஞ்ஞானததை நீக்குவதிலும் ஞானத்தை யாக்குவதிலும் யாதொருதடையுமே கிடை யாது. நிடத மலையின்கண்ணே சம்சாரமயக்க நீங்கும் பொருட்டு முன்னர் என்தந்தையாகிய பிர்ஹமாவினுல் எந் தஞானமானது உபதேசித்தருளப்பட்டதோ அவையாற் றையுமே சிதமுமற் கிரந்தத்தோடும் அர்த்தத்தோடும் ஸ்மரித்துக்கொண்டே யிருக்கின்றேன்; அபரிச்சின்னமா தலினுனே பூர்ணமாக எந்தஞானசொரூப ஆத்மதத்துவ முளதோ அதை நிரந்தரம் அனுசந்தானஞ் செய்து கொண்டே யிருக்கின்றேன். இந்த மகாத்மாவாகிய பூரீ வசிஷ்ட பகவான் இந்தப்பிரகாரம் வெளிபபடையாகப் பிரதிஞ்ஞையைச்செய்து, சூரனும் நடனும் ஆயுதாதிகளைத் தரிததல் பூடணாதிகளைப் பூணன்முதலிய சாமக்கிரிகளைச சேர்த்துக் கொண்டு இனிதாகவிளங்குவதேபோலச் சீட னுக்கான்மஞான மெளிதிலுண்டாவதற்காக வேண்டிய உபாயங்களான திருஷ்டாந்தம்கதை பிரமாணந் தருக்கம் முதலியவற்றின் அனுசந்தான உற்சாகாதிசாமக்கிரிகளைச் சேர்த்தலானே உபதேசஞ் செய்பவர்களின் மிகுந்த அழ

கைக்கொண்டு இனிதாக விளங்குபவராய்ச் சுகததிலுள்ள சர்வப்பிராணிகளின் அறியாமையினது வேரைபபிடுங்குவ தும் பரமபதத்தை முக்கியமா யறிவிப்பதும ஆகிய இந்தச் சாஸ்திரத்தைக் கூறத்தொடங்கினர்,

ஓமசுவஸ்தி. ஸ்ரீகணேசாயநம: பூர்வப் பிரகரணத் தானே நிக்யாநித்திய வஸ்துவேகத்தினின்றுமை வைராகதி யம் சமாதியங்குரபீஜம் முமுக்ஷுபல பரியவசாயி முக்தி யத் தன்மையானே பிரதிபாதிக்கப்பட்டது; இப்போது முமுக்ஷு விவகாரம், சமாதி இங்ஙன் செய்யற்பாலதா மென்பதை யுடைத்தாய், மனனநிதித்தியாசன அங்கமு டைத்தாய். சிரவணவடிவ உத்தரப்பிரகரணததால் அறை யப்பெறுகின்றது; பிரசங்கத்தால் வந்ததுஞ சிறிதுசிறிது. ஆண்டுமுதற்கவியிலுலே தைவாதீனம் சர்வம பௌருஷம வியர்த்தம ஆகலின் விசாரவிஷயப் பிரயத்நபரத்தன்மை யைப் பற்றலாகாது எனப்பகாந்துகொண்டு திரியும படிப் பானிகளின் சங்கையாகமத்தை நிமித்தமாகக்கொண்டு பரி கரிக்கின்றார் ஸ்ரீ வசிஷ்டபகவான் முன்னுற்ற யாவற்றை யும் அனுசந்ததுப பாாத்து விஸதாரமாக அவற்றை யுபதேசிக்க விரும்பிச் சற்குருவின்றியானவடிவ மங்கலத் தைச செய்துகொண்டும, வித்தையின் சம்பிரதாய சுத்தி யைக் காண்பிததுக்கொண்டும, சீடரை யொருமைப் படித்திக்கொண்டும், முன்னர்ச் சிருஷ்டியிறுதியில் என் றந்தையாகிய பிரஹமாவான பகவானல் யாவருக்கும் சாவசம்சார துக்க உபசாந்தியின் பொருட்டு எந்த ஞான சாதனமான சாஸ்திரம் அருளப்பட்டதோ அவ்விதையே கூறுகின்றேன் கேளென்கின்றார். சமைதமை முதலிய சாதனசம்பத்தோடுகூடிய சுகர் முதலியோருக்குச் சிர வணம பலிதமாம் இப்போதுள்ள மற்றையர்கட்கு யாங்ங

னம் அதுபலிக்குமெ, சாதனஞ் சமபாதித்தல முடியாத காரியமன்றேவெனின்? எனிதென்கினமூர்.

புருடமுயற்சியாற் சாதிக்க முடியாத தொன்றில்லையாம், இசசமசாரத்தின் கண்ணை எபபோதுமெ எலலாராலும் விடாதவுட்டிக்கபபடட புருடமுயற்சியினல் எல்லாப் பொருள்களுஞ் அடையபபடுமெ. யாவராலும் எபபோழ்துமெ யாவுமே அடையப்படுமேலாயின் எங்ஙனஞ் சிலவிடத்தில முயற்சி பயன்படாமற் போதல்கூடுமெ? விடாமுயற்சி வேண்டுமென்றுணர வேண்டுமெ, வேண்டவே யுபேக்ஷிக்காமன் முயலிற் கூடாதகாரிய மென்னே! முயற்சியானதுாண்டே யவசியமெ முக்கியமாகிப் பலன்றரும், தெய்வமானது முயற்சியினும் வேறுகவோ இன்றுமெ, இலதாகவே முயற்சிக்குவேறுகத் தெய்வதத்தின் இன்மை, தெய்வத்தினுமெ முயற்சிக்கு முக்கியதத்தன்மை, முயற்சியினனே புருஷார்த்த சித்தியுண்மை யென்னுமியாவற்றையும் உலகங்களானே யுணாத்துவான் முயற்சியை யிருவகைப்படுத்துவார, எவ்வாறு எவன் முயல்கின்றனனோ அவ்வாறு அவன் தன்கருமத்ததேய அனுபவிகின்றனன், தெய்வதத்தாலுபய விபரீதத்தன்மை வரலாமேயெனின்? முன்னியற்றிய கருமமே பலத்தைக் கொடுக்கவந்தபோது தெய்வமெனப்படுகின்றது, அதனினுமெ அயலாகத் தெய்வமெ காணப்படவில்லை. இன்னுந் தெளிவாகக் கூறுங்கால் சாஸ்திரத்தைக் கடநததும், சாஸ்திரத்ததைத் தொடர்ந்ததும் என முயற்சியிருவிதமாகக் கூறப்பட்டுளது அவற்றுண் முதலது அநர்த்தத்தின் பொருட்டும், மற்றது பரமாத்தத்தின் பொருட்டுமெ ஆம்; ஒருகாற் சமமும் சமமின்றியுமாம் இருக்கும் மூந்தியதும் இகத்ததும் இரு கடாய்கள்போல வலுத்தது வெற்றியுறும், சாஸ்திர நியம நன்முயற்சியால் மூந்தியதை மாற்றலாம். இலேப்பில்லையாயின் அந்தியத்தில் அதைச்

செய்யலாமே இப்பொழுதே யதனை லாகவேண்டிய தன் னெனின்? பாலிய முதற்கொண்டு மிகமிகவும் பயின்ற நன் னூல் நற்கூட்ட முதலிய குணங்களுடன் கூடிய புருடமு யற்சியால் அதன்பயன் இனிதாக அடையப்படும். விரை வில் செய்யப்பட்ட மிருதுவான இளமுட்போன்ற வற்றுற் பயனின்றும், இவ்வண்ணம் எம்போன்ற ஜீவன் முக்தர் களானே கண்கூடாய்க் காணப்பட்டது அனுபவிக்கப் பட் டது கேட்கப்பட்டது சாதனங்களாற் சாதிக்கப்பட்டது அதனைத் தெய்வத்தா லடைந்தோ மெனல் வேண்டும்.

வாசனையின் பரதந்திரவயப்பட்டதானே சுதந்திரப் பிரவிருத்தி கொண்டுதற்பயனும் பொருள் நன்கடைவான் முடியாததாக விருக்கின்றது அம்முயற்சி நினக்குச் சுபத் தைத் தருவதாக ஆகுகவென ஆயினும் முன் வாசனையின் பரவசனாகிய எனக்கு இப்போது சுதந்திரத்தன்மை சித்தி யாதாம் எனல்.

ஹே பகவன்! பழையவாசனையின் கூட்டமானது என்னை யேவுகின்றபடியே யிருக்கின்றேன், தினமுகிப் பரவயனையான் என்ன செய்வேன் இப்பொழுது பலத்திற் சுதந்திரமில்லாமை யுளதாகுக, வருங்காலத்திய பலானு கூலமாய முயல்வீலோ, சுதந்திரமே யிருக்கின்றதாம்; நல்வித்தையை யடைவுற்ற பிறப்பா லனுமிக்கப்பட்ட நன்முயற்சிப் பிராரப்தபலத்தோடு கூடிய பூர்வ வாசனைக் குத் தனது விரோதியாய பலமாத்திரத்தைத் தடுக்குந் தன்மை யிருத்தலின், அவனதிகாரப் பிறப்பின் கண்ணும் அவன் பிரவிருத்தி சுதந்திர மில்லாவிடில் கருமத்தையும் பிரஹ்மவித்தையையும் போதிக்குஞ் சாஸ்திரமும் வீண் யன்றேபோம், எனக்கருதிக் கூறுவார் அற்புதனே யென்றூர். அதிகாரி ஜன்மஹேதுவான வாசனையி னுத

ஷியானே நீ சாசுவதமான மோகூஷத்தை யடையப் போ
கின்றாய், அதுவும் உனது பெருமுயல்வினானே யுண்டாய
ஞானத்தானே யல்லாமல் வேறுவழியாக இல்லையாம்,
வாசனையின் சகாயமோ ஜன்ம விவேகசம்பத்து விசேஷ
ணத்தினாலே யனுமித்துக் கொள்ளலாமல்லவா! கூறிய
பொருளை நன்றாயுணர்ந்து கொள்வான் வாசனையின்
பிரிவை விரும்புதல் சொற்பயில் என்பது. வாசனைக்கூட்டம்
சுபமெனவும் அசுபமெனவும இருவகையாம, உனக்குப்
பழைய வாசனை சுபமா ? அசுபமா ? சுபமும அசுபமுமா ?
உளது.

இவ்வாசனை யிருபபின் இபபயன் ஆமெனவும்
இவ்வாதனையை விருத்தி செய்யவேண்டு மெனவும்
கூறுகின்றார்.

புருடார்த்த ஹேதுவாய சுபவாதனையையே அனு
சரிப்பாய், கூறிய இரண்டனுள் சுத்தவாதனையின் கூட்டத்
தானே யேவப்படுவையேல் இப்போது அமமுறையாகச்
சுபத்தினானே அழியாத பதத்தை யடைவாய். மற்றதே
லோ, சுதந்திரமாக வாதனைகட்கு எழுசசியோ கிடையா
தாம், மற்றை வெளிப்படுத்துவதன் வாயிலாகவே யெழும்
அசாதுக்களுடைய சங்கமத்தானே தெய்வத்தால் அசுப
வாசனை யொன்றெழுந்து உன்னை மகாசங்கடத்தில் அழுத்
துமாயின், அதையும், அதற்கு விரோதியாய சாதுசங்கஞ்
சற்சாஸ்திர முதலியவற்றின் றிடசேவையானே விரோதி
வாசனையைக் கிளப்பி விரைவில் தூரத்தே தள்ளித் திரஸ்
கரிக்க வேண்டும். முயற்சியினற் கிடைத்த பலத்தால்
வசியம் வெற்றி கொள்ளலாம். " எவன் மனத்திருந்தும்
அம்மனத்தயலாம், எவனை மனந்தான் அறியாதாமோ,
எனமனதின் பிரேரகமாய பிரஞ்ஞாத்மா அன்னிய மென

வே கேட்கப் படுகின்றமையின் அதனதீனமாகவே மனே வாசனை யுற்பவமாங்கால் யாங்ஙனம் எனக்கு நல்லவாசனை யுண்டாக்குஞ் சுதந்திரங் கூடுமெனின் அறிவுமாத்திர இயற்கை வாய்ந்த பிராஞ்ஞனெனப் படுமதுவே நீயாவாய்; ஜடவடிவமாய சூக்குமதூல தேகங்கள் அன்னியனுய்விடுமாறு நீயாகாய் "இதனினும் வேறுய்க்காண்போனின்றும, அதுவே நீயாயமர்ந்தனை" என்பதாதி சுருதியுமிதையேயன்றே கூறுகின்றது. ஆதலின் இவ்வாறு சின்மாத்திர சொரூபமாயிருக்கு நினக்கு அன்னியமாய சேதனதாலறியபடுந் தகைமை எவ்வாறு கூடும்? பிராஞ்ஞன் உன்னினும் அன்னியன் ஆவனேலாயின் சித்திற்கு மற்றொருசித்தால் ஒளிர்தல் கூடாமையின் உன்னபபாராமல சர்வஞ்ஞமேயது ஆகாதாம ஆதலின், நீயேயதுவென மாற்றிக் கோடலானே ஒருமையானது சித்திக்கும். அன்னியத்தால் நீ விளக்கப்படுவையேயாயின் உனக்குச் சேதனத்தன்மை எங்கேயிருக்கும், சித்தாலொளிர்வதற்கு வந்தடையும ஜடத்தன்மையை நீக்கலுமேலுமோ? சித்திற்கு வேறுசித்தால் விளங்குதல் கூடுமேல் அதுவும் அன்னியத்திற்கு விடயமாம, ஆகவே எல்லையில்லாது செல்லுந் தோடமுமாம், அன்னிய முன்னேயறியுமேயாயின் அது தனையறிவது யாதோவேறு? அவ்வறிவதையு மறிவதுயாதோ? அதற்குமயலதேல் அநவஸ்தையாகும், அதுவும் உண்மையாக மாட்டாமல் வஸ்துசித்தியைச் செய்யாதாம, ஆகவே உனக்குச் சத்வாசனையை வெளிக்கிளபபும முயல்விற் சுதந்தரத்தன்மை தடையற்றதே யாகும். புருடசுதந்தரத் தன்மையின் முக்கியத்திற்குப் பயனென்னெனின், சுப அசுபங்சுளாகிய வழிகளில் பெருகிவரும் வாசனாநதியை முயல்விஞலே சுபவழியிலேயே திருப்பிவிட வேண்டும். வீரியவான்களுக்குள்

மகாவீரிய! அசுபங்களிற் றிரிந்துகொண்டிருக்கும் உனது மனதை முயற்சியின் வலியிலுலே சுபங்களிலேயே புகுத்த வேண்டும், சுபங்களில் அவதாரணப் பொருட்டுத் தகுதி யைக் காண்பித்துக் கொண்டு கூறியதையே நிகமனஞ் செய்யும் பொருட்டுச் சித்தமாய நதியானது புண்ணியத் தின் பொருட்டும் பாவத்தின் பொருட்டும் என இருவகை யாய்ப் பிரவாக முற்று வருகின்றது, அவற்றுள் ஒருதா ரையைத தடைப்படுததின் மற்றதன்கண்ணிருமடங்காகப் பெருகும் என்னும் யோகசாஸ்திரத்தின் கூற்றை யனு சரித்துக் கூறுவார் மேவிநிற்பாய் என்றார். அசுபத்தினின் றும் நீக்கியது சுபத்தைதச் சென்றடையும், சுபத்தினின்றும் நீக்கியது அசுபத்தைதச சென்றடையும், ஜந்துக்களுடைய சித்தமானது சிசுக்களைப் போலாகும், ஆதலினதனை யசு பத்தினின்றும் பலமான முயல்வான் நீககவேண்டும் என் பதாம். சுபவிடயம் பௌருடத்தை யபேக்ஷியாமலே சுய மாகவே அசுபத்தினின்றும் மனத்தைச் சலிப்பிக்கும் ஆக லின் பௌருடம் வீண்போமோ வெனின் போகவே போகாதாமெனக் கூறியதாயிற்று.

சித்தமானது சிசுப்போல விருக்கின்றபடியிலுலே அதற்குத் தக்க அடக்குமுறை காட்டுகின்றார்.

இவ்வாறு கூறியமுறையே சித்தபாலகனை விறை விலே இராகாதி விஷமததன்மையை விடும்படி செய்வித்து இயர்கையாய சமத்தன்மையின் கண்ணே குற்றமற்றிருத் தலைச் சம்பாதித்துப் பையப்பைய ஆன்மசொரூபத்தில் நிரோதவடிவ முயல்வாற் காக்கவேண்டும். விரைவிலே அடமாக நிரோதிக்கக் கூடாது. எழுச்சியாற் சமாதானத் ஙதயடையாது போய்விடும், அவ்வாறு கூடாது; அவ் வாறே ஸ்ரீ பகவத்வசனமும் “ ஒண்டயிரியங்கவருணர்

விஞற்பையப்பையவுபரமந்தனைச்சேர்க” இதன்கட்பிரமா
ணமாகும். உன்னுன் முன்னர்ச் சுபவாசனைக் கூட்டத்
தையேனும் அசுபவாசனைக்கூட்டத்தையேனும் முயல்வின்
பயில்வாற் பெரிதாகச் சேர்க்கப்பட்டிருந்த போதினும
இப்போது சுபத்தையே பெரிதாக்க வேண்டும். முதலிற்
பலமானது விரைவிற் கைகூடவேண்டியாம், இரண்டாவ
திற் பகையைத் தடுக்கும்பொருட்டுச் சுபவாசனை யவசியம்
வேண்டியதேயாம், வாசனையின் பயிற்சியானது பயனற்
றுப் போமென்பதாகச் சங்கிக்கவேண்டியதில்லை, பூர்வவா
சனைப் பயில்வுகளிற் பிரத்தியக்ஷமாகப் பயன்சித்தித் திருத்
தலின், வேற பகைவரைவெல்வோய்! முன்முயற்சியின்
பலத்தால் உனது வாசனையானது மிகத்திடத்தை யடை
வுற்றபோதே பயிற்சி பயனேடு கூடியதென்றறிந்துகொள்
ளலாமல்லவா, அவ்வாறே யிப்போதுங்கூட உனது வாத
னையானது பயில்வின் வலியால் அதிதிடமாம்; ஆதலின்,
சுபப்பயிற்சியையே செய்வாயாக பழையவாசனை பருத்தி
ருந்தபோதினும் ஐயபபாடுண்டாயிற்கேட்பாயாக, உனது
வாசனை பூர்வமபயிற்சியில் திடதத்தன்மையை யடையாதி
ருகுகும் பக்ஷத்தி லிபபோதுமம, அது வளரமாட்டாது நீ
சுகமாகவே யிருக்கலாம்; தக்கபடி சுகமாகவே விவகரிக்க
லாம் ஆகவே துர்வாசனை வளர்தலானே யுண்டாகும்
அநர்த்தஞ சமபவிக்கு மெனத் துக்கிக்க வேண்டிய துனக்
கில்லை; ஆயின் சுபவாசனையை வளர்ப்பதில் என்னேயென்
ஏவுகின்றீர் எனின், ஐயத்தை யடைந்தபோதினும், அத்தி
யந்தம் சுபவாசனையையே வளர்பபாயாக, நல்லொழுக்கங்
களைப் பழகிவருதலால் இச்சுபவாசனையை விருத்தி செய்த
லானே யாதொருகேடும் வராதாம். “ நல்ல தீயபயன்
றனை நாடிடு, மெல்லையை யுறினுஞ் சுடமேயியல், வல்லனில்
லெனில் வந்ததுயாதுகொ, னல்லனுண்டெனி னுத்திகன்

பொன்றினன்'' என்னும் நியாயத்தையும் கண்டுகொள்க. ஆயின் எவ்வளவுகாலம் சுபவாசனையைப் பயிலவேண்டு மெனின், விற்பத்தியோடு கூடிய மனத்தனகாமற் பரமான்ம பதத்தை யறியாதிருக்கும்வரை அதாவது தத்துவஞானம் வரும்வரை குருசாஸ்திரப் பிரமாண யுக்தி யனுபவங்களான் நிர்ணயிக்கப் பட்டதை யாசரிக்க வேண்டும்

தூயவாதனை பலப்பட்ட பின்னரிவ்வாறிருந்து சுகிப்பாயென்கின்றார்.

மநுஷ்யவிசாரவிடய ஆதரமுற்ற சமரசத்தன்மையும் ஆன்மாவின் கண்ணோ நிலேபறுடைமையும நெருசிலுண்டாகு மாறுசெய்தி. ஆடையிற் சேர்ந்த அழுக்கானது வெள்ளாவி வைத்தல் சாரமண்ணிடல் முதலியவற்றுனே தீர்தல்போல இராகாதி வாசனைக் கஷாயங்களெல்லாம் நீங்கபபெற்ற பின்னர் ஆன்மஸ்துவை யறிந்தவனுகிச் சகலதுயரங்களும் நீங்கப்பெற்றுப் பூர்ணமாகவிருக்குமுன்னுல் நல்வாசனைக் கூட்டமும் விடாததக்கதே யாகும். அவ்வாறே மிருதியும ''பக்குவங்கஷாயம் படவேவினைகளாற் பக்குவவுணர்வுபின் பவித்திடலாமோ'' எனக் கூறுகின்றது. கூறியபொருளையே சுருக்கி யுபசங்கரித்துக்கொண்டு ஆசரிக்கதக்க சுபத்தை யுபதேசிப்பார்; மகாமங்களமாயும் பெரியோராற் பேணப் பெற்றதாயும் இருக்கும் சுபவாதனையை யனுசரித்து அதனை யடைவுற்ற மதியினுனே எப்போதும் சோகமற்ற பரமார்த்த வஸ்துவைச் சாகூதகரிப்பாயாக: அதன் பின்னர் அச்சுபவாசனையை யனுசரித்தலையும் விட்டுப் பரமானந்த மாகவே சமூசாரவாதனையை மீண்டுங் கவராதபடி உள்ளே விடுத்துயிருத்தி உதாரமான மதியினுலே ஞாந்திவைராக்கிய சுகத்தை நிறையக்கொண்டு க்ருமகாண்ட சுருதிகள், உபாசனபரசுருதிகளின் ஞான

சாதகத் தன்மையைக் காண்பிப்பதும அவ்விடையங்களாற் கெடுக்கப் படாததும், ஆன்மாவின் கண்ணே யுதித்த னத்தை யுடையதும் குருசாஸ்திர முபதேசித்த கிரமமா கக் கிடைத்த சுவானுபவத்தையும் ஏகரசதையும் சம்பா திப்பதும் சுகதுக்கங்களைக் கெடுபபதும் பேராநந்தத்திற்கு முக்கிய காரணமாவதும் மோக்ஷத்திற்கு முக்கிய சாதன மாயதும் ஆம் இவ்வியம்பும் மகாசங்கிதையை மனவொரு மையுடன் கெட்பாயாக எனத்தொடரும் அதனைக் கேட் பதில் மந்த விரக்தனுக்கும் அதிகாரம கிடையாதெனக் காட்டுவார்.

சர்வ விவேகிகளோடும் இம்மோக்ஷ கதையை நீ கேட்டு என்றும் அழிவேயில்லாது துயரஞ சிறிதுமில்லாத பரமபதத்தை யடைவாயாக வென்றிவ்வாறு அநகசகித மாகச் சிரவணத்தைக் கூறியபின் கேட்கத்தக்க சாஸ்தி ராதிகள் இல்லையென்பதைக் குறித்து அஃதுண்டான பிரகாரத்தைக் கூறுகின்றார்.

கற்பத்தின் ஆதியில் பிரஹ்மாவாகிய பரமேஷ்டியால் எல்லாத்துயரங்களையு மெரிப்பதும் மதிக்குப் பரமசமா தானத்தைச செய்விபபதும் ஆகிய இஃதியமபப்பட்டது என்று ஸ்ரீ வசிஷ்டபகவான் கூற, ஸ்ரீ வசிஷ்டபகவா னுடைய அபிப்பிராயத்தைத் தொடர்ந்து அறியும் அவா வுற்று, முன்னர்ச் சுயம்புவால் இது என்னகாரணத்தானே கூறப்பட்டது? எங்ஙனந் தங்களா லடையப்பட்டது? இதனை யடியேனுக் குரைத்தருளல் வேண்டும் என்று ஸ்ரீ ஜராகவர் பிரார்த்திப்ப ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறுவதா வது:—ஆண்டாதியில் பரமேஷ்டியின் ஜன்மத்தைக்கூற அவர் மூலகாரணத்தைத் தெரிவிப்பார். அநந்தமாயிக விலாசங்களின் அதிஷ்டானபூத ஆன்மாவுளது, அது

யாவற்றினும் அயலாயுள்ளாயிருப்பது, சருவாதாரமாயது, மாயை யதன்காரிய மியாவற்றையுங் கடந்தது, பிரத்தியக் குச சித்திரூபமாய் நித்திய அபரோகூஷமாகி எல்லாப் பிராணிகளினது இருதயத்தி லொளிர் விளக்காயிருப்பது, சிதம்பரமா யிருபபது அழிவிலா வடிவமுற்றதுமாம். மாயை யதன்காரியங்கள் அசையுமபோதும் அசையாத போதும ஒரே ஆகாரமா யிருப்பதும் ஒரேயியற்கையா யிருப்பதும் ஆகிய நிர்விகார அதனினின்றும சர்வகாரியங் களிலும் வியாபித்திராநின்ற பிரஹ்மாண்ட வடிவமாய விராட்டுளென்னும் விஷ்ணுவானவா சூக்குமபூதச் சிருட்டிக் கிரமமாக பெருகிவராநின்ற நீர் நிறைந்த அசைவு அசை வின்மைகளிலும் அழியாத ஒரே நீரியற்கையை யுடைத் தான கடலினின்றும அலையுண்டானதே போல உண் டானார். நிர்விகாரத்தி னின்றும் உலக உதயம் விவர்த்த ருபம் ஆகுமேயல்லாது பரிணமமாக மாட்டாதாம் மேரு கிரியைக கர்ணிகையாகவும், திசைகளைத் தளங்களாகவும். நக்ஷத்திரங்களைக் கேசரங்களாகவும உடைத்தாகி விளங் காநின்ற அவருடைய இருதயதாமரைபி னின்றும் பர மேஷ்டியானவருண்டானார். வேதவேதார்த்தங்கள் யாவற் றையுமுணர்ந்து தேவமுனி மண்டலங்களா லலங்கரிக்கப் பட்ட அவர் எல்லாப் பிராணிக் கூட்டங்களையுங் மனது விகற்பக் கூட்டத்தைச் சிருட்டிப்பதே போலச் சிருஷ் டித்தார்.

ஜம்புத்தீவின் ஒருகோணத்தில் பாரதவர்ஷமெனப் பெயர்பெற்ற இதன்கண் தேகவியாதி மனவியாதிகளாற் கஷ்டப்படும் ஜனக்கூட்டங்களின் பரம்பரையை நோக்கி யின்னது செய்தாரெனல்.

சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள், இலாப நஷ்டங்களான் மகிழ்வு கவலையுற்ற மனத்தை யுடையவர்களாகவும், உண்

டாகி யழிந்துகொண் டிருப்பதிற் றற்பரர்களாகவும், அற்ப வாழ்க்கை யுடையவர்களாகவும, திரிந்துகொண் டிருக் கும் இப்பூதஜாதிகளின் சிருஷ்டியிற் பற்பல விதமான விஷயபோக விசனங்களா லவதிப்படும் பிராணிகளின் றுயரைப் பாரத்துச் சகல லோகங்களையும சிருஷ்டித்து எல்லாத்துயரங்களையும் நீக்கும் சமர்த்துடைய அவர் மைந்தன் றுயரைநோக்கி யிரங்கும் தந்தையைபோலக் கருணையினல் இரங்கினர். ஆசையாற் கெடுக்கபட்டு அற்ப ஆயுளோடு கூடியிருக்கும் இவர்களுடைய துக்கத்தின் நீக் கத்தின் உபாயம் எஃதாமெனக் கணப்போது ஒருமை யோடு கூடிய மனத்தராய்ப பூதியின் பொருட்டுச சிந்தித் தனர். முதற்சுத்தி சாதனமாகச் சிருட்டித்தது யாதெ னின், ஈசுரராய அவர் இவ்வாறு இனிது சிந்தித்துச சுயம் தவத்தையும் தருமத்தையும் தானத்தையும் சத்தியத்தை யும் தீர்த்தங்களையுமே சிருஷ்டித்தனர், இவற்றைச் சிருஷ் டித்து மீண்டுமெ பிராணிகளைப் படைக்கும் பிரமதேவர் நம் மாற் சிருஷ்டிக்கப்பட்ட புருடர்கட்குத் தவமுதலியவற் றுனே வேரோடுந் துயரமாயவில்லையெனத் தாமே சிந்திப பாராயினர். ஜீவன் எதனன் மீண்டுபிறப்பதும் இறப்பதும் அற்றிருப்பாரே அத்தகைய பரமசுகவடிவ நிர்வாணபதம் ஞானத்தாலே கிடைக்குமெ; சமுசாரத்தைக் கடப்பதில் ஜந்துக்கட்கு உபாயம் ஞானமேயாம, தவந்தானந் தீர்த்த முதலியவை உபாயங்களல்லவென, "திரமா மருத்தத்தி னன் மைந்தராணுந் தீராது கருமத்தினுலும்" "மகடிவான வங்கங்களாமிவை" புகுதிறமற்ற திறத்தனவேயாம்; என்ப தாதி சுருதிகளிற் கூறப்பட்டுள்ளன. ஆகையால் ஆண்டு துயரைத் தொலைகவேண்டித் தன்னைமறந்து திரியும பிரா ணிக்கு நவமாய்த் திடமாயிருக்கும் தாண்டு முபாயத்தை விரைவில் வெளிபடுத்தாநிற்பேன். தாமரையின்கண் வீற்

றிருக்கும் ஸ்ரீ பகவானை பிரஹ்மாவானவர் இவ்வாறு சிந் தித்து உன்னெதிரிலிருக்கு மிவ்வென்னை மனத்திறற் சங் கற்பித் துண்டாக்கினர்; அநிர்வசநீய மாயையின் வயத் திறலே யுபாதியுற்பத்தியா யுண்டாய யான் விரைவில் அலையினிடத்தி னின்றும் மீண்டோரலை யுண்டாவதே போல விரைவிற் பிதாவின் சந்நிதியி லடைந்தேன் ஜப மாலையையும் கமண்டலத்தையும் கையிற்றரித்திருக்கும் நாதராகிய பிரஹமாவானவர் ஜபமாலையோடுங் கமண்ட லத்தோடு மிருக்கப்பட்ட என்னில் வணக்கத்துடன் நமஸ் கரிக்கப்பட்டனர்.

அவ்வாறு அவதரித்த தங்கட்குற்றது யாது உப தேசித்த தெங்ஙன் எனக் கூறுகின்றார.

வந்து நமஸ்கரித்த வென்னைப் "போமைந்த" வெனக் கூறித் தாமிருக்கும தாமரையின் வடதளததில் வெண் மேகம, சந்திரனை விடுவதேபோலத் திருக்கரத்தால் என் னையுட்காரப்போகச் சொன்னர். மான்மழுவைத் தரித்திருக் குந் தந்தையாமவா மான்மழுவ வஸ்திரமாகவுடைய என் னைப் பார்த்து நல்லன்னமான தது சாரசப் பக்ஷிக்குக் கூறி யதுபோற் கூறியதாவது; ஹேமைந்த! நினதுமனைத் ஒருமுகூர்த்தம் வரை குரங்கைப்போலச் சஞ்சல ஹேது வாய அஞ்ஞான மானது சந்திரனைக் களங்க மடைவது போலடைக. இவ்வாறு தந்தையால் விரைவிற் சபிகைப் பட்டுப் பரமேஷ்டியினுடைய சங்கற்பத்தின் பின்னர், அதோதா ஆச்சரியம் பூர்ணநிர்மல சொரூபத்தை மறந்த னன் யான். பின் பொன்னைப் பறிகொடுத்தவன் போலத் தினத்தன்மையை யடைந்தேன், போதமற்ற புந்தியோடு மிருந்தேன், தனமற்றவன் போலத் துக்கசோகங்களாற் றபிக்கப் பட்டவனானேன். அந்தோ கஷ்டம்! சமுசார

மென்னு மித்தோடம் இங்கெங்ஙனமப்பா வந்தது, என இவ்வாறு சும்மாவே யாதொருதொழிலையும் செய்யாமலிருந்து கொண்டுள்ளே சிந்தித்தனன்; பின்பென்பிதா என்னைநோக்கிக் குழந்தாய்! துயரமடைந்தனன் போலிருக்கின்றயே அஃதென்னை துயரம் நீங்குமுபாயத்தைக் கேட்பாயாக! அதனைனித்தியம் சுகியாகவே யாவாயெனக கூறினர். அதன்பின் சகல லோகங்களையும் சிருஷ்டிக்கும் பிரஹ்மாவை வணங்கிப் பொற்றுமரைதளத்தி லிருந்த யான் சமுசாரநோய்க்கு மருந்தை ஹோதரே! மகாதுக்கமயமாகிய சமுசாரம்எங்ஙனம் வந்தது? பிராணிகட்கிது எவ்வாறு நீங்கும்? என வினவினேன், வினவியவளவில், எதையறிந்து தந்தையினுடைய சர்வ உற்கிருஷ்ட தத்துவஞானம்போல நிர்மலபரிபூரண இயற்கையனை யிருந்தே னை அத்தகைய பரமபவித்திரமாகிய ஞானதையநதோ ஆச்சரியம! அதி விஸ்தாரமாக என்பொருட்டருளினர். சமபிரதாயத்தானே கிடைத்த ஞானத்திற்கே முதியீயுந் தன்மையாமன்றி மற்றவற்றிற் கின்றும என்பதைக் காட்டும் பொருட்டும் பிரஹ்மவித்துக்கு லோகானுக்கிரகம் விட்டு வேறுசெய்யற்பாலது இலதாம் என்பதை யறிவித்தற் பொருட்டும், புருடார்த்த சித்தியின் கண்ணே பாரத வருடத்திற்குப் பிறவற்றினும சிறபபுளதாக தன்மையைத் தெரிவிததற் பொருட்டும், கூறினர்.

ஸ்ரீ வசிஷ்டபகவானைப் பார்த்துப் பிரஹமதேவர் செய்ய வேண்டிய பணிவிடையைக் கட்டளையிடல்.

அருளியபிறகு அறியவேண்டியதை யறிந்து உண்மையான இயற்கை நிலையிலிளைப்பாறும் என்னைநோகாகி அந்த உலககர்த்தாவாயும் ஆசிரியராயும் இருக்குந் தந்தையாகிய பிரஹமதேவர் சகலகாரணத்தையும் கூறியருளினர். சாபத்

தால் அநுநுபதத்தையடைந்து வேற மைநத ! இந்த ஞானத்தினது சாரத்தை எல்லா அதிகாரிகட்குமஞானஞ் சித்திக்கும் பொருட்டு நீ வினவுமாறு யாமேசெய்தனம: இப்போது நீசாபந் தீர்ந்தவணுகி, கனகம நெடுங்காலம களங்கப்பற்றுற் கனகமல்லாததே போலடைந்து மீண்டும் புடம்போடலானே முதற்போதிருந்த சுத்தகனகத் தன்மையதாகவே யிருப்பதே போலப பரமஞானததை யடைநது அகண்டானநத ஆன்மவடிவமா யெமபோல இருக்கின்றனை. இப்போது உலகத்திற் கணுக்கிரகிக்க வேண்டிய காரணம் பற்றிப் பூமியின்மீது சம்புத்தீவின்கண் ணிருக்கும் பாரதவருடத்திற்கு நீசெலவாயாக. ஆண்டு, மகாமதியையுடைய நீ முறையே செல்பவணுதலின் கரும காண்ட தற்பரர்கட்குக் கிரியா காண்ட முறையாகவே உபதேசம் புரிவாயாக, இவ்வாறே "வினைகருமந் தொடர் வெண்மை மிக்கார்த முளமயலியற்ற லுரித்தன்றுமால்" என்னும் நியாயமுமுளதாம்; விரக்தமனத்தரும சூகுமப் பொருளைக்கவருஞ சமாத்தரும, மிக ஆராய்ச்சியோடு கூடியவரும்ஆய அதிகாரிகட்கு நீ ஆனந்தத்தைத கொடுக்கும ஞானத்தை யுபதேசிப்பாயாக.

கற்பபரியநதம கருமபூமியி லிருக்கவேண்டியதானது, குருவாக்கியததைப் பரிபாலனஞ்செய்யுந் தங்கட்கு உலக அனுக்கிரகப் பொருட்டே கேவலம் ஆவதில்லை, மற்றுஞ் செய்யவேண்டியதின் சேடமும் செய்தற்பொருட்டுமாம்.

அநுநுரைப் போலத தங்களுக்கும் காரியங்களில் பிரவிருத்தி காணைப்படுதலின் எங்ஙனம தாங்கள கிருதகிருத்தியராக முடியும எனின் பரமசாந்தமாய் இஷ்டம் அநிஷ்டம எய்துங்காலத்தில் மகிழ்ச்சி வாட்டமற்று எப்போதும துயின்ற பிரஞனைஞையையுடைய விருத்தியானே நிகழ்

ந்து பரமார்த்த திருஷ்டியால் பிராதிபாசிக திருஷ்டியால் காரியதனைச செய்துகொண்டிருப்பேன், பிரஞ்ஞை துயிலுதலாவது, சத்திய அத்வைத விஷயத் தன்மையை யுடைத்தா யிருத்தலாம். இவ்விடயம் ஸ்ரீ உபதேச சகஸ்திரியிலும ஸ்ரீ மதாசாரிய சுவாமிகளாலும அறையப்பெற்றுளது.—துவிதத்திற்கு பாதிதத்தன்மை யுண்மையினயாவன் நனவின்கட் டுவிதத்தைக கண்டுங் கண்டிலனேனு துயில்பவனைப்போ லொன்றுங் காணது, அறிவாகவே காண்கின்றனனேனு அங்ஙனமாக யாவன்பயிக்காதி செய்யினும் நிஷ்கிரியனேனு அவனே ஆத்மவித்தாம் அன்னிய னன்றென நிகமாந்தங்களில் நின்மல நிசசயமாம, மேன்மிழற்றிய ஆன்மவித்தின் சொரூபங் கூறுவார். துயில்பவனென்றார். நனவின்கண் = விசுவ அவஸ்தையின் கண், துவிதத்தை = துவைதப் பிரபஞ்சதனை முன் வாசினவயத்தாற் கண்டும் = விவகரித்துமம, விசேடமாகக கண்டிலன் = விவகரித்திலன். மற்றோ, துயில்பவனைப்போல, எல்லாவுலகங்களையும் பிரத்தியக்காதமாவில் இலயஞ செய்து தான்மாத்திரமே யிருப்பதாகக் காண்பன். அதன்கண் ணைதுவறைகின்றார்:—துவிதத்திற்கென. அத்வயத தன்மையினனே யென்பதாம். அங்ஙனைகவே முன் போலவே முழுக்கு சௌச பிக்ஷாடனாதி செய்தபோதினும், நிஷ்கிரியனுவன் = நிர்விகாரனுவன் அகர்த்தாத்ம சுபாவ ஆவிர்ப்பாவத்தானென்க. யாவன் இவ்விதனே அவனே ஆத்மவித்தாவன். விக்ஷேபதசையின் மாட்டும் நழுவாத ஆன்ம உண்மைத் தரிசனமுடமையான் பிரஹ்மவித்துக்களி லுத்தமன் இவனேயாவன்; அன்னியனல்லன், சாஸ்திரார்த்தங்களை யுணர்ந்தவனேனும் யாவன் விவகாரகாலத்தில் அறியப்பெற்றதாந் தன்மை செய்யப பெற்றதாந் தன்மை முதலிய அபிமானவானுவன் அவனல்

லன், என்றிவ்வண்ணம் வேதாந்த சாஸ்திரங்களில் விசேட மாக நிச்சயிக்கப்பட்டுளதாம். மேலும் யானென்னும் ஆத்மபுத்தியும் எனதென்னும் ஆத்மீய புத்தியும் எவனுக் கெக்கால் பிரயோஜன மற்றனவாமோ அவனக்காலாத்ம வித்தாவன். மமதையற்றதாய் அகங்காரமற்றதாயுள்ள ஆத்மாவை யாவன் நன்குணர்வாமே அவனே தத்துவ தரிசியாவன் என முன்பருளியதை வெளிப்படை யாக்கிக் கொண்டு ஆன்மாவை யறிந்தவனுடைய இலக்கணமியம்பு வார் யானென்றூர். சாஸ்திர ஆசாரிய அனுக்கிரகம் பெற் றபதார்த்த மிரண்டன் விவேகமுடைய யாவனுக்கு யான் எனதென்பதான ஆத்ம ஆத்மீய விடய ஞானங்கள் பய னற்றனவாக எக்காலாமோ அதாவது அவற்றாலுண்டாக் கபபட்ட விவகார ஹீனனுகப் புமான் எப்போதாவனே, அப்போது அவன் ஆத்மவித்தாவன்; தேகாதிகளிலும் அவற்றின் அனுபந்ததிலும் விவ்கார காலத்திலும் முன் போல வஸ்துத்தன்மையனவாக விவகாரம் புரியாமல், அவ்விவகாரத்தும் ஆன்மா மாத்திரத்தைத் தரிசித்துக் கொண் டிருப்பவனே நல்ல ஆன்மவித்தாவன் என்பதாம். அவ்வாறே "யாதொரு பொருளை யெல்லாவுயிர்களுமென் றுங் காண்டார், காதலின் ஞானியத்தைக் கண்ணிறற் தெரியக்காணன்" என்னும் ஸ்ரீ பகவத்வசனமுமுளதாம். இவ்வண்ணம் எக்காரணத்தாற் கூறப்பெற்ற தென்பதாதி வினவிடைகளைக்கூறிப் பிரசங்கத்தால் வந்த சிலவற்றை யுங் கூறித் தேந்கமலத் தயனுரைத்த மொழிகேள் என் னும் வாக்கியத் தானே அபிமுகீபூதமான ஸ்ரீ இராமர் பொருட்டு உபாயத்தோடுகூட ஞானத்தை உபதேசிக்க விழைந்தவராய் விசிஷ்ட வினவுவான் விளம்புவான் என் னும் நம்மிருவர் சம்வாதம்அவசியம் பலத்தின்பொருட்டே கற்பிக்கப்பெறும் எனக்காண்பித்தற் பொருட்டு வினவு

வோஜனயும மிளமபுவோஜனயும் கூறுவார், இவ்வாறு தாம ரையிலுதித்த தந்தையின் ஆஜ்ஞையைப் பற்றியான் அதிகா ரிகளின் பிரவாக மிருக்குமவரை யிருப்பவனு யிருக்கின் றேன். செய்யத்தக்க தொழிலின்பயன் எனகிண்டு ஒரு சிறிதுமே கிடையாது, இருக்கவேண்டியதற்காக மனமற்ற வனுகிப் புவியின் கண்ணே யிருக்கின்றேன். அதனுனே எப்போதும் உறங்குவதேபோல அபிமானமற்ற விருத்தி யாற் கிடைத்து நிகழ்கின்றபடி காரியத்தைச் செய்கின்ற னன், மிகச்சாந்தியோடு கூடிய விருத்தியினுனே வாழ்கின் றேன், எப்போதும் சமுசாரத்தி லுறங்கும் அஞ்ஞர்களது புத்தியினுனே காரியத்தைச செய்விக்கின்றேனையன்றி என் மதியைக் கொடுதது ஒருகாரியமும செய்வதேதகிடை யாது. ஆசிரிய ரிலக்கணமறைவா, தத்துவதனை யுணர்ந திருக்குந் தன்மையையும் உணராததன்மையையும் முன்ன ருபதேசகரிடத்தில் விவகாரக் குறியினுலே நிர்ணயித்து எந்நரன் வினவுகின்றனனே அவ்வினவுவோன் மிகவும் மதிமானுவான்.

அதிகாரியின் இலக்கணமும் வீட்டின் வாயிற்காவல ரையும் கூறுகின்றார்.

முன்பின் கூறியவற்றையும் கூறுதவற்றையும பகுத் துணாவதில் ஆற்றலுடைய மதியையுடையனுய்ப புகழத் தக்கவ னனவனுக்குப் பிராஞ்ஞன் வினவியதைக் கூற வேண்டும், பசுதருமத்தேதாடுற்ற அதருமத்தினுக் கறை யொணுதாம். "இருளுமவித்தையி னிடையிற்பட்டே, மரு ளுந்தாமே தீரர்பண்டிதர், தெருளரெனவே தேரித்திரிப வர், உருளுங்கோணல் வழிபலவுலவிப், பொருளறு துய ரைப பொருந்துவர் புலனிலார், வெருளுங்குருடனுற் கொடுபோங் குருடர்கள், சுருளுந்துயர்ப தொடருதல்

போன்மே" என்னுஞ்சுருதியை யநுசரித்து அநாரியனைத் தியாகிக்க வேண்டும். மோக்ஷத் துவாரத்தில், சமம், விசாரம, சந்தோஷம், சாதுசங்கமம் என நான்கு துவார பாலர்கள் கூறப்படுவாகள். இந்நால்வரும் முயல்வினனே சேவிக்கத் தக்கவர்களாவாகள். முடியாவிடின் மூவரைச் சேவிக்கவேண்டும், அதுவு முடியாவிடின் இருவரை யேனுஞ சேவிக்க வேண்டும், சேவிக்கின் மோக்ஷராஜக் கிருகத்தில் இவர்கள் கதவுதிறநது விடுவார்கள்.

அந்த நால்வருள் ஒருவரையேனுமபற்றவேண்டு மென்பதையும் அதற்கேதுவாமபிரஞ்ஞையை வளாக்க வேண்டு மென்பதையும் வற்புறுத்தல்.

எல்லா முயற்சிகளாலுமபிராணனை விடுத்தேனு மென்றது (முயற்சியி னதரவி னதிசயத்தைக் காண்பிக் குமபொருட்டாமம) ஒருவனேயேனுமநன்குபற்றவேண் டும், ஒருவன் வயப்பட்டானுயின், நால்வருமே வயப்பட் டவர்களாவார்கள். சமுசாரத்தை விடற்பொருட்டு முத லில் நூல் நல்லோருறவுகளின் வாயிலாகவாம் தவத்தோடு கூடிய சமதமங்களால் விவேகதனதைக் கவர்ந்து வைத்துக் கொள்ளும் ஆற்றலுடைய மதியையே நன்கு வளாத்தல் வேண்டும், அதன் வளர்ச்சியின் கண்ணும் இந்நூற் பரிசீ லனமே யுபாயமாம். சிறிது சீர்படுத்திய மதியினனே இந் நூலை நன்காராயின் இதுவே யதிகாரியின் அனுஞானத் தைப் பரமகாசஞ்செய்யும். "பேதிக்கு மிருதயப பெருங் கிரந்திகடாம், சேதிக்கப்படுமாற் செறியைய மெல்லாம், வாதிக்குமிவனது கருமங்கண் மாயுமம, ஆதிக்கரியப்பரா வரமறியினே" என்பதாக அறையுமம மறையால், சகிக்க முடியாத சமுசார விஷசமபந்தத்தாற் பிரவேசித்த விடீ சிகை வியாதியானது, ஜீவப்பிரஹமைக்கிய ஞானமாகிய

கருட மந்திரத்தானே விடசோதனஞ செய்யவே தீர்ந் துவிடும்.

மேலும் புகன்ற விடசிகையையே விரிதுரைக்கின் றார்:—கூறியவகையே இப்போது ஆன்மாவை ஆராயாத வனுக்கு நிரதிசய துக்கம் உண்டென்கின்றார்.

நரகமேபான்று மலமூத்திரங்களின் நகரம்போன்ற சரீரங்களிடத்திலும் அவற்றினுறவினர் அன்னபானாதிவர் க்கமுதலிய சமுதாயங்களிடத்திலும் ஆசைவைத்தலானே புருஷனைப் பந்தப்படுத்தும், இயற்கையனவாய விடயவடிவ விடவிடசிகைகளாமிவை அந்தோ ! மூடபின்றியவையாம்; இவைகளைச் சிகிச்சைசெய்து மாற்றுவிடின் நிரந்தரம் மேற் கூறபடும் ஆயிரக்கணக்கான அவ்வந்நரக துர்த்தசை களையே கொடுக்கும். அவைகளாவன:—கற்களைத்தின்னல் வாட்களால் வெட்டுண்டல், மலைச்சிகரங்களி னின்றும் உருளல், கற்கணங்களாலடிபடல், அக்கினியாற் றுக முறல், பனியாலெப்போதும நனைந்திருத்தல், கோடாரி கத்திரி முதலியவற்றால் சரீரங்கள் சேதிக்கப்படல் (பிளக் கபபடல்) சிலைப்பலகைகளில் உடல்கள் சந்தனக் கட்டை யைப்போற் றேய்தல், வாளிலைமரங்கணிறைந்த வனத் திடையோடல், காஷ்டத்துள் விருக்கும் புழுக்கட்கே போல அங்கமுழுதும் காஷ்டயந்திரத்தாற் றுன்புறல், பழுக்கக் காயவைத்த இரும்புமுட்சங்கிலியினாலே சுற்றுண் ணல், முட்டுடைப்பங்களால் அங்கமுழுவதும் தோலெ மும்புபடி துடைக்கப்படல் ; எப்போதும் அக்கினிச் சுவாலைகளைக் கக்கும் போரிற்பொழியா நின்ற பாணங் களின் றுரையிடைவிடாது தைக்கபபெறல், நிழல் நீர் குடித்தல் கிடைக்கப்பெறுமல் உஷ்ணகாலங் கழிக்கப் பெறல்; அவ்வாறே சீதகாலத்தில் நீருள் நிறுத்தி நீரைத்

தாரையாகப் பொழியப் பெறல், வெட்ட வெட்ட உண் டாகிக் கொண்டிருக்குஞ் சிரசு மீண்டு மீண்டும வெட்டுப் படல். சுகந்திரை விடயத்திலோ வார்த்தையு மில்லாமை முகத்தை மூடிவிடுதலான் மூச்சுவிடமுடியாமை, அங்கங்க ளெங்குங் கொப்பளம் கிளமபி மேடும்பள்ளமுமாய் விவ கரிக்க முடியாமை, தேகம் மற்றைய ஒவ்வோ ரங்கங்களும் மலம்போல வீங்கப்பெறுதல் அல்லது கற்களைத் தின்னன் முதலிய நான்கையும் பனிதெளித்தல்போற் சகிக்கத்தக்க தாம் அங்கத்தைக் கத்தரித்தலைச சந்தனபூச்சே போல வும, வாளிலைத்தருவணுதி மூன்றையும் தேகசமஸ்காரம் போலவும விசிட்ட சரதாரை வீழ்தலையோ வேனிற்காலத் தில் விளையாடு நிமித்தங் கொடிவீடு முதலியவற்றி லிருந்து ஜலதாரையைப பொழிவித்தல் போலவும், தலைவெட்டலா லாய மரணத்தைச் சுகந்திரைபோலவும், முகத்தை மூட லான் பலாதகாரமாய்ப் பேசாமையைச் செய்தலைச சகஜ விருத்தியிலுலே வதனத்தை மூடிக்கொண்டதே போலும், உடமபெல்லாங் கொப்பளித்து மேடும்பள்ளமு மாத லையோ மகாசம்பத் துதயமானதைப போலவும, அவ சியம் பொறுத்துக் கொள்ள வேண்டியதாம. துக்கஸ் தானங்கள் அளவிறந்தனவா யிருத்தலின் ஒரு திசைமாத் திரம இவையெனக் காண்பிக்கப்பட்டன. அவற்றை யீண்டு காண்பித்தலானே யாதுபயனெனின்? கூறிய இவ்வகையான கஷ்டசஷ்டைகள் ஆயிரங்கோடியாற் கொடிய சமூசாரத்துற்ற அழியப்பட்ட காயங்களாற் பரிச்சின்னபபட்டுப் பரவசமா யிருபபதில் அநாதரவாய்க் கவனியாமல் விட்டுவிடப்படாது. அவசியம மேற்கூறும் பிரகாரம் விசாரிக்கத்தக்கது மேற்கூறும் வகையாக அறி யவும் வேண்டும.

எதாவது சிகிக்ஸை விடயமாக நீக்கபொருடடுச் செய்யத்தக்கதாம என, கூறுகின்றார:—எவ்வாறறிய வேண்டுமென் றுசங்கை யுண்டாகக் கூறுகின்றார்.

எவ்வாறு சாஸ்திர விசாரத்தாற் றிடமாய் மேன்மை யான துண்டாமோ அவ்வாறேயாம், அவ்வாறுயின் சாஸ் திர விசாரத்தான் மேன்மைபெறல் எங்ஙனங் கூடுமென்று துணியமுடியும், சாஸ்திரவிசார தற்பராகளாகிய மாண்டவ் யாதி மகரிஷிகட்கும் ஆயிரக்கணக்கான தூர்த்தசை காணப்படுதலின் எனவினவின், வித்தைக்குக் கண் கண்ட பலனுண்டென்க, எனவே பிராணனுளள வரையும் அதி காரியால் ஆன்மாவே விசாரத்தாற்சிரவணிக்கத் தக்கது, [illegible] அன்னியமொன்றுமன்றும. எவ்வதிகாரிக்குச் சிரவணாதி களின் பயிற்சியினலே தன்னனுபூதியும் சாஸ்திரமும் குருமொழியும் ஒரு பொருணிச்சயத்தை யுறுகின்றன வோ அவனலான்மா எப்போதுமே யறியப்படுவதாகும் சாஸ்திரார்த்தங்களைத் தெரிந்துகொள்ளுதன் மிகக் கஷ்டமா யிருத்தலின் எங்ஙனம் மூர்க்கத் தன்மையின் நீகமா மெனின், சிறிது சீர்திருத்தப்பட்டுச் சிறிது விற்பத்தியுடைய மதியுடையவர்கட்கு இந்நாற்சிரவணம் எவ்வாறு மூர்க்கத்தன்மையை நீக்குமோ அவ்வாறு வேறு ஒருநாளுங் கிடையாது ; மகாவாக்கிய அர்த்தரூப மாய பரமாத்மாவை யவசியம் அடையவேண்டுமென்னு மிஷ்டமுடையவனல் தக்க திருஷ்டாந்தங்களால் அழ காயும், முரணில்லாமலும் சுகந்தருவதாயும் இருக்கு மிந் நூல் யாவுமே, அவசியனு சிரவணஞ் செய்யத்தக்கதாம்.

மூர்க்கத்தன்மை யவசியம் தள்ளத்தக்கதாம, நீக்க முயடாதனவாய ஆபத்துக்களும், துயரைத் தருவனவாய

அதமப் பிறவிகளும் அதனல் உண்டாகின்றமையின், சர்வதுர்த்தசைகளின் காரணத்தைக் குறித்து ஒவ்வொரு தூத்தசையும் மேலானதேயாம்.

நீசச்சேரித் தெருக்களில் ஓட்டைடக் கையிற்ருங்கிப் பிசைஷவாங்கிக் குடித்துச்சீவித்தல் மேலாகுமே யல்லாமல் மடமையோடு கூடிவாழும் கெட்டவாழ்வானது மேலாகாதாம்; விசாரப் பிரவிருத்தியானது கிடைத்தபோது கெடாததும் ஐயமற்றதும தன்வடிவமா யிருபபதும் உபதிரவமற்றதும மயலற்றதும் உத்தமமும் ஆகிய கைவல்ய பதப் பிராப்தியாற் கிலேச முண்டாகாது; தனதிகளினலே கைவல்யமானது உண்டாகலாமே விசாரத்தினலே யாக வேண்டிய தென்னே யெனின்? தனதிகளேனும மித்திரர் களேனுமை பந்துக்களேனுமை உபகாரமாக மாட்டார்க ளென்றறிக, கரசரணதி யசைவுவடிவ காயசம்பந்தமான நமஸ்காராதியேனுமை, தேசங்கள் சுற்றும் யாத்திரை முதலியவையேனும் உபாசனை முதலியவற்றிற் காயக்கிலேசத் தால் பலமை உற்சாகம் நித்திரை முதலியவற்றை யற்றிருத் தலேனுமை, புண்ணிய தீர்த்தங்கணிறைந்த கூஷத்திரவாச மேனும், உபகாரத்தைச செய்யமாட்டாவாம். ஆயின் அஃதெதனற்ருன் கிடைக்குமெனின்? சிரவண மனன நிதித்தியாசன வடிவபடிருடப் பிரயத்தனத்தினற் சாதிக் கத்தக்கதும், துவைதவாசனையின் விரோதியாய பிரஹமா கார திடவாசனையின் சமவிடைய தெதாழிலாஞ சமாதி யாற் சாதிக்கத்தக்கதும் ஆகிய சாகூஷாத் காரத்தானே மேனுமாத்திரமாய துவைதத்தின் மூலத்தைதக் கெடுக்கும் வெற்றி கொண்டு கைவல்யபதத்தை யடைந்து விடலாம். "அருமருந்தரிய நோய்களனைத்தையு மகற்றல் போல, வொருபரம் பொருளேயா மென்றுன்னியே யிடைவிடா மல், உரைவகை யுளுற்ருநின்ற வாசனை யொருங்கு கூடி,

மூரணுறு மவித்தையின்ற முழுத்துயர் நீக்குமன்றே" என்றுங் கூறியுள்ளார். "கரிமுகன் றிருவருள காட்சியாகவே, யருணமயி னெத்துணை யணுகவில்லையா, குருபரனெடு மறைகடோதினு லதூஉம், ஒருவனுமதத்துணையுறுவதில்லையால்" என்பதாற் கடவுள் கருணையுமவேண்டும். சகிக்க முடியாதனவாய துயரங்சளும, ஆசையும் கெட்ட காமக்குரோதாதிகளும், மற்றும் பிறவும் சாந்தமான மனங்களில் சூரியர்கள்பால் இருள்போல நசிக்கும. "சத்துமல்லவாம் அசத்து மல்லவாம, ஒத்தசிவமே கேவலமாகும்" என்னுஞ் சுருதியாற் சாந்தனு சிவமென்றறிக.

சமத்தை யுடையவனும், எல்லாப பிராணிகளிடத்தும் நேயமுள்ளவனு மாகிய சாதுவின்பால் பரமதத்துவமானது அநாயாசமாய்த்தானே பிரகாசிகின்றதானபடியால் சர்வானந்தமும உண்டாம்.

குரூரமாயும் கோணலாயும் இருக்கும் உளளத்தினரும் சாதுக்களும் ஆகிய எல்லா வுயிர்களும் எண்டுச் சமசாலியினிடததில் அன்னையிடத்திற் போலப் பரமவிசுவாசத்தை யடைகின்றன. மனமானதுள்ளே சாந்தியினாற் சுகமடைவதே போல இந்திரபதத்தி லமிருதரசாயனபானத்தானும், விஷ்ணுபதத்தில் இலக்குமி யாலிங்கனத்தானும் சுகமடைவதில்லை. இடாமபிக சாத்துவிக பரீக்ஷயின் பொருட்டுச் சாந்தன் இலக்கணங்களியம்புவார் புலனைந்தாலு மென்றூர். சுபாசுபங்களாகிய பிரியாப் பிரியங்களைக்கேட்டுந் தீண்டியுங் கண்டும் உண்டும முகர்ந்தும் மகிழ்ச்சி வாட்டங்களை யடையாதவனே சாந்தனெனக் கூறம்படுகின்றன். மரணஉற்சவ யுத்தங்களின் அச்சம் ஆசை சினம் என்பவற்றால் ஆகுலமின்றித் தபியா மனமுடையவனும், அதனனே சந்திரபிம்பம் போலக்

குளிர்ந்திருப்பவனும் எவனே, அவனே சாந்தனெனப் படுகின்றான். உலகத்திலும் எல்லாக் குணங்களினும் மேன்மையதாய்ச் சமமே யிலங்குகின்றதாம்; தபசிகள் மிகத் தெரிந்தவர்கள், மகமடபுரிபவர்கள், அரசர்கள், பலமுடையவர்கள், குணமுடையவர்கள் என்னும் யாவரினுமே சமமுடையவனே யிலங்கா நிற்பன்.

சமத்திற்கு மகாபலத்தைக் காண்பித்து மகானுபாவர் கவர்ந்திருக்குந் தனமையானே அஃதவசியம் அனுஷ்டிக்கத் தக்கதாம பெரியோராயும், குணவான்களாயும், சமதமேதாடு கூடிய மனமுடையவராயும், இருப்பவர்தஞ் சித்தத்தினின்றுமம, பூர்ணசந்திர னிடதத்தினின்றுமம ஒளி நிகழ்வதேபோலச சுகம் நிகழ்ந்து கொண்டே யிருக்குமாதலின் அவசியம் கவரதத்தக்கதாம எனல்.

சற்குணங்களின் சமூகங்கட் கெல்லையாயும், புருடார்த்த முக்கிய பூடணமாயும, சர்வகுணங்களின் சமபத்துக்களோடு கூடியதாயும், நிகழுஞசாந்தியே சங்கடங்களிலும பயஸ்தானங்களிலும் விளங்கா நிற்கும். பிறராலபகரிக்க முடியாததாயும, பூசிக்கத்தக்கவரால் சாவதானமாய்க் காக்கப் பெற்றதாயும், மேலானதாயும் இருக்குஞசாந்தியாகிய அமிரதமய சாதனத்தை யினிதுபற்றி மகானுபாவர்கள் எம்முறையானே பரமபதத்தை யடைந்தார்களோ அதேதமுறையைப் பின்பற்றி வேறு இராகவா! நீ அடையவேண்டிய தடையும் பொருட்டுக் காப்பாயாக. சாதுசங்க சற்சாஸ்திர சித்தசுத்தி யென்பவற்றால் வளர்த்தப்பட்டு மோக்ஷவாயிற் காவலாய சமசந்தோஷங்கட்கேதுபூதமாய விசாரம் புகழப்படுகின்றது.

ஆண்டார்த்த அநர்த்தங்களைப் பின்பற்றியதாம் விசாரம், சார அச்சாரவிசாரம், தள்ளத்தக்க கொள்ளத்தக்க

தாம் விசாரம், பிரமாண தாற்பரியவிசாரம், பரம ஆன்ம தத்துவப் பரீக்ஷையென விசாரம் ஐந்துவிதமாம. அவற் றுள் இயற்கையாய பிரவிருத்தியும் விடயங்களும் அனர்த் ததைப் பின்பற்றினவாம், சாஸ்திர சம்பந்தமான பிரவி ருத்தியும் வைராக்கி யாதிகளும் புருடார்த்தத்தைப் பின் பற்றினவாம் என்றுடன்பா டெதிரமறைகண் முதலியவற் றினே பரீக்ஷைவடிவமாயது முதலதாம. மனவிமக்கள் தன்றேக முதலியவற்றுள், சுயமாகவும் காரணத்தானும் பரிணமத்தானும அசுசியாய மலமூத்திராதி அமங்களத் தன்மை வாய்ந்தனவெனச் சோதிக்குமவடிவதும், பிரஹ மலோகம் வரையும உள்ளனவாய சுகங்களினிடத்தில் அநித்தியத் தன்மை யசசந் துக்கங்கலந்த தன்மை முதலி யவற்றைச சோதிக்கும் வடிவதும ஆனதிரண்டாவதாம. இவ்விரண்டும் வைராக்கிய முமுக்ஷுத்தன்மைக் கேதுக்க ளாம. மோக்ஷச்சை வந்தபின்னரும மோக்ஷசாதனம் கருமமா? உபாசனையேதானு? அவையுங் கலந்ததா? அல் லது ஞானத்துடன் கலந்ததா? அல்லது ஞானமேயா? என்னும பரீக்ஷைவடிவது மூன்றுவதாம். ஞானமே சாத னமாக வாயினும் அஃதென்னே? சாங்கியவைசேடிகர் கருதத்தக்க கால கௌதமர் முதலியோர் கூறிய அவ்வச் சாஸ்திரங்களைப் பிரமாணமாக வுடையதா? அல்லது சுரு தியை மாத்திரம், பிரமாணமாக வுடையதா? சுருதியையே பிரமாணமாக வுடையதாயினும், சுருதிகட்குத் துவைதத் திலா? அத்வைதத்திலா? விசேஷத்தோடு கூடியதிலா? விசேஷமற்றதிலா? ஆன்மாவிலா? அநான்மாவிலா? தாற் பரியம், எனச் சோதிக்கும் வடிவது நான்காவதாம். அது வும் சிரவணமெனக் கூறப்படும். சுருதியாதிப் பிரமா ணங்கட்கும் அத்விதீயசச்சிதானந்தப் பிரஹ்மான்மாவின் கண்ணே தாற்பரியமம எனத் துணிவிருந்தபோதினும்,

தன்னென்மாவின்கண்ணே யுண்மையாக அவ்வாருந்தகை மை சம்பவிக்குமா? சம்பவியாதா? என்னும் இரதத்தினப் பரீக்ஷை நியாயத்தானே அநுபவநிஷ்ட ஆசிரியர் தன் னெடு கற்றூர் மூதலியோருடன் சம்வாதத்தாலும் ஜீவேசு வர ஜகத்தத்துவ பரிசோதனையாலும் துணிவுபிறகுகும் வரைசோதிக்கும் வடிவினது ஐந்தாவதாம். அவற்றுள் முதன் மூன்றன்பலம் சாதனசதுட்டய சம்பத்தியாம்; பின்னிரண்டினுக்கோ முறையேபிரமாணப பிரமேய அசம்பாவனைகளின் நீக்கமாம். அவற்றுண் முன்னவை மூன்றும் பாக்கியவயத்தினுலே தாமாகவும் வருதல் கூடு மாயினும், அவைகள் மாறுமற் றிடப்படும்பொருட்டு மீண் டுங் குருசாஸ்திர வாயிலாகச செய்யத்தக்கனவேயாம். பின்னவையிரண்டும் குருசாஸ்திரங்களானே வருவன வாம் எனச சர்வசாதாரணமாகச் சாஸ்திரமிருக்கும். சாஸ் திரத்தாலுணர்த்தப் பெற்று அமலமாயும் மனத்தூய்மை வந்து பரம பவித்திரமாயும், இருக்கும் மதியினலே, விட யசமுசய பூர்வபக்ஷ சித்தாந்த பிரயோஜன வேறுபாடு களை யுணர்ந்துள்ள சகபாடிகளோடேனும். பிரமாணப் பிரமேய தத்துவங்களைப் பிரதிபாதிக்கு முபாய சாமர்த் தியத்தோடுகூடிய ஆசிரியரோடேனும் எப்போதும் ஆன் மாவின் விசாரஞ் செய்யத்தக்கதாம். புத்தியானது விசா ரத்தாற் சூக்குமதத்துவத்தைக் கவருங் குசலத்தன்மை யையடைந்து பரமபதத்தைக் காண்கின்றது; நீண்ட சமு சார ரோகத்திற்குவிசாரமே பேரவுடதமாம்.

விசாரத்தினது சொரூபத்தைக் காண்பித்து அதன் கண் செய்யத்தக்க தின்னதென்பதைத் தெளிவுறுத்து கின்றூர்.

ஆபத்துவருங் குடும்பாதி வியாபாரத்தும் புத்தி மானல் யானியாவன், யாவனுக் கிச்சமுசாரம் எனச் சமு

சாரத்தை யகற்றுஞ் சிரவணதி யணுஷ்டானததேதாடு கூடி யவனுய்த் தானே முயல்விணற் சிந்திக்கததக்கதாம. விசார மாகிய அழகிய விழியானது, சருமநேத்திரம் அந்தகாரத் தில் நஷ்டமடைவதேபோல அந்தகாரங்களில நஷ்டமடை யாமலும, அதுமிகப் பிரகாசமய சூரியாதிகளில் ஒளிமழுங் குவதேபோல ஒளிமழுங்காமலும் அத்தடைபபட்டுத் தூரத்திலிருகதுமபொருளைக் கிரகிக்க முடியாததே போல வல்லாமற் கிரகிக்கக்கூடியதாயும் விளங்கும். பரமான்மா வாயும் பிரஹ்மானந்தத்தைச் சிததிசெய்வதன்கண் முக்கி யமாயும் பூசிக்கத்தக்கதாயும, இருகதும ஆராய்ச்சி யாற்றலை ஒருகணமேனும பரித்தியாகஞ செய்யவே கூடாது; "அற்பமதேதனும் பேதமதாற்றும அவன் டயந் தன்னை யடைந்திடுவானே" என்னுஞ் சுருதியையும்; எக்க ணமேனு மெமமுகூர்த்தமதேதனும், முக்கணனெருவனை முன்னிலணுயின், அக்கணமானியது பெருஞ சித்திரம்; அக்கணிலாமையா மதுவுமுகதையுமாம்" என்னும் இலிங்க புராணத்தையும் காண்க. விசார சொரூபந்தான் விளக்க மாக யாதென்றல்; யான் யாவன்? தேகாதிகளேயாஞ? அலலது, அதனினும் வேருயவனு என்பது துவம்பதார்த்த விசாரமாம, இத்தேதாஷரூப சம்சாரம் எவ்வேதுவிணலே அதிஷ்டானத்தில வந்துற்றது? என்பது தற்பதவிசாரம். இவ்வண்ணம் சுருதி முனியாசார்ய சமபிரதாய முறையிற் காட்டியபடியாய நியாயத்தான் ஆராய்சிசெய்வதே விசாரமெனப்படும். வைராக்கியமாகிய கற்பகவிருகூத் தின் நிழலைப்போன்று சுகமாயுஞ் சீதளமாயுமிருக்கும் மூன்றுவது துவாரபாலனைய சந்தோஷத்தை விரிப்பார், சந்தோஷமே பரமமோகூமென்றும் சுகமென்றும் மற் றைய இனியவையுமென்றும் கூறப்படும், இதனிலக்கணம் இனியியம்பப்படும்; ஆயுள் நெய்யென்பதுபோலச் சாதனத்

திற்பலத்தின் அபேத ஆரோபத்தாற் புகழ்ந்ததாம் மிக வும் மேன்மையான அத்தியந்த துக்கவிமோக்ஷ நீக்கமாகிய விசிராந்தியை நன்முகச் சுகதுஷ்டன் அடைவன். சந் தோஷ சொரூபத்தை யறிவார், கிடையாத இஷ்டவஸ் துவில் வாஞ்சையைவிட்டு, கிடைத்த இஷ்டவத்துவில் விகார ரகிதத்தன்மையை யடைதலாம். கிடைத்த இஷ்ட போகத்தில் அற்பத்தன்மை அஃதின்மைகளானே மகிழ்ச் சிவாட்டமில்லாமையாம். சந்தோஷமுடையவனைக் கூற லானே சந்தோஷ இலக்கணத்தையுமே தெரிந்துகொள்ள லாம்; விஷயம் அடைவுற்றபோதிலும் பொய்யாதலின் அடையாததே போன்றமையையும், அதனைடைவா லுள தாய மகிழ்ச்சிமுதலியவை யின்மையினானே முன்ன வஸ்தை போன்றமையையும், அடையாததில ஆசையற்று அடைந்தே தேபோன்றமையையும், அடைந்தவுடைய சுக துக்கங்களற்றவன் ஈண்டுச் சுகதுஷ்ட னெனப்படுகின்றான்.

மகிழ்ச்சியின் மகிமைமலர்தல்.

சந்தோஷ அமிருத பானத்தால் சுகதந் திருப்தியை யடைந்த சாந்தர்களுக்கு ஒபபிலாப்போக ஐசுவரியங் களுமே பிரதிகூலவிடம்போ லாய்விடுகின்றன. ஆ சை தனிய முதலிய தோஷங்களே நாசஞ் செய்யும் சந் தோஷமே அதிமதுர ஆனந்தத்தைத் தருவதோப்ப அமிரு தரச அலைகள் சுகத்தைச் செய்யாவாம். ஆசையின்பரவச ஞகி அதனல் வியாகுலமுற்றுச் சந்தோஷ மற்றிருக்கும் மனத்தில் ஞானத்தை யுபதேசித்தபோதிலும் அழுக்கு நிறைந்த கண்ணுடியில் ஆனனம்போல வெளிப்படத் தோன்றுதாம். முன்மொழிந்த இலக்கண அனுவாத பூர் வகமாக வேறிலக்கணத்தை விளம்புகின்றார், மகிழ்குண மென கிடையாத பொருளை யவாவாமலும், முறையே

கிடைத்த சுகத்தையும் துக்கத்தையும் அனுபவித்துக் கொண்டுமை, உலகத்திற் கின்பந்தரும் நல்லொழுக்கத்தில் நடந்துகொண்டும் இருப்பவனே சந்துஷ்டனெனக் கூறப் படுவன். விடயசம் பாதனமில்லாமலே கேவலஞ் சந் தோஷ மாத்திரத்தானே எங்ஙனந் தேகவாழ்க்கை கூடு மெனின், கேட்டி! சந்தோடத்தால் நிறைந்த மனமுடை யவனே மகாசம்பத்துக்கள் யாவும் தாசர்கள்போலக் காத் துக்கொண்டிருக்கும். "ஆசைக்கடிமையே யகிலலோகத் தடிமை, ஆசையடிமையார்க் ககிலலோகமும் அடிமை" எனவுங் கூறுவர். உலகிலுள்ளோர் சந்தோஷத்தாற் சகல ரிடத்திலும் விஷமபுத்தியில்லாத சமத்தகைமையால் அழகு நிறைந்த புருடனுடைய முகத்தைத் தரிசித்து எங் ஙனமானந்த மடைகின்றனரோ அங்ஙனஞ் சர்வதன சம பத்துக்களாலும் அடைவதில்லை. சந்தோஷமுடையவனே யாவரினுமே மேன்மை யுறுவன். இவ்வுலகத்தில் குணசாலி கட் கிஷ்டமான சந்தோஷத்தாற் சகலரிடத்திலும் சம மானபுத்தி செய்வதால் இனிமையாக அலங்கரிக்கப் பட்ட வுடைப் மகாபரிசுத்தனு யிருக்கும புருடராஜாவைத் தேவ தைதகளும் மகாமுனிவர்களும் நமஸ்கரிக்கின்றனர். நான் காவது துவாரபாலகனுகிய சாதுசங்கத்தை வருணிப்பார், சகமென்றூர். நரர்கட்குச் சமூசாரத்தைத் தாண்டுவதி லீண்டுச சாதுக்களின் உத்தமமான சமாகமமானது சகல அவஸ்தைகளினும் விசேடமாக வுபகரிக்கின்றது.

சாது சங்கத்தைப் பலவகையானும் புகழல்.

சூனிய ஸ்தலத்தைப் பிராணிகளின் சமூதாய முடை யனவாகப் போலுஞ் செய்விப்பர். அதிசீதள பவித்திரத் தகைமையானே சமூசாரதாப நிவாரகஞ் செய்விப்பதாந் தகைமை காட்டப்பட்டது. அகங்காரத்தை ஆத்ம அநாத்

மக் கிரந்திரூபமாதலினாலும், கிரந்திபோலும் கெடுத்தற் கெளிதன்மையதாலும், கிரந்தி = கட்டு என்றதாம். அறி ஞர்களாகிய சாதுசங்கங் கிடைப்பின் மைந்தராதி பந்துக் கள் தடுதிகள் இல்லாமல் மகாதுயரந் தருமிடமும் அவற் றால் நிறைவுறுகின்றது மரணமும் உற்சவமங்கலமாகின் றது, ஆபத்துக்களும் சம்பத்துப்போல விளங்குகின்றன. ஆபத்தத தாமரைக்குப் பனியும், மோகப்பனிக்கு மாரு தமும் ஆம் சாதுசங்கம மேதுக்கங்களை பதிதாரத்திற் றள்ளும், எவன்தாபத்தை நீக்குவதற் குளிர்ச்சியாயும் அழுக்கையகற்றலால் வெண்மையாயும, இடுக்கும சாது சங்கமாகிய ஸ்ரீ கங்கையின் கண்ணை மூழ்கினமே அவ னுக்குத் தானங்களாலும், தீர்த்தங்களாலும, தவங்களா லும், யாகங்களாலும,ஆகவேண்டிய தென்னை? ஹே அன கனே! ஆசையற்றவர்களாய், ஐயமற்றவர்களாய், அந்தக் கரண அதன் றன்மங்கட்கு ஆன்மாவுடன் ருதான்மிய சம் சர்க்க அத்தியாச இலக்கணச் சிற்சடமுடிசசு அவிழ்ந்த வருமம ஆகி விளங்குமம சாதுக்கள் கிடைதது விடுவராயின் தவந்தீர்த்த முதலியவற்றைத் தேடுவதா லாகவேண்டிய தென்னை, பிரஹ்மமத்திலிளைப்பாறிய மனத்தோடு கூடித் தன்னியாகளாகிய சாதுக்களை முக்கியமுயற்சியினனே பூஜிக்கவேண்டும்; பிரஹ்மான்மவஸ்துவையடையவிரும்பி முயலும் அதிகாரியானவன் சாதுசங்கத்தை விடவே கூடாது. அகததிலுள்ள சித் தசித்துப்பிராந்தி முடிச்சு களை யறுத்தவர்களாயும், பிரஹ்ம சொரூபதகதை யறிந்த வர்களாயும், பவசாகரத்தைதத தாண்டச் சகாயஞ செய்ப வர்களாயும், யாவராலும் போற்றத் தக்கவர்களாயும், பிர சித்தர்களாயும் இருக்கும் சாதுக்கள் முமுக்ஷுக்களால் தானத்தாலும் பகுமானத்தாலும் சேவைகளாலும் மற்று முள்ள எல்லா வுபாயங்களாலும், நன்றுகச் சேவிக்கத் தக்

கவர்களாவாகள். நரகாககினியை யணைக்கும் மேகம் போன்ற சாதுக்களை யநாதரவுசெய்பவர்கள் நரகாக்கினிக்குக் காய்ந்த கட்டைகளாவர்கள். தரித்திரம் மரணந் துக்கம் முதலியரோகங்கட்குச் சாதுக்களே பரம ஔடதமாவர்கள்.

சந்தோடம, சாதுசங்கம், விசாரம, சமம, என்னும இவைகளை நரர்கட்குச சமுசாரசாகரங கடபபதற்குப பெரியவுபாயங்களாம்; சந்தோஷமானது பரமலாபதனைத் தருவதாம, சாதுசங்கமானது பரமகதியைத தருவதாம, விசாரமானது பரமஞானத்தைதத் தருவதாம, சமமோ பரமசுகத்தைதத் தருவதாம், எல்லாவிடங்களிலும் பலத்தின் அபேத ஆரோபமாம் என்று கருதியிப்போது சாவ துவாரபாலரையும் ஒருமித்துத் துதிகவிழைநது அனுவதிக்கின்றார்.

சமுசார துக்கத்தைதத் துடைபபதற்கு உபாயங்களான இந்நான்கு நின்மலப் பொருள்களையும் பயின்ற அதிகாரிகள் மோகநீர் நிறைந்த சமுசாரசாகரத்தைதக் கடந்தவர்களே பாவாகள். யாவற்றையும் அப்யசிக்க முடியாவிடினும், ஒன்றையேயனும் அப்சியக்கலாம், ஒன்றைபபயின்றபோதினும நான்கையும பயின்றதாகவே முடியும. கூறிய குணசம்பதனைக்கின்றென்று நினைக்கவேணடாம், நீ இவ்வகண்டிதமான குணஇலக்ஷணமியோடு கூடி விளங்குகின்றனை, இனிக்கூறப்படுவதாகிய மனத்தின் மோகத்தைதக் கெடுக்கும் இவ்வாக்கியததைதக் கேட்பாயாக. நித்திரையில்லாது விழித்திருப்பவனுக்கு எதிரே தீபம் பிரகாசிதுக் கொண்டிருப்பின் இச்சியாதபோதினும் ஆலோகமானது பதார்த்த தரிசனத்தை யெப்படி நன்றாய்ச் செய்விக்கின்றதோ அப்படிச் சிரவணித்த இதனை மோக

சாதனபூதமாய ஞானம் இச்சையின்றியவனுக்குங் கிடைக கும். இப்போது இதன் மகாபலத்தையும் குணத்தையுட காட்டுவார், சரற்காலத்தையடைவுற்ற திசைகளினின்றும் பனிகள் ஓடுவதேபோல, மதியினின்றும் உலோப மோ காதி தோடங்களெல்லாம் பையப்பையக் குறைவ் யடைந்துபோம். சரற்காலத்திற் பெரியதடாகமபோல மனது மிகவும் தெளிவை யடையும. தினத்தன்மை தரித் திர முதலியதோடக் கூட்டங்கள தணதி விடயங்கள் சார மற்றனவெனத் தெரிந்த திருஷ்டியுடையவரை, இருப்புக் கவசந தரித்தவரது மருமங்களை யமபுகள் துளைகவல்ல வல்லனபோலக் கெடுக்க வல்லன வல்லவாம்.

மேலும் அவற்றையே புகழ்தல்.

பயவேதுக்கட்கு எதிரிலிருந்த போதிலும் இந்நூ லுணர்ந்தவனது மனதை அம்புகள் மகா ஜடமாகிய பெரு மலையைத் துளையாததே போல, சமூசாரபயங்கள் துயர்ப் படுத்தாவாம்; கடைந்தபின் மந்திரகிரியோடு கூடாத பாற்கடல்போல ஏற்றத்தாழ்வின்றிய பரமசாந்தத்தை யடையும் இந்நூலை யாராயு மகானுக்குப் பாற்கடல் போன்ற கம்பீர இயற்கையும் மகாமேருவைப் போன்ற தீரத்தன்மையும், பூரணச்சந்திரன் போன்ற அந்தக்கரண சீதளத்தன்மையும், அதிதிடமாக வுண்டாம். இவை சம் மந்தித்த பயன்களாம்; முக்கியமான பயனை இனிவரும்: அந்தப்புரத்தி லிருக்கும பதிவிரதைபோல அறிவுடைய மதியானது நன்னூல் பெரியோ ராசாரங்கட்கு, விரோத மில்லாத கருமங்களிலும் தாணயக்கிடைத்த பொருள்களி லும் இரமிக்கும், ஆகையால் அவனுக்கு இஷ்டம்போற் றிரிதல் கூடாதாம்,

இனி முக்கியமான பயனைக் கூறுகின்றார்.

சர்வசங்கற்ப விசேடங்களும் சாந்தியானவனுக்குப் பையபபையப பூமிக்கிரமமாகப் பரிபக்குவத்தையடைந்து வந்து வாக்கிற் கெட்டாத ஜீவன் முக்திப்பதமான துண்டாம், இந்நூலையாராயும அதிகாரி மதியானது பரமான்மாவின் றரிசனத்தைத்தந்து சர்வவிடயங்களிலும் தூய்மையாயும் தண்மையாயும் இலங்கி சரற்கால சந்திரப்பிரகாசம் போலப் பரமபபிரகாசத்தை யடைகின்றது. இஷ்டமில்லாதவை தன்னை வந்தடையின் துவேஷிப்பதுமில்லை, இஷ்டமுள்ளவை தன்னைவிட்டு நீங்கின் ஆசைப்படுவதுமில்லை, காரியபல முதலியவற்றின் சொரூபத்தை யறிந்திருந்தபோதிலும் அதையறியாத தருப்போலவே யிருக்கின்றன்; முயல்வில்லாமற் கிடைதததை யனுசரிபபவனை, இஷ்ட அனிஷ்டபலங்கள் கிடைத்தபோது பரிணவிகார மற்றவனுய் உலவி மற்றையர்களைப் போலவே காணபப'டுவன், மதியை யடக்கும் வாயிலாய் எவற்றையுமடக்கிச் சுகாசனத்திருந்து தானே கிடைத்தபோகக் கூட்டத்தைப் புசித்து சாஸ்திர விருத்த மார்க்கங்களிற் செல்லாம விருப்பவனுல் மோகூமடையப்படும். இதற்கு இந்நூலே சாதகம் ஆம, இது முழுவதையும் ஆராயின் பிரஹ்மாதிகளின் வரம்போ லனுபவிக்கலாம். இந்நூலைச் சிரவணித்தும் மனனித்தாராய்ந்தும் அறிந்தவனுக்கு மோகூம் அடைவதில் தவம், தானம், ஜபம் முதலியவை ஒரு சிறிதும் உபயோகமாவதில்லை, அவ்வப்பயன்க ளெல்லாம், இப்பயனுள்ளடங்கிப் போவதா லென்றறிதல் வேண்டும்.

விசாரயோகியர் பெருமையும் அவிசாரப் போகியர் சிறுமையும் கூறல்,

எக்காலத்திலும் எத்தேயத்திலும் சம்பவித்த சாதுக்களோடுகூடி இச்சாஸ்திரத் தையாவது உபதிடத மோகூ

தருமாதிகளையாவது, ஒரு கணமும் விடாமல் ஆனந்தமா யாராயும அவனற் சமூசாரத்தைச் சாந்தப்படுத்தும் அபரிச்சின்ன பரமான்ம அபரோக்ஷஞான மடையபபடும், யோனியந்திரத்தில் நெருக்குண்டு வரும்படியான பெருந் துயர்ப் பிறப்பை மறுபடி யவனடையவே மாட்டான். இவ்வண்ணங் குணத்திறலும் பலத்திறலும் சுலபமாயடை யதக்க தன்மையாலும இசசாஸ்திரத்தைப் புகழ்ந்து இதிற் புகாதவரை யிகழுவார். போகரசத்தில் அழுந்து பவர்களாயும, பாவிகளாயும, இச்சாஸ்திரம் படிப்பதிற் கூடப் பயமுடையவர்களாயும், ஆன்மாவைக் கொல்பவ ராதலின் கூறுவதற்குந தகுதியற்றவர்களாயும், இருக்கும் கெடுதலைச் செய்யப் பயப்படாத அவ்வதம சிரோமணிகள் தங்கள் தாயின் வயிற்றினின்று வந்த மலக்கிருமிபோற் பிறந்தவர்களே யாவாகள்.

எவ்வளவுகாலம விசாரம் அனுஷ்டிக்கத் தக்கது, என்னுஞ சங்கையோடு கூடினவனே உபகரணத்தோடும் அனுவதித்து நிராகரிக்கின்றார்.

மத்தியில் மத்தியில் அறம்பொருள் சமபாதித்துக் கோடற்பாற்று மென்றறிக. முமுக்ஷுவானவன் சாஸ்திர வுபதேசம அதனபபியாசம நற்குணம நன்மதிசாஸ்திராதி களையும ஆன்மாவையும் அறிந்தவர்கள் சங்கமென்னு மிவற்றோடு கூடிய பூர்வ பூர்வ அந்தரங்க சாதனமுறை யாக அடைவுற்ற "பன்பெருங் குருபரன் பணிவிடை யோடு மன்பொடுந் தினந்தின மாட்டிடலான, முன்பரு மறையின் முடிக் கேள்வியினன், என்பது கிருச்சிரபல மெய்திடுமே" "மாதம்மாதம் மகிழ்சதவருட்டம் தாதெவன் வேட்பன்பரி மேதத்தால், சாதெவன் சினமேசருவர் பாலி லனை, ஓதிருவரினுஞ்சினமில னுயர்ந்தோன்" என்பதாதி

மிருதிப்பிரசித்த தருமங்கள், குருபணிவிடை முதலியவற் றிற் குபயோகமான அருத்தங்கள், சாஸ்திரதாற்பரிய அதிசயந்தருமருத்தங்கள் என்பவற்றைச் சம்பாதிப்பதே தொழிலாக வுடையவனுய் விசாரிக்க வேண்டும் விவேக முடையவன் மீண்டும் பிறபிறபபைக் கொடாததும், துரியபதமென்னும் பெயரையுடையதும், "இருமையில் சிவத்தை யெண்ணுவர் நான்கதாய்" என்னுஞ் சுருதியில் நான்காவது பதமெனப் பெயரிட்ட ஏழாவது பூமியிலிருப் பதா மிலக்கணம் வாய்ந்ததும், சாந்திவடிவதும் ஆகிய ஆன்மாவி லிளைப்பாறுவதா மோகூடமடையும் பரியந்தம ஆன்மவிசாரஞ் செய்தல் வேண்டும்.

புஷ்பங்களிற் புணர்ந்த நூற்போலப் பிரிந்திருக்கும் விசுவனைதஜசப் பிராஞ்ஞர்களிடத்தில் தொடர்ந்து விளங் கும் நிருவிகற்ப சைதன்யத்தைத் தனிப்படுத்தித் துரியத் தன்மையினின்றும் கிளப்பிச்சர்வதுவைத ஜாலங்களுமை அகன்ற அதன்கண்ணே அகம்பாவத்தோடு நிச்சலமா யிருக்கைவடிவ துரிய விசிராந்தியோடு கூடியவனுக்குச் செய்யவேண்டுவது யாதேதனுஞ் சேடமுண்டோ என்னுஞ சங்கையை நீக்கி யாவனேனும் அவ்வஸ்தையை யடைந் தாற் செய்யத் தக்கனயாவும் செய்துமுடிந்ததாம என் கின்றூர்.

துரியபத அடைவிலலடைந்த விசிராந்திச் சுகத்தை யுடையவனுய்ப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படாதவனுய, இருப்பவன் இல்லினிற்போனென்னினும், துறவைத் தொடர்ந்தேதானுயினும் அவனுக்கு இகலோக அருத்த பலன்கள் பரலோக அருத்தபலன்கள் என்பன எவையுங் கருமஞ்செய்யினும் செய்யாவிடினும் புண்ணிய கருமத்தாலேனும் பாவகருமத்தாலேனும் கிடையாவாம்,

சுருதிஸ்மிருதிகளின் சிரவண மனனவடிவ மமீனஷிருத்தி விகேஷபங்களு மில்லையாம்; அவன் மந்தரபருவ தமில்லாத பாற்கடல்போல எவ்வாறிருந்தாமே அவ்வாறே யிருக்கின்றான், இபபோதியம்பிய இது மூரண்பட்டதா யிருக்கின்றது, இல்வாழ்வோன் துறவியென அவ்வவ்வாசிரம நியததரும நிஷ்டடத்தன்மை, பாவத்தானும் புண்ணியத்தானுங் தொழில் செய்யினும் செய்யாவிடினுப் பயனிலை யென நியதமில்லாத தருமநிஷ்டடத் தன்மை, ஆண்டு மந்தரமின்றிய மாக்கடல்போலென அத்தியந்த விகேஷபநீக்க பரமான திருஷ்டடாந்தம எவ்வாறு பொருந்தும் எனின், ஆன்மதத்துவ விடயத்தில் முற்கூறிய ஏகதேசமான ஒபபுமையைக் கவரவேண்டும்; அதனற்றான் இவ்வாறு கூறியதாகும், உபமானங்களின் ஏகதேச அங்கிசம் உபமேயசமதருமமாமென இங்குகருதியதாம், அறியத்தக்கபொருளை அறிவதற் கனுகூலமா யிருத்தலின் அவசியம இவ்வாறே யறியத்தக்கதாம.

ஹே இராகவ! மதியினிலைவை முடிவான தூயனவாமோ அவைகளுக்குள் அந்தரங்கமுதலும், விவேகமதியினிற் கவரத்தக்க சாரத்தினுஞ்சாரங்கட்கெல்லையா யிருப்பதும், புத்தியினுஞ் சாரதரமாயுள்ளா யிருக்கும பிரத்தியக் கான்ம வடிவமும் ஆம்வத்துவை விடயஞ்செய்வதும். ஞானத்தை வித்தரித்து விளமபுவதும், இப்போதென்னிற் கூறப்படுவதும் ஆகிய இச்சாஸ்திரத்தைக் கேட்கவேண்டுமேகாக்கிரத்துடன் என்றுஞ் செய்யத்தக்கது அதன்கண்ணின்றதென்றுங் கூறுகின்றார்: சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்படும ஞானசாஸ்திர சிரவணபலத்தை முன்மொழிந்து, இனிக்கூறத் தொடங்கும் நீ சிரவணிக்கத்தக்க சாஸ்திரம் விஸ்தாரமா யிருத்தலின் ஒருமையுடன் கேட்கவேண்டும், விஸ்தீர்ணமா யிருந்தபோதினும் அசார

மாயின் அதன் கண்ணே சித்தம் ஒருமைப்படாது. ஆனி
லிதுவோ அத்தகையதன்றும், மற்றே, மதியினுள்ளுள்
ளும் ஞானசாரமா யிருப்பதாமிது, இதனையும நீ எம்ம
னோரது கௌரதையை யுத்தேசித்துக் கவரவேண்டு மென்
பதாக இன்றும், மற்றே, பிரமாணங்களை யனுசரித்து
லகத்தோடு கூடியதாக இருந்தாற் கேட்கலாம் அவ்
வாறே யுளதென்கின்றார்.

ஆறுபிரகரண வடிவமா யிலங்கும் இம்மோக்ஷ வுபாய
சம்மிதையைச் சிரவணித் தறிந்தமாத்திரத்திற் கெடாத
சக்தியோடும் நல்லதேக்ஷத்திர நல்லகாலங்களோடும், கூடிய
விரையினின்றும் அவசியம் பவிக்குங் கெடாத பலமுண்
டாவதேபோல மெய்ஞ்ஞான மினிதுண்டாம் அநேகஞ்
சாகைகளின் வேறுபாட்டால் வேறுவேறுயுள்ள அநேகம்
சுருதிகளிருப்ப அவைகளை விட்டுப் புருடபுத்தியினற்செய்
யப்பட்ட இதனையே கொள்ளவேண்டுமென என் கூறுகின்
றீரெனின்? கேட்டி! லோகங்களிலுலே தத்துவ நிர்ணயத
தைச் செய்விக்குமாயி னச்சாஸ்திரம், புருடபுத்தியினற்
செய்யப்பட்டதா யிருந்தபோதிலும் கொள்ளத்தக்கதே
யாம், மற்றையது வேதசம்பந்தமா யிருபபினும் தள்ளத்
தக்கதேயாம். நியாயத்தை விடாததே முக்கியமென அனு
சரிக்கும் புருடனு லாதரிக்கதக்கதாம் அருமறைகள் புக
ழத்தக்க மேன்மை யுடையனவே யாயினுமம, அதிரகசிய
அபிப்பிராயத்தோடு கூடினவாதலின் விரைவி லனுபவிக்க
முடியாதாம். ஆகவே சாதாரண அதிகாரிகளானே கொள்
ளத்தக்கன வாகாவாம, அவற்றின் சாரங்களை யுணர்ந்த
பெரியோரா தம்மனுபவத்தை மூலமாகவுடைய லோகங்க
ணிறைந்த இந்நூலோ வெட்டவெளியான கருத்தோடு
கூடியிருத்தலின் அனுபவத்தில் ஒட்டிவருமென அவசியம
ஆதரவோடுந் சேவிக்கத்தக்கதாம். வேறுபொருட்கூறும்

வாயிலாக இதனையே திடஞ்செய்வார், ஊகத்தோடு கூடிய வசனத்தைப் பாலகனிடத்தி னின்றும் கொள்ளவேண்டும் மாறுயிதே, மலரோன் மலர்ந்த போதினும், திருணமொப்ப விடவேண்டியதேயாம். புருடமுயல்வா லுண்டு பண்ணப்பட்தும் கொள்ளத்தக்கதாமேலாயின் எங்கள் வங்கிசத்தி லிருந்தவர்களே யெழுதிய நூல்களெவற்றையேனும் கேட்பேன், இக்காதை கேட்கத்தக்கதன்றெனின், நன்று நவின்றாய், தன் முன்னிகழும் பூரீ கங்கையைவிட்டு எனதுதந்தை தோண்டிய கூப மிதுவென்று அக்கூப நீரை யாவனருந்துகின்றனனே ஆசைமிக்க அவனெவரேசகூடி யா. திருஷ்டாந்தங்களில் விளம்பவிச்சித்த ஒப்புமை விவேகப பொருட்டும் தள்ளத்தக்க அங்கிசத்தைதக் கூறுவார். இப்போதெவ்வத் திருஷ்டாந்தங்களால் யானனைக் குணர்த்துகின்றேனே அவையாவுங் காரணங்களை யுடையன, ஜன்னியங்கள், அதனனே பொய்யாயினவாம். அறியத்தக்கதோ பரமார்த்த சத்தியமாயும் அகாரணமாயும் நித்தியமாயு மிருக்கின்றது. பொய்யாயே யிராநின்ற மண் பொன் முதலிய உபாதான திருஷ்டாந்தங்களாற் சத்தாகிய பிரஹ்மகாரண முணர்த்தப்படும், படவே ஜன்னியத்தன்மை பொய்த்தன்மை முதலிய திருஷ்டாந்த தருமங்கள் விடத்தக்கனவாம். பரப்பிரஹ்ம திருஷ்டாந்தத்தில் மாத்திரம் இந்தியமமாம. அன்னிய திருஷ்டாந்தங்களில் லையென வுணர்க, பரப்பிரஹ்மத்தைவிட்டு மற்றைய வுபமான வுபமேயங்கள் யாவற்றிற்குமே காரியத்தன்மை காரணத்தன்மை முதலியவற்றனே முற்கூறிய வொப்புமையுளதேயாம். ஆராய்ச்சி முதலியவற்றனே பிம்பத்தைதக் கவரும் உணர்வுண்டாகின்றதெனக் கூறப்படுமாயின் அவ்வாறே ஞானத்தாற் பிம்பமுற்பத்தியாம் எனக்கூறுதல் கூடாதாம், பிரஹ்மத்திற் குற்பத்திகூற முடியாதன்றே.

பரப்பிரஹ்மமத்தை விடுத்து என்றதனுனே அறியவேண் டியதிதுவாம், பிரம்மோபதேசத்தில் திருஷ்டாந்த மியா தனைக்கிண்டு கூறப்படுமோ, அவற்றுள் ஏகதேசதருமஞ்ச மானமா யிருப்பதுகொண்டே பிரகிருத நிண்ணயஞ் செய் யப்படும், பிரஹ்மஞ் சகத்தின் விவர்த்த அதிஷ்டான மென்பதை யுணர்த்தப் பாம்பின் விவர்த்த அதிஷ்டா னத்தை யறிவிக்கும் பழுதத திருஷ்டாந்தத்திற்கு அதிஷ்டான விவாத்த அங்கிச மாத்திரையானே திருஷ் டாநதத் தன்மையாம. தாஷ்டாந்தத்திற் சம்பந்தித்த நித்தியத்தன்மை சுகிததன்மை முதலிய எல்லா அங்கிசத் தானு மன்றும, அத்திருஷ்டாந்தம ஏகதேசத்திலேயே கொள்ளப்படுவ தென்னே யெனின், எல்லா அங்கிசத்தும் ஒப்புமையெங்கும் பிரசித்தமில்லை யென்றறிக. பிரஹ்மதத் துவத்தை யறிவிப்பதற்காக எவ்வெத்திருஷ்டாந்தம், எண் டுக் கூறப்படுமோ அவையாவுங் கனவிலுண்டானவைபோ லபொய்புலகிலடங்கினவேயன்றி மெய்யாயினவல்லவாம், வேறொரு பரமார்த்தவஸ்து சச்சிதாநந்தமாய் வெளிப படையில்லை யல்லவா? இருந்தாலன்றோ உவமை கொடுக் கலாம இவவாறுகமேவ உருவமில்லாத பிரஹ்மத்திற்கு வுருவத்தோடு கூடியவை யெவ்வாறு திருஷ்டாந்தமா மென்னும் மூர்க்கர்களுடைய விகற்பத்தாலுளவாய வாக் கியங்கள் உதியாவாம, பிரஹ்மம் இருமையோடு கூடியதா? இருமையோடு கூடாததா? இருமையோடு கூடியதெனின் சித்தாந்தங் கெட்டுப்போம, இருமையோடு கூடாதெ னின் ? குருசாஸ்திராதிகள் ஒன்றுமில்லாமையின் ஞான முண்டாகாதாம், என்பனவாய விகற்ப வாக்கியங்களும் உதியாவாம், இதனுனே திருஷ்டாந்த உபந்யாசத்தை அனுமானப்படுத்தி யுணர்த்தும்போது திருஷ்டாந்தம் ஹேது வியாப்தி முதலியவை பொய்யா யிருத்தலின்

வியாப்பியத்தன்மை யசித்தி சொரூபசித்தி முதலிய ஏதுப் போலிகள் பிரபஞ்ச சம்பந்தமான ஏதுக்களைக்கொண்டு சத்தியத் தன்மை முதலியவற்றைச் சாதிக்கும் போது விருத்தத்தன்மை முதலிய ஏதுப்போலிகள் அப்பிரயோஜக தோடங்களாக ஆதல்கூடும் என்னும் தார்க்கிகரது சங்கைக்கு மிடங்கிடையாதென நீக்கப்பட்டது, அசித்தி விருத்தமுதலிய தோஷதிருஷ்டிகளை யுடைய மற்றைய தார்க்கீகர்கள் செய்த திருஷ்டாந்தப் பெருந்தூடணங்களாற் றூஷிக்கபபட்ட ஏதுத்தன்மை முதலிய ஜகத்தானது கறுபபோல விருத்தலின் வஸ்துவின் கண்ணே யொருசிறிதுந் தூடணங்கிளம்பவே மாட்டாதாம்; உணர்தல் உணர்த்துவித்தல் விவகாரமோ வியாவகாரிக சத்தியத் தன்மை மாத்திரத்தாலும் சாத்திய சித்திபரியந்தம் பொருந்தும். உலகம கறுமுதலிய திருஷ்டாந்தங்களாற் பொய்பாமபோது ஆன்மாவிற்கு ஆகாசசூரியாதி திருஷ்டாந்தமும் பிரஹ்மத்திற்கு மண்ணிரும்பாதி திருஷ்டாந்தமும ஏகதேச அங்கிச மாத்திரத்தாற் பதார்த்த பரிசோதனத்தால அறியத் தக்கதாகிய இலக்கியார்த்தப் பொருட்டாம; அதன துணர்வுதிக்கவே காரியசகித அவித்தை கெடும்பொருட்டு அவசியங் கொள்ளவேண்டிபதாக சர்வசுருதி சாஸ்திர மகா தாற்பரிய விஷயமாயயான் பிரஹ்மமா யிருக்கின்றேன் என்னும் மகாவாக்கியார்த்த நிச்சயம கிரகிக்கத் தக்கதாம் யான் வெள்ளையன், தூலன் என்பதாதிப பிரத்தியகூஷத்தாலும் ஆரோக்கிய இலாபாதிகட்காக ஔடதபானஞ் செய்ய முயற்சிக்கும் பலதரிசனக் குறியாலுங், பிறர்விவகார சமமாக வுவமிக்கப் படுதலினாலும், சுருவ விவகாரங்களையுஞ செய்யும் மகாஜன வாக்கியங்களாலும் "மறையோன் வேட்க" என்றற் றொடக்கத்த சுருதியினாலும் மிருதியினாலும் தரும சாஸ்திரங்களா

200 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவ்ாசிட்ட வசனம்.

லும், அநேகந் தார்க்கீகரது லுகங்களாலும், தேகமெனும் அதனி னயலேனுமகருத்தாத்தன்மை போக்தாத்தன்மை முதலிய இயற்கை வாய்ந்த ஆன்மாவாகக் கவரபபெறும், ஆகலின் எங்ஙனம் பிரத்தியகூஷாதி யநேகம பிரமாண விருத்த அருத்தம் மகாவாக்கிய மாத்திரத்தானே, நொ னற்பாலது என வினவுதியேல்? கேட்டி, குதார்க்கிகரது மதத்தை யனுசரித்து அறிஞரது பிரததியகூஷ அனுபவத் தைக் கெடுக்கும் முடிவானபயனை யுடையனவும், அசுத்த மாய் தேகாதி யான்மபாவ விஷயத் தன்மையினும், பவித்திரமில்லாத நாய் பன்றி முதலியவற்றின் பிறப்பின் யலத்தையே யுடமையினும் அசுத்தமும் ஆகிய பிரஹ் மம் பிரமாணத்தோடு கூடியதா? பிரமாணதோடு கூடா தத்தா? பிரமாணத்தோடு கூடியதெனின்? அதுவிதத்திற் கானியாம், பிரமாணத்தோடு கூடாததெனின், பிரமேய ஆனியாம் என்பனவாதி விகற்பங்களானே பரம புருடார்த் தத் தன்மையைக் கொடுப்பதாகிய ஞானயோக்கியவுணர் வுடைமையைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது தேகாதிகட் கான்மத்தன்மை சம்பவியாதாமென்பது மேற்கூறப்படும்.

முமுகூஷுவிஞற் செய்யத் தக்கதாகச் சமாதியுடன் எவ்வாராய்ச்சி முன்மொழியப் பெற்றதோ அது நிதித்தி யாசனமென வேறுபெயர் வாய்ந்த ஞானப்பயிற்சியோடு கூடவே முமுகூஷுவால் அனுஷ்டிக்கத் தக்கது, வெளி முகச்சித்தத்தாற் கூடாதாம் என்னும் இமபொருளை யுக்தி யோடும் கூறுகின்றார் ஒரேபோழ்தினில் ஒன்றினைலொன்று விருத்தியடைவதற் கொத்த திருஷ்டாந்தத்துடன் மீண்டு மதனையே கூறுகின்றார்.

சாந்தியாதி குணங்களானவை ஞானத்தால் விருத் தியை யடைகின்றன, ஞானமுஞ் சாந்தியாதி குணங்களால்

விருத்தியையடைகின்றது, இவை பரஸ்பரம் தாமரையுந் தடாகமும்போல விருத்தியடையும், நீராற்றுமரைபோலத் தாமரையாலும தடாகம தணைமை நனமணம அழகு முத லிய குணங்களானே விருத்தியடைவது வெளிப்படை யேயன்றே! இவ்வாறே ஞானமும நல்லொழுக்கமும பரஸ் பரம் காரணமாய் விருத்தியடைவனவேயாம், நல்லொழுக் கத்தானே ஞானம்வளரும், ஞானத்தானே நல்லொழுக் கம் வளரும், இந்தமெய்யுணர்வும் நல்லொழுக்கமும் ஒன் றற்கொன்று சாதகமாகியே வளரும்; மதிமானவன் சாந்தியினாலும பிரஞ்ஞையினாலும், மகாபுருடத் தன்மை யினாலும திடமுயற்சியினாற் சிரவணாதி முறையாய் ஞானத் தையும் நல்லொழுக்கங்களையும பயிலவேண்டும் இவ்வுலகத் தில் ஞானம் நல்லொழுக்கம் என்பவற்றைச சமமாகப் பயிலாதவரை அதிகாரிக்கு அவ்விரண்டினொன்றுகூடச் சித்திக்கமாட்டாது. சாதனகலாப வுபதேசத்தைப பய னைப்பகரும் வாயிலாய் முடிதலுக்கூறுவார், மதிமானை முமுக்ஷுவால் கீர்த்தியையும் ஆயுளையும் கொடுபபதும், புருடார்த்த பலத்தைக் கொடுபபதும் ஆகிய இவ்வுத்த மோத்தமமான கிரந்தத்தை ஆத்தராயும் ஆன்மஞானியா யும் இலங்கும் ஆசிரியரிடத்தில் இனிதன்போடு சிரவணஞ் செய்யவேண்டும. குருசமபிரதாயமாய்ச் சிரவணஞ் செய் தாற்றான் பெரும்பயனைக் கொடுக்கும். கலங்கிய நீரானது தேற்றும் பொடியாற்றெளிவை யடைவதுபோல நீயுமிச சாஸ்திரத்தைச் சிரவணித்து மதியின்தெளிவிலுமே சாதன மகிமையின் பலத்தால் அந்தப் பரமபதத்தை யடைவாய். கூறிவந்த சாதனசம்பத்தோடு மனனசீலனுய் வாழும் மூனிவனுடைய மனது அறியத்தக்க ஆன்மசொருபத்தை யறிந்து அதன்வலுவிலுற் சுதந்திரமாய்ப் பரமபதத்தை யிச்சியாவிடினும் அடைகின்றது; கேவலஞ் சாதனமகிமை

யாலேயிவ்வாருகின்ற தென்பதாகவில்லையும், மற்றே, அறியுத் தக்க தத்துவ வியற்கையினுனும் என்றறிக். ஞானதின மாய் ஞானவடிவ அகண்டப் பிரஹமாகார விருத்தியோடு கூடிப் பிரகாசித்துக் கொண்டிருத்தலின் அஞ்ஞானத்தை யும் அதன் காரியங்களையும் உதறி யெறிந்துவிட்டு யாவற் றையு மறிந்துகொண்டே விழித்திருக்கும் அகண்டமாய உத்தமோத்தம பதமானது மனதை விடுவதேயில்லை, அஞ் ஞானம் அதன்காரிய முதலியவற்றோடு மனதும் பாதிக்கப் படுவதேயாகும், இதுமெய்ஞ்ஞானிசட்கணபவமேயாகும். அவ்வாறே "உடலினை யகமென் றுணர்ந்திடு முணாவை யொழித்திடு மெய்யுணர்வதுதா, னுடலினை யகமென்று ணாகதிடு முணர்வையொத் ததிதிடமேதயாகி, விடலருந் தனதுவடிவிலே யெவற்கு விளந்திடுமன்னவன் வேண் டாம, விடறுயரெனினும் விட்டெலாத் துயருமவீட்டினை யடைந்து வாழ்குவனே.

முமுக்ஷுப்பிரகரணம் முற்றிற்று.

உற்பத்திப் பிரகரணம்.

ஞான விண்மகன் கதை.

சத்தியஞான வநந்தவொன் றஜாசாஸ்வத நீததியவிபுவாய்ச
சுத்தவுட்பிரம ரசாயனமாகிச் சுகனப் பூரணபரமாய
மத்தியுற்பத்தி முடிவிறற்சோதி மாயையின் விரிவினுண்மீண்டும்
தொத்தியவுலகாய் மாயையும் பயமி றூயவிநாயகற்றொழுவாம்.

ஓம சுவஸ்தி. ஸ்ரீ கணேசாயநமஃ ஓம பரமாத்மநே நமஃ இவ்வுற்பத்தி யென்னும் பிரகரணத்தில் ஒன்பது கதைகள் உள்ளனவாம்; ஆதியது ஞானவிண்மகன் கதை யாம், பின்லீலை கதையாம், மூறையே கற்கடிகதை, ஐந்த

வர்கதை, வஞ்ச விந்திரன்கதை, மனத்தின்கதை, பாலன் கதை, சித்தன்கதை, ஏழுபூமிகளின் வர்ணனம், அலங்கரிக்கப்பெற்ற இலவண மன்னவன்கதை, என்பனவாம்; என்னுமிவற்றுள் பூர்வத்தாற் சுருக்கமாகப் போதியங் கூறப்படும. பூர்வப்பிரகரண விருத்தாந்தத்தையனுவதித்து உத்தரபபிரகரண தாற்பரியங் கூறுகின்றூர்: ஞானத்திலேயே யான்மாவிற்கு மோகூடமல்லாமற் கருமசமாதிகளினலே யில்லையென்பதையும், ஆன்மாவானது தன்னைத் தானே யறியாமல் தன்பால் அசத்தாய திருசியவுலகத்தைச சிருஷ்டிக்கின்ற தென்பதையுங் கூறுகின்றூர்; சாஸ்திரங்களி லுரைத்த சாதனங்களோடு கூடிய அதிகாரிக்கு 'விவேக முடையவன் மீண்டுமை பிறப்பிறபபைக் கொடாதது்ம், துரியபதமென்னுமை பெயரையுடையதும், சாந்திவடிவமும் ஆகிய ஆன்மாவி லீளப்பாறுவதா மோகூடமடையும் பரியந்தம் ஆன்மவிசாரஞ் செய்தல்வேண்டும்" என்பதாகத் தத்துவ அபரோகூஞானம்வரை செய்யவேண்டிய' தாய் விதிக்கப்படும் விசாரப் பிரகாரத்தை முன்னிரண்டு பிரகரணங்களில் வருணிக்கப்பட்ட எல்லாச் சாதனங்களையும உடையவரும் அதிகாரிகளுக்குட் சிரேஷ்டருமை ஆகிய' ஸ்ரீ இராகவர் பொருட்டு "இபபோது ஞானத்தின் முறைமையானது இனிதாகச் சாதன முபதேசிக்கப்பட்டது போலவே யுபதேசிக்கப்படும்" எனப் பதிஞனைஞவாயிலாக இனி யியமபப்படும் கிரந்தத்தால் விஸ்தாரமாக விளம்ப' முயலும் ஸ்ரீ வசிஷ்டபகவானனவர் சிருஷ்டிப் பிரகாரத்தைக் கூறுமை வாயிலாகப் பிரஹ்மாத்வைதத்தை விளம்புவதற்காக முற்பட்ட உற்பத்திப் பிரகரணத்தைத் தொடங்குகின்றூர்.

"ஆன்மாவையே காணல்வேண்டும்" என்பதாதி சுருதி கூறியதும், சமாதி இவ்வாறு செய்யத்தக்க தென்ப'

தோடு கூடியதும், மனனநிதித்தியாசன அங்க முற்றதும். சிரவணவடிவ விவகாரமே முமுக்ஷுவு விவகாரம என்னப் படும். சகங்கள் = சர்வதிருசியங்களும், விண்ணினின்றும் கந்தர்வநகரம் உண்டாவதேபோல், அறியாமலிருக்கப் பட்டஅதிஷ்டானப்பிரஹமத்தினின்றும்,உண்டாகின்றன வென்று கூறபபடுமை முமுக்ஷுவிணலே காணத்தக்கதா கப் பிரஹமாத்ம தத்துவம் முன்னாமொழிந்தவழி, காக்ஷி முதலிய அளவைகளான் அளக்கபபெற்ற வுலகவுண்மைச் சங்கையால், அதற்கப் பரிபூர்ணத் தன்மைச் சங்கையுள தாக, அதனை யகற்றுவான், உலகத்திற்குக் காரணபரமாத் மாவை விடுத் துண்மை யின்மையைப் டுகலும்பொருட்டு, அதனினின்றும் சிருஷ்டியைப் பின் வருணிக்க வேண்டிய தாமெனக் கருதி ஜீவசொருபத்தில், வாதிகள் விவாதம காண்புறுதலின் தமதுகருத்திற் கிசைந்த ஜீவசொருபத் தைக் கூறும் வாயிலாய், அதற்குப் பிரஹ்மைக்கியத்தை யறைவார், அல்லது ஏகான்மத் தன்மையை யறியவேண்டு மென்றிச்சித்த முமுக்ஷுவிற்கு அதுவே முதலிற் கூறத் தக்கதாம், அதற்கங்கமாகச் சிருஷ்டி பின்வருணிக்கத் தக்கதாம எனக்கருதிப் போதிக்கும் விழைவுவிளைய முன் னரே அதன்சாக்ஷியதாக வொளிர்வதாய், சாக்ஷிப்பிர மாண மெனப் பிரசித்தமாயிலங்கும் அபரோக்ஷ சைதன் யவடிவ ஜீவனேது; அதனினும் விருத்தமாய்ப் பரோக்ஷ மாயுள்ள பிரஹ்மத்திற்கு ஒருமை சம்பவியாதாம் என ஆசங்கித்து, அதற்கு அபரோக்ஷசைதன்ய ஆத்மத் தன் மையைக் காண்பித்துப் பிரத்தியக்கைக்கியம் பேசுவார், அல்லது, முமுக்ஷு அறிய இச்சித்த ஜீவபரமாத்மைக்கி யத்தைக் கூறுமல் அறியவிரும்பாத ஜகதுற்பத்தியையினி துகீர்த்திக்கும் பிரதிஞ்ஞை பொருந்தாததாம் என ஆசங்கை யுண்டாக்க கூறுவார், இவ்விவகார பூமியின்கண்ணே அனு

பூதிவேதன பிரதிபத்தி சப்தங்களாற் கூறப்படும் அபோ
க்ஷசைதன்யத்திற்குக் கூறியபடியே அனுபூதிப் பிரத்திய
க்ஷம் வேதனப் பிரத்தியக்ஷம் பிரதிபத்திப பிரத்தியக்ஷம்
என்பதாகவாம். பிரத்தியக்ஷமென்பது தனித்தனிவாதி
களிணுலே தாமங்கீகரித்த விசேஷணம் பெய்யும் வாயி
லாய்ச் செய்யப்பட்டதாம், அதுவே நமது உபநிடத வாதி
கட்கு ஜீவணம, அங்ஙனமே "அனுபூதி வேதனப பிரதி
பத்தி என்று கூறப்படும் அபோராக்ஷ சைதன்யம் யாதோ
அது ஜீவனென்று கூறப்படும்" என்று மகத்துக்களா லியம்
பப்பட்டுளது, இதனுனே வாதிகளால் வேறுவகையாகக்
கற்பிக்கப் பட்ட ஜீவசொரூபம் நிராகரிக்கப் பட்டதாம்
பிரஹமபக்ஷத்திலோ இஃதிங்ஙனுரை யியமபிக் கொள்ள
வேண்டும்:—அனுபூதி சப்தத்தால பிரஹ்மம கூறப்படும்,
வேதன பிரதிபத்திகளால் அதுவே விசேடிக்கப்படும்,
வேதனமெனபபிரஹம அபோராக்ஷஞானம நவிலபபடுமெ,
பிரதிபத்தியென லௌகிகப பிரத்தியக்ஷம் ஆம், மகாவாக்
கியத்தா லுண்டாய அந்தகாரண விருத்தி யாருடமாகிய
பிரஹமமே அபோராக்ஷ ஞானசப்தத்தா லியம்பபபடுவ
தாம்; விழிமுதலியவற்றுனே உண்டாய அந்தக்கரண விருத்
தியாருடமாய அதுவே லௌகிகப் பிரத்தியக்ஷ மெனப்
படுமெ வேதனப் பிரதிபத்தி வடிவமாகிய அனுபூதிப்பிரஹ்
மம பிரத்தியக்ஷபரியாயத்தைத் தாண்டாமல் மோக்ஷ
சாஸ்திரத்தில் பிரத்தியக்ஷமெனப் பிரதிபாதிக்கப் பட்டுள
தாம, "அபோராக்ஷத்திலும் அபோராக்ஷம் சக்ஷுர்நேந்
திரம்" என பிரத்தியக்ஷ அர்த்தங்களின் பிரதிபாதக சுரு
திபாம். பிரத்தியக்ஷமெனப்பெயரிய அநதப் பிரஹமமே
நம்முபநிடத சம்பந்திகட்கு ஜீவபத இலக்கியமாம். தனித்
தனி குறிப்பிடவேண்டிப் பால்மாறு பட்டதுணர்க. அச்
சீவனென்னும் அபோராக்ஷசைதன்யாத்மா பிரஹமமே

யாம். அற்மீறல் மோகூஷகாமனுககு ஆதுமவ யுணாவுரு வெனப் பிரஹமை ஒருமையுபதேசிக்கப்படினும் முக்தியான துண்டாக மாட்டாதாம்; பரிபூரணவடிவமாக நிலைபெறு தலே முக்தியாம், பிரஹமத்தினும் வேறுய பிரபஞ்சமா னது இருத்தலால் அஃதொவ்வாமையின் என ஆசங்கிப்ப, சர்வப்பிரபஞ்சததிற்கும் பிரஹ்மவிவர்த்தத் தன்மையைக் காட்டுவார் சித்ததத்திருக்கும் சிற்பிரதி பிம்பவடிவ ஜீவன் புமான் எனப்படும். அகந்தையாற் புலப்படுவதனல் அகங் காரமாம். உணர்வுவடிவப் பரமாத்மாவானது, ஒடுவென் பதாற் கொள்ளப்படும் அதுவென்பதால் எண்ணப்பெறும், அச்சம்வித்துருவப் பரமாத்மா தன்னவித்தையிணமின பூர்வம்சித்த வுபாதியையுடைய புமாஞ்கிப் பின்னா அகந் தையுணர்வு வடிவமாம் இஃதுபலக்கணமாம், புத்திவடிவ மாய மனவடிவமாயும் ஆமெனவுங் காண்க. முமுகூஷா விவகாரத்தை மொழியும் முற்பிரகரணததிலும் வேறுக இனி இவ்வுற்பத்திப் பிரகரணங் கூறப்படும் என்பதன்கண் இனியென்னும் பின்னரென்பதால் ஏதுத்தன்மைச் சம்பந் தங்காண் பிக்கப்பட்டதாம். உத்தமர்கள் சர்வப்பிரமாணங் கட்குமம் இந்திரியங்கள் சாரமாவனபோலச் சர்வ இந்திரி யங்கட்கும் அபரோகூஞானம் சாரமாமென்பர், அது தான் முக்கியமான பிரத்தியகூமம் யாது அவச்சேத பூத மாயும் ஆசிரயபூதமாயும் விடயபூதமாயும் குடத்தை யா னுணர்கின்றேன் என்னும் திரிபுடியுணர்வாற் சித்தமாமோ அதுவும் பிரத்தியகூமே, திரிபுடியை யனுசரித்துப் பிர காசவடிவமா யிருப்பது அனுபூதி, அறியப்படுவதாய திரிபுடியை யுணர்வது வேதனமாம், மூன்றன் பொருட்டுப் பிரகாசவடிவமாக வியாபித்திருப்பது பிரதிபத்தியாம், அக்கரப்பொருளைத் தாண்டாமல் திரிபுடியை வியாபித்தி ருக்குஞ் சாகூஷியாகிய சின்மாத்திரத்திற்குப் பிரத்தியகூ

மென விவகாரபூமியில் நாமந்தரிக்கப் பட்டது அச்சாக்ஷி யே ஜீவனுடென்று பிராணனைத் தரிக்கும் நிமித்தங் கொண்டு கூறப்படும், அச்சாக்ஷியே விருத்தியுபாதி கொண்டு ஞானமெனப்படும், அகந்தை ஞான முடையவ னை புருடனுயோ பிரமாதாவெனப்படும்.

அதுவேபாகிய பதார்த்தரூபமாகவும் விவர்த்தத்தை யடைகின்ற தென்கின்றார்.

அந்தப்பரமாத்மா, சங்கற்ப விகற்பங்கள் பிரமசமு சயங்கள் முதலியவற்றால் அபிமானதிகளால் ஆக்கப்பெற்ற நானுபூத அவஸ்தைக் கிரமங்களை யடைந்து, விளையாடுமை, அவ்வவஸ்தைமுறை யிவ்வண்ணம் பவிக்கும்:—பரிபூர்ண அறிவுருவப் பரமாத்மா சிருஷ்டிகாலத்திற் பூர்வம் சாமா னியமாகத் திருசியத்தன்மை யவஸ்தையை யடையும், பின் னர்ச சித்த அவஸ்தையையடையும், பின்னர் அகங்கார அவஸ்தையை, பின்னர்ப் புத்தியவஸ்தையை, பின்னர் மனை அவஸ்தையை, எனவடையும், இம்முறைதானே மேலும் மேலும் வெட்டவெளியாம், எவ்விடயாகாரவிருத் தியிலை புறவிடயத்திலுள்ள ஆவரணநீங்க வெளிப்படுகின் றதோ அதுவிடயம் எனப்படும். இவ்வாறு சாக்ஷியே முறையாக மூன்று விதத்தையுமடையும், வியஷ்டியின் கண்ணை யிவ்வாறுகச் சமஷ்டியின் கண்ணும் இரணிய கருப்பரிடத்தி லிவ்வாறே காணவேண்டும் நீர் அலைமுதலிய வடிவமாக எங்ஙனம் விளங்காநிற்குமோ அங்ஙனமே நானு விதம முறைமுறையாய் மயல்களை செய்விக்கும் சங்கற்ப விகற்பப் பிரதானமான அந்தக்கரணங்களினுதியாஞ் சமஷ் டிகளால் உலகவடிவமாகச் சாக்ஷியே விளங்கும்.

அற்றேல், பிரஹ்மமானது இவ்விதம் உலகமாகத் தோற்றுமாயின் உலக காரணமாகிய பிரஹ்மத்தோடு அத

னினும் விபரீதமாய ஜீவனுக்கு ஐக்கியம் பொருந்தாதாம் என ஆசங்கித்துக் கூறுகின்றார்.

அச்சாகூஷிரூபமாய பிரத்தியகூஷமே முன்னர்ச் சிருஷ்டியிலுதியிற் காரணமியாதொன்று மின்றியே யுலகஸ்ரீலயால் விரைவில்தானே விளங்கி யுலகவடிவமாகி யதன்பாலே தானேகாரண வடிவமாயது. ஓரிடத்தில் உண்மையான் காரிய காரணத்தன்மை கூடாமையினுல், அசத்தாயினும் அருளுனத்தாலாகிய ஜீவனுக்குச சத்துப் போன்றுளது, அவிசாரத்தோடு கூடிய ஆன்ம சொரூபத்தையுடைய இப்பிரகிருதியின் கண் உலகரூபமும வெளிப்படையாய் வரும், இங்ஙன மிவ்வுலகம் ஆரோபிக்கப்படும். இதற்கபவாதமோ இங்ஙனமாம்; இவ்வண்ணம் விசாரமும் அதனுல் விளக்கப்பட்ட சாகூஷாத்காரமும் சுயமாகவேயிருந்து தன்னிடத்தி லிருந்துண்டாகி உண்மையாய்த் தன் வடிவமாகவே யிருக்கின்ற வுலகதேதகத்தை அருளுனநீகத்தாலே யழித்துத் தன்வடிவமாயும், ஆவரணமற்றதாயும, மகத்தாயும், அபரிச்சின்னமாயும், பிரத்தியகூஷமாயும் இலங்கும் பரமபுருடார்த்த ரூபமாய்ச் கீக்கிரம் செய்கின்றதென்பது உபசாரமாத்திரமாம். மனஞ்சஞ்சலிப்பதற்கு விடயமின்றிய வேதனமெதுவாகாமையின் விடயத்தோடு கூடியதாகவே அது கூறப்படவேண்டும். வேணடவே, ஆண்டு மனதசைவதற்கு முன்னரும் விடயஞ் சித்திக்திருப்பதாகக் கூறவேண்டும்; விடயங்கள் மேனமையமென முன்ன ருரைத்திருத்தலின் அவ்வாறே விடயஞ சித்திப்பதற்கு முன்னரே மனத்தின் சித்தியாமெனக் கூறவேண்டும். வேண்டவே, அன்னியோன்னிய ஆசிரயமாம, எனின்? மாயையோடு கூடிய சிதாகாசத்துக்குட் சர்வமுஞ் சமஸ்காரரூபமாக அதிஷ்டான சத்தையைப பற்றியிருந்தே தோற்றுகின்றது; காற்றினுள் ளசைவிருப்பதே போல

வேதனத்திற்குள்ளும், புறப்பொறிகளாற் கவரப்படுதல் மனதாற் சிந்திக்கப் படுதல் என்னும் இரண்டினுக்கும் விடயங்களாய பதார்த்தங்களால் நிறைந்து வியாகுலஞ் செய்யப்பட்ட வுலகமான துளதாம்.

பிரஹ்மமானது ஜகதுபாதான காரணமாயின் தரங் காதி வடிவத்தாற் சலம்போலும் கடம் பிரஹமம் படம் பிரஹமம் என அவ்வவ்வடிவமாகவன்றே தோற்றவேண் டும், அவ்வாறு தோற்றக் காணுமையின் உபாதானமாகா தாம, மற்றே, நிமித்தமேயாமெனக் கடாவ விடை தருகின்றார்:—ஆயின் எங்ஙனம் ஓரோரு காற்றேற்றல் அதனுற்பத்தி முதலியவற்றின் விவத்தையாதல் எனின் அறைகின்றா''

தூய்தாயும் எல்லாவடிவமாயுமிருக்கும சேதனம கரு மபரி பாகத்தாலாம் விவஸ்தையாலே பிராணிகள் கரும போகப பொருட்டுத் தோன்றுகின்றபடியே யவ்வவ்வடி வமா யுண்டானதுபோல விரிந்த திக்கு காலவெளியுட் பதார்த்தவேட தேகங்களைத் தரித்து விளங்குகின்றது; எல்லாவடி வமான ஆன்மா மோகத்தாற் தன்னைத் தேகாதி திருசியம்போலக்கண்டு, அவையே யெனது சொரூபமெ னக் கருதி ஜீவரூபமாயிருந்து விளையாடும; இது பொருத்த முடையதே தயாம. எவ்விடத்தில் எவ்வடிவமா யெவ்வாறு புலப்படுகின்றதோ அவ்விடத்தில் அவ்வடிவமா யவ்வாறே தான் தோற்றுகின்றது, வெளிப்படையாக விளம்பிலே, சர்வாத் மகமாய பொருள் எவ்விடத்தி லெவ்வாறு இனிய வுல்லாசத்தை யடைகின்றதோ, அவ்விடத்தி லவ்வாறே அவ்வடிவழுடையதுபோல அதிவிரைவில் விளங்கிக்கொண் டிருக்கும், காணும்பொருள் எல்லாவடிவமாகவு மிருத்தலி னலே, காணப்படுபவற்றின் றன்மையை யடைந்தது

போற் றோன்றுகின்றது. போலெனக் குறிப்பித்த திருஷியம் பொய்யேயாமென்பதில் என்னியம், திருஷ்டா விருந்தாற்றான் றிருஷியமிருக்கும், இல்லாவிடினிராதா மாதலினே திருஷியம் மெய்யாகாதாம், திருக்குவடிவமான திருஷ்டாதிருக்கு சொரூபத்தினின்றும் நழுவித்திருஷியத்தன்மையை யடையுமாயின், திருஷ்டா வில்லாமல் திருஷியசித்தியே யுண்டாகமாட்டாது, நழுவாமலிருக்கினே அத் திருஷ்டாவிற்குத் திருஷியமா யிருக்குந்தன்மை, பழுதையின் இயற்கை யினின்றும் நழுவாததற்குப் பாம்புப் பான்மைபோலும் விவர்த்தமாத்திரமாய்ப் பொய்யேயாகும்; ஆகவே காரியப் பொய்ம்மையானே அதனை யபேக்ஷித்த காரணத் தன்மைக்கும் பொய்ம்மையே சித்தித்தலின் பிரஹமம் காரணத்தன்மை யற்றதேயெனச் சித்தித்தது.

சர்வஜகத்துமம பிரஹ்மகாரியம் எனக் காண்பிப்பவராய்க் காரணப் பிரஹ்ம வியதிரேகமாகக் காரியமாகிய ஜகத்து அசத்தேயாமென லறையப் பட்டது, விகாரமானது வாக்காற் றொடங்கப்பட்ட நாமதேய மாத்திரத்தையுடையது மண்மாத்திரம் உண்மையெனக் காரணத்திலும் அயலாய்க் காரியத்திற்கு அசத்துவத்தைப் பிரதிபாதிக்குஞ் சுருதியினல் இப்போது பந்தம் அதன் நீக்கங்கட்குக் காரணத்தைக் காட்டும் வாயிலாக அதேபந்த காரணபூத திரிசியஜகத் தசத்துவத்தைப் பிரதிஞ்ஞைவாயிலாக இவையாவும் பிரஹ்மமேயாம் என்பதாதி சுருதிகளை யனுசரித்து விரித்துரைக்கின்றார்! பந்தத்தை நீக்குமுபாயத்தை விரும்பிய எனக்குத் திருஷியத்தைப் பொய்யென்று சாதிப்பதுகொண்டு ஆகவேண்டிய தென்னேயெனச் சங்கிப்பத் திருஷியம் சங்கற்பமாத்திர மானபடியால் சங்கற்பநீங்கத் திருஷிய மித்தியாபந்தமும் நீங்குமென்றெண்ணிக் கூறுகின்றார்.

பிரத்தியகூஷ தத்துவத்தையாராயின் அத்வைதமா யிருக்கும் பிரஹ்மமேமே சித்திக்கும், சித்திக்கவே இந்நிலை பெற்ற பிரத்தியகூஷமே யுண்டாக்குவதெனத் துணியப் பெறும். அனுமானுதிகளோ பிரத்தியகூஷ வாயிலாகவே யுண்டாகின்றமையினுலும, அதுவதுவாக முடிவுபேறடை தலினுலும், அத னங்கிசங்களேயாகும்; ஆகவே சர்வப்பிர மாண தத்துவம் ஆன்மாவே யென்பதாம். திருசியமிருத் தலினலே இபபாதமுண்டாகி யிருக்கின்றது, திருசியமில் லாவிடிற் பந்தமுமிலதாகும், எவ்வாறித்திருசியனு சம்பவி யாதோ அவ்வாறு முறையாய்க் கேட்பாயாக. திருசிய மில்லாதமாத்திரையானே பாத நீக்கமாகாதாம், உற்பத்தி விருத்திநாச சுவர்க்க நரகாதி பாதமானது காண்போன் நருமமாகத் தோற்றலா லான்மாவிற்குள்ளடங்கி யிருத்த லின் திருசியம் நீங்கியபோதினுமை அது நீங்காமையின் எனின்? உண்மையாகயாவனுலகி லுண்டாவனே அவனே விருத்திநாசசுவர்க்கநரகாதிகளையும் பந்தமோகூஷங்களையும் அநுபவிப்பன். ஆன்மா வுற்பத்தியாதி யியற்கையுடைய தன்றும். தனது சொரூபத்தை யுள்ளபடி தெரிநதுகொள் ளாமையானே அதற்குற்பத்தியாதி மயல் தோற்றுநிற்கும. எதனுற் றன்னை யறியாமையினுனே பாதமாமோ அதனுல் தன்னையறியும் பொருட்டு உனக்கு அத்திருசியஞ் சம்பவி யாமையை ஆண்டுவிளம்ப விழைந்தவகையாகவே விளம்பு கின்றேன், உற்பத்தி சமபந்தம் திருசியசமுசார கோடி யின் கண்ணை பொருந்துமாறும், ஆன்ம கோடியின் கண்ணை பொருந்தாதவாறுமை கூறுவாம. ஆன்மாவோ திருசிய வுற்பத்திக்குமுன் எவ்வாறே அவ்வாறே யுள தாம். அணுமாத்திரமும் விகாரப்படுவதே கிடையாது, அங்ஙனமே "உற்றதனிலையமில்லை யுறுவதுமில்லை கட்டை, யுற்றவனில்லைமற்றைப் பயில்பவ னுயர்வீட்டாசை, யுற்றவ

னில்லை வீட்டை யுற்றவனில்லை யென்னும், நற்றிறமிதுவே கண்டாய் நண்ணுவ துண்மையானும்." என்னும் மறையும் அறைகின்றது.

முன்னரே யாது எவ்வாறுமோ வெனக் கூறப்பட்ட பொருளைக் கூறும்பொருட்டுப்பிரளய அவத்தையில் எஞ்சி நிற்கும் ஆன்மசொரூபத்தை யறையும் பொருட்டு முற்சி ருஷ்டிக்குக் காரணத்தில் இலயப் பிரகாரத்தைத் திருஷ்டாந்தத்தால் தெரிவிக்கக்கேட்குதி யென்கின்றார்.

கற்பனையாவு மின்றியபோது வியாபகமாயும் இரு ளொளி கடந்ததாயும், நிச்சலமாயும் அபரிசுசின்னமாயும் பெயரற்றதாயும் இந்திரியங்களுக் கெட்டாமையின்விளக்க மற்றதாயும், இன்னபடிதா னிருக்கின்றதென ஒருசிறிதும் நிரூபிக்க முடியாமையின் அகோசரமாயு மிலங்கும் சத் பிரஹமம எஞ்சாநிற்கும். "இவையாவையுமே யெழுவதன் முன்னர், சவுமியசத்தே சாநதமாயுளதாம்" எனமறையு மறைகின்றது. தாவரஜங்கம வடிவமாகக் காணபபட்ட இவ்வுலக முழுவதும கனவானது துயிலின்கட்போலக் கற்பாந்ததத்தில் நன்கழிந்துபோம; சாங்கிய நையாயிகா தியர் கருதிய பிரதான பரமாணுமுதலியவை யெஞ்சா நிற்கும்வடிவப பிரளய வேற்றுமைப பொருட்டே கூறிய திருட்டாந்தமாகும். அதன்பின்னர், அஞாத்தமாதலினு லே தொழிலற்றதாயும், பரிசசின்னப் படாமையினுலே கம்பீரமாயும, உருவமற்றமையானே தெயுவல்லாததாயும, பிரகாசவடிவ மாதலினுலே இருளல்லாததாயும், தரும மற்றமையானே சாற்றவொண்ணுததாயும் அஞ்ஞானத் தான் மூடப்பட்டமையானேயும, பிரபஞ்ச சமஸ்கார ஆதாரமானமையானேயும், வெளிப்படாததாயும் இருக் கும் யாதோ ஒரு சத்வத்துவானது எஞ்சியிலங்கும்.

பெயரற்றதெனக் கூறியது பிழையாகும் பிரஹ்மாதி நாமங்களிருத்தலின் அதற்குளனச்சங்கித்துக்கூறுகின்றார். பரிபூர்ண கம்பீரப் பேரொளியேயாய அந்தப் பரமான்மா, தெளிந்தநீரில் விண்டோற்றலேபோலத் தானேயன்னியம்போல வுல்லாசித்துத்தோற்றி வருஞ்சீவாதி நாமங்களால் கிலேச களங்க முதலவற்றையுற்ற ஜீவத்தன்மையை யுற்றதே போலவாம், போலபோல வென்றதனே அன்னியத்தன்மை மாயையா லாயதென்பதைக் காட்டியதாம் எண்டிது சிருஷ்டிக் கிரமமாம்:—சிருஷ்டிக்கும் முன்னத்விதீய பரமாத்மா, சிருஷ்டி காலத்தில் பூர்வம் அநாலிங்கித விசேட திருசிய (சிறப்பின்றிய) திருசிய மாத்திர வடிவமாய் விவர்த்தமாம்; அதன்பின் சமஷ்டி சித்திரவடிவமாயும், அதன்பின் சமஷ்டி ஜீவவடிவமாயும், பின்னகங்கார வடிவமாயும், பின்புத்தி வடிவமாயும், பின்மனவடிவமாயும், பின்றன்மாத்திரை பூதபௌதிக வடிவமாயும் விவர்த்தமாம். அவ்வாறே பெரிய வாசிட்டத்திற் கூறப்பட்டுள்ளதாம்:—

விஸ்தாரமாயும், விகாரத்தாலாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வற்ற மாயா சபளத்தன்மை யுண்மையாற் சமமாயும், சர்வாதிஷ்டானமாயும், உண்டாகாத ஆகாயதேயு தமாதிகளின் காரணவடிவமாய சத்தையாயும், சிதாத்மாவாயும் இருக்கும் பரப்பிரஹ்மத்தின் கண்ணே சித்திற்கு அறிபவனந்தன்மை யிலக்கண ஜீவத்தன்மையானது விடயகரண சித்திவாயிலாகவே சித்திக்கவேண்டியிருத்தலின் அதனத்தியாசம் முதலிலேயே யமையுமாதலின் முன்னர்த் திருசியத்தகைமைக் கற்பனையாம், அதன்கண்ணே ஏதுயாதோவெனின், சத்வஸ்துவிற் கஃதுண்டாகாத வியற்கையே யா

குமன்றே? ஆகவே சத்திற்குச் சேத்தியாங்கிச சேதனத் தாலாம், சிதிசக்தித் தன்மைச்சேதனத்தாற் சித்தகற்பனை யுதிக்கும், யாதுயாது அத்தியசிக்கப் படுகின்றதோ அதன தன் வெளிப்பாட்டியற்கை சித்தினிடத்தின் முன்னரே சித்தித்திருத்தலின்யாண்டும்நிமித்தத்தன்மையாம். அதன் பின்னாச் சேதயசையோக சேதனத்தாற் சீவத்வகற்பனை யாம், சேத்தியத்தின் ஏகபரத்தன்மை வசத்தால் அதன் பின் மாயையென்னும் அகம்பாவ கற்பனையாம், அதுவும் ஜீவபாவத்தின் நிரூட அவஸ்தையாகும், ஏகபரத்தன்மை யும் அத்துணை மாத்திரத்தின் யானென்னும் அபிமான மாம். அதன்பின் அகந்தையின் விருத்தியிலே புத்தித் தன்மைக் கற்பனையாம், இதுவே மனஸ்தாதி சப்ததன் மாத்திர காதிமாமும்; அதாவது இவ்வண்ணந் தருமசித் தியாகவே சப்தாதி விடயமாத்திரைகளாய் வாதனைவடிவ மாகத் தன்பாலடங்கியவற்றிற்குக் கனவிற்போல மன னத்தால் அஃதடங்கு மதேரூபமிதுவேயமையும் என்ப தாம. உயர்ந்த பிரமாணமாய மறையாலறியப்படுதலின் இருதம், "எதனிலனினைறந் தேய்ந்திடு மேற்றிடும், எதனி லல் விடயங்க ளிலங்கிடுமை, எதனிலெலந்தஞான்று மிருந திடும், அதனிலுலிதை யாத்துமாவென்பரால்" என ஸ்ரீ வியாசபகவான் விளம்பிய முறையாய் ஆன்மா சத்தியத் தன்மையின் மேன்மை யெல்லையாதலின் பரம், பெரிதாத லினலும் உலகாகாரமாகப் பெருத்திருத்தலினலும பிரஹ மம, நான் முறையே அறிஞர்களானே யனுபவிக்கப் படு தலின் சததியம, என்பனவாதியாய நாமங்கள் அதற்கு மகான்களாகிய அறிஞர்களானே உபதேச விவகாரப்பொ ருட்டு, இடப்பட்டனவாம: சிருஷ்டியிலுதியில் அதற்குப் பொய்யாகச் சமஷ்டி ஜீவபாவமுளதாம். அவ்வாறுய்ச் சிற்சுபாவமாகவே யிருக்கும் ஆன்மாவானது மோகத்தி

னுலே தானே அன்னியஜடமாய ஆகாசாதி முறையி லுண்டாய இலிங்க சமஷ்டிவடிவமாய் அதனுட் புகுந்தமையின் அதனபிமானம் பெற்று அதுபோலொளிர்ந்து அதனுட் கிடந்த பிராணதாரணை யுபாதியினுனே தேகமுண்டான பின்பு வருமவாக்கு விளக்கவதீனமாக வருஞ்சீவப் பெயராலே நிந்தைக்கிடமாகச சம்பாதித்துக்கொண்ட ஜீவத் தன்மையை மயக்ககத்திலுலே யடைந்தது போலாம், உண்மையாகலோ அவ்வாறடைவதில்லை.

இம்முறையையே முற்றினும் மொழியாத தலத்தும் காணதக்கதாம், திருசியதவசித்த வாயிலாய்ச் சமஷ்டி சீவபாவத்தையடைந்த பரமாத்மாவிற்கு அகங்கார புத்தி வாயிலாய் சமஷ்டி மனுபாவத்தைக் கூறுகின்றார். இவ்வாறு ஞானசத்தி மாத்தரத்தாற் சாதிக்கப்பட்ட சிருஷ்டியானது கூறப்பட்டது, இனிக்கிரியா சக்தியின் சகாயம் பெற்ற அது சாதிப்பது கூறப்படுகின்றது. அதன்பின்னர்ச் சீவசப்தத்தின் அநித்தமான கிரியாசக்தியைப் பிரதானமாகவுற்ற பிராண தாரணையைச் செய்தலாற் சஞ்சலத்தன்மையை யடைந்தாய், பௌதிகமான லிங்கவடிவினதாய், சங்கற்பவிகற்ப மனனத்தானே ஜாட்டியத்தான் மந்தத்தை யடைந்து மனமாம். அம்மனுபாவத்தான் மகததாகிய பரமான்ம பாவத்தை மறந்துமனு தருமங்களாகிய சங்கற்பாதிகளைத் தன்னுடையனவாக வெண்ணும்; எவ்வாறெனில் சலனமின்றிய கடலினின்றும் சலனமயமாய அலைகள் எழுவன போலவா மென்றறிக. மனத்தின் இயற்கையைக் காண்டித்து அச்சமட்டி மனத்தாற் சப்தாதிபஞ்சதன்மாத்திராகாசாதி பஞ்சபூத பிரஹ்மாண்டாதி பௌதிக இலக்கண ஜகதிந்திரஜாலம் விசேஷமாகச் செய்யப்படுகின்றது. இவ்வண்ணம் சமஷ்டி மனு பாவத்தையடைந்த ஹிரணியகருப்ப னென்னும் பிரஹ்மம், அன்னியராலே யறிவிக்கப்

படாம லிருந்தபோதிலும் தாணுகவே பூரவவாசனையை யனுசரித்து விராட்பாவத்தையும் புவனதிபாவத்தையும் அதன் கண்ணே நான்குவிதமாய பூதக்கூட்ட பாவத்தை யும் நித்தியமதன்னிச்சைப்படியேயிரைவிற் சங்கற்பிக்கும்.

இவ்வுலக இந்திரஜாலம் தோற்றுதலும் அதற்குவமை யும் வலியுறுத்தல் உலகினுமயலாய்ப் பரமிருக்கலாம், ஆரோபிதத்திற்கு இருப்புவிளக்கப்பொருட்டு அதிஷ்டான அவாவிருத்தலின், அதிஷ்டானத்திற்கு இருப்பு விலக்கப் பொருட்டு ஆரோபித அவாவின்மையின்; பிரஹ்மஜகத் துக்கட்குப் பிறங்கியது விலக்ஷணமுடையதேயாம், அச் சத்திய சங்கற்பத்தினாலே இவ்வாரூயவிஸ்தாரமான இந் திரஜால ஐசுவரியமான இது விஸ்தரிக்கப்படும. இவ்வண் ணம் அத்தியாரோபம் ஆயிரமாணலும் அதிஷ்டானத்தி னுடைய உண்மையாய நிலையானது பங்கப்படாதாம் என் பதுணரும் பொருட்டுத் திருஷ்டாந்தங் கூறுவார், பொற் கங்கணவடிவப் பொன்னினும் கங்கணசத்தப் பொருள் தனிப்படுத்தத் தகுதியதாகாததேபோலப் பரப்பிரஹ்மத் தின் கண்ணே தோற்றுநின்ற ஜகத்சப்தார்த்தத் தன்மை யும் அதனினும் அயலாகத் தகுதியதாகாதாம். இரண்டற் குந் தனிப்பட்டிருத்தல் தகுதியாகாமையானே ஏகசத்தை யுடைமை சித்தமாம். அதுவும் என்றுமுள்ள பிரஹ்ம பாவத்தின் கண்ணே தாணுகவேயுளதாம். இடையிலுற்ற வுலகபாவத்திலோ அதன ததீனமாயுளதாம். தாணுகவே யின்றும்; இவ்வுலகமானது பரிச்சேத சுபாவத்தை விட் டொழித்ததாய்ப் பிரஹ்மசுபாவத்தின் கண்ணே யிருக் கும் உலக சத்தார்த்த பரிச்சேதமுடைய வடிவ இயற்கை யிலோ இராதாம்; கங்கணவடிவத் தனகனம பொற்சுபா வத்தி லிருக்கும் கங்கண சுபாவத்தி லிராததேதேபோலு மென்றறிக.

அற்றேன் மனத்திற்குச் சாயைப் பேயைப்போல இன்மை யுண்மையின் ஜகதிந்திரஜால ஜனகத்தன்மை பொருந்தாதாம் எனின்? ஆண்டுக் கூறுகின்றார்:—இது தானுகவே யில்லாதிருக்குமாயின் எங்ஙன மிருப்பது போலப் பொலிதல் கூடுமெனின்? அறைகின்றார்.

மருமரீசியிலுலே கற்பிக்கப்பட்ட கானனீர் நதியின் வேகப் பிரவாக தரங்கங்களேபோல வுலகசம்பந்த இந்திர ஜால ஐசுவரியமானது இலலாதிருந்த போதினும் இருப் பதேபோல் எண்டு மனதிலுலே விஸ்தரிக்கப் படுகின்றது. அதற்கு அசத்துத்தன்மையானதும் அவித்தையி லுண்டா வதாகி அவித்தை வடிவமுடைமையின் எனக்கருதி அதை யனுசரித்த நாமங்களானே அவித்தையைக் காட்டுவாம்; விததையானீக்க யோக்கியமாதலின் அவித்தையாம்; மேல் கீழ் குறுக்குகளிற் சுழற்றுவிக்கு மேதுவாதலின் சமுசார மாம், சுதந்திர மில்லாதிருத்தலேச் செய்வித்தலின் பந்த மாம், பொய்யா யிருத்தலின் மாயையாம், மயக்க வேது வாதலின் மோகமாம், தாண்டமுடியாமையின்மகத்தாம், தற்சொரூபத்தை மறைத்தலின் தமமாம், என்பனவாதி யாய நாமங்கள் யாவற்றையு முணர்ந்த பெரியோர்களால் அவித்தைக்கிடப் பட்டனவாம்.

இதனு லியம்பப்பட்டதையே விரித்தல்

"அற்பமும் பேதமே யாற்றிடப்படினும் அளவிலா வச்சமவனுக்காமே" என்னுஞ் சுருதியிலுலே துவைதி கட்கு முக்தி ஆமைப்பாலல்லவோ. எத்துணைத் திருசி யஞ் சம்பவிக்குமெ அத்துணைமோகூடம் காணப்பெறு தென வாயின் துயிற்பிரளயங்களிற் சுருவதிருசியம் அசம்பவமாய வழி மோகூடமேனுகாது, துயின்முதலியவற்றே சுருதியாற் சுருவதிருசிய அபாவப் பிரதிபாதனத்தான், ஆண்டஞ்

ஞான சற்பாவத்தாலெனின்? அன்றும், அது உகிருதித்த வுரகமொப்ப வொன்றுஞ் செய்யாதாதலின் அங்கீகரிக்கப் படமாட்டாதாம் ஆண்டு மோகூமெனச் சங்கிப்பக் கூறு வார் பதுமினியின் பீஜபூதமான அதிவிஸ்தார நில்லாதை வடிவம் பதுமமணியின் உள்ளவகாசத்திற் சமஸ்காரரூப மாக எங்ஙனமிருக்கின்றதோ அங்ஙனம் திருஷ்டாவின் பாற் றிருசியதீ யிருக்கும், பிராதிபாசிகத் தன்மையானே திருசியஞானமெனப் பட்டதாமென்க முதலில் பந்தத்தின் உருவத்தைப்பற்றிப் பகருமிதனைக் கேட்குதி பின்மோ கூத்தின் சொரூபத்தை யறிந்துகொளவாய், ஞானத்தி னுலே யுடைவதற்கும் அடைவதற்கும் தகுதியாய பந்த மோகூங்களின் சொரூப மியாதென்னின் அறைவார் இந் தவென்றூர் காண்போனுக்குக் காண்பொருளின் மெய் யாய விருப்பே பந்தமெனப் பகரப்படும், காண்போன் காண்பொருளின் வலுவால் கட்டுற்றவனுவன். காண் பொருளிலதாங்கால் விடுபடுவன்; உலகமநீயான் என்பன வாதியாய இப்பொய்வடிவமே காண்பொருள் எனப்படும், எதுகாறும் இதுதோற்றிக் கொண்டிருகுகுமோ அதுகா றும் மோகூமான துண்டாக மாட்டாது, அற்றேல் திரு சியந் தோற்றுமையே மோகூமாயின் அவ்வப்போ தெதிர் வரும் திருசியங்களை இஃதில்லை இஃதில்லையென நீக்குவத னனே ரோகநீக்கத்தானே ஆரோக்கிய முண்டாவதே போல மோகூமான துண்டாமபோது ததுவஞான ஆயாசத்தா லாகவேண்டுவ தென்னே யெனின்? இத்திரு சிய ரோகமானது இஃதில்லை இஃதில்லை யென்னுமசங்கற் பத்தையாக்கும் வீணை புலபபத்தால் நன்கு சாந்தியை யடையமாட்டாது, மாறுக விருத்தியையே யடையும் இஃதில்லை யென்னும் புலப்பமானது திருசியமான திருக் குமாயின் பாதிதப்பொருட்டன்மை யுறுதலின் அதன்

விரோதியாய வேறு திருசியத்தை யுண்டாக்குஞ் சங்கற் பத்தால் அதனை யுண்டாக்கலான் முற்றிருசியத்தை நீக்கு வதாக மொழியலாம, ஆகவே ஒருதிருசிய நீக்கப்பொ ருட்டு இருதிருசிய மெழுபபலின் விருத்தியேயன்றுவாம், அவித்தைதையோடு கூடியிருக்கும் காண்போனிடத்தில் காண் பொருளிருக்கும் வகையை யுவமித்துரைப்பார்வித்தென் றூர். கமலவிரையி னிடையில் இனிவருந் தாமரைக் கொ டிக்கேதுவாய சூக்குமமான பதுமக்கொடி வடிவம் எவ் வாறு இருக்கின்றதோ, அசத்திற்குதயம் பொருந்தாமை யானே, அவ்வாறு திருஷ்டாவின் கண்ணை திருசிய சகிதமதியுளதேயாம்.

விரையின்கண்வருந் தருவாதியிருத்தல் போல எல் லாவுலகும் பரத்தில் மறைந்திருக்கும் = எனவுருவகப்படுத் திக் கூறுகின்றார்.

எங்ஙனம திரவியமாகிய பதுமமணியாதிகளின் உள ளேயே உண்டாமாச்சரியம் அதன் சமமான வருந்திரவி யத்தின் பரம சூக்கும அவஸ்தை சமஸகாரபபெயருடன் அஸ்தமயமறைந்து அதனதுதரத்தின் கண்ணை யுரைந துளதோ, அங்ஙனமே சின்மாத்திர சொரூபமாய பர மாத்ம திரவியத்தின் உதரத்துள்ளே சுபாவபூத அதன் சொரூப அபின்ன உலகஸ்திதியுளதாம், இஃதின்னபடி யென்னத் தருக்கிக்க முடியாமற் காரியத்தை யுண்டுபண் ணும் ஆற்றல் சமத்கிருதியாம், அதுவிரைமுதலிய பொருள் களின் உதரச்சார பாகத்திலேயே யிருப்பதுபோலச் சின் மாத்திர இயற்கைவாய்ந்த அவித்தைச் சரீரமூற்ற ஆன்ம திரவியத்தினுடைய வுதரத்துள்ளும் ஜடா ஜடங்களைக் கிளப்பு மியற்கையமைந்த ஜகத்திதியாகிய சென்றவரும் உலகசத்தை யுளதாமெனக் கூறியதே நிலைபெற்றதாம்;

கூறிய சமத்கிருதியானது எப்போது மிலங்குவதும் அஸ்த மனமில்லதும் ஆம்.

அற்றேல் திருஷ்டாவின் கண்ணே திருசியம் சமஸ் காரரூபமாகப பிரளயாதியின்கண் ணிகழுமாயின் விசித் திர சமஸ்காரங்களாற் சித்திரிக்கப்பட்ட அஞ்ஞாத திருஷ் டாவினின்றும் திருசிய அபிவியத்தி யப்போதே யென் ஆவதில்லையெனச் சங்கித்துத் திருஷ்டாந்தத்தாற் பரிகரிக் கின்றார்:—சருவ திருசியங்களும் இருதயத்தி லிருக்குமா யின் இபபோழுதே யாவராலும் அனுபவிக்கப்படாத தென்னைகொல்லெனிற் கூறுகின்றார். திருஷ்டாவின் கண் ணிருக்குந திருசியத்தினது சிருட்டிப பிரகாரத்தைக் கூறல்.

அங்குரமானது பீஜத்தினுள்ளே நன்னிலைபெற்று அது வெளியாவதற்குச் சககாரியாய தேசகால கருமபரி பாகங்களை யனுசரித்து விளக்கமான ஆகிருதியைச் செய் கின்றது, அதுபோலவே திருசியமதியும் பெருக்குகின்றது. பூதமயமான தேகத்தை யாத்மாவாகக் கொண்ட அறியா தவன் காலனுற்பக்ஷிக்கப் படுவன் என்றும், தத்துவத்தை யுணர்ந்தவன் சின்மாத்திரமே யாத்மாவென்றிருத்தலின் ஆகாசஜனுகிய மறையோன் போலக்காலனுற் பக்ஷிக்கப படா னென்றும் இயமபுவார் ககனமெனத் தொடங்கி னர். காமகருமவாசனைகள் நன்கு நிறைந்துள்ள அவித் தையை யுபாதியாகவுடைய ஆன்மாவே யுலகபீஜமும் கால பீஜமும் ஆம், வித்தையினுலே அந்தப் பீஜசக்தி தகிக்கப் படினே காலன் வசப்படுவதில்லை யெனமுற் கூறியபொரு ளில் விசேடதனைக் காண்பிக்கும் பொருட்டு உலகத்தை யாதியிற் படைப்போன் றத்துவசாதனத்தால் விளம்பப் படும் பொருட்போற் காதசங்கதியுற்ற ஆக்கியாயிகையை

வருணித்துக் கொண்டு ஸ்ரீ வசிஷ்டபகவான் விளம்புகின் ரூர், ககனமென. உற்பத்தியெனப் பெயரிய பிரகரணப பொருளை யுணர்வதற்குச் சாதகமாகிச் செவிக்கரியபூஷ ணம் போன்றிலங்கும் இவ்வாகாசஜ ஆக்கியானத்தைக் கேட்டி! ஆகாசத்தினின்றும் அத்தியஸ்தமாகிய அவித் தைக்கருமையின், ஆதாரத் தன்மையாலே ஆகாயத்திற் கொபபாயதும் அவித்தையான் மறைபட்டமையின் ஒளி குன்றியதும், ஆகிய பிரஹ்மத்தினின்றும உண்டானவன் ஆகாசஜனுவன், இலிங்கசமஷ்டியான்மாவாகிய இரணிய கருப்பன் என்னும் அவனது ஆக்கியான மெனவுணாக.

ஆகாசஜன் பெருமையும காலன் ஆலோசனையின் அருமையும அறைதல்.

'அஃதெங்ஙனங்கிருதின்' என்பதாதி சுருதியினனே இரணியகருப்பதத்தை யடைவிபபதாய சமவாக்கவித்தை முதலிய தருமத்தில், பிரஜைகள் யாவருஞ செய்த தருமங் களின் உள்ளடக்கங் கழறப்பெறுதலின் பரமதரும மூாத தியாம. ஆன்மசிந்தனை செய்வதிலேயே தற்பரராய், எப் போதுமபிரஜைகட்கிதத்தையே செய்பவராய், ஆகாசஜன் எனப்பெயர் படைத்த பிராஹமண ரொருவா இருக்கின் ரூர; அவர் மிருத்தியுவின் வயப்படாமல் நீணாள் வசித்துக் கொண்டிருந்தபோது மிருத்தியு சிந்திக்கின்ரூன், எல்லாப் பிராணிகளையுமம, யான் முறையாக அகூடியகை விருந்து பகூடிக்கின்றேறன்; இவ்வாகாசஜ னென்னும் விப்பிரனை யேன் பகூடிக்கமுடியவில்லை? கடகத்தின் முனையானது கல்லில் மழுங்குவதேபோல இவனிடத்தில் என்னுடைய ஆற்றல் குன்றிப் போகின்றதென்னே என, நெடிது நினைந்து அக்கணமே அவரைக் கொல்லும் பொருட்டுச் சத்தியலோகத்திற் புகுவதற்கு மிருத்தியுவிற்கு ஆற்றலின்

மையின், மேருவின்மத்தியிலிராநின்ற பிரசித்தமான அவ
ரது புரத்தைநோக்கிச் சென்றனன்.

காலனது அதிதீவரப் பிரயத்தனந் தெரிவிதல்

சாமர்த்தியமுடைய எவருமே தமது தொழிலின் முயற்சி
யைத் தியாகிக்கமாட்டார்களன்றே! பின் னக்கிரகத்தை
யடைந்து காலன்தானே புகும்போது, சமாதிவிக்கினத
தைத் தடுக்குப பொருட்டு முன்னரே பிரஹமாவினுலே
கிரகத்தை வளைந்துகொண் டிருக்குமாறு சங்கற்பிகப
பட்ட பிரளயகால அக்கினிபோன்ற அக்கினியானது இம்
மிருத்தியுவைச் சுடத்தொடங்கியது, அந்த அக்கினிச்
சுவாலைகளின் மகத்தான மாலைவடிவக் கோட்டையைப
பிளந்து மிருத்தியுவானவன் உள்ளேசென்று பிராஹமண
ரைப் பார்த்து மிகு முயல்வுடன் கரங்களாற்பற்ற இச்சித
தான்; பிராஹ்மணர் எதிரேகாணப்பட்டபோதினும் நூற்
றுக்கணக்கானகரங்களால் அகப்படுத்தக் கூடாமற்போய்
விட்டனர்

முயல்கை வீணுதலும் யமனை யுபாயம்விளைதலும்.

சங்கற்பமாததிர கற்பிதபுருடனையெத்துணைப் பலவா
னையிருந்த போதினும் தீண்டக்கூட முடியாமை வெளிப்
படையேயன்றே, பின்னர் மிருத்தியுவானவன் ஐயத்தை
யகற்றும் யமன்பால்வந்து, ஹேவியாபகரே! அவ்வாகாச
ஜனைப் புசிக்க யான் சமர்த்தனகாத காரணம் என்னே!
யெனவினவினன். அதைக்கேட்ட யமன், ஹேமிருத்தி
யுவே! நீ சகாயமற்றவனைப் பலத்தாற் கொல்வதற்கு ஒரு
சிறிதும் சமர்த்துடையவனகமாட்டாய், மரணத்திற்கேது
வாய கருமங்களே மரணத்தைச் செய்விப்பனவாகு மன்றி
மற்றவை யாகாவாம். தினதாற்றல் குன்றியதன் கண்
ணும் இதுவே காரணமல்லாமல் மற்றதென்று மின்றும்.

ஆகையால் முயல்வினலே கொல்லத்தக்க இவ்விப்பிரனு டைய கருமங்களைத் தேடுவாயாக, அவ்ற்றின் உதவியி னனே இவனை நீ டுசித்து விடலாம் என்றனன்.

எனக்கேட்ட மிருத்தியு மரணகாரண கருமங்களைத் தேடமண்டலமெங்கணுஞ் சுற்றல்.

அதன்பின் அம்மிருததியு வானவன் அக்கருமங்களைத் தேடுவதன்கண்ணை மிகவும் ஆதரவுடையவனுய் மண்ட லங்களையும, திக்கந்தங்களையும், தடாகங்களையும், நதிகளை யும், திசைகளையும, வனக்கூட்டங்களையும, காட்டின் கூட் டங்களையும், மலைகளையும், கடற்கரைகளையும், தீபாந்தரங் களையும், ஆரண்யங்களையும், நகரங்களையும், மகா நகரத் துள்ளடங்கிய சாகா நகரங்களையும், கிராமங்களையும், எல் லாத் தேயங்களையும், தேயங்களுக்குள்ளிருக்கும காடுகளை யும் சுற்றினன்; எத்தேயத்தின்கண்ணை யிவன் எக்கருமம் முன் செய்துளான் என வொருமையோடும் ஆலோசனை செய்தலேயே பெருமுயல்வால் பெறத்தக்கதாதலின் சுழன் றதாகக் கூறியதாம், தேசசஞ்சாரமென அதற்குப்பொருள் கொள்ளலாகாதாம் கருத்தாவின் சூக்கும சரீரத்தி லபே தபபட்டிருக்கும் அதிருஷ்டங்களைப் புறத்திற்றேடுதல் கூடாமையின் கூறிய வண்ணம பூமண்டலம் முழுதும் சுழன்று முயன்று மிருத்தியு எவ்விடத்தும் ஆகாசஜனது கருமங்கள் எதனையுமே பிராஞ்ஞன் வந்தியா புத்திரனைப் போலுமசங்கற்பமலையைச் சங்கற்பித்தவனிலும்அயலான் போலும் அறியவில்லை. பின்னர் வந்து எல்லாப்பொருள் களையும் அறிந்த யமனை நோக்கி தாதர்கட்குரியுற்ற இடங் களில் பிரப்புக்கள் கதியாக விருக்கின்றபடியினலே, ஹே பிரபுவே! ஆகாசஜனுடைய கருமங்கள் எவ்விடத்திருக் கின்றன வென்பதைக் கூறவேண்டுமெனவினவ, தருமரா ஜாவானவர் நெடுநேரம் நன்காலோசனைசெய்து இதனைக்

கூறத்தொடங்குவாராயினர்:—ஹே மிருத்தியுவே! ஆகாச ஜனுடைய கருமங்கள் யாதொன்றுமின்றும், இவ்வாகாச ஜனகிய விப்பிரன் கேவலம் ஆகாசத்திலிருந்தேயுண்டான வனுவன், பிராரப்த அதிகார பலங்கட்குப் பலத்தொடக் கத் தானே நாசமுண்மையினுமும் சஞ்சிதங்கட்கு ஞானத் தானே பாதமுண்மையினுமம, வருங்கருமங்கட்கு விரை யின்மையினுனே இருப்பின்மையினுமும் யாதொரு கரும முமில்லையென்றுணாக. ஆகாயத்தினின்றே யாவனுண் டாயினனே அவன் நின்மலமாய ஆகாயமே யாவன்.

கூறியபொருளையே தெளியச் செய்கின்றார் சகாரிக ளாய அபிமான இராகாதிகளேனும் மிருத்தியுவாகிய நீ கொல்வதற்குச் சகாரிகளாகிய இப்போதியற்றிய கருமங் களேனுமில்லையாம், வேறெக்கருமங்களுமே யில்லையாம். ஆகிருதிபடையாதவனுககும் மலடி மைந்தனுக்கும் சமபந தம் உளதாவதிலதே போலும் முன்னியற்றிய கருமத்தே தும் இவனுக்கு அணுவளவேனுஞ சமபந்தமே கிடையாது அவ்வாறே சூத்திரமும் "அதனே யறிந்திடபபின் முன்ன கங்கள், துதையாமை யழிவுகள் சொல்வதுபடுதலின்" என்பதாகக் கூறுகின்றதாம. இவ்வநதணனுக்குஇப்போது சம்பாதிக்கப்பட்ட கருமங்களேனும் சஞ்சிதங்களேனும் கிடையவேகிடையா; பூர்வ கருமங்கள் இவனுக்கிலலாமை யானே யிவன் ஈண்டுச் சம்சார வசப்படவில்லை, கரும அசமபவத்தின் பயனேயன்றே சமுசாரவயப்படாமை, பிரசிததமான வெள்ளியாங் காரணத்தினின்றும் உண்டா காத இப்பி வெள்ளிக்கேபோலும் அவனது தேகாதிகட் குப் பொய்ம்மை நிண்ணயமுறவே, அதனுலுள்ள கருத் துருத்தகைமை பாதிக்கப்படுதலின் மிருத்தியு பீடிக்கமுடியா தாம சகாரி காரணங்களில்லாமலே யாவனுண்டாகின்ற னனே அவன்றனது காரணத்தினின்றும் பின்னமாக

ஆகான்னன அனுபவிக்கப்படுவன். காரணமின்மையினனே இவன் சுயம்பு ஆவன். இவன் முன்னருங் கருத்தாவல்ல இப்போதுங் கருத்தாவல்ல வாகலின் நீ யெங்ஙனமிவனைப் பிடிக்க முடியுங்கூறுதி, ஆகலேவ நீ பிடிக்கவேண்டுமென்னு மிச்சையே செய்யத்தகாததாம். இவன்பால் பிருதிவியா தினின் சம்பவம் எத்தகையது, எங்ஙனந்தான்கூடும், அகோ! இவனைப் பிடிபடுதுதான் எங்ஙனம் ஏலும்? ஆகையாற் பிடிக்கவேண்டுமென்னும் முயற்சியை யடியோடு விட்டுவிடுவாயாக; எவனலும் ஆகாசம் ஒருகாலும் கவருதற்குக் கூடாதன்றே என்றிதனைக் கூறக்கேட்டமிருத்தியு மிகவும் ஆச்சரியமுடையவனைத் தன்னரண்மனைக்குச் சென்றனன்.

ஆகாசஜப்பிராஹ்மணனென வேறு பெயர் பெற்றுப் போற்றப்பட்ட பிரஹ்மாவே என்னுல் ஆக்கியாயிகையின் கருத்துரை யென்பதும் உலகம் பொய்யென்பதும் இனிதறிந்துகொள்ளப்பட்டன என்பதைக் குறிப்பிக்கும் வாயிலாக ஆசிரியரை மகிழ்வித்துக்கொண்டு ஸ்ரீ இராகவர் கூறுகின்றார்.

சுயம்புவாயும் அஜனையும் ஏகான்மாவாயும் விஞ்ஞானன்மாவாகிய ஜீவசமஷ்டி ரூபமாயும, இருக்கும் பிரஹ்மமாகிய இப்பிரபிதாமகனே தேவரீரால் ஹே தேசிகோத்தமரே! கூறப்பட்டவனவன் என, ஹே இராகவ! இவ்வண்ணம் எம்மால் இப்பிரஹ்மா வுனக்குக் கூறப்பெற்றன்.

முன்னடந்த விருத்தாந்தத்தை மொழியத் தொடங்கல்.

இப்பிரஹ்மாவின் பொருட்டே முன்னர் யமனேடும் மிருத்தியு சம்வாதஞ் செய்ததாகும், மனுக்களின் சந்தி

காலத்தில் எல்லாவற்றையும பக்ஷிக்குமிருத்தியு எல்லாப் பிரஜைகளையும் கொன்று கொண்டு வலுவைப் பெற்றுத் தாமரையிற் பிறந்தோனைப் பிடித்துக் கொல்லத் தொடங் கினன் முனகவே, அப்போழ்தே தருமராஜாவாகிய யம னுலே விரைவி லுபதேசிக்கப் பட்டவனுவன். முடியாத காரியத்திலும் மிருத்தியுவிற்கு அடிக்கடி முயற்சி யாங்ங னங் கூடுமெனின்? கவலையினுலே கூடுமன்றே எதனை யாவன் நித்திய மியற்றுகின்றனனே அதன் கண்ணே ஆதல உண்டாகிக்கொண்டே யிருக்கும்.

யமதருமரது அனுசாசன ரூபமான வுபதேசத்தையே தொகுத்துக் கூறல்; ஆக்கியாயிகை வாயிலாய்க் கூறிய பொருளைக் கண்டத்தானும் கூறி அஜன் சரீராதிகட்கு மேனமாத்திரத் தன்மையைக் கூறுகின்றார்.

பரம ஆகாச சரீரமாயும் மேனமாத்திரமாயும், சங் கற்பரூபமாயும், பிருதிவியாதியற்ற ஆகிருதியாயும், இருக் கும் பிரஹமாவானவன் எங்ஙனம் பீடிக்கப்படுவன். சிதா காச சமத்காரமே ஆகார அனுபூதிமானுய்வர அவன் சிதாகாசமாகவேதானிருப்பன்; அவனுக்குக் காரணத் தன்மை யேனும் காரியத்தன்மையேனுங் கிடையா. ஆகா யத்திற் கீழ்முகமான இந்திர நீலமகாகடாக ஆகாரம் பிரு திவியாதி யற்றதாய்த் தோற்றுவதேபோலும், சங்கற்ப புருடன் பிருதிவியாதியின்றியே தோற்றுவதே போலும் இச்சுயம்புவும் விளங்குகின்றன்.

கூறியதைத் தெளிவித்து முடிக்கின்றார்; ஆண்டமனத் திற்கு அவ்வாகாரகற்பனைப் பரிணமம் உண்மையாக வின் றும், மற்றே, தூய்தாய பிரஹ்மமே அஞ்ஞானத்தால் அவ்வாறு விவர்த்தத்தை யடையுமென்கின்றார்.

கேவலமாயும், அநந்தமாயும், முதலிடை யில்லாத தாயு மிருக்கும் சிதம்பரமானது தனது சித்தவசத்தாற் சுயம்புவாகிய பிரஹ்மாவென ஆகாரமுடையது போலும், புருடன் போலும், விளங்கா நிற்கும் உண்மையாயோ மலடி மைந்தனுக்கே போலும் அவனுக்குத் தேகமே கிடையாது.

மூலமாத்திரமாயும் சங்கற்பரூபமாயும் பிருதிவியா தியற்ற ஆகிருதியாயும், என்மூன் மொழிந்தமுறையானே பிரஹ்மாவிற்கு மூலரூபத் தன்மையை யங்கீகரிக்கில், மனத்திற்கு வாசனைக்கூட்ட ரூபத்தன்மை யுண்மையின் பழையவாதனைக்குவால் அற்பமும் இவனுக்கில்லையெனல் எங்ஙனங்கூடும்? இப்பிரஹ்மாவினுடைய தேகத்தில் முன் சரீரத்தை விடுங்காலத்தி லுண்டாம் நினைவு, உமக்கும் எனக்கும் அன்னியருக்கும் பசுவாதிகட்கும் தத்தஞ் சரீ ரத்திற் பழைய நினைவு காரணமாவதேபோல எங்ஙனங் காரண மாகாமற்போம்? பழைய நினைவு இருக்குமாயின் அஃதுண்டாவதற் காதாரமான சமஸ்கார தேகாதிகளும் முன்னுள்ளன வாகவே தள்ளத் தகாதனவாம். பூர்வ தேகாதி இருந்தாற்முன் ஆண்டனுபவித்ததைக் கவரும் நினைவுகாரணமாகும், அதுவே அசித்தமாம், பிரஹ்மாவிற் குப் பழையகருமமும் பழையநினைவும் ஒரு சிறிதுமில்லை யாம் என்னின்? இரணிய கருப்பபதத்திற்குக் கருமவுபா சனையென்னும் இரண்டன் கூட்டுப் பலத்தன்மை யுண்மை யின் எங்ஙனம் முன்னுடம்பு வாதனையாதியில்லை யெனக் கூடும்? எங்ஙனந்தான் மூலமயமாகிய அவன் தேகத்திற் குப் பிருதிவியாதிமயத் தன்மை யின்மையெனக்கூடும்? மனம் பூதகாரிய மென்பது முரணன்றே ஆதல் கூடும்? எனின்? உண்மையே, "அஞ்ஞதிருஷ்டியினே யங்ஙனம், என்னினும் அன்னியமில்லாத போழ்து, எதினின்றும்

யான்பயம் எய்துவன் கொல்லோ" என்னுஞ் சுருதியாதிக
ளாற் சித்தமாய அவனது, தத்துவ திருஷ்டியாலே பிர
பஞ்சத்திற்கு முக்காலத்திய பாதமுண்மையின் பூர்வதேக
வாதனை முதலியவற்றின் இருபபின்ருேம்; பாதித அனு
விருத்தியிலுதே மனத்தின் கண்ணும் அத்தேகத்தின்
மாட்டும் வெந்த ஆடையின்கண் நூலிருக்குந்தகைமையே
போலும் பிருதி வியாதிமயத்தகைமை முன்போலின்ரு
மென யாதொரு விரோதமுமுங்காணேம். யாண்டுப் பாதிக்
கப்படாத அஞ்ஞமனச சங்கற்ப நகராதிகட்கும் சத்தியத்
தகைமையும் பௌதிகத்தகைமையு மின்ருமோ, தத்துவ
ஞானத்தாற் பாதிக்கப்பட்டுத் தொடர்ந திருக்கும் விரிஞச
னது மனச்சங்கற்பத்தாலாய விசுவத்திற்கு அவ்வாருந்
தகைமை யென்பதன் கண்ணே யென்னை கூறக்கிடக்கின்
றது? அஞ்ஞதிருஷ்டியை யனுவதிக்கும் உபாஸ்தி பல
சுருதிவாயிலாயன்ரும் அகாரணமாகவே விளங்குகின்றது,
அலது தனது சததமாகிய ஸ்ததைதக காணுமை சததஸ்ம
ருக்கியகாரணமாகும், அவனுக்குச் சுயமாகவோ சித்தங்
கிடையாதாம, சுயம்பு தனது காரணத்தினுமை அனன்னிய
வடிவமாம், சுயம் ஆத்மவடிவமாம், இச்சுயம்புவிற்கு ஆதி
வாகிகதேதகமே இருக்கின்றது, இவ்வஜனுக்கு ஆதிபௌ
திக தேதகம் பொருத்தமாகாதாம், தேவபிதூர மார்க்கத்
தானே லோகாந்தரத்தை யடைவதற்குச் சாதகமாகி நமமை
ரைது லிங்கதேதகம்போ லிருப்பது ஆதிவாகிக சூக்கும
மாம் ஆதிபௌதிகமோ தூலபூதஜன்னியமாம். என்று
சமாதானங்கூறக்கேட்ட ஸ்ரீ இராகவர் ஆதிவாகிக தேத
மென்ப தொன்றுளது ஆதிபௌதிகதேத மென்பதொன்
றுளது எல்லாப் பிராணிஜாதிகட்கும், பிரஹ்மாவிற்கு
மாத்திரம் ஒன்றே யென்பதென்னை? என்று வினவு
கின்ருர்.

விராட்டவஸ்தையை யடைந்த ஹிரண்யகருபப விட யமாய்ப பெரியவாசிட்டத்திருக்கும் அபிபபிராயம வேண் டிய அளவுகாட்டப பட்டது பிரஹமாவிற்குச சீவத் தன்மை யுண்மையின் வேறுஜீவன்போலஆதிபௌதிக தேகம ஏன் உண்டாக வில்லையென அவ்வத் தேயத்தை யடையும்படி கொண்டு செலுத்தத் தக்கதாகின்றது, இரு நெறியிலு ழற்றதேவதைகளால என ஆதிவாக்கம சூக் குமதேகமாட.

தூலதேக ஆரம்பஞ்செய்யும் ஆகசாதி பூதசத்துவ அசத்துவங்களால ஜீவாகட்கு தேகமிரண்டாம, இரண்ய கருபபனுக்கோ தூலதேக அசததுவமாம், என உத்தரம் ஸ்ரீ வசிஷ்டபகவா னருளுகின்றார்.

நேத்திரமுதலிய வியாவகாரிகப் பிரமாணத்தா லறி யத்தக்க பஞ்சீகருதபூதரூப காரண வடிவினையுடைய எல் லாப்பிராணிகளுக்குமே முன்மொழிந்த இரண்டு தேகங் களுமுண்டு. அஜனுக்கு அவித்தையபஞ்சீகிருத பூதங்க ளின் அனன்னிய பரசுருதி நேத்திர முதலியவற்றனே விளக்கப் படாமையானும் சாகூஷிக்குமாத்திரம் விடய மாகுந்தகைமையானும் தோற்ற மாத்திரத் தன்மையானே வியவகாரிக சத்தியத் தன்மையின்மையின் அல்லது முன் மொழிந்த முறையே காரணமில்லாமையின் ஒரே ஆதிவா கிக சரீரந்தானுளது. வேறுவகையாக விளமபுவாம, எல் லாப்பிராணி ஜாதிகட்கும அஜன் ஒருவனே முக்கிய காரண மாவன், அதனனே அவன் ஒரேதேகத்தை யுடையவனு வன் அவ்வஜனுக்குக் காரணங் கிடையாது, முதலினுண் டாய பிரஜாபதிக்குப் பௌதிக தேகங்கிடையவே கிடை யாது, சிதாகாச மாத்திரவடிவனுய்த் தோற்றுவன் இவன் ஆதிவாகிக தேகவானே யாவன், ஆரோபித பதார்த்தத்

திற்கு அதிஷ்டானத்தைத் தவிரசசொரூபமில்லையல்லவா? இவ்வாறுகவே அவன் சங்கற்பத்தாற் கற்பிக்கப்பட்ட வுலகிற்கும் அதனதிஷ்டான சின்மாத்திரத் தன்மை பலிதமாம்.

அற்றேல் சூக்கும பூதவிகாரமாய மனத்தினின்றும் சூக்கும பூதாதி சர்வஜகத் துற்பத்தி எங்ஙனம் பொருந் தும எனின்? அற்றன்றும், மனத்தைச் சூக்குமபூத விகார மெனத் திருஷ்டி சிருஷ்டி பக்கத்தில் அங்கீகரியாமையின், நம்மான் முன்னரே ஆண்டு ஜீவசிருஷ்டிப் பிரக்கிரியை காட்டப்பட்டதேயாம், திருஷ்டியே சிருஷ்டியென ஸ்ரீ வசிஷ்ட சிததாந்தந் திகழ்ந்தவழி சூக்குமபூத முதலிய எல்லாவுலகமும் மனோவிகார மென்பதில் முரணின்மை யின் "எக்காற்றுயில வோன் நனவாசனவடிவ அநேக வத்துக்க ளெவற்றையுமே கண்டிலனே, அக்கணக் காணுத போது ஞானசக்தியற்றுமுகாதி சஞ்சாரியாய கிரியாசக்தி யின் கண்ணே பிறவிடமில்லாது ஒருமையையடையும், பிராணோபாதிகன் பிராண சப்தயோக்கியன்புருடன் ஆவன் என்பதுபொருள் அற்றேல் அக்கால் வாக்காதிக ளாகிய கரணங்கள யாண்டுச் செல்லுகின்றனவென ஆசங் கை நிகழச் சமாதானித்தல், அந்தப் பிராணனிடத்தில் ஒருமைய யடையுங் காலத்தில் இந்தபபிராண உபாதி யையுடைய ஆன்மாவை வாக்கானது சர்வநாமங்களோ டும் அடைகின்றது, விழியானது சர்வரூபங்களோடுமை அடைகின்றது, செவியானது சர்வசப்தங்களோடும் அடை கின்றது, மனம சர்வத்தியானங்களோடும் அடைகின்றது. இந்நான்கும் விடயங்களோடு மடங்கும். என்னும் கௌஷீ தசி சுருதியும் (இம்மந்திரம் பொருளோடுங் காட்டப்பட் டது) மனத்தின் லயமான துயிலில் எல்லாவுலகிற்கும் பிர ளயத்திற்போல இலயத்தைக் காட்டுகின்றன, என்பதை

யனுசரித்தே திருஷ்டியேசிருஷ்டியென அறிந்து கொள்ள லாம். அற்றேற் சுழுப்தியில் பிரளயம போலப்பிரபஞ்சம் விலயப்படுவதின்றும், மற்றே கரணமில்லாமையிறலே தோற்றுவதில்லை யென்னுங் கருத்தாலாம், ஆங்கே சுருதி யும் கூறியது எனின்? அற்றன்றும் ஆண்டிலயத்தைப்பிரதி பாதனஞ் செய்யாதொழியில் ஜகத்திற்கு விழிக்குங்காலே யில் சிருஷ்டிசெப்பா தொழியும் வழக்காதலின், செப் பவே செய்கின்றது செமமறை? சருவசிருஷ்டிப் பிரபோ தத்தில், "பிராணனிடத்தில் விலீனமான அவைகட்குக் கடல்போல நதிகட்குயாங்ஙனம மீண்டு முண்டாதல் எனக் கடாவிக் கூறல், பிராண உபாதியை யுடைய புருடன், எக் கால் விழிப்பையடைவனே, ஜாக்ர அவசரத்தில் இதனி னின்றும் உற்பத்தியின் கண்ணே திருஷ்டாந்தங் கூறப் பெறுகின்றது: திருஷ்டாந்தமாவது:—மிகமிகவுஞ் சொ லித்துக்கொண்டெரியாநின்ற அக்கினியினின்றும் எல் லாத்திசைகளிலும் துச்சமாய அக்கினிகணங்கள் நானு விதமாகச் செல்லுகின்றன, இவ்வகையாலே வேறுவகை யானன்றி இப்பிராணோபாதியை யுடைய ஆனந்த ஆத்மா வினின்றும் எல்லாப் பிராணன்களென்னும் வாக்காதிகள் எதற்கு எத்தகைய இடம் நாமுதலியவை அதைக்குறித்து விதமவிதமாகச் செல்லுகின்றன, பிராணன் களினின்றும் அக்கினியாதி தேவதைகள் விதம் விதமாகச் செல்லுகின் றார்கள், அக்கினியாதி தேவதைகளி னின்றும் நாமாதி விடயங்கள்," என்னும் வேறு சுருதியும் (இதுவும் பொரு ளோடுங் காட்டப்பட்டது) திருஷ்டி சிருஷ்டி விடயத்த தாகும், அசத்ததிமனத்தையாற்ற அம்மனம் பிரஜைதங் கள் அதிபதியதனைச்செய்ய, அப்பிரஜாபதியும் பிரஜைகள் தம்மையாற்ற, எவ்விலவயாவை கொஞ்சம் எதிரினிற் காணலாமோ, அவ்வெலாம் மனத்தின்மாட்டே மிகமிக

வமாநிற்கும். மேலும் கற்பிதமாய இப்பிவெள்ளியா திக்கேபோலப் பிரதிதிமாத்திர சரீரமாய இருமைக்குத் தோற்றுந் தசையின் கண்ணை தன் கற்பனையின் அதிஷ் டான சன்மாத்திரத்திற் கயலாகச சொரூபமா யிருத்தல் அசம்பவ மாதலினுனும் எனவிஞ்ஞான உத்தமாசார்யர் வசனத்தினுனும் ஆத்மசித்தத்தானே அசையாநின்ற ஜீவக் கூட்டம் ஆகாசாதி பிருதிவி யீருகவுங்காணும் என்னும் சங்கேஷப சாரீரக வசனதத்தினுனும் அறியலாம். இதன் கண்ணை யியம்பப்படவேண்டியது வெகுவாகவிருந்தபோ தினும் விஸ்தாரமாய்விடு மென்னும் பயத்தினலே விளம்ப வில்லை. பிரஹமாவிற்கு மனுமாத்திர சரீரத்தன்மை யானே அந்தப் பிரஹமா வுண்டாக்கிய வுலகம் மனுவி காரமாயிருத்தலின் மனுராஜ்ஜியம மானும் அசத்தேதயாம் எனக்கருதிக் கூறுகின்றார்.

பிரஹ்மா சங்கற்பபுருடர் பிருதிவியாதியற்ற ஆகிருதி யுடையவர், கேவலஞ் சித்தமாத்திரவடிவினர், மூவுலகத் தின் றிதிக்குங்காரணர். எக்கற்பத்தில் எதனுல் பிரஹமா மனோமாத்திரம் ஆவரோ பிருதிவியாதிமயான்மகமாகா ரோ அதனுல் விசுவமும் மனுமாத்திரமேயாகும்; எதனி னின்றும் யாதுண்டாகின்றதோ அது அதுவேயாகும். இவ்வாறுகவே உலகிற்கு மனுமாத்திரத் தன்மையாம், மனத்திற்கும் பிரஹமாத்திரத் தன்மையாம் எனவே பிரஹ் மாத்வைதம் பலிதமாம், ஹேபகவன்! மனதினது உண் மையான வடிவம் எத்தகையது என்பதைப்பற்றி வெளிப் படையா யனுக்கிரகிக்கவேண்டும், அம்மனத்தினலன்ரோ இவ்வெல்லா வுலகமாகிய பூங்கொத்துகள் இயற்றப் பெறு கின்றன; மனத்திற்கு எந்தரூபங் கூறப்படுமோ அதேரூபம் அகிலத்திற்கும் ஆம் தத்துவமற்றதாம் வடிவமித்தியாத்

தன்மையானது பொருந்தாதாமென்பது ஸ்ரீ இராகவரது ஆசயமம.

வாசாரம்பண சாஸ்திரத்தான் விகாரமாகிய மன திற்கு நாமமாத்திரமே யல்லாமற் சத்துவங்கிடையாதென் றுத்தரங் கூறுகின்றார்.

சூனியஜட ஆகிருதியை யுடைய அகாயத்திற்குப் பெயர்மாத்திரமேயல்லாமல் யாதொன்றுங் காணப்படாத தேபோல இம்மனத்திற்கு மொருவடிவத்தையுங் காணேம் இதனனே யதன் காரியங்களில் "விகாரம் வாக்கால் விரித்த பெயரதே" எனக்கேட்ட மித்தியாத தன்மை பொருந்தும். சூனியஜடாகிருதித் தகைமை பூதாகாசத் திற்கும் மனத்திற்கும் பொதுவாகப் பொருந்தும், விண் போன்றமையையே மேலும் விரிப்பின், எல்லாவிடத்திலு மிருந்து கொண்டிருந்து மிவ்வாகாயம் சத்ரூபமாகாததே போல இம்மனமும சத்ரூபமாக வெளியிலு மிருப்பதில்லை; உள்ளிருதயத்திலு மிருப்பதில்லை; இம மனதினின்றுங் கிளம்பியிருக்கின்ற ஜகத்தானது மயற்கு விஷயீபூதமா யத்தியஸ்தமாய்த் தோற்றுங் கானனீருக்குச் சமானமாய்த் தோற்றும். இதன் ரூபமானது கனசங்கற்பத்தினலே இரண்டாவது சந்திரனைப்பார்க்கும மயற்குச சமானமாம். உண்மையாக மனமெனப் பெயரிய பதார்த்தமொன்றில்ல வேயில்லை யெனினும் சாஸ்திரசம்பந்தமான விவகார சாதகமாகக் கற்பனையா யதனுருவஞ் சொல்லவேண்டி யதேயாகும், பிரத்தியக்ஷத்தில் எதிரேயிருப்பதும் மிருதி யாதி பரோக்ஷத்தி லில்லாததும் ஆகிய அருத்தத்தினிடை யில் எவ்விவ்வவ்வாகாரத் தோற்றமுளதோ, எல்லாஜனங் கட்கும் பிரசித்தமாகத் தெரியவருமோ அதுமனமென அறியத்தக்கதாம், மற்றொன்று மல்லவாம், தொகுத்துக்

கூறுமிடத்து எப்பொருட் டோற்றமுண்டோ அதுவே மனமென வறையப்பெறும், மனமெனப் பெயரியவஸ்து வேறொன் றிருகாலுங் கிடையவே கிடையாது; மற்றே, நிராகாரமாய் சித்திற்கு அருத்தாகாரமான அத்தியாசமுளதோ அதுவே மனதாம்.

இவ்வண்ணம் விருத்தி சாமானியமாக இவ்விலக்கணங் கூறப்பட்டது, இனி அசாதாரண விருத்தியிஞற் கூறுகின்றூர்.

தோற்றுந் தோற்றமொழிந்த வழிதொல்லையொளியே தோற்றிடுமால். சங்கற்பிக்கின்றதே மனமென அறிந்து கொள்ளல் வேண்டும், சங்கற்பத்தினுமது வேறுவதேதகிடையாது, எது போன்மெனின்? நெகிழ்ச்சியானது நீரினுமவேறுகாததேதேபோலும், அசைவானது வாயுவினுமவேறுகாததே தேபோலும் என்றுணர்க. அதனையே விஷயபேதவிவஸ்திதியைக் காட்டும் வாயிலாய்த் திடப்படுத்துகின்றூர், யாண்டுச் சங்கற்பமுண்டாகின்றதோ ஆண்டு அம்மனம், அங்கமாம், அவ்வாறே நிலைபெறும் சங்கற்பமனதுகள் ஒருகாலும் ஒருவராலும் பிரிவுபடுவதே கிடையாது. அங்ஙனமாயின் சித்தேதாடு கூடியிருக்கும் விருத்தியே பதார்த்தத் தேற்றமெனப் பகரப்படுகின்றது, ஆண்டுச் சித்திற்குச சத்தியதகைமையிருப்பின் அதனேடு கூடியமனதிற்கு மித்தியாத் தகைமையுறல் எங்ஙனங்கூடுமெனின்? பொய்விடயாகாரத்தாற் பொய்யாயின் ஆகுக, சத்தியசித்தின் சோக்கையாற் சத்தியமாயினும் ஆகுக, எவ்வாறுகூறினும், இஷ்டமேயல்லாமல் இவ்வாறுதானிருக்கவேண்டு மென்பதாக ஆக்கிரகமில்லை, பதார்த்தத் தோற்றம் எங்ஙன மிருந்தாற்ரு னென்னே, அத்துணை மாத்திரம் மனமென அறிந்து கொள்ளல் வேண்டும்.

அவித்தை, சமூசாரம், சித்தம், மனம், பந்தம், மலம், தமம் என்பனவாய பரியாய நாமங்கள் திருசியத்திற் குண்டென உத்தமர்க ளுரைப்பார்கள், திருசிய ஜாலமாகிய சங்கற்ப ஜாலமொழியவே சொரூபமாத்திரம் எஞ்சாநிற்கும், விடய மில்லாமல் ஞானத்தின் றிதி சம்பவிக்கமாட்டா தென் னும் எண்ணத்தினைத் திருஷ்டாந்தத்தால் அநுபவப்படுத துவார் கனததவென்றார், ஒளிர்விக்கப் படுவனவான திக் குப்பூமி யாகாசரூபங்களியாவு மில்லாதபோது ஒளிகெத் தகைய நின்மலரூபம் பவிக்குமோ, அதுவே மனமற்ற தினது வடிவமாம்.

அத்திருசியம அறுதலேயே தனிக்கேவல நிலைமை யெனத் தர்பபண திருஷ்டாந்த வாயிலாகத் தெளிவுபடக் கூறுகின்றார்.

திக்குப்பூமியாதி சகலவிளங்குறும் பொருள்கள் இல் லாதபோது வியாபியாயும் சலனமில்லாததாயும் உள்ள சூரியனது பிரகாசம இருக்குமாயின் அதனது சொரூபம் கைவல்லிய அவத்தையின் மாட்டு ஆன்மசொரூபததினது திருஷ்டாநதம் ஆமபூத உபமானததிணும அதன்சொரு பத்தைத் தெளிவு படுத்திக் காட்டுவார், தற்பணமென்றார், அகில அசலாதி பதாராத்தங்களின் பிரதிபிம்பங்களை யடை யாம லிருக்கும் கண்ணடி, அக்கண்ணடியின் கண்ணே தாரண விசேடதத்தான் பிரதிபிம்பப் பெருமயற்குத் தக்க விழியின கூட்டின்மையாலே கவரப்பெறுத அகிலப்பிரதி பிம்பமாம, அத்தர்ப்பணத்தின் பால் எத்தகைய தாப்ப ணத்தன்மையோ, அத்தகையதே திருஷ்டாந்தமாம, எத் தகையது அஃதெனின் ? கேவலம தர்ப்பண சொரூபமா யிருப்பதாம. ஒன்றையு முன்னும லிருத்தலினலேயே அவ் விடயப் பார்வையற்றிருப்பச் சாகஷியினிடத்தில் அத்த

கைய கேவலத் தன்மையான துண்டாம் என்றறிக, மூவுலகம் நீயாம என்பனவாய திருசியங்க ளிலாதபோது விமலவடிவமாய திருஷ்டாவிற்கு அத்தகைய கேவலீபாவ மானது உண்டாம். சைலமுதலிய சருவப்பிரதி பிம்பங் களுந் தோற்றுதிருக்குந் தருபபணத்தில தருப்பணத் தன் மையானது கேவலந்தருப்பணன்ம வடிவமா யெபபடி யிருக்கின்றதோ அப்படியே, நீயும யாமும உலகமும பிற வும் ஆகிய திருசியசமபிரமம் எல்லாம ஒழிந்தபோது திருஷ்டாவினிடத்திற் றிருசியத்தைக் காணவேண்டு மென் னும நோக்கம இலதாகவே திருஷ்டாவினிடதுதிற் கேவ லத்தன்மை யிருக்கும்.

இவ்விதமான கைவல்யப் பிராபதியில் மனமேவிரோ தியாம் ஆகலின் அதனழிவின் பொருட்டுப் பெருமுயற்கி யைச் செய்யவேண்டுமெனக் காட்டற்பொருட்டு அதனது துராத்மத் தன்மையையே விரித்துக காட்டுகின்றார.

காண்பரியமனம் = அசத்தாய மனமெனினுமமையும் அசத்தாகவே யிருந்து சதாகாரத்தைக் காட்டும என்ப தாம, இநதத்துவைதமானது தானிசெய்யும மலடிமகன் போல அசத்தே சிருஷ்டியின் முன்னுண்டாகவே யில்லை கலைப்பட்டணம்போல் மனத்திற்றோற்றுமம, மனது திரு சியமயமாயழிவு வடிவமாயிருந்து தோடமிதனை யுண்டாக் கும், கனவானது வேறு கனவைத்தோற்றி வைப்பதே போல அசத்தையே சத்தாகாரமாய்த் தோற்றிவைக்கின் றது. அம்மனது சுயமாகவே இஷ்டப்படி விரைவில் தேகத் தைச் சங்கற்பிக்கின்றது, நீண்டபாவனை விஸ்தாரத்தை யுடைய அம்மனதினனே இவ்விந்திரஜால இலக்குமி விரிக் கப்படுகின்றது: கேவலம மனதே சஞ்சலசகதியினலே எங்கு எப்போழ்து சலிக்கின்றதோ அங்கு அப்போழ்து

வினங்குகின்றது, சுற்றுகின்றது, செல்கின்றது, வாசிக்கின்றது, பிரமிக்கின்றது, மூழ்குகின்றது, கொல்கின்றது, சுயம் சமசாரதசையிலுற்ற தாழ்வையும், கைவல்ய இலக்கணமென்மையையும் அடைகின்றது, என்பதாக மயக்கத்தாலே தோற்றுநிற்கும. இங்ஙனம் விசுவத்தின் மூலமான மனப பொய்மையின் வருணனையின் பிரகரணப் பொருள் துணிவுற்றவழி யதனதிஷ்டான தத்துவத்தையும் அதன் ஆரோபப் பிரகாரத்தையும், அது பொய்யாவதிற் காரணத்தையும் விரிவாக அறியவேண்டு மெனக் கூறுவார் பெருங்கற்பமென்றூர், மகாபபிரளயம வரும் காலத்தில் உலகம சூக்குமமாய் விட்டபடியால் அருத்தக் கிரியை யசமர்த்தத் தன்மையை யடைந்தபோது வருஞ் சருவதிருசிய சிருஷ்டியின் ஆதியில் விகேஷபமற்றசாந்தமே எஞ்சியிருந்தது.

அற்றேல் திருசிய அசத்துவம்போலத் திருஷ்டாவிற்கும் அசத்துவமே பொருத்தமாம், " அசததுத்தான் இதற்கு முன்னிருந்தது, அசத்துமிருந்திலது சத்துமிருந்திலது அப்போது" என்பதாதி சுருதியினலேயென ஆகேஷபிக்க உத்தரங் கூறுகின்றூர்.

சத்தான அத்தமியாத சோதிச்சித்தாய அருக்கனைய், ஆதிமத்தியாந்த ரகித தேவனைய் இன்பமயமாய் நோயற்றுப பரிபூரணமாய் எப்போதும் சர்வக்கிரியா சக்திசமபன்னனைய்ச் சருவமாய் நித்தியமாய மகேசுரனைய்ப் பரமான்மா விருக்கின்றது.

பரமாத்மா யாவுஞ்செய்து சருவேசுரராயின் காரியநியமிய சாபேகைஷத் தன்மையானே சவிகற்பமாம் என ஆசங்கித்துச்சருவ கருத்துருத்துவாதிகளும் அவித்தையாலாவனவே, உண்மையாயோ நிருவிகற்பகமே அதனது சொரூபம் எனக்கருதிக் கூறுகின்றூர்.

எதனினின்றுங் கோசரிக்க முடியாமல வாக்கானது திரும்புகின்றதோ, யாது ஜீவன்முக்தர்களாற் பிரத்தியக்ஷ மாக அனுபவிக்கப் படுகின்றதோ, எதற்கு ஆன்மாமுத லிய பெயர்கள் கற்பிதங்களாமோ அநாரோபித ரூபங் களா யுண்டாகவில்லையோ, மற்றை ஆரோபித தரும ஜன் னியங்களாமோ, விடயமென்பது விவாதமற்றதாம சருவா திஷ்டானமான அதன் கண்ணென்றுணர்க, யாதுசாங்கிய திருஷ்டி யுடையவர்கட்குப் புமாணகியும, வேதாந்தவாதி கட்குப் பிரஹ்மமமாயும், விஞ்ஞான முணர்ந்தவர்கட்கு ஏகாந்த நிருமலமாய கணிகவிஞ்ஞான மாத்திரமாயும் (கணிகம் = கணகாலமிருந்து கழிவது) யாது சூனியவாதி கட்குச் சூனியமாயும் இருந்து யாது சூரியன் அக்கினி களையும் விளக்கிவைப்பதாமோ அது சகலபிராணிகட்கும் பிரததியக் கான்மாவாம்.

அருக்கன் றேயுபாசகத் தன்மையானே பிராப்தமாம், அதனினும் வேறுய ஜீவனினும பரமான்மாவிற்குப் பேதத்தை நீக்குகின்றார்.

இங்குமங்குமாகக் கலங்கிக்கொண்டு திரியும புரியஷ் டக காயத்தைச் செலுத்தும. "கண்முதற் பொறிகளைந் துங் கருமவிந்தியங்களைந்தும், உண்மனமாதி நான்கு முயிர்ப்பென்ப தாதியைந்தும், விண்முதற் பூதமைநதும் விருப்பொடு வினையவித்தை, யெண்முறை யிதனைக் கூறு மெனப் புரியட்டகநதான்" என்று புரியட்டக சொரூபம் பெரியோர்களால் அருளப்பட்டுளது. சொல்வதும், கினை வதும், உண்மையும், போகிப்பதும், காண்பதும், தொழிற் செய்வதும், எப்போதுமே யதுவாம்; யாதான் றுலகின் கண்ணே யிருந்தபோதினும், இல்லாதது போலாமோ, யாது தேகத்தின்கண் ணிருந்தபோதினும் அசத்வாபாதக

அவித்தையான் மறைபட்டபடியாற் பாமரதிருஷ்டியானே இல்லாததாமோ, அதனினே தூரத்ததாமோ, சூரியனிடத் தினின்றும் பிரகாசமான துண்டாவதேபோல எதனினின் றும் இச்சிற்பிரமையான துண்டாகின்றதோ, எதனினின் றும் பிரகாசத்தோடு கூடியிராநின்ற விஷ்ணுமுதலிய தேவதைதகள் சூரியனிடத்தி னின்றுங் கிரணங்கள் உண்டா வதேபோல உண்டாகின்றார்களோ; எதனினின்றும், கட லிலிருந்து குமிழிகள் உண்டாவதேபோல அசேதனமான அநந்தஜகங்க ளுண்டா கின்றனவோ, பெருங்கடலை நதி கள் அடைவன போலத் திருசியக்குழுக்கள் எதனைப் பிர ளயத் தடைகின்றனவோ; யாது தீபம்போலத் தன்னையும் பிறவாற்றையும் சுவப்பிரகாசத் தன்மை யுண்மையின் தன் னையும் பிறிதையும் விளக்கிவைக்கும் ஆற்றலினாலே ஒளிர் விக்கின்றதோ தன்னை யொளிர்விக்கின்ற தென்பது அபே தத்திலும் இராகுவின் சிரமென்பதேபோலும் உபசார மாம். யாதுதத்தம் வியாபாரங்களில் முயன்று கொண் டிருக்கும் கருமேந்திரியங்கள்; ஞானேந்திரியங்கள், பூதசூக் குமங்கள், பிராணன்கள், அவித்தை, காமம் கருமம், அந் தக்கரண மென்னும் புரியஷ்டகத்தை யுள்ளும் வெளியும் தன்னுடைய சித்துவியாப்தியினாலே அலைக்குமோ, சேத னங்கட்குச் சேதனத்தன்மை எதனாலுண்டாமோ, இங்ங னமே அசேதனங்களின் விசித்திரத் தன்மையின் கண்ணே யாது காரணமாமோ அதுவே பரமான்மாவாம். சருவ பூதங்களுஞ் சாரிதன் பாதமாம், பருவமா மூன்று பாதம மிர்தமாம் என்று மறைகூறுகின்ற எவ்வறிவாம் வாயுவி னாலே, சுத்தசிதாகாசத்திற் பிரகிருதியாகிய கொடியானது, மனமாகிய வேருடையதாய்ப் பொறிகளாந் தளிர்கணிறை யப் பெற்றுப் பிரஹ்மாண்டங்களாம், நற்கனிகளைத்தரு நடிக்கும். எச்சின்மணியானது ஒவ்வொரு தேகங்களா

கிய சம்புடங்களில் விளங்கிக்கொண்டிருக்குமோ அதுவே பரமான்மாவாம்.

பரமான்மாவே சரீரத்துட் புகுந்து சமூசாரத்தை யாற்றுவாராயின் அதற்கு யாங்ஙனங் கைவல்லியம் எனச் சங்கித்து உண்மையாக அசம்சாரியாயிருக்கும் அதன்கண் விபரீதபாவனையா லடைவுற்ற அச்சமூசாரத்திற்குத் தத்து வபாவனையினாலே நிவிருத்திகூடலின் பொருந்து கின்றதே யாகுங் கைவல்லியம் என்கின்றார்:—சிருஷ்டி காலத்தில் அவசியம் சிருஷ்டி, பிரளயகாலத்தி லவசியம் பிரளயம், உண்டாக வேண்டு மென்னும் நியமமாகிய நியதி, அதனை வரைந்து கொள்ளும் தேசகாலங்கள், அவையடைவுற்ற வழி விரையாதியி லுள்ளிருக்கும் காரியத்தின்விரை யுப் புதல்வாயிலாய சலனம், பீஜபுடத்தைப பிளந்து முளை முதலிய வற்றின் வெளிப்போதலாம் அசைவு,அதனினின் றும், பின்றண்டு தளிர்கிளை முதலாய முறையாற் பலபரி யந்த வியாபாரமாய கிரியை, என்னுமிம் முறையானே சர்வபாவங்களும் எதனல் விவகார அர்த்தக்கிரியா சமர்த் துடைத்தாஞ் சத்தையை மருவினவோ அதற்கு உலக விலக்கண பரமார்த்த சத்தையே கூறப்படும்; அல்லது அதுவேமாயிக விபோமாதி பாவசிந்தையிலுலே விபோ மாதி பாவமா யடைவுற்றதாகும், அதனினும் அய லொன்று விபோமாதி சத்தமுடைய தாகாதாம் என் கின்றார்.

உலகப்பெருங் கூட்டத்தை மாயையாற் செய்யினும் உண்மையி லொன்றுஞ் செய்திலதாம். யாது சுத்தஞான மயத்தன்மையோடுகூடியிருத்தலின் விண்ணெண்ணத்தால் விண்ணும், பதார்த்த சிந்தையினுலே பதார்த்தத் தன்மை யுற்றது போலாம்; "உருவ மியாவையுமுன்னியே யுரணு

றுமபெயாக, டருவதாகிய சாற்றி மெய்யிலகிடுநதானே" என மறையும் அறைகின்றது, தோற்றல் மறைதல் வடிவ மான திரிபுவன தரங்கங்கள் அத்தியந்தம் விஸ்தீர்ணமாய எவ்வதத்துவின்கண் ணிலங்குதல் மருப்பூமியிற் கானனீர் இலங்குவது போலுமா மென்றுணர்க. ஜகததாரோபப் பிரகாரததைக் காட்டி அதனது பொய்மையிற் காரணங் கூறுவா இத்தனையு மென்றூர். எப்போதுமுள்ள தன்னி டத்திற் றுன்மாததிரமா யிருப்பதானே பெரும்பெரும் பிரமாண்டங்களின் அநந்தமான கூட்டத்தில் விசித்திர லீலகளைச் செய்துகொண்டிருந்த போதிலும் ஒன்றுஞ் செய்யவேயில்லை யாதொரு கிரியையும கிடையவே கிடை யாது எனவே நிருவிகார வுபாதான மூடைமையே காரி யப் பொய்மையிற் காரணம்.

விரிஞ்சன் முதலாகிய ஜகத்திற்கு மூலமென நிரூபிக் கப்பெற்ற வத்துவினது தத்துவத்தைக்கூறி அதனையறி யிற் சகல துக்க நிவிருத்தி யுண்டாமென மறைமுறையே யறைகின்றூர்.

நிருவிகாரமாயும், அஸ்தமயமற்ற வறிவாயும், அத னனே சுவஜாதியாதி பேதங்களையும உதயஸ்திதி பு தலிய வற்றையும விட்டிருபபதாயும உள்ளது தன்னுடைய சொரூபமேயாம; உலககாரணமாகிய மாயையும் சிறிதென் னுமாறு பெரிய பிரஹ்ம சொரூபமாகிய தன்னை யதார்த்த மாக வறிந்தபோழ்து, மூல அஞ்ஞானங் கெடுதலானே அதன் காரியமாகிய அநதக்கரண தாதாத்மிய அத்தியாச வடிவ இருதயக்கிரந்தி நசிக்கும், அது நாசமாதலினனே அதனை மூலமாகவுடைய எல்லா ஐயமுதலியவையும் சிதை யும், இவனது கருமங்கள்யாவும் நசிக்கும் எனமறையும் அறைகின்றது. யாது அளவைகளானே எங்ஙனம அறி

யப்பெறுகின்றதோ அது அங்ஙனமேயிருக்குமன்றி வேறு ரூபமாகமாட்டாதாம், பிரஹமமோ அறியப்பெறுவதில்லை, அதனைச் சத்துரூபமெனத் துணிவான் கூடுதல் யாங்ஙனம்? ஜகமோ அவ்வாறறியப பெறுவதா யிருப்பதால் அசத் தென்று கூறுதல் யாங்ஙன மேலுமென வினவிய முன் வினாக்கள் இரண்டில், முதலாவதற்குச் சமாதானஞ்செய்து கொண்டேவந்து, இத்திருசியத்தின் பொய்ம்மை யின்றிப் பிரமதத்துவமானது எத்தகையனாலும் எக் காலத்தும் அறியமுடியவே முடியாதாமென்பது திண்ணமே யாமென முடித்தவழி, சிறிது அதிக விசேடத்தைக்கருதி ஸ்ரீ இராக வர் இரண்டாவது வினாவைக் கிளபபல் வேறமகாமுனிவரே! பிரஹ்மத்தின்கண் உலக மத்தியஸ்தமாயின் இவ்வாறுக லாம்; ஆனாலதுவே சம்பவியாத காரிய மன்றோ: என்னை, திருசியக்கூட்டமாய பிரஹமாண்டமான இத்துணையுலகின் நிலைமைக்குப் பொய்ம்மை யெங்ஙனம் உளதாகும்? பரம சூக்குமப் பிரஹ்மத்திற் சின்மாத்திர ரூபத்தன்மை யுண் மையின் இத்துணைப பிரஹமாண்ட விஸ்தார ஸ்தூலப்பிர பஞ்சத்தின் அத்தியாசம் பொருந்தாமையின்; ஏனெனின் கடுகின் உதரத்தில் மேருகிரி நுழைதல் எங்ஙனந்தான் முடியும்.

பிரஹம ஞானியரது சமாகம வாயிலாக அத்வைத சாஸ்திரத்தினது நிரந்தர அப்யாசத்தான் அதிசுலபம் அத் வைதஞானம் எனபபரிகரிக்கின்றார். உலகில் ஸ்தூலத் தகைமை ஆராய்ச்சியின்முன் னிற்குமாயின் நீ கூறியது சரியாம்,1 அஃதவ் வாறுகாதாம், உனக்குலகிலிருக்கும் ஸ்தூலத்தன்மை ஞானம் எம்மால் நாட்கு நாள் உலகங்க ளானே சிதிலஞ் செய்யப்படவே யக்கால் நீயாம் கூறிய தைத் துணிவாயென ஸ்ரீ வசிஷ்டபகவான் உபதேசிக் கின்றார்.

சில தினம்வரை கிளர்ச்சியின்றிய மனத்தனுகிச்சாது சங்க சற்சாஸ்திரப் பயில்வுட னிருத்தி யென்னின், பாமொரு நொடியில் நினது சித்துருவத்தில் திருசியமை துவு மில்லாமற் கானனீரை யாராய்ச்சியாற் றுலத்தல் போற் றுலத்துவிடுவேம். திருசியமொழியவே திருஷ்டாத் தன்மையும் ஒழிந்துபோம்; கேவலமறிவு மாத்திரம் எஞ்சாநிற்குமம, திருசிய மிலதாகவே கேவலம் திருஷ்டா மாத்திரம் இல்லையென்பதாக இல்லை மற்றே இருமை யொரு மைகளும் இல்லாமலேகும் தத்துவஞானமானது சற்சாஸ் திரத்திலேயே யாமல்லாது மற்றென்றிலு மாகாதாம் ஆகலின் சாதுசங்க சற்சாஸ்திரபரனு யிருத்தியென்னின் பரமபதத்தை மாதங்களென்பதாக இல்லாமற் சிலதினங் களிற்றுனே அடைவது திண்ணம், ஆலல் முக்கியமான சாஷ்திரம் யாதாமெனின்? சுபமாகிய இம்மகாராமாயண மேயாம், உத்தமமான இதைக் கேட்டமாத்திரையானே ஞானமுண்டாம, எல்லாவற்றினு மிதுமாத்திரமனங்னம் உத்தம மாகுமெனின்! எல்லா இதிகாசங்கட்குள்ளு மிது சாரமெனக் கூறப்பெறும், வாக்கிய சுநதர்ப்ப வடிவமாய இதனைச சிரவணஞ செய்தமாத்திரையானே கெடாததாய ஜீவன் முக்தத்தன்மையானது அவசியம் முயல்வின்றியே யுதிகுகும், ஆகலின் இதுவே மிகவும் பவித்திரமாம். கனவு முதலியவற்றின்கண்ணிருந்துகொண்டே இது கனவென் றுணரின் கனுமெய்யென்னும் பாவனை யொழிந்து போவ தேபோல வுலகமாகிய திருசியமானது இருக்கும்போதே ஆராய்சியினுனே யொழிந்துபோம் ஞானத்திற்குச் சாத கமாகிய ஊகக்கூட்டம் யாவை இநநூலின் கண்ணை யுள வாமோ அவை பிறநூலின் கண்ணும் உளவாம, யாவை யிண்டிலமேவா அவையெதன் கண்ணும் இராவாம், ஆகலி னிதனை யறிஞர் சமஸ்த மெய்ஞ்ஞான சாஸ்திரதனங்களி

றைந்த களஞ்சியமென வுணர்வர். அவ்வான்மாவிலேயே சித்தமுடையவர்களும் அதையடையும் முயற்சியாலேயே வாழ்நாளைக் கழிப்பவர்களும், ஒருவருக்கொருவர் அதனையே போதிப்பவர்களும் அதனையே யெப்போதும் பேசுபவர்களும், அதைக்கொண்டே நித்தியம் சந்தோஷிப்பவர்களுமே அதிலேயே இரமிப்பவாகளும், ஆகிய ஞானசாதன சிரவணாதியின்கண் ணையலொருதாழிலு மிடையிலிலாமல் ஒரே நிஷ்டையையுடைய ஆத்மஞான ஆராய்ச்சியுடையோர் தமக்குப் புகன்ற ஜீவன் முக்தத் தன்மையான துண்டாம, அது தேகத்தை விட்ட பின்புண்டாம் தூயமுத்தத் தன்மையேயாம், அயலன்றும்.

சிரவணாதி பலக்கூறு விரிக்க வுற்றபோது ஜீவன் முக்த விதேகமுகத இலக்கணங்களை யறிய விரும்பிய ஸ்ரீ இராகவர் வினவல்.

தோற்றமாத்திரத் தாணதல் பரதிருஷ்டி யாணதல் விவகாரத்தோடு கூடியிருந்த போதிலும் யாவனுக்குத தோற்றுகின்ற படியான இவ்வுலகம தத்துவ திருஷ்டியானே அஸ்தமாகியதாமோ வியோமப் பிரஹ்மம இருபதேயாமோ அவன் வாழும்போதே முக்தன் எனபடுவன், எனபடவேவெப்போதும் பிரதியக்ஷமாகவே சிதாகாச மிருக்கும், முன்றுன்றுமுலகம என்பதாயிற்று, விதேக முக்தனுடைய இலக்கணத்தையும், ஜீவன்முக்தனுடைய இலகணத்தையும் கூறவேண்டுமெ, கேட்டபின் சாத்திரமாய நேத்திரதாதா லுண்டாம் மதியால் அவ்வாறேயான் முயலவேண்டுமென ஸ்ரீ இராகவர்கூற, ஜீவன்முக்தி வாயிலாகவே விதேகமுக்தி புண்டாதலின் சொன்முறை தன்னினும பொருண்முறை வலிதே யென்னும நியாயம் பற்றி விரிவிய முறையைப் பற்றுது முதலிற் சீவன்முக்

தன் இலக்கணமியமபுவாம்; சாஸ்திர நிஷித்தமில்லாத விவ காரவாஞயினுமம, எவனுக்குலகம உண்மை விழிபாதனை பாதமாதலின் இலய மடைந்ததாய் விண்போலச் சூனிய மாமோ கண்ணுடிநகரம்போலப் புலப்படினுமம இலலாததே யாமோ அவன் ஜீவன்முக்தன் எனபபெறுவன். தோற்ரு நின்ற இக்கிரிநதி சமுத்ராதி யுலகம் உணாவோனது தேதேகநதிரிய விவகாரத்தோடுகூட மகாப் பிரளயததில் பரமேசுரரால் உபசங்கரிக்கப்பட்டுச்சொரூபம பொடியாக அஸ்தமாகிப்போம். ஈண்டோ அங்ஙனமன்ரும மற்ரே தேதேகநதிரியாதி விவகாரம் இருக்கின்றதேதயாம. கிரிநதி யாதிகளோ ஈசுரரால் உபசங்கரிக்கப் படாமையின் முன் போன்ரே யிருநதுகொண்டே மற்றைய எல்லாராலும் வெட்டவெளியாக அனுபவிக்கப படுகின்றனவேயாம். ஜீவன் முக்தனுகரு அவற்றைக் கவரும விருத்தியில்லாமை யின் துயிலிற்போல யாவும் அஸ்தமாகியே யிருக்கின்றன. சுயம்பிரகாசமாகி விளங்கும சிதாகாசம கேவலம எனருகி நிறகும, பத்தனுக்குத துயிலின்கண்ணை அகாலத்திய விருததியபாவ சாமிய மிருந்தபோதினும் வருமதிவிருததி விரையிருபபுண்மையின் ஜீவன் முக்தத்தன்மை யின்ரும.

அச்சீவன் முக்தாகளது இலக்கணத்தையே யீண்டு மிரண்டு செய்யுட்களாற் கூறல.

சுருங்கிய வாதனையறுதலின் சகலவாசனாவிலயமாகச் சீவன் முக்த சம்பவமாதலின் பிராரப்தகரும வேகத் தாதீன வருதலடைநதனவாய இராகத்வேஷ பய ஆபாசாதி கட்குத்தக்கபடி எங்ஙனம் வேண்டுமோ அங்ஙனம் நடத்த போதினும் எவ்வறிஞனது உள்ளாத்ம வடிவம் வியோமம் போல அதி நிாமலமாகத் தெளிந்துளதோ அவன் சீவன் முகதன். விண்ணனது நிருமலமாயிருத்தல் போலவே

245 ஸ்ரீ வீரசேகரம் என்னும் ஞானவாசிட்ட வசனம்.

ஆன்மாவும் இராகாதிமலரகிதம ஆமென அறிந்துகொள்க. எவ்வறிஞனுக்கு யான் கருததா என்னும் வகையினதாகப் பாவனைஞானம் உண்டாகாதோ, இந்திரியார்த் தங்களிலிந்திரியங்கள் ஈடுபடுகின்றன யானல்லன், யானே அவற்றின் வியாபார சாக்ஷி அகர்த்தாவாவேன் என்று யாவன் காண்பானே அவனே சீவன்முக்தன். எவனது அந்தக் கரணம் ஆழ்ந்து தாழ்ந்து போவதிலையோ, அதாவது யான் இந்நிடேதத்தைச் செய்துவிட்டேன் இவ்விதானத் தைச் செய்திலேன் ஆகலின் நரகத்தில் வீழ்ந்து வருந்து வேன் எனபதாக எவனதுமதி வதையுறுவதில்லையோ அவனே சீவன்முக்தன், கலாவாளுயினும் = அவித்தையி னேனே அவயவத்தோடு கூடினவளுயினுமம, நிட்கலன் = உண்மையாக அவயவமற்றவன், சிந்தையா பாசத்தோடு கூட நிகழ்பவனேயாயினும் உண்மையாகச் சிந்தையற்ற வன். அன்னியர் தமதாம் பொருள்களில் விவகரிபபவனைப் போலத் தண்மையன் தாபமற்றவன் துயரற்றவன், மகிழ்ச சியற்ற மாண்பிற்கு மிஃதுபலக்கணமாம், அபிமான மில் லாதவளுகிய ஜீவன் முக்தனுக்கு, சமஸ்த அநுதாதக் கூட் டங்களினது பெருககாலுஞ் சுருக்காலுமம மகிழ்சசியே னுமம வாட்டமேனு முண்டாகாதாம், மாலை சநதனம பூசைமுதலிய இன்பமுண்டாகிய போதும் சமுசாரிக்கே போலும் மகிழ்ச்சி யுண்டாகாதாம, தனஹானி திக்கா ராதி துக்கமுண்டாகிய போதுமம தீனனுகான். இப்போ தியதாய தன்முயற்சி விசேட மில்லாமலே நுகர்வினை கொணர்ந்த முற்பிரவாகத்தில வந்த பிரூான்னுதிகள் கிடைத்தபடி தேகரகைஷ, சமாதிதாட்டியத்தான் மாலைசந் தனுதித் தோற்றமின்மையின், ஒரோருகால் எழுந்ததசை யில் தொடக்கத்தோற்ற மேற்படினும் விவேகதாட்டியத் தானே தள்ளுங் கொள்ளும் புத்தியின்மையின் மகிழ்ச்சி

முதலியவற்றின் இன்மை யேற்படும். விழிமுதலிய இந்திரி யங்கள் தத்தமது கோலகங்களிலே யிருத்தலின் உபரதியின் மையின் விழித்திருப்பன், மனோவிருத்திரகிதமா யிருத்த லின் துயிலுற்றோன், இதனானே இந்திரியங்க ளானே பொருட்டொற்ற மென்னும் ஜாக்கிற இலக்கணமில்லாமை மின்சாக்கிரமவனுக்கின்றும். போதமுளதாய போதினும் உண்டாய பிரஹமவித்தாந் தன்மை யபிமானதியும் போகார்த்தந தொடங்கிய காமாதியுந் தீதோஷமாம் வாசனாவிருத்தி ரகிதத் தன்மையானே அத்தோட மில்லா மையின் நிரவாசனத் தன்மையாம், இராகமுதித்த வண் ணம போஜனாதிப பிரவிருத்தி, துவேஷமுண்டாகிய பிர காரம் பௌத்த காபாலிகாதி களினின்றும் திரும்புதல் பயமுதித்த அளவு பாம்பு புலியாதிகளி னின்றும் அகலு தல் ஆம். ஆதிசப்தத்தானே மாச்சரியாதி, மாக்சரிய முதித்தமானம் மற்றைய யோகிகளினும் அதிகமதாகச் சமாதியாதி யனுஷ்டானம், எழுநதசையை யடைந்த போதினும் இத்தகைய ஆசரணம் முற்பயிற்சியானேயடை வுற்றபோது விசிராந்த சித்தனுக்குக் களங்கமியாது மின் மையின் உட்டெளிவுறைந்து நிற்கும். விண்ணின்கண் தூமதூளிமேகாதி கூடினும் பற்றிலா வியற்கையானே அதி சயமாகத் தெளிவுளதாந் தன்மை யாதல்போலும். எப் பிரஹ்மவித்தின் பாவம் = சத்தை = இயற்கை = ஆத்மா, அகங்காரத்தோடு தாதாத்மிய அத்தியாசத்தால் உள்ளே மறைபடவில்லையோ, எம்மதியில் ஐயமே கிடையாதோ; ஐயமிலதாயவழி மூவுலகவதத்தானும் பந்திக்கப்பட மாட் டான்; என்றுல் அன்னிய கருமத்தால் மற்றென்னே யியம்பவேண்டுமம. உலகத்தில் பந்தமடைந்த புருடன் சாஸ் திரஞ் சாற்றிய கருமம் ஆற்றுபவனுகி யான் கருத்தா வென்னும்போது சிதாத்மா அகங்கிருதமாகும், துறக்

கத்தை யடைவேன் என்னும் மகிழ்சியானே மதிபற் றுறும். செய்யாதவனே விட்டொழித் தேனையென அகங் கிருதத் தன்மையையும துறக்கலாப மின்மையால் வாட்ட முதலிய பற்றுகளையும அடைந்திருப்பன், இங்ஙனம்வேண் டாமென்ற வினைகளிலும் உலகசமபந்த கருமங்களிலும் பொருத்தமானபடி பொருத்திக்கொள்க, ஜீவன் முக்த னுக்கோ தாதாத்மிய அத்தியாச மில்லாமை யானும் மகிழ்ச்சி முதலியவை யில்லாமையானும் தோடமிரண்டு மில்லையாம். திரஸ்கரித்தல் வைதல் அடித்தல், முதலிய வற்றின்கண் முயலாமையின் இவனேநோக்கி யிவ்வுலகமஞ் சாதாம், இதனனே இவன்பால் உலகருக்குத் திரஸ்காரா திப் பிரவிருததி யிலதாதலினாலும், ஒவ்வொரு துஷ்டன் அங்ஙன் முயன்றபோதினும் இவனுடைய மனத்தில் அத் தகைய விகற்ப முண்டாகாமையானும் இவனும் பயப் படான்என்க. சத்துருமித்துரு மான அவமானதி விகற்பங் கள் சமுசாரக் கலக்கங்களாம், அவையின்பாலிலவாம், அறுபத்துநாலு கலைஞான முணர்ந்தவனேனும் அவற் றின் அபிமான விவகார மில்லாமையின் கலையிலாத தன் மையாம். சித்தமானது சொரூபமாக இருந்த போதி னும் விருத்தி யுதயமாகாமையின் சித்தமற்ற தன்மை யாம். சிந்தையென மூலபாடமாயிரனே வாதின வயத் தினாலே ஆத்மத்தியான விருத்தியிருந்த போதினும் லௌகிக விருத்தி யில்லமையின் சிநதையற்ற தன்மை யாம் என்க. அயலாரது இல்லத்தில் விவாக உற்சவாதி களில் தானே சென்று அவர் தம் பிரீதியின் பொருட்டு அவரது காரியங்களில் தலைப்பட்டு விவகரித்த போதினும் இலாபாலாபங்களில் மகிழ்ச்சி வாட்டவடிவ புத்தி சந்தா பத்தை யடையான்; இங்ஙனம் இம் முக்தன் தன் காரியத் தினும் சீதளனகியே யிருப்பன்; கேவலம் சந்தாபமில்லா

மையான் மாத்திரம் சீதளத்தன்மை யென்பதாக வின் ரும்; மற்றே பரிபூரண சொரூப அனுசந்தானத்தாலும் ஆமென்றுணர்க. "ஆன்மனிலாடியும் ஆன்மனிற் சுகித் தும், தேன்மலி தொழிலனே திகழ்தரும் பிரமவித், தான் மனினிலத்தோன் ஆரமுதடைந்தோன்" எனமறையரு ளிய, யாவன் விவகரித்திக் கொண்டிருந்த போதினும் "யான் யாதொன்றுஞ் செய்கின்றிலேன் எனச்சொரூப நிட்டனுகிய யான் றத்துவலித் தெனப்படுவன்" என மிருதியருளிய நெறியானே சிற்சொரூபத்தின் மாட்டே நிட்டையை யடைந்துளானே அவன் விழித்துக்கொண் டிருந்தபோதினும் துங்குவோன் போல் நிர்விகாரனே யாவன், அத்தகையன் ஜீவன் முததன் எனப்படுவன். கிடைத்ததைக்கொண்டு மகிழாநிற்கும் எவனுடைய முகக் காந்தியானது இன்பத்துன்பங்கள் எய்தியகாலத்தும் விரி தலும் குவிதலுமடைய மாட்டாதோ அவன் ஜீவன்முகத னெனப்படுவன், யாவன் நிர்விகாரமான தனபாற்றுயில் பவன்போல இருப்பினும் அவித்தையாம நிதிரையழிந்த படியால் தன்பால் விழித்தே யிருப்பனே தேகேந்திரி யாதிகள் பாதிக்கப்படுதலின் பொறிகளால் விடயங்கள் புலப்படும் நனவானது யாவனுக்கில்லையோ; நனவின் வாதனையை நிமித்தமாகக் கொண்டுண்டாம் கனவும் யாவ னுக்கு இல்லையோ எவன் வாதனயற்ற மெய்ஞ்ஞான வடிவமாகவே யிருப்பனே அவன் ஜீவன்முக்தன எனப் படுகின்றுன். இராகத்துவேஷ பயாதிகளின் றொடர்ந்த வடிவமாய்ச் சுழன்று நடனப்போலத் தக்கதக்கவாறு நடித்துக்கொண் டிருந்தானெனினும் யாவன் உள்ளே விண்போல நிர்மலமறைப்பற்ற ஆன்மாவின்கண் ணிலை பெற்றிருப்பனே அவன் ஜீவன் முக்தன் எனப்படுகின் றுன். விவகரித்துக்கொண் டிருந்தபோதினும் விவகரியாம

விருந்தபோதினும் அகங்காரத்தோடு கூடாதே தன்னை யாவனுக்குளதோ, அவனதுமதி செய்தேன் செய்யவில்லை யென்னும் அபிமானத்தாற் பற்றுறுதோ அவன் சீவன் முக்தனெனப் படுகின்றுன். எசகிதாத்மாவினுடைய மறைப்பின துபாதி நீக்கத்தானே மூன்றுலகங்களினுடைய பிரளயத்தையும, எதனதுபாதி மறைப்பை யடைந்ததனுனே அவற்றின் முற்சம்பவத்தையும யாவன் காண்கின்றனனே, தனக்குத்தானே யொப்பானவனு யிருக்கின்றனனே அவனே ஜீவன்முக்தன் எனப்படுகின்றுன், விதேகமுக்தியின் கண்ணேயே எஞ்சுதலில்லாமல் ஆவரணாவகலின் சாக்ஷியாகிய ஈசுவரிடத்திலோ ஆவரணம் இன்மையினுலும் மேற்கூறிய இரண்டன் கண்ணுமபாதியெனக் கூறியதாகும். எவனேநோக்கி யுலகர் அஞ்சாரோ, யாவன் உலகருக்கஞ்சானே, மகிழ்ச்சி பொறுமை பயமேதுவாயுள்ள அஞ்ஞான அபிமானத் தினின்றுமவிடுபட்டுளானே அவன் ஜீவன்முக்தனைப் படுகின்றுன். சருவசமூசாரசத்தியபுத்தியி னின்றுஞ் சாதியானவனும் அன்னியாகனுடைய பார்வைக்குத் தேக அவயவங்களோடு கூடியவனுயிருந்தபோதிலும் வவயவ மற்றவனுவனே யாவுநதெரிந்தவனுயிருந்தபோதிலும் மனமற்றவனு யிருக்கின்றனனே அவன் ஜீவன்முக்தனெனப் படுகின்றுன். யாவன் எல்லாவத்துக்களோடும் விவகரித்துக்கொண் டிறுந்தபோதிலும் இராகாதி தாபமின்றிக் குளிர்ந்திருக்கின்றனனே, இராகாதி விடயங்களாகிய பதார்த்தங்களிலும் அவற்றின் வடிவமாதலின் நிறைந்திருக்கின்றுனே அவன் ஜீவன்முக்தனெனப் படுகின்றுன்; தள்ளக்கொள்ள முடியாத தன்தான்மாவின் கண்ணே அத்தியஸ்த மாயேனும் பொய்யென நிச்சயிக்கப் பட்டதாயேனும் இருக்குமபொருள்களில் இராகாதி சம்பவித்தல் கூடாதன்றே!

இப்போது முதலில் வினவிய விதேகமுக்த இலக்கணம் கூறத் தொடங்குகின்றார்.

ஜீவன்முக்திப் பதத்தைவிட்டுத் தேகமானது பிராரப்தம தீர்தலானே காலத்தாற் பீடிக்கும்போது வாயுவானது அசைவின்மையை யடைதல்போல, இச்சீவன்முக்தன் விதேகமுக்தியை யடைகின்றான். அவ்விதேகமுக்தனது சொரூப லக்ஷணத்தைக் கேட்பாயாக, விதேகமுக்தனவன் வளர்வதுமில்லை குறைவதுமில்லை, நாசமடைவதுமில்லை வெளிப்படுவதுமில்லை வெளிப்படாமலுமில்லை, தூர்த்திலு மிருப்பதுமில்லை, நானென்பதுமில்லை, நானல்லனென்பதுமில்லை, மற்றவனென்பதுமில்லை, அவனது தடஸ்தலக்ஷணம், சூரியனுதவிருந்து உலகத்தையொளிர் விக்கின்றான் என்பது முதலவாயப பெரியவா சிட்டததில் விரிவாம். நிச்சலமாயும், கம்பீரமாயும், ஒளியற்றதாயும், இருளற்றதாயும் விஸ்தாரமாயும், பெயரற்றதாயும, வடிவற்றதாயும் இருக்கும். அவாங்மானச் சத்தோன்று சேடித்து நிற்கும் பெயரையும் வடிவையும்நிடேதிக்கில் நாமரூபசூனியவஸ்துவிற்கு உலகத்தில் அத்தியந்தம் பிரசித்தி காணப்பெறுமையின் சூனியத்தன்மையன்றே வாமெனின்? அது சூனியமாகாதாம், ஆகாதாயின் சூனியமாகாத அதற்கு ஆகாரத்தன்மை திருசியத்தகைமை தரிசனத்தகைமை முதலிவை எஞ்சுதலாமே யெனின்? அது ஆகாரமுடையது மல்ல, திருசியமுமல்ல, தரிசனமுமல்ல அநந்தமாயிருத்தலினானே, பூதபதார்த்தக் கூட்டமுமல்ல, பெயரில்லாதபடியினாலே எவ்வாற்றானும் கூறமுடியாத வடிவதாம, பூரணத்தினும் பூரணவடிவதாம், எப்படி யியம்பமுடியா தெனின்? கேட்குதி! அது சத்துமன்று அசத்துமன்று சதசத்துமன்று காலசம்பந்தமும், காலசம்பந்தமுடையதுமன்று உற்பத்தி

யும் உற்பத்தியுடையதுமன்று, அதுசின்மாத்திரமா யிருப்பதும் திருசியமற்றதும், அநதமின்றியதுமை ஜரையற்றதும் சிவழுமமுதலிடைகடையற்றதும், காரணமற்றதும் நோயற்றதுமாம். எதன் கண்ணை யிந்தவுலகமானது, முத்துக்களை யுட்கொள்ளும் அன்னப்பக்ஷிகள் அதன்பரிணமமாதலின் முன்னா முததுவடிவமாயும் பின்னர் அன்னவடிவமாயும் காணப்பட்ட அவவிரண்டுந தொடர்ந்த திரவியம் போலுமை சித்திரமயக்க முதலியவற்றே காணப்பட்ட முத்தமைய அன்னம்போலுமை காணப்படுமை, யாது அதியாரோப திருஷ்டியினனே யாவுமாமோ, அபவாத திருஷ்டியினனே யாவுமாகாதோ அத்தெய்வம் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்குமவஸ்தை யிரண்டைத்தொடர்ந்து விளங்கும் எங்ஙனம் வாயுவானது ஒருகாற் சலனத்தைவிட்டு நிச்சலரூபமாக இருக்குமோ அங்ஙனம் முக்தாத்மாவும் உபாதியாலாக்கபபெற்ற சமூசாரத்தைவிட்டுச்சொரூபமாகவேயிருப்பனென்பதாம். ஆண்டு மகிழ்ச்சி வாட்டங்களுமின்றும்அவற்றின்றியாகமுமின்றும், என்னை, லிங்கதேகத்திற்கு ஈண்டே லீனத்தன்மை யுண்மையின். சத்வாச்சியங்களாய உலகவேதுவாம் அவித்தை மாயைகளை யுபாதிகளாகக் கொண்ட பிராஞ்ஞ ஈசுரர்களின்றும், அசத் வாச்சியங்களாய பூதபௌதிகங்களுமின்றும், தூரத்தல்ல வென்னும் கூற்றின் மாயாதீதமன்றும, நணித்தல்ல வென்றமையானே தூலபுக்குச் சமீபத்திருக்குந் தன்மை நிடேதிக்கப் படுகின்றது, நானல்ல வென்பது சமட்டியுமன்று, பிறனல்லவென்பது வியட்டியுமன்று என்றுணர்த்தும். ஒன்றுமல்ல வென்றமையானே விவகாரயோக்கிய விகற்பம்யாதுமே கிடையாதென்பது பொருளாம், இவ்வித விதேதகமுக்தியோடு ஒப்புமை மேன்மைக் கூற்றால் ஜீவன் முக்தியின் கண்ணும் எத்துணை எத்துணை நிர்வி

கற்ப அதிசயமாமோ அத்துணை அத்துணை உத்தமத் தன்மை கண்டுகொள்க.

பெருங்கற்பம் மேவும் போதில் என்பதாதியால் எப் பரமாத்தசொரூபம் பிரதிபாதிக்கப் பெற்றதோ மீண்டும விதேகமுத்த ரூபமாகப் பின்னரே யாது நிரூபிகபப்பெற் றதோ அஃதுவென கரதலாமலகம் போலும விசேடமா யறியுமபொருட்டுப் ஸ்ரீ இராகவர் விளுதல்—அந்த ஆத் மாவினின்றும் திருசியங்களானவை நீரிற்றிரைமாலைபோல வேறன்றியும வேறுபோலுண்டாம,காலசம்பந்தியாயஅறு வகை விகாரங்களுமாம, அதனனே திருசியத்தின் றரிசன பலவியாப்தியுண்டாம், அதனனே இஷ்ட அனிஷ்டங்களின் அடைதல் அகலுதல் விடயங்களாய மநோரத விகற்பங்க ளாம, முறையே அதனது சச்சிதானந்த ரூபத்தன்மையே நிர்வகிக்கின்றதாம அந்த மூன்றும அதனது பிரகாசத்தி னலே ஜகத்தாகவே யிலங்கும் அயலாக உலகங்' கிடையா தாம் அறியப்படாததிற் பொதுவதா யெங்கு நிறைநதிருப் பது சத்தாம, மறைபடாததின் மாத்திர மிருப்பது தரிச னமாம், அவற்றுள அநுகூலமா யறியததகதின் மாத்திர மிருப்பது ஆனந்தமாம, இவ்வண்ணம உட்பட்ட வுபாதி விலக்ஷணமா யிருந்த போதினும ஒளிரூப இருப்பு ஒரே மாதிரியா யிருக்கும, கருமேந்திரியவுபாதியிற் கிரியையை யும ஞானேநதிரிய வுபாதியில ரூபரச கநத சத்தப பரிசங் களையும, அந்தககரண வுபாதியில் அறிவையும பிரமாதா வையும எவ்வடிவமாயிருந்து அறிகின்றனனோ அநதப் பிரமாதாவினும வேறுய அவ்வடிவம் பரமான்மாவி னுடய தேயாம். எவ்விடயவியாப்த விருத்தியினும வேறுய அறி வுருவத்தா லுணர்கின்றனோ அதுவும் அபபரமான்மாவே யாம. காண்போன் காட்சி காண்படு பொருள்களி னிடை யிற் சாக்ஷியாக எத்தரிசன முளதோ அதனை யொருமைப

பட்ட மனத்தால் உபாதிகளினின்றும வேறுபடுத்திக் காணும் வகையினனே நினதுவடிவமென உணர்தியென விதேகமுக்தியின் கூற்றின் பின்னிதயுபதேசஞ் செய்தலும் ஸ்ரீ இராகவர் ஒருமைப்பட்டமனதில் எவ்வடிவத்தானே அஃதபரோகூமா யனுபவித்தல் கூடுமோ அவ்வசாதாரண ரூபத்தைத தெரிந்துகொள்ள வேண்டு மென்னும அவாவுடையவராய் மீண்டும் விணுதல்.

தனது மெய்யுருவத்தில் ஜாதி குணக்கிரியாதி ரகிதத்தன்மையானே சொல்லமுடியாத எசசத்துருவம் விருத்திசம்கூடியமாகச் சாகூடிரூபமாக விருக்கின்றதோ அது அந்தப்பிரஹ்ம வஸ்துவின் சொரூபமெனப்படும். அநந்தமாயும் அறிவாகாரமாயும் பரமாத்தமாயு மிருக்கும் அதனது ரூபமியாதாம் என்பதை மீண்டும் அடியேனுக்கு நல்லுணாவு வளாதற்பொருட்டு மிகத்தெளிவாகத் திருவாய்மலாநதருளவேண்டும் என்ன; கூறுகின்றார், மகாப்பிரளயம்வரும்போது சருவகார்ண காரணமும் பரமும் ஆகிய பிரஹ்மமே சேடித்திலங்கும்; அஃதபரோகூமாமாறு கூறக்கேட்பாயாக: சமாதியின்கண்ணே தடைப்படுத்தலால் விருத்திகள் ஒடுங்கியவழி விறகிலாத கனல்போல மனத்தினது சொரூபத்தையுங் கெடுத்துவிடின் இன்னபடியென வியம்ப வொண்ணுததாய ஸ்வபபிரகாச சத்துரூபம்யாது எஞ்சாநிற்குமோ அது அந்தப் பரமான்மாவினது வடிவமாம் இவ்வண்ணம் நிருவிகற்ப சமாதியாரம்பத்தில் திருசிய வுலகமில்லை திருசிய மின்மையின் காண்போனுகிய பிரமாதாவும் விலீனமானதேபோற் றோற்றும் என்னுந் திரிபுடிலய விளக்கமாகிய சாகூடிசொரூபமே அந்தப் பரமான்மாவின் வடிவமாம். பெயரிறந்த வத்து = சப்த அகோசரசிவம.

அநதப பரமாதம வஸதுவின் வடிவத்தைதீய சமாதி நிலயிலும விவகார அலயிலும் இருக்கும் வண்ணம் அறி வித்தல்.

சமாதியினின்றும், எழுமுன்வருஞ் சிவ இயற்கைய தாய அறிவினுக்குத் திருசியத்தைப் பாராத எவ்வடிவ முண்டே, அந்தச் சின்மாத்திர விமலசாந்த வடிவமே அந் தப் பரமாத்மாவின் வடிவமாம். சமாதிமத்திய காலத்தி லும இலங்கா நின்றது பரமான்ம வடிவமேயாமெனினும் அஃததிசூக்குமமமா யிருத்தலினனே ஆருடடதவினை யேறு விழுந்து பயின்று கொண்டிருப்பவர்கட்கு அக்கால் அறிந்து கொள்ளுதல் முடியாதாமென முதலிலும கடை யிலும் காண்பிக்கப்பட்டது. இப்போது ஆருட அனுப வித்தசமாதி மத்தியிலிலங்கும் வடிவத்தானுட் அதனைக் காட்டுவார் புலனனுபவித்து மென்றார். பிரஹமாகார அவச்சின்ன அபரோகஜ விருத்தி யுடைமையானே சித்த மான திருக்குமபோது பானீர்போலப் பிரஹ்மத்தின் கண்ணை ஏகரசமயமாக மறைபட்டிருத்தலின் சித்தத்தை யாதாரவுசெய்து காற்று முதலியவை மேனியிற்படினும் அந்தப் பரிசாதி யனுபவமின்றியிலங்கு மெவ்வடிவ முண்டோ அதுவே பரமான்மாவினுடைய வடிவமாம். இப்போது யோகப் பயில்விலாருக்கும் எல்வாறு அனுப விக்க முடியுமோ அல்வாறு கூறுவார் முடிவு என்றார். கனகாணுமலும கொதுகு மூட்டைமுதலான துயருறுத் திக் கெடுக்காமலும் மனமிளைப்பாறுதற் கேதுவாயு மிருக் கின்ற சுழுப்தியே சித்தத்தின் ஜாட்டியமில்லாமல் நீள்கா லங் கிடைக்கப்பெறின் ஆங்கிலங்கு முருவமே பிரளயத்தி லும் எஞ்சாநிற்கும், ஆகாயத்தின் இரகசியவடிவ சூனியத் தன்மை காற்றின் இரகசியவடிவ உள்ளும் வெளியும் நிறைந் திருக்குந் தன்மை, சிலையின் கனத்தன்மை திருசியத்திலும்

வேறுகித் திருசியமற்றதாகிச சிதாகாசமா யிருககும் பொருளிருபபின் யாதொரு ரூபமாமோ அவ்வுருவம் பரமாத்மாவிற்காம், எல்லாப் பிராணிகளுக்குமத திருசியத்தையும் சித்தத்தையும் பரித்தியாகஞ் செய்தபோது எந்தஸ்திதியானது எஞ்சா நிற்குமோ அதுவே அதன துருவமாகு மென்றறிதி, திருசியமற்று மனமற்று உயிர்கட் கியற்கையாயுளதா யாதொரு நிலையுண்டோ, பரமசாந்த சத்தையாமதுவே அம்முதன்மையான வஸ்துவின் வடிவமாமென்றுணர்தி, திருஷ்டாக்களின் கோடியில் அன்னமயம்வரையான்டாவாக விரிந்த சிற்பிரகாசமானயாது, ஒவ்வொரு கோசவிவேகத்தால் ஆராய்ந்து பார்க்குங்கால் ஆனந்தமயத்திற்கு முள்ளே யிருத்தலின் மத்யமாமோ, திருசிய கோடியிலோ மூர்த்தசாரபூத ஆதித்தியப பிரகாசத்திற்கும், அமூர்த்தசாரபூத ககனத்திற்கும் லிங்கசமஷ்டியான்மாவாகிய அவ்வியாகிருத ஆகாயத்திற்கும், உள்ளானமையானே யாதுமத்யமமாமோ, விழியாதியாலாம் விருத்திகட்கும் உள்ளே விளக்கரூபமா யிருத்தலின் யாதுமத்யமமாமோ, இம்முறையே யாருந்த சதத்துச் சித்துரூபம் யாதொன்று, பிரசித்தமாமோ அது பிரஹமத்தினது ரூபமாம் தைத்திரிய வுபநிடததின் கண்ணே அன்னமயாதி கோசங்கட்குள்ளாக ஆனந்தமய கோசத்தைக் காண்பித்து அதற்குப் பிரியமே சிரம், மோதம் தக்ஷிணபக்ஷம், பிரமோதம் உத்தரபக்ஷம், ஆனந்தம் ஆத்மா, பிரஹமபுச்சம் பிரதிஷ்டையென அதற்கு முள்ளாகப் பிரஹமம காட்டப்பட்டது. பிருகதாரண்யகத்தின் கண்ணும் "பிரஹமத்திற் கிரண்டு பெருவடிவங்களுண் டுருவமா மூர்த்தமு மூயரமூர்த்தமுமே" எனத்தொடங்கி "அவ்விம் மூர்த்தத் தினி துரசமாகும், எவ்வித்துதபிக்கு மெழிலிதுரசமாம், அவ்விவவ்வமூர்த்தத் தினறையெவ் விதுதான், செவ்விம் மண்டலஞ்